The word *trance*, as defined in a popular work, * signifies 'a temporary absence of the soul, a rapture, a state in which the soul is rapt into visions of future or distant things " And the learned Parkhurst tells us, that it is a "sacred ecstasy, when, the use of the external senses being suspended, God reveals something in a peculiar manner to his servants, who are then taken, or transported, out of themselves " This is a phenomenon not to be explained, and the reality of which some persons have doubted, but, I think, without due consideration Balaam is said to have been in a trance, and having had "his eyes opened" therein, we are told that he "saw the visions of the Almighty, and knew the knowledge of the Most High " Peter was also in a trance, upon the house-top, to which place he had retired for prayer, and received symbolical instructions relative to his future proceedings with the Gentiles And Paul is supposed to have been in a trance 'but whether in the body or out of the body he could not tell, God only knew ' but he "was caught up into paradise, and heard unspeakable words, which it was not lawful for a man to utter " Since that period, there have been well-attested instances of individuals who have been in a similar state, some of which are on record in several highly respectable publications and the following singular relation is intended to add to their number

Whilst residing in a British colony, as a Christian Missionary I was called one evening to visit Miss D——, who was said to be dying Mrs Young, by whom she was met weekly for religious instruction feeling a deep interest in her spiritual welfare, accompanied me to her residence We found her in the chamber of a neat little cottage exceedingly ill, but confiding in the merits of Jesus, and after spending some time with her in conversation and prayer, we commended her to God, and took our departure without the least hope of seeing her again in this life Soon after we left, she seemed to die, but as the usual signs of death, which so rapidly develope themselves in that country, did not appear, her friends concluded that she was in a trance, and anxiously waited to see the end She remained in this state for several days during which period we repeatedly visited her, and the only indications we could perceive that life was not extinct, were a slight foaming at the mouth, and a little warmth about the region of the heart She was watched with great interest both night and day, and after having been in this state for nearly a week, she opened her eyes and said, "Mr C—— is dead ' Her attendants, thinking that she was under the influence of delirium replied that she was mistaken, as he was not only alive, but well. "O no!" said she ' he is dead, for a short time ago, as I passed the gates of hell, I saw him descend into the pit, and the blue flame cover him Mr B—— is also dead, for he arrived at heaven just as I was leaving that happy place, and I saw its beautiful gates thrown wide open to receive him, and heard the host of heaven shout, 'Welcome, weary pilgrim!' " Mr C—— was a neighbour, but a very wicked person, and Mr B——, who lived at no great distance, was a good old man, and for many years had been a consistent and useful member of the church of God The parties who heard Miss D——'s startling and confident statements, immediately sent to make inquiries about the two individuals alluded to and found to their utter astonishment, that the former had dropped down dead about half an hour before, whilst in the act of tying his shoe, and that about the same time the latter had suddenly passed into the eternal world For the truth of these facts I do solemnly vouch She then went on to tell them where she had been, and what she had seen and heard

After being sufficiently recovered to leave the house, she paid us a visit, and Mrs Young as well as myself heard from her own lips the following account of what she had passed through She informed us that at the time she was supposed to die, a celestial being conducted her into the invisible world and mysteriously unveiled to her the realities of eternity. He took her first to heaven, but she was told that as she yet belonged to time, she could not be permitted to enter into that glorious place but only to behold it, which she represented as infinitely exceeding in beauty and splendour the most elevated conceptions of mortals, and whose glories no language could describe She told us that she beheld the Saviour upon a throne of light and glory, surrounded by the four-and twenty Elders, and a great multitude which no man could number, amongst whom she recognised Patriarchs, and Prophets, and Apostles and Martyrs and all the Missionaries who had died in that colony, besides many others whom she mentioned and although those parties were not named by the angel that attended her, yet she said, that seeing them was to know them She described those celestial spirits as being variously employed, and although she felt herself inadequate to convey any definite idea of the nature of that employment, yet it appeared to be adapted to their respective mental tastes and spiritual attainments She also informed us that she heard sweet and most enrapturing music, such as she had never heard before, and made several attempts to give us some idea of its melodious character but found her notes too earthly for that purpose Whilst thus favoured the Missionaries already referred to, and other happy spirits as they glided past her, sweetly smiled and said they knew whence she came, and, if faithful to the grace of God, she would in a short time be admitted into their delightful society All the orders of heaven were in perfect and blessed harmony, and appeared to be directed in all their movements by a mysterious influence proceeding from the throne of God

She was next conducted to a place whence she had a view of hell, which she described in the most terrific language, and declared that the horrid shrieks of lost spirits still seemed to sound in her ears As she approached the burning pit a tremendous effort was made to draw her into it, but she felt herself safe under the protection of her guardian angel She recognised many in the place of torment whom she had known on earth, and even some who had been thought good

---

* London Encyclopædia

Christians There were princes and peasants, rich and poor, learned and unlearned, writhing together in one dreadful and unquenchable fire, where all earthly distinctions and titles were for ever at an end Amongst them she beheld a Miss W——, who had occupied a prominent station in society, but had died during the trance of this young woman She said that when Miss W—— saw her approach, her shrieks were appalling beyond the power of language to describe, and that she made a desperate, but unsuccessful, effort to escape The punishment of lost souls, she represented as symbolizing the respective sins which had occasioned their condemnation. Miss W——, for instance, was condemned for her love of money, which I had every reason to believe was her besetting sin, and she seemed robed in a garment of gold, all on fire Mr O——, whom she saw, was lost through intemperance, and he appeared to be punished by devils administering to him some boiling liquid She said there was no sympathy amongst these unhappy spirits, but that unmixed hatred, in all its frightful forms, prevailed in every part of the fiery regions She beheld parents and children, husbands and wives, and those who had been companions in sin, exhibiting every mark of deep hatred to each other's society, and heard them in fiendish accents upbraiding and bitterly cursing one another She saw nothing in hell but misery and despair, and heard nothing there but the most discordant sounds, accompanied with weeping, and wailing and gnashing of teeth Whilst she gazed upon this revolting scene, many souls arrived from earth, and were greedily seized by innumerable devils of monstrous shape, amidst horrid shouts of hellish triumph, and tortured according to their crimes.

(To be concluded)

உத்தரிப்புத்தலத்தைப்பற்றிய வாதசூரனே

(The Doctrine of Purgatory)

உத்தரிப்புத்தலத்தைப்பற்றி எங்களுக்குவரவிட்ட மூன்று கடிதங்களையும் அச்சிற்பதிப்பிக்கிறதற்கு யாதொருபோதுமான தடையில்லாதிருந்தும் அவைகளிலிரண்டு கடிதங்களும் மிகவும் விரிவுகொண்டதாயிருக்கிறதினால் அவைகளை உதயதாரகையிற் பிரசுரஞ்செய்வதற்கு உதயதாரகை இடங்கொடுக்கமாட்டாது. அதுவுமல்லாமல் உத்தரிப்புத்தலமுண்டென்று நிலைநிறுத்தி மலைவறுக்க எண்ணுமுத்தரிப்புத்தலப் பட்சவாதியும் அத்தை இல்லையென்று அழிக்கும் அப்பட்சவாதியுந் தாந்தங் காரியத்தை ரூபிக்கும்பொருட்டுத் தெரிந்தெடுக்கு நியாயங்களை ஒருவருக்கொருவர் போதுமானதாகக்கொள்வார்களென்ற நம்பிக்கையில்லாதபடியினாலும் அவர்கள் காட்டும் நியாயங்களும் எத்தப் பொருந்தாததாகக் காணப்படுவதினாலும் இருபக்கத்தாருஞ் சொல்லுகிற நியாயங்களை எடுத்து இதை வாசிப்பவர்களிடத்திற் காட்டி அவர்களிடத்தில் மத்திடசங்கேட்பது திறமென்றெண்ணினோம்

உத்தரிப்புத்தலமுண்டென்பதை ரூபிக்கும்பொருட்டுப் பாப்புமதத்தாரெடுத்துக்காட்டு நியாயங்களாவன, ௧ ஒவ்வொரு சொற்பபாவமும் அல்லது அற்பவீணவார்த்தையும் பராபரனுடைய பார்வைக்குவிரோதமாயிருக்கிறபடியாற் பாவஞ்செய்பவர்கள் ஆக்கினைக்கேதுவாயிருக்கிறதுமாத்திரமல்ல அவர்கள் குணப்பட்டு மனந்திரும்பாவிட்டால் இனிமேலும் பராபரனாலாக்கினைப்படுவார்கள் ௨ அவர்கள் செய்யும்படிப்பட்ட சொற்பபாவத்துக்காக அனவரதகாலமும் ஆக்கினைப்படுவதேயில்லை ௩ பாவ அழுக்கில்லாமலும் நீதியின்படி பராபரனுக்குச் செலுத்தவேண்டிய கடனையறவிட்டுச் சுத்த மனத்துடன் சாகிறவர்களுமொருவருமில்லை. ௪ பராபரனுக்குச் செலுத்தவேண்டிய கடனை அறவிடாமல் அக்கடனை உலகத்திலிருந்து தங்களுடன் கொண்டுபோவதினாற் பராபரன் தம்முடைய நீதியின்படியும் அவர்களுடைய கிரியைகளுக்குத்தக்கதாகவும் அவர்கள் சாகும்பொழுதிருந்த நிலைக்குத் தகுந்தபடியும் ஆக்கினைசெய்யும்பொழுது அவ் ஆக்கினைக்குத் தப்பிக்கொள்பவர்களொருவருமில்லை ஆகையினாலே உத்தரிக்கவேண்டிய மூன்றுமிடமுமொன்று சந்தேகமில்லாமலிருக்கவேண்டியதென்று பாப்புமதத்தார் எண்ணங்கொள்ளுகிறார்கள் பராபரன் நல்லவராயிருக்கிறபடியால் அசுத்தமானவைகளையும் அவர் அனவரதகாலமும் நீதியுள்ளவராயிருக்கிறபடியால் தமக்குச் செலுத்தவேண்டிய கடனை அறவிடாமற் போகிறவர்களையும் ஒருக்காலும் மோட்சத்துக்குட்பட இடங்கொடாமல் அதற்குப்பதிலாக நீதியின்படிபட்டனுபவிக்க வேண்டியதாயிருக்கிறபடியினால் சந்தேகமில்லாமற் சிலகுறிப்பான இடமொன்றிருக்கவேண்டும். அவ்விடத்துக்குத் தானே செத்தவர்களெல்லாரும் போய்த் தங்கள் சொற்ப பாவங்களிலிருந்து சுத்தமாகிப் பிறகு மோட்சபதவிக்குச் சுதந்தரவாழிகளாய்வருகிறார்களென்று காணகின்றது உத்தரிக்கிற ஸ்தலமானது எவ்விடத்திலிருக்குதென்றும் அவ்விடத்துக்குப் போகிறவர்கள் எவ்விதமான ஆக்கினையை அடைவார்களென்பதையும் எவ்வளவு காலமாக அவ்விடத்திருந்து உத்தரிப்பார்களென்பதையும் பாப்புமதத்தார் அறியாதிருந்தும் அவ் உத்தரிப்புத்தலத்தில் இருக்கும்பொழுது பூமியிலிருக்கிற தங்களுடைய சிநேகிதர் பண்ணுகிற செபங்களின் அனுக்கிரகத்தினாலும், அவர்களுக்காகச் செய்யுந்தருமங்களினாலும், பராபரனுக்குச் செலுத்தும் பூசைகளினாலும் உத்தரிப்புத்தலத்திலிருந்து விடுதலையாக்கப்படுவார்கள் அப்படிப்போனவர்களுக்காகச் செபம்பண்ணுகிறதற்கு யாதொரு சிநேகிதர்களில்லாதிருந்தாலுஞ் சபையார்தானே அவர்களுக்காகச் செபம்பண்ணுவார்கள் உத்தரிப்புத்தலமுண்டென்கக்காட்டும் வாக்கியங்களாவன, மக்கேயீஸ் ௨. புத்தகம் ௰௨ அதி ௪௩, ௪௪ ௪௫ வச. மத்தேயு ௰௨ அதி ௩௧ ௩௨ வச— ௧ கொரி. ௩ அதி ௰௫. ௧ பேது ௩ அதி ௰௯ வச

உத்தரிப்புத்தலமில்லையென்பதைப் பற்றிப் புரொதெஸ்தாண்டு கிறிஸ்தவர்கள் சொல்லுகிற நியாயங்களாவன, ௧ மேற்கூறிய மக்கேயீஸ் என்ற புத்தகம் தேவாவியின் வரப்பிரசாதத்தினாலெழுதப்படாதிருப்பதால் உத்தரிப்புத்தலமுண்டென்பதை ரூபிக்கும்படி அதிலிருந்து நியாயங்களையெடுத்தெழுதுவது யோக்கியமல்ல. ௨ அப்படியே அது பரிசுத்தாவியின் அருளினாலெழுதப்பட்டதென்று வைத்துக்கொண்டாலும், மேற்கூறிய ௪௩, ௪௪, ௪௫ வசனங்களினால் உத்தரிப்புத்தலமொன்றிலறெனக்காணலாம் ஏதுகாரணத்தினாலெனில், யூதாவென்பவன் உயிரோடெழும்பும் நாள் பட்டுநாள் செலுத்திவந்த பாவம்போக்கும் பலியில் மரித்தோர் யாதொரு பலனையடைவார்களென்றதாகக் காத்திருக்கவில்லை ௩ னும் முன்கூறிய வேதவசனங்களினாலுமுத்தரிப்புத்தலமுண்டென வெளிக்கவில்லை ௪ சனங்கள் மரித்தவுடனே பாக்கியமுள்ள அல்லது அபாக்கியமுள்ள ஒரு குறித்த நிலையரத்துக்குப்போகிறபடியால் உத்தரிப்புத்தலமுண்டென்றதாகவுங் கருதக்கொள்ளவில்லை ஏசாயா ௫௭ அதி. ௨ வச அறிவிப்பு. ௰௪ ௰௩ லூக்கா ௰௬ ௨௨ ௨ கொரி ௫ அ ௪. வேதஞ் சொல்லுகிறபடி கிறிஸ்து நமக்காக மரித்து நம்மைப் பாவத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் மீட்டாரேயாகில் ஒன்றும் வேறு கிரியைகளினால் நமது பாவங்களை நிவிர்த்திபண்ணிக்கொள்ளலாமென்றெண்ணங் கிறிஸ்துவினுடைய பூரணமான கிரியையைக் கொலைச்சலாக்குகின்றது இப்படிப்பட்ட போதனை முற்றிலுஞ் சுவிசேஷத்துக்கு விரோதமாயிருக்கின்றது ஆகையினாலே மேற்காட்டிய இருபக்கத்தாருடைய நியாயங்களைத் தோந்து பார்த்து மத்திடசஞ் சொல்லுங்கள். மனிதருடைய கட்டளைகளையும் பாரம்பரை நியாயங்களையும் பராபரனுடைய கட்டளையென்றதாக ஏற்றுக்கொள்ளாதிருங்கள்

வச்சிரதண்டத்தை அச்சிரப்போடல

(Rejoinder to the Article on Tamil Grammar in the last No)

கனம்பொருந்திய உதயதாரகை பத்திரபதிப்பிக்கும், ம ஸ்ரீ. ஸ்ரீ. துரையவர்களுக்கு வந்தனம்

சோடசாவதானப் புலவர் முதலிய விற்பன்னர்களே இடையினத்திருக்கிறது வல்லியை "அவ்ம் தான" என்று முன்னெழுதிய, ௰ம் பத்திரிகையிற் கண்டுகொள்ளுங்கள் அவை முற்றும் விளங்காதிருக்கில் இன்னும் முற்றுமுற்றுணர்ந்து பாருங்கள் அதுவுங்கூடாதிருக்கில் உயர்ந்தோர்களிடத்திற் கேளுங்கள் அதிலொன்று முனையாமல் அறுபது பவுனுக்குக் கடன்பட்டேனென்று ஒரு மாரீசம் பண்ணினீர்கள். நான் விளம்பரம் பண்ணியபடி ஆறட்சரமும் பெயருங் கண்டு பிடித்தீர்களா? ஆஞ் சபாசு. அகப்பட்டுக் கொண்டார் துமபட்டவட்டா. அதன் பெயரையும் ஆறட்சரத்தையுஞ் சொல

ங்கள் சோடசாவதானமென்றொரு பராக்குக் காட்டாமல் நீங்கள் மெய்ப்புலவரென்றால் வெல்லுங்கள் மெய்யாயரிசுவடிகல்லுங்கள் வேண்டாந் தலைகுனிந்து செல்லுங்கள் வேண்டும் பொறுதியெனப் புலலுங்கள் ஆப்புக்கழற்றின குரங்குபோலிப்படியகப்பட்டும் இடையினத்திற்கு வேற்றினங் கேட்பதடாதென்றும் உயிரினங்கள் ஒன்றற்கொன்றினமென்றும் அடிக்குள்ளே மாற்றினீர்கள் அதற்குள் சொல்லில் அவை குற்றெழுத்து நெட்டெழுத்தென வேற்றினப்பட்டிருப்பதை யறியாமையாற் குருட்டுப் புலவர்களானீர்களே ஆனாலும் உண்மையான களஞ்சியப் புலவராகிய, ம. றீ. றீ. வேதகிரிமுதலியார் ஆருக்கு வெல்லியென்று சீக்கிரத்தில் நீதியுடனே சொல்லவேண்டும், சொல்லவேண்டும் சொல்லாதிருக்கில் அவருமுங்களில் ஒருவரென்றெண்ணவே வேண்டும் ஏன்? கண்கண்டது நாலுவ குலத்துப் பிறந்தார் கூறுவரோ? ஐயோ! இதை வாசிக்கும் விவேகிகளெல்லாரும் இடங்கண்டால் விடுவரோ யாழ்ப்பாணத்தான் என்றுங்களுக்குப் புத்திசொல்லார்களா? ஒரு நியாயமுமின்றி வேசிகளைப்போல ஏசியும் பேசியுமிருந்து உங்களைப் போக்கிரிகளாக்கிய உங்கள்வாய்க்கு மிகுந்த சந்தோஷத்துடனே சீனியவிழ்த்துப் போடவேண்டும் அதற்குந் தூரம். அல்லாதிருந்தால் அதுவே உபசாரம் இவைகளிலே தோற்றதுமன்றி உங்கள் அவதானச் செய்யுளில் இடமுறகலவியென்றும் அசிறந்தருள்புரிகவேயென்றும் முழுப்பிழை பாடிய நீங்கள் நன்னூலில் நம்மை வெல்லவுண்டாவென்றினனும் புகழ்வீர்களா? விசாகப்பெருமாளையர் முதலிய உண்மைப் புலவர்களைப் பின்னும் இகழ்வீர்களா? ஓ ஓ! வச்சிரதண்டமென்று மெழுதினீர்களா? யாருங்கேளுங்கள் தண்கிடப்பது குட்டிக்கைச்சுவர் கனங்காண்பது மச்சுமாளிகையா? காசுக்குமாசையா? அப்படியானால் நீங்களெல்லாருங் கூடி எச்சங்கத்திலுந் தேடிச் சஞ்சிகையிற் சொல்லிய ஆறட்சரமும் பெயருஞ் சொல்லுங்கள் சொக்கலிங்கப் பண்டாரமுதலியவர்களெங்கே? பத்துவாயும் போச்சுதோ? ஒருத்தரமாயினுஞ் சொல்லும், சொல்லும் நீங்கள் அறுபது பவுன் கேட்குமளவும் இனியிதிற சிந்தனையில்லாமல் எனக்கு நற்சிந்தனை நிலைக்கக் கடவுள் துணைசெய்தருளவேண்டும் என்சிநேகிதர்களெல்லாருக்குஞ் சலாம்

யாழ்ப்பாணம் நல்லூர் } இப்படிக்கு,
௲அ௱௫௨ ஆ சித்திரை மீ எ தீ } இன்னுமவன்தான்.

மயினத்துரையவர்களுக்கு,

இடையினத் தருக்கத்திற்கு "அவன்தான்" எனக் கையொப்பம் வைத்து ஓர்கடிதமெழுதினவர் தமது பெயரின்னதென்று உதயதாரகைவழியாய் வெளிப்படுத்தினால் அறுபது பவுன் நன்கொடை கொடுக்கத் தகுமானவரோவென்பது விளங்கும் இப்படிக்கு

அவன்தானென்பவரைவெளிப்படுத்தப் பெறவிரும்பி

உதயதாரகையின் எடிட்டருக்கு,

ஐயாவே,

இற்றைக்குச் சிலநாளைக்குமுன் னிதாகக் கண்டியிலிருந்து கன்னாரத்தெருவில்வந்திருக்கிற பிப்போ அநதையாவஸதியானபிள்ளை என்கிற மூன்று வாலிபர்களும் இவ்விடத்திலிருக்கிற சிலபிள்ளைகளோடு சிநேகம்பண்ணித் தங்களுடைய கெட்டபழக்கங்களை அவர்களுக்குப் படிப்பித்ததுமல்லாமற் சிலரைத் தாங்கள் சிநேகமாயிருக்கிற சேவுசானென்னுஞ் சம்மானக்காரனோடே சிநேகம்பண்ணுவித்துச் சிலவிளையாட்டுப் படிப்பிப்பாமென்று சில பணங்களை அவர்களிடம் வாங்கிக்கொள்ளுகிறதுமல்லாமற் கஞ்சா அபின் மாட்டுப்பூரணலேகியம் இன்னஞ் சிலபல மருந்துகளையுங் கொடுத்து அவர்களைத் தங்கள் பிறமாக்கிக்கொண்டு அவர்களோடு கண்டிக்காவி இவ்விடங்களெல்லாம் திரிந்து சும்மாயிருக்கிற பிள்ளைகளையுங் கெடுத்து, பிள்ளைகள் தங்கள் தாய் தகப்பன் சொன்னபடி கேளாமல் இவர்கள் சொன்னபடி நடக்க அதற்கேற்ற மருந்துகளையுங் கொடுத்து இவ்விடத்திலிருக்கிற பிள்ளைகளைக்கெடுக்கிறார்கள் அத்தோடே எனமக்களும் உட்பட்டு நான்சொல்லுகிற தொன்றுங்கேளாமற் கெட்டுப்போகிறான், ஆகையால் இவ்விடத்திலிருக்கிற பெரியமனிதராகிய நாங்கள் எங்களாலேகூடியமட்டுஞ் சொல்லியும் அவர்கள் கேளாததினால் நாங்கள் மிகவும் விசனப்படுகிறோம் ஆகையால் தாங்களித்தோடே இன்னுஞ் சில புத்திகளையும் அவர்களுக்குச் சொல்லுவீர்களாகில் நல்லதென்று நினைக்கிறோம் இதைத் தாங்கள் காகிதப் பிரத்தியுத்தரமாகப் பிரசுரஞ்செய்யாதபடிக்கு அச்சிற் பதிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேம்

கொழும்பில் கடற்கரைத்தெருவில் ௲அ௱௫௨ ஆ
பங்குனிமீ ௨௬ தீ இப்படிக்கு
பேதுரு பருநாந்துபிள்ளை

கவனிப்பு

வாலிபராயிருக்கப்பட்டவர்கள் தங்கள் பெற்றோர் சொல்லும் புத்திபோதனைகளுக்குச் செவிகொடாமற் போனார்களேயாகில், நாங்கள் சொல்லும் புத்தியைக் கேட்பார்களென்று நாங்கள் நம்புகிறதற்கு இடமில்லை அப்படியிருந்தும், பெற்றோர்சொல்லும் போதனைகளை அவமதிபண்ணி அவர்கள் காட்டும் அன்புக்கு இரண்டகம் பண்ணுகிறவர்களுக்கு வரும் மோசத்தையும் நட்டத்தையும் எடுத்து அவர்களுக்குக் கண்டனையாகக் காட்டக்கூடும் வேதஞ் சொல்லுகிறபடி ஒருபுத்திரன் முன்னொருக்கால் தன்னுடைய பெற்றோர்கொடுத்த கட்டளையைக் கைக்கொள்ளாமற் கலகம்பண்ணின பொழுது கல்லெறிந்து கொல்லப்பட்டான் இன்னும் இதைப் பற்றிய கடும்போதனையான அத்தாட்சிகள் வேதத்திலுண்டு இப்படிப்பட்ட பொல்லாதவர்கள் அதிசீக்கிரமாய்க் குணப்பட்டுமனந்திரும்பாவிட்டாற் பராபரனால் வரப்பட்ட சாபம் அவர்கள் தலையின்மேலிருக்கும் இப்படிப்பட்ட பொல்லாதவர்களோடு தங்களுக்கநேகஞ் சிநேகிதர்களிருக்கிறதினாற் றுங்கள் பராபரன் வரவிடும் ஆக்கினைக்குத் தப்பிக்கொள்வார்களென்று நினைக்கவேண்டாம் ஏனென்றால் பொல்லாதவர்கள் ஒருவர்க்கொருவரின்பந்துக்கிளைகளாய்ச் சேர்ந்திருந்தாலும் அவர்கள் ஆக்கினைப்படாமற் போவதேயில்லை.

விசேஷசங்கதிகள்

[Remarkable Facts]

கிறிஸ்துமார்க்கமானது எருசலேமிலே முதன்முதல் ஆரம்பித்தது கிறிஸ்துநாதர் மரித்து நாற்பதுநாட்சென்றபின், கிறிஸ்துமார்க்கச் சபையிலிருந்தவர்கள் (௱௨௰) பேராகவும், சிலநாட்சென்றபின் (௩௲) பேராகவும் இன்னும் பலசிலநாட்கழிந்தபின் (௫௲) பேராகவும் அதிகப்பட்டு வந்தார்கள் இன்னும் இரண்டு வருஷத்துக்குள் எருசலேம், யூதேயா என்னும் நாடுகளிலே அதிகமதிகமாய்ப் பரம்பிவந்தார்கள் மகமது என்பவன் தன்னுடைய சொந்த வீட்டாராயிருந்த (௰௪) பேரைத் தன் மதத்துக்குள் திருப்பிக்கொள்வதற்கு மூன்று வருஷஞ் சென்றது அவ்விதமாகவே மக்கா என்னும் நாட்டில் யாதாமொரு எதிர்மதங்கள் இல்லாதிருக்கக்கொள்ள மிகவும் கொஞ்சப் பிரயோசனத்தைக் கொண்டிருந்து தான் ஏழுவயதாயிருந்து மெத்தினா என்னும் நாட்டிற்குப் போக ஏவப்பட்டபோது, எத்தியோப்பியாவில் தன் மதத்திற் சேர்ந்தவர்களாக (அ௩) புருடர்களையும் (௰அ) ஸ்திரிகளையும் வரப்பண்ணினான் ஆனாலும் கிறிஸ்துமார்க்கமோ கிறிஸ்துநாதர் பரமண்டலத்துக்கெழுந்தருளி ஒரு நூறு வருஷத்துள் உபதேசவழியால் மாத்திரம் சீரியா, லீபியா, எகிப்து, அராபியா, பாசியா, மெசப்பொத்தேமியா, சின்னாசியா, ஆமினியா, பாதியா என்னும் நாடுகளிற் பரம்பினதுமாத்திரமல்ல ஐரோப்பாக் கண்டத்தில் அநேக மிகுதியான தேசங்களிற் பரம்பிவந்தது

மகமதுவோ அதிற்கெதிராக யாதாமொரு பிரதானமான கைகூடிவருதலைக் கொண்டிராமற் பட்டயமே தன் உதவியென்றதாகக்கொண்டிருந்தான். அப்படிக்கொண்டிருந்து பட்டயப்பொருட்டால் தன் மதத்துள் யாதாமொருவரைச் சேர்த்துக்கொள்ளாதிருக்கும்போது, அவனுடைய மதம் ஒரே முறையாய்த் தம்மிட்டுப்போயிற்று

ஆனபடியினாலே மார்க்க விரோதிகளும் கள்ளமார்க்கத்தவர்களுமாயிருப்பவர்கள் இச்சங்கதிகளைத் தியானித்துப் பார்த்து ஒவ்வொரு பகுதியிற் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் மதத்துட்சேர்த்துக்கொள்வதற்கு என்ன ஏதுக்களைக்கொண்டிருந்தார்களென்றும், அவர்கள்கொண்டிருந்த வழிவகையாதெனவும் சிந்தித்துப் பார்த்துப் பின்னால் வரும் கேள்விக்கு மறுமொழி சொல்வார்களாக அதாவது,

கிறிஸ்துமார்க்கம் என்ன காரணத்தினால் இவ்வளவு கவனிக்கப்படத்தக்க வளர்ச்சியைக்கொண்டிருந்தது?

SUMMARY OF NEWS.

JAFFNA.

Missionary Arrivals —The Rev B. C Meigs, of the American Ceylon Mission arrived at Jaffna on the 1st inst on his return from America, accompanied by a reinforcement consisting of the Rev Messrs Whittlesy Smith and Wyman and their wives We are sorry to state that the health of Mrs Smith is such that there is but little prospect of her recovery—her lungs being seriously affected by disease She was apparently in good health a little while before she left America

Departure —The Rev Mr Hutchings and his family left Jaffna for Madras on the 19th inst He expects with the leave of providence to remain at Madras long enough to complete the revision and printing of the Tamil and English Dictionary begun and carried forward by the late Rev Mr Knight

The Rev J Scudder, M D of the American Madras Mission with his family embarked from Madras on the Ship Washington, about the 1st Inst preparatory to his departure for America Ill health is the cause of his departure from this country

New Planters —Two new planters, Messrs Baynes and Clarke have recently arrived in Jaffna from England with the view of carrying on agricultural operations in this province

Robbery —A case of Burglary, Robbery, and Ear cutting recently occurred at Chavagachery —Three persons are now in custody on suspicion The party robbed is a wealthy Native Chitty

Inquest —An Inqnest was lately held by the District Judge of Jaffna on the body of a female who was accidently drowned in a well

Supreme Court —It is expected that Sir Anthony Oliphant, Chief Justice will preside at the next Northern Circuit

COLOMBO

Highway Robberies — A superintendant of Mr Arnold's estate, proceeding on horseback from Galle to the interior with a man carrying a bag of money—to pay the coolies on the estate, having inadvertently gone a little ways ahead of the man, three Robbers rushed from the jungle seized the money and ran off with it

In another case 3 men were carrying boxes—one of which contained £ 100 in silver from Colombo to the estate of Mr Vallance and when within 2 miles of their destination, they were suddenly attacked by 6 Robbers who having nearly killed one of the guard and put the other two to flight made their escape with the Treasure

GALLE.

The Trial of the riotous Malay Soldiers of the rifle Regiment has terminated in the acquittal of all but 3, who were found guilty of a riot and assault and sentenced to 12 months imprisonment with hard labor

INDIA

The Governor General is about to proceed on a tour through the upper Provinces—travelling by dawk His Lordship is said to be determined to exercise a personal and strict oversight over every department of Public business, and to take nothing on trust He will find this an arduous and difficult task—but one which we trust he will be able to accomplish

Cotton Experiment in Coimbatoor —The cotton experiment in Coimbatoor is said to be progressing most favorably The crops which at the beginning of January threatened to prove a total failure are now yielding and have been for the last three weeks little short of 100 lbs daily and promise to do so for the next three months To all appearance the American plant is already as well suited to the climate as the native Nothing could be more encouraging than this account, and it forcibly illustrates the benefits of perseverance in experiments of this nature —*Spect April* 9

The *Cleopatra* which sailed from Bombay for Suez on the 1st inst took the large mail of 26,710 Letters and 8,796 papers

AFFGHANISTAN

It is rumoured that Col Palmer, commandant of Ghuznee had been obliged to capitulate with the enemy and that he had engaged to pay a sum of money as guarantee for his detachment proceeding without molestation to Peshawur

APPEAL

"Pure and undefiled Religion before God and the Father is to visit the fatherless and widows in their affliction "

The distressing case of the family of the late Rev John Hunter assistant Wesleyan Missionary of Trincomalie, being already before the Public, the undersigned, in soliciting contributions in aid of the widow and 7 children of the deceased begs to acquaint them that he will be ready to receive and forward any amount that may be subscribed in Jaffna towards the above object, and afterwards publish a List thereof in the "Morning Star "

A sum of nearly £30 has been already collected in Trincomalie for their benefit

F C Grenier

Jaffna April 1st, 1842

NOTICE.

Mr John Speldewinde Auctioneer, begs to inform the Equestrians of Jaffna that he will sell by Public Auction on the Esplanade ground on Saturday next, the 23d instant, at 5 P M (unless previously disposed of by Private Contract) a Bay Horse

The Conditions of Sale will be made known at the spot

Jaffna April 16, 1842

PUBLIC SALE.

Mr P F Toussaint, Senior (one of the Executors of the estate of the late Captain Naygel) gives notice, that the house belonging to the said estate, lately occupied by Mrs Naygel, now deceased, situated in the first division of the Main Street at Jaffna, will be put up for sale by Public Auction on Monday the 23d day of May next, precisely at 11 o clock in the fore-noon, at the house aforesaid (with sundry other articles,) and sold to the highest bidder without reserve

The purchaser of the house is to deposit 20 per cent of the purchase money immediately after the sale, and the balance within two weeks after the sale, in failure whereof, the 20 per cent paid shall be forfeited, and the house resold If there is any deficiency in the second sale, the first purchaser shall have to make good the said loss

The first purchaser will be obliged to close or shut up by brick work, within one month after the purchase, the two doors leading to Mr Toussaint's House towards the south

Acknowledgement of Monies received on account of the "Morning Star not previously acknowledged

			£	s	d
January	24	C A Goodrich, (*Manepy*)	1	5	0
February	9	J Woodhull, (*Calpentyn*)	1	0	0
"	16	Rev C S Kolhoff (*Trichinapoly*) by Rev J J Lawrence	1	0	0
"	17	S Tampiahpullay (*Wannarpone*)	0	7	0
"	23	" "	0	2	0
March	12		0	0	6
"	12	A Mc Farland (*Moolativoe*)	1	0	0
"	14	Rev J J Lawrence, (*Dindigul*)	4	0	0
"	15	A Stansbury, (*Pt Pedro*)	0	9	0
"		" "		12	
"	17	A M Casilebbe, (*Galle*)	0	4	0
"	17	S A Allagacon Moodr , (*Batticaloe*)	6	0	0
"	26	Rev C S Kolhoff (by Rev J J Lawrence)	0	16	0
April	2	C A Goodrich (*Manepy*)	1	17	0
"	2	P Canjeminaden (*Colombo*)	2	0	0
"	2	Rev J Thomson (*Tanjore*)	2	0	0
"	7	F C Grenier (*Jaffna*)	0	10	0
"	7	W K Burleigh, Esq, (*Mallagam*)	0	8	0
"	7	Rev S Hutchings, (*Manepy*)	5	10	0

CONTENTS - அட்டவணை

	பக்கம்		
பாண்டிவள நாட்டுச் சரித்திரம்	85	Historical sketch of the Pandian kingdom	85
மகமதுவின் சரித்திரம்	ib	Life of Mohammed	ib
கூட்டென்பவர்செய்த பிரபஞ்சநூல்	86	Abridgement of Good's Book of Nature	87
ஏகக்கடவுடிருட்டாந்தீபம்	88	On the unity of God	88
இலக்கியக் களஞ்சியம்	90	On the obstacles to the intellectual and moral improvement of the Tamil people	89
உதயதாரகையிலெழுதப்பட்ட சோபனசெய்தி முதலாவது	ib	On Tamil Classics	90
கடிதங்கள்	91	Auspicious Occurrences—No I	ib
குறள்	92	Mathematical questions	91
உத்தரிப்புத் தலத்தைப் பற்றிய வாதருசனை	94	An Inquiry in regard to dreams	ib
வச்சிரத்தண்டத்தை அச்சிரம போட்டல்	ib	Questions on the Roman Catholic Catechism—Cural	92
விசேஷசங்கதிகள்	95	Synonymes	ib
		The Entranced Female	93
		The Doctrine of Purgatory	94
		Rejoinder to the Article on Tamil Grammar in the last No	ib
		Remarkable Facts	95
		Summary of News	96

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

உ புத்தகம், சஞ்சிகை கூ] ௲அ௱௪௨ ௵ வைகாசி ரு, தேயதி வியாழக்கிழமை, Thursday, May 5, 1842 [Vol II No 9

பாண்டியவளநாட்டுச் சரித்திரக் குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

(Continued from page 85)

அரிமர்த்தன்பாண்டியனுக்கும் அவன் பின் பன்னிரண்டாம் பட்டத்துக்குவந்தவனாய்க்காணுகிற கூனபாண்டியனுக்குமமத்தியிலே வேறும்பேர்கள் வருகின்றனர் சில பரம்பரைக்கதைகளின் பிரகாரம், கூனபாண்டியனுடையகாலமானது சாலிவாகனசகாப்தம் (கூ௱ருய) என்று சொல்லப்படுகின்றது அதுகிறிஸ்தாண்டுக்கு (௬௨அ)ம் வருஷமாகுது ஆனாலும் இது தப்பிதமென்று பாவிக்கிறதற்குச் சில நியாயங்களிருக்கின்றன மதுரைப்புராணமும், அதின் மூலமாகிய ஆலாசிய மகாத்துமியமும், கீழேயிருந்தராசாவின் ராசரீக பரியந்தத்தைச் சொல்லுகின்றது அந்தப் புராணங்கள் புனைகிறதற்கும், அதிலே இத்தனை சமீபகாலத்திலே உண்மைகளை மறைத்துச்சொன்னால் அவைகள் அபிவிருத்தியாகமாட்டாதேயென்று எவ்வளவும் பாவிக்காமல் அற்புதங்களை உறுதியாயச் சொல்லுகிற துணிச்சலுக்கும், மத்தியிலே (உ௱) வருஷமாத்திரம் வைத்துக்கொண்டால், (கூ௱எ௱ம)வருஷத்திலே அதிவீரபாண்டியனுடைய ராசாங்கத்திலே அந்தப் புராணங்களுண்டானதாயிருக்கின்றன ஆகையினாலே அவைகளின் காலமாவது தப்பிதமாயிருக்கும் கூனபாண்டியனுடைய காலமாவது பிசகாயிருக்கும் ஆனாலும் அந்தக் காலங்களை மிகவும்பிசகாயெழுதியிராதென்று பாவிக்கிறதற்கு அநேக நியாயங்களிருக்கின்றன எப்படியென்றால் அந்தக்காலத்திலே இவைகளையும் மற்றப் பிரபந்தங்களையுஞ் செய்தவர்கள் சைவக் குருக்களமாருஞ் சைவ வித்துவான்களுமென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறபடியே அவர்களுடைய பிடிமானம் ஒன்பதாஞ் சதகத்துக்கு உள்ளும் புறம்பும் விசேஷமாய விருத்தியாயிருந்ததற்குச் சந்தேகமில்லாதபடியினாலே தான் பின்னும் பாண்டிய சமுஸ்தானத்திலே மதாசாரம் மறுபடியும் வருகிறதற்கு ஞானசம்பந்தரென்கிற ஒரு சைவக்குருக்கள் முக்கியகாரணராயிருந்தார் அவருடைய பிரபந்தங்களும் அவராலே முதலிலே திருந்தினவர்களும் அவருக்குச் சிஷர்களுமாகிய அப்பர் சுந்தரர் என்கிறவர்களுடைய பிரபந்தங்களுந் தக்கணத்திலே நன்றாய் அறியப்பட்டிருந்தவைகளுமல்லாமல், ஒன்பதாஞ் சதகத்திலே உண்டானதாக அயிக்கியகண்டியமாயச் சொல்லப்படுகின்றன. அதினாலே கூனபாண்டியனை அந்தக் காலத்திலேதான் நம் வைத்துக்கொள்ளவேண்டியதாயிருக்கின்றது கூனபாண்டியன் பக்திபண்ணின சைனமானது அடுத்த தேசங்களிலே விசுவசத்தில அதிகரித்திருந்த அந்தக் காலத்தைவிட, இந்தக்காலமொத்திருக்கிறபடியினாலே இந்தக்காலமே உறுதிப்படுகிறது

இந்தராசாவினுடைய காலம் எதுவாயிருந்தாலுமிருக்கட்டும் இவனுடையராசரீகத்துக்கு முன்னே பாண்டியதேசத்திலே கொஞ்சங் கனமான இரண்டுகாரியங்கள் சம்பவித்தவைகளாகக் காணுகின்றன. அவைகள் சுட்தேஸ்தருடைய சாதனங்களில் எதிலேயுஞ் சொல்லியிருக்கின்ற சம்பந்தமாயிராவிட்டாலுஞ் சம்பந்தப்பட்டவைகள்போலக் காணுகின்றன அவைகளாவன, மதுரைச்சங்கங்கெட்டுப்போனதும், சமணமதம் ஸ்தாபிக்கப்பட்டுப்போனதுந்தான்

சங்கத்தாரெடுபட்டுப்போனது பழக்கமான அற்புதகாரியமாகவே சொல்லியிருக்கிறது அதாவது இந்தப் புலவர்களுடைய சங்கப்பலகையில உட்காருகிற கனத்தைக்கோரி, (Mylapoor) மயிலாப்பூரிலே பறையர்களுக்குக் குருவாகியும், நீதி நூலாசாரியராயுமிருந்த திருவள்ளுவர் அவ்விடத்துக்குப்போனார் அந்தக் கற்றபுலவர்கள் அவருடைய துணிவைப்பார்த்து மிகவுங் கோபித்தார்கள் ஆனாலும், அவர் அந்தராசாவினாலே அபிமானிக்கப்பட்டவராயிருந்தபடியினாலே அவர்கள் அவர் புத்தகத்தை அதிலே வைத்துச் சோதிக்கிறதற்காவது கட்டாயப்பட்டார்கள் இது நிமித்தம் அந்த மகத்துவமுள்ள பலகையின்பேரிலே அதற்கிடங்கொடுக்கவேண்டியதாயிருந்தபடியினாலே அந்தப் புலவர்கள் அதினிடம் உட்கார்ந்துகொள்ளும்படியாகச் சாக்கிரதைப்பட்டார்கள். ஆனபோதைக்கும் அவர்களுக்காச்சரியமுண்டாகும்படியாய் அந்தப் பலகை தானே வளர்ந்து அந்தப் புத்தகத்துக்கிடங்கொடுத்தது அந்தப் புத்தகமோ தானே வளரத்தொடங்கி அவர்களையெல்லாம் அதினின்று கீழேதள்ளி விடும்படியாய அவ்வளவு பரவினது. அந்த ராசாவும் மதுரையிலுள்ள பிரசைகளும் இந்த வேடிக்கையைப்பார்த்து அந்தப் புலவர்களுடைய கறுவ பங்கத்துக்குச் சந்தோஷப்பட்டார்கள் அந்தப் புலவர்கள தங்களுக்கு வந்த அபிமானத்தைத் தெரிந்துகொண்டபடியினாலே அதின் பேரிலே தரிகொள்ளமாட்டாமற் றள்ளுண்டு அடுத்தாப்போலே இருந்த ஒரு குளத்திலே எல்லாருமுழுகி இறந்துபோனார்கள் அதினாலே அந்தச் சங்கங்கெட்டுப்போயிற்று

இப்படி நேரிட்டதை ஒரு கலவிதத்திறத்தினாலேயென்று நாம் ஆலோசிக்கப்பண்ணுவோமேயாகில் நாமதை அறிந்துகொள்ளப் பிரயாசப்படத்தேவையில்லை. மேற்படி கலவிச்சங்கமானது தமிழப்பிரபந்தங்களை விர்த்திபண்ணுகிறதாகவே ஏற்படுத்தினதாகக் காணப்படுகிறபடியால அதிலிருந்த தலைமைப்புலவர்கள் அந்தப் பிரபந்தங்களிலே சான்றோர்களாயிருந்தார்கள். மேற்படி சங்கத்தார் சமஸ்கிருத பிரபந்தங்களையே நிரம்பவும் பாராட்டிக்கொண்டுவந்து கடைசியிலே தங்கள் சுதேச வித்தையை விட்டுவிட்டார்கள் இப்படி விட்டுவிட்டார்களென்கிறதற்குத் திருட்டாந்தமென்னவென்றால் புதிய தமிழைப் பார்க்கிலும் பழயதமிழே நன்றாயிருக்குதென்றும், கூம சதகத்திலேதானே தமிழ்ப்பாஷை உபயோகமில்லாமற் போய்விடும்படிக்கு விட்டுவிட்டார்களென்றும் அவ்வையார் (Avayar) சொல்லியிருக்கிற சூசனையினாலே விளங்குகின்றது ஆகிலும் இது காரியங்களெல்லாந் திருவள்ளுவர் நாளையிலே செவ்வைப்பட்டது அதெப்படியென்றால், பழையபாட்டெல்லாமடிப்பட்டுப்போய், தமிழ்ப்படிக்கிறதில நூதனவொரு ஊக்கமுண்டாகி, கூம சதகத்துக்குள்ளே பாண்டியதேசத்திலேயும், சோழதேசத்திலேயுந் தமிழப்பாஷையிலே சான்றோர்களாய அநேகம வித்துவான்களுண்டானார்கள்

[இன்னும் வரும்]

Life of Mohammed —மகமதுவின் சரித்திரம்

கூ அதிகாரம்.

(*The Koreish exasperated and alarmed by Mohammed's growing success—Commence persecution—Some of his followers seek safety in flight—New converts—The Koreish form a League against him—Abu Taleb and Cadyah die—He makes a temporary retreat from Mecca—Returns and preaches with increased zeal—Some of the Pilgrims from Medina converted*)

(மகமது மத-பிரபலிய விருத்தாந்தம்.)

மகமதுநபி அதிகவேகங்கொண்டு உற்சாகமனத்துடன் தன்னுடைய நவமதத்தை எங்கும் பிரபலியப்படுத்தி அநேகம்பேரைத் தன்னுடைய மதத்துக்கநுசாரிகளாய் வரும்படி செய்ததினால கோறிஸ்வங்கிஷத்ததிகாரிகளெல்லாருமேங்கிப் பயந்து மகமதுவைக்கொன்றுபோட யோசனைபண்ணினதினால் அவர் தன்னுடைய சிறியபிதாவாகிய (Abu Taleb) அபூதாலெப் என்பவரிடத்தில அடைக்கலம்புகுந்து தப்பிக்கொள்ள நினைத்ததருணத்திற் சனங்கள் எல்லாரும் அபூதாலெப்என்பவரைப் பயமுறுத்திச் சொன்னது "நீர் மகமதுவுக்குப் புதசொல்லி மதத்தைப் பரப்புகிறதைவிட்டோயும்படி அவனுக்குப் புத்தி போதனை சொல்லாவிட்டால் உம்முடனே போர் பொரும்படி படையெடுப்போமென்றார்கள்" இத்தை அபூதாலப் என்பவர் மகமதுவுக்குச் சொன்னவேளையில மகமது சற்றேங் கிலுந் தைரியவீனப்படாமற் சொன்னது "நீசத்துருக்களெல்லாருங் கூடி ஏகமாயத்திரண்டுபடையோடுயுத்தம்பண்ணிச் சூரியனையெடுத்துத் தன் வலக்கரத்திலுஞ் சந்திரனையெடுத்துத் தனிடக்கரத்திலும் வைத்தாலும் நானே எடுத்த எடுப்பையும் பிடித்த பிடியையும் விடமாட்டேன்" என்றுசொன்னார் இத்

தை அபூதாலிப் என்பவர் கேட்டு என்னதான்வந்தாலுந் தான் ம
கமதுவுக்குச் சகாயனாயிருப்பேனென்று பிரமாணித்துச் சாகுமள
வும் அவரை விலக்கிக் காத்துக்கொண்டார் ஆனாலும் இவர் மகம
துமதத்திற் சேர்ந்தாரோ அல்லவோ தெரியாது

காரியமிப்படியிருக்கையில் கோறிஸ்வங்கிஷத்தார் மகமதுமதா
னுசாரிகளைத் துன்பப்படுத்த ஆரம்பித்தவேளையில் அவர்கள் மக்
கநகரியிலிருந்து காலங்கழிக்கக்கூடாமையால் அவர்களெங்கேயா
குதல் ஓடி யொளித்து உயிரைக் காக்கும்படி மகமது சகலருக்கு
மிடங்கொடுத்தார் உடனே அதி சீக்கிரமாய் மகமது மகளும அ
வளுடைய புருஷனும வேறும (௰௧) பேரும அத்துடனே கூட
(௮௩) ஆண்சனங்களும (௰௮) பெண்சனங்களுமாக (Ethiopia) எத்தி
யோப்பியராசாவிடத்திற் போயடைக்கலம புகுந்ததினால் அவ்விரா
சா இவர்களை உபசாரணையுடனேற்றுக்கொண்டு, கோறிஸ்வங்கி
ஷத்தார் தானுபதிகளையனுப்பி இவர்களைவிடவேண்டுமென்று கே
ட்டுக்கொண்டபொழுது விடமாட்டேனென்றுசொன்னார் இப்
படியே மார்க்கவளர்ச்சியை நிலைநிறுத்தும பொருட்டோடிப்போ
னவர்களைப பற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில், "பரா
பரனுடைய நிமித்தமாகத் தங்கள் தேசத்தை விட்டோடிப்போ
கிறவர்களுக்கோ இவ்வுலகத்திலும மறுவுலகத்திலும் வரப்பட்ட
பலன சொல்லிமுடியாது" வீரவானுயுந் தைரிய பராக்கிரமசா
லியுமாயிருந்த காமசா (Hamza) என்ற மகமதுவுடைய சிறியத
கப்பனும (Omza) ஒமசா என்பவரும மகமது மதாநுசாரிகளா
ய் வந்துவிட்டதினால் கோறிஸ்வங்கிஷத்தார முன கொண்டதிலும
அதிக முனிவுகொண்டு மகமதுமதாநுசாரிகளைக் கண்டு கேட்டவி
டமெல்லாம் பகைத்துக் கொடுமைசெய்தார்கள் துன்பப்படுத்
தலெவ்வளவுக்கதிகரித்ததோ அவ்வளவுக் கதிகமாக மகமது மத
மோங்கும பரம்பினதினால் கோறிஸ்வங்கிஷத்தார வெறிகொண்டும
ருளடைந்து காசேமியருக்கு (Hashamites) விரோதமாகப் பண
ணின பொருத்தனை யென்னவென்றால் "இனிமேல் காசேமியருட
னே பிரதானமாய (Motall_b) மோத்தாலேப் என்பவருடைய வ
ம்கிஷத்தாருடனே எவ்விதமான கூட்டுறவாகுதல் பண்ணப்படா
தென்றெழுதிக் கேயோபா (Caaba) என்ற கோவிலிலே வைத்தார
கள அதினால் அவ்வங்கிஷமிரண்டாயப பிரிந்து அதிலொன்று அ
பூதாலேப் என்பவருக்குக் கீழாகவும, மற்றது (Abu Sophyan)
அபூ சோபியனென்பவருக்குக் கீழாகவுமிருந்தார்கள அபூத லே
ப என்பவரோ மக்கநகரிக்கதிபதியானதினால் அவர்கள் பண்ணின
பொருத்தனைகளொன்றுக்கு முதவாமற்போய்விட்டது. மகமது
நபி தன மதத்தைப பிரபலியப்படுத்தவாரம்பித்த (௭ம) வருடத்
தில் அபூதாலேப என்பவரும கொஞ்சநாளையிற்பிறகு நபியினுடை
ய பெண்சாதியாகிய (Cadijah) என்பவளும காலஞ்சென்றுபோ
னார்கள் அதைப்பற்றி நபிசொல்லுகிறதென்னவெனில" புருடர்க
ளுக்குள்ளே பூரண சற்குணரிருந்தார்கள் ஆனாலும பெண்களுக்குள
ளே (௪) பேர மாத்திரம பூரண சற்குணராயிருக்கிறார்கள் அவர
களாரெனில், நபியினுடைய பெண்சாதி கடிசா என்பவளும், அவரு
டைய குமாரத்தியாகிய பற்றிமா (Fatima) என்பவளும், பார
வோனின (Pharoah) பெண்சாதியாகிய ஆசியா (Asia) என
பவளும், இமறுவின (Imram) குமாரத்தியும மோசே என்பவரின ச
கோதரியுமாகிய மரியாள (Mary or Miriam) என்பவர்களுமே

மகமதுநபி ஒருமுறை தன தாயுடைய கல்லறையில நின்றழுது
சொன்னதாகச சொல்லியிருக்கிற தென்னவெனில "நானென்ன
தாயின சமாதியைப் பார்த்துவரும்படி பராபரனிடத்திலுத்தரவு
கேட்டேன அவருத்தரங்கொடுத்தார அவளுக்காகச் செபமப
ண்ணச்சொல்லி அவரிடத்திற் கேட்டபொழுது அவர் மாட்டே
னென்றுவிட்டார துன்பப்படுத்தவினிமித்தம அநேகமபேர மக
மதுமதத்தை விட்டுவிட்டார்கள இவ்விதஞ்செல்லவர அதிகம நெ
ருக்கினதினால மகமதுநபியொளித்தோடி மக்கநகரிக்குக் கிழக்கே
(௬௰) மயில தூரத்துக்கப்பாலிருக்கிற (Tayef) தேயெவ என்ற பட்
டணத்துக்குப் போய அவ்விடத்திற் தன சிறியதகப்பனாகிய (Ab-
bas) அப்பாஸ் என்பவரை அண்டிக்கொண்டு கொஞ்சநாட்கழி
ந்தபிறகு (Caaba) கேயோபா என்ற கோவிலுக்கு யாத்திரை பண
ணிவந்த சனங்களுக்கு (Islam) இஸ்லாமதத்தைப பிரசங்கம பண
ணி அநேகரை மதத்துக்குட்படுத்தினார இவர்களில (௬) பேர
(Yatreb) யேத்திறப என்ற பேர்கொண்ட மெத்தினாநகரிக்குச
சேர்ந்தவர்களாயிருந்தார்கள் இவ்வேளையில மகமதுநபி தன கா
ரியத்தை நிலைப்படுத்தும்படி (Abubeker) அபூபேக்கர என்பவரு
டைய மகளாகிய ஆயசா (Ayesha) என்பவளையும, கொஞ்சநாளை
யிற்பிறகு (Zama) சாமா என்பவருடைய மகளாகிய (Sawda)
சோடா என்பவளையும விவாகம்பண்ணி மக்கநகரியில முதற்றரமா
ன ஆட்களுக்கு மைத்துனனாய் வந்தபடியால இவருடைய மதமெ
ங்கும ஸ்திரப்படவேண்டியதாயிருந்தது

தென்சமுத்திரத் தீவில் நடந்த சங்கதி

(From William's Missionary Enterprises in the South Seas)

[௬௫ம் பக்கத்தினின்று]

மற்ற ஒய்வுநாளிலே இவ்விடத்தில் (௪௲) சனங்கள் கூடினார்க
ள் அங்கேயிருந்த கோவிலில எல்லாருமிருக்கக்கூடாததினாற பா
திப்பேர் கோவிலுக்குள்ளும பாதிப்பேர் வெளியிலும நின்றார்கள
சனங்களிருக்க இடமில்லாததை நாங்கள் கண்டபொழுது பிரதா
னிகளும் நாங்களும் ஒரு பெரிய கோவிலைக்கட்டும்படி யோசனை
பண்ணினோம இதற்குவேண்டிய தட்டுமுட்டுகளையெல்லாஞ் ச
ம்பாதித்ததின்மேல அந்தச் சனங்களுடைய சுறுசுறுப்பினாலே
(௬௫) முழ நீளமும, (௨௰) முழ அகலமுமான ஒரு பெரிய கோ
விலைக்கட்டிமுடித்தோம இதிலேறக்குறைய (௫௲)ம பேர் கூட
த்தக்கதாயிருக்கும

இந்தக் கோவில வேலை நடக்கிற காலத்திலே ஒரு நூதனமான
காரியஞ் சம்பவித்தது. அதென்னவானால நான தச்சவேலை
செய்கிற இடத்துக்கு வருகையில மட்டப்பலகையைக் கொண
டுவராமல மறந்துபோய வந்துவிட்டேன அப்பொழுது வீட்டிலி
ருந்த என னுடைய மனைவி என ஆயுதப் பெட்டியைத் திறந்து அ
திலிருக்கிற மட்டப் பலகையை எனக்கு அனுப்பும்படி ஒரு பல
கைத்துண்டிலே கரிக்கட்டியாலெழுதி வேலைசெய்வித்துக்கொண
டிருக்கிற முதலாளிகளிலொருவனை அழைத்து இந்தப் பலகைத்
துண்டை (உவில்லியம) அம்மாவசமாய்க்கொடுத்து வரவேண்டு
மென்றுசொன்னேன அவனோ மாறுத்தரமாக நானிந்தச் சிராய
த்துண்டை அங்கே கொண்டுபோனால என்னைப் பயித்தியக்காரனெ
ன்று சொல்லிக் கோபித்துக்கொள்வாள், ஆதலால அதை நீர்தா
னே வைத்துக்கொள்ளுமென்றான அதற்கு நான அப்படியல்லு
மிகவும அவசரமாயிருப்பதினால் அதைச் சீக்கிரமாய்க் கொண்டு
போ, அவள் உன்னுடனே [illegible]
இப்படி நான மிகவும அவசரப்படுகிறதைக் கண்டவன் "இதை
நான அங்கே கொண்டுபோய என்ன சொல்லவேண்டுமென்றான
அதற்கு நான நீ ஒன்றுஞ் சொல்லத் தேவையில்லை, நான சொ
ல்லவேண்டியதெல்லாம அந்தப் பலகை சொல்லுமென்றேன. அ
வன அதிலெழுதியிருக்கிற குறிப்பை அல்லது சாரத்தை அறியா
தவனானபடியினாலே அந்தச சிராயைக் கையிலே பிடித்துக்கொ
ண்டு பகிடியாய அது பேசுமாயிருக்குதாவென்றான. அதைக்கு
றித்துத் தருக்கித்துக்கொண்டிருக்க நேரம்போகிறபடியினாலே நீ
இனிப் பேசாமற் சீக்கிரமாய அதைக்கொண்டுபோய்க்கொடுவெ
ன்றுசொன்னேன, அதை அவன் கொண்டுபோய அந்த அம்மாளி
டத்திற்கொடுத்தான அவள் அதை வாசித்தபின்பு சிராயை வெ
ளியிலேயெறிந்துபோட்டுப் பெட்டியைத் திறந்து அந்த மட்டப
பலகையை எடுத்துக்கொடுக்கப்போனபொழுது இந்த முதலாளி
யும அதிசயத்துடனே அந்த அம்மாள் போகிற இடமாத்து அ
வள போகிற முகாந்திரமென்னதென்றறியும்படி தொடர்ந்துபோனான
அப்பொழுது அம்மாள் பெட்டியைத் திறந்து மட்டப்பலகையைத்
தூக்கிக் கையிற்கொடுக்க அவன அதிசயப்பட்டு அம்மாளைப்பார்
த்து மகளே, இந்தப் பொருள்தானோ வில்லியம என்பவர் கேட்ட
னுப்பியிருக்கிறாரென்பதை நீ எப்படி அறிந்தாயென்று கேட்
க, அவள் இந்த முதியவனைப் பார்த்து நீ இப்பொழுது என்னிட
த்தில ஒரு சிராயைக் கொண்டுவரவில்லையாவென்றாள், அவன நான
கொண்டுவந்தேயிருந்தேன், ஆனாலும அந்தச சிராய உமக்கு ஒன
றையுஞ் சொல்லவில்லையேயென்ன, அதற்கவள அது சொல்லாதி
ருந்தும நான கேட்டிருக்கிறேன, அதின மூலமாகவே அதை அ
னுப்பினவருக்கு இது தேவையாயிருந்ததென்றறிந்தேன
ஆகையாலதைத் தாமதமபண்ணாமற் கொண்டோடிப்போய்க் கொடு
வென்று சொல்ல அவன மட்டப்பலகையை ஒரு கையிலும, அந
தச சிராயத்துண்டை மற்றக் கையிலும பிடித்துத் தெருவீதிகளு
க்கூடாயோடி இங்கிலீஷ்காரருடைய புத்தியைப் பாருங்கள, சி
ராயத்துண்டுகளுக்குக்கூட அவர்கள பேசப்பழக்கக்கூடியவர்க
ளாயிருக்கிறார்களென்று சந்தோஷித்துடனே என்னிடத்தில வந்து
அந்த மட்டப்பலகையை ஒப்புவித்ததின்மேல ஐயா, நீங்கள் தூ

...த்திலிருக்கிறவர்களுடனே இந்தச் சிராய்த்துண்டுவழியாய்ப் பேசிக்கொள்வது எப்படியென்று விசாரணைபண்ணினேன். நானும் என்னாலேகூடியளவு அவனுக்கு விளங்கப்பண்ணி அவன் விளங்கிக்கொண்டாலும் அவன் அந்தச் சிராய்த்துண்டின் அற்புதத்தினாலே மலைவுகொண்டு அதை வெகுநாளாகத் தன் கழுத்திலே ஒரு கயிற்றினாலே கட்டித் தூக்கிக்கொண்டான். இதைக் கண்டவர்கள் எல்லாருஞ் சில மாதமாக அவனைக் கண்ட தருணங்களிலே வளைந்துநின்று இவனை அதைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்ல அவர்களுமோ ஆவலாய்க் கேட்டுக்கொண்டு நிற்பார்கள்.

ஒருநாள் நானும் என் கூட்டாளியாகிய பிற்றுமனும் கோவில் வேலைசெய்விக்கிற இடத்திலே நின்றபொழுது அவர்கள் ஒரு கைமரத்தைத் தூக்கி உயரவேற்றுகையில் அது வழுவி (பிற்றுமன்) என்பவருடைய தலையில் விழுந்ததினாலே அறிவுகெட்டுச் செத்துப்போனவர்போற்கிடந்தார். நாங்கள் ஓடிப்போய் அவரைத் தூக்கியெடுத்துக் காயத்தை ஆராய்ந்துபார்த்தவிடத்தில் எலும்புகளுக்குப் பழுதில்லாததினாலே உடனே மருந்துகட்டினோம். கர்த்தருடைய கிருபையினாற் கொஞ்சநாளைக்குள்ளே சுகமடைந்து மறுபடியுங் கடவுளுடைய வேலையைப் பராமரித்து வந்தார்.

இந்தத் தீவார் அறிவிலே தேறும்படி நாங்கள் அவர்கள் பாஷையிலே எழுத்துண்டாக்கிய புத்தகங்களைப் பரம்பப்பண்ணிப் புதிய ஏற்பாட்டிலுள்ள யோவானுடைய சுவிசேஷத்தையுங் கலாத்தியருக்கெழுதின நிருபத்தையும் அந்தப் பாஷையிலே அச்சுப்போடுவித்துக்கொடுத்தோம். தீவு விஸ்தாரமும் அதின் குடிசனங்கள் மிகுதியுமாயிருந்ததினாலே புதிதாகக்கட்டின கோவிலிலே ஒரு குருவும் உபதேசிகளுமிருக்கவும், முந்தின பழைய கோவிலைப் புதுப்பித்து அதிலொரு குருவும் அதற்கடுத்த உதவிக்காரரும் அங்கேயிருக்கவும், யோசனைபண்ணிக்கொண்டு அதற்கடுத்தவொழுங்குபண்ணினோம். இவ்விதமாக நாங்கள் அங்கங்கேயிருக்கிறதற்கு வீடுவாசல்கட்டி வசதிபண்ணினபின்பு சனங்களுக்கு அறிவைப் போதிக்கத்தொடங்கினோம். யாவரும் எங்களிடத்தில் வந்து நலவிருப்பத்தோடே கேட்பார்கள். ஓய்வுநாடோறும் இந்தத் தீவிற்சனங்கள் தாங்கள் தேவாராதனைக்குப் போகவேண்டிய கோவில்களுக்குப் போய் அங்கே பிரசங்கந் தொடங்குமுன்னுக்கு எட்டு மணி வரைக்குந் தாங்களாய்க் கூடிச் செபக்கூட்டம் வைப்பார்கள். பிரசங்கம் முடிந்த பின்பு அந்தக் குருவினிடத்திலே போய் அவர் அன்றைக்குப் பண்ணின பிரசங்கத்தைக் குறித்து ஒரு மணித்தியாலம் வரைக்குங் கெட்டியாய் விசாரணைபண்ணித் தங்கள் மனதிலே வைத்துக்கொள்வார்கள். மேலும் இன்னின்னவைக்கு முகவுரை வசனங்களையும், இன்னின்ன பிரசங்கத்தின் முகவுரையிலே சொல்லப்படுங் காரியங்களையும், இன்னின்ன பிரசங்கத்தின் நடுப்பகுதிகளையும், இன்னின்ன பிரசங்கத்தின் கடைப்பகுதியையும், இன்னின்ன ஒத்துவாக்கியங்களையும் நினைத்துக்கொள்ளவேண்டுமென்று ஒருவரோடொருவர் பிரசங்கத்துக்குப் போகுமுன்னதாகப் பேசிக்கொண்டு பிரசங்கத்தின் பின்பு வந்து ஒருவரை ஒருவர் வினவுகிற பழக்கமும் இவர்களுக்குள் வாடிக்கையாயிருந்தது.

[இன்னும் வரும்.]

THE HISTORY OF CHRISTIANITY IN CEYLON

(Translated from the "Friend")

(Continued from page 74)

இலங்கைத் தீபககிறிஸ்துசமயோற்பவ விருத்தாந்தம்

(௲௫௱௪௰) ஆண்டு பிறஞ்சி சவியேல் (Francis Xavier) என்னும் [illegible] பெரிய போதகர் கோவைக்கு வந்து பிறகு [illegible] மதுராபுரி முதலிய பேர்போந்த தலங்களுக்குப்போனார். இவரெழுதிவைத்த சில புத்தகங்களில் நாம் காண்கிறதென்னவெனில் "நான் கையிலே என்னுடைய மணியையும் பிடித்து எனக்ககப்படுகிற சகலரையுஞ் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குக் கிறிஸ்துமார்க்கத்தையும் போதித்தேன்" (இந்தச் சவியேல் போதகருக்குச் சிலர் இரண்டாம் பவுல் அப்போஸ்தலனெனப் பேர்குட்டி...யிருக்கிறார்கள். இவர் பண்ணின மூன்றும் பிரயாணத்திலே மன்னாரிலிருந்த கிறிஸ்தவர்களைக்கண்டு சந்தித்து மகிழ்ச்சியடைந்தார். இவ்விடத்திலிருந்த பரவரில் (Paravas) அநேகர் கிறிஸ்துமதத்தைத் தழுவிக்கொண்டார்களென்பதை (Jaffna) யாழ்ப்பாணநாட்டை அரசாண்ட அதிபதி கேள்விப்பட்டபொழுது கொஞ்சப்பேரைப் பட்டயத்துக் கிரையாக்கவுங் கொஞ்சப்பேரைக் கழுவிலேற்றவுந் தீர்மானித்தான். இவ்விதமாகவே அநேக கிறிஸ்தவர்கள் மரணவுபாதியையடைந்தார்கள். உடனேஉண்டானகட்டளை நிருபித்ததென்னவென்றால் "இந்து மத ஆசாரியகுருமாரைத்தவிர வேறொருபிரமதத்தாரும் இத்தீவுக்குக் கால் மிதிக்கப்படாதென்றும், அப்படியாராகுதல் மிதித்ததுண்டானாற் சகலரும் ஆக்கினையடைவார்களென்றுந்தான்." இவ்விதமான கொடூரகட்டளைவந்தாலுங் கிறிஸ்துமதமோ எங்கும் பரம்பிவந்தது. எப்படியெனில் இக்கட்டளை நிருபித்தலையுண்டுபண்ணின ராசாவின் வீட்டு வேலைகாரருங் கோட்டுவேலைகாரரும் ஞானஸ்நானம்பெற்றுச் சபையிலுஞ்சேர்ந்ததுமல்லாமல் அவ்விராசனுடைய புத்திரனுங் கிறிஸ்து சபையிற் சேர்ந்துவிட்டான். உடனே அந்தப் பொல்லாத ராசா தன் மகனைச் சற்றெங்கிலும் இரக்கமில்லாமற் கொன்றுபோட்டான்.

(௫௱௪௮) ஆண்டு சவியேல் என்பவர் யாழ்ப்பாணத்துக்குவந்து இவ்விடத்திலிருந்த ராசாவை முகமுகமாய்க் கண்டு அவருடனே சில பிரதான காரியங்களைப் பற்றிப் பேசிப் பறங்கிக்காரருடனே சந்தோஷமாயிருக்கவும் அவர்களுடைய போர்ச்சேவகரைப் பிடித்துக்கொள்ளவும் அவரை வேண்டிக்கொண்டார். பிறகு சவியேல (Ramasseram) இராமேசுரத்துக்குப் போனபொழுது அவ்விடத்திலே அவரைக் கிட்டத்தானும் அணுகவிடாமற் தூரநிற்கும்படி மறித்தபொழுது அவர் அகல நின்று பண்ணின பிரசங்கமாவது. "பொல்லாத சனங்களே, சீவியபராபரனிடத்துக்குத் திரும்புங்கள்" என்பதே. இந்தப் போதகரைப்போலத்தானே (Vas) வாஸ் என்ற குருவுங் கிறிஸ்துமதப் பிரபலியத்துக்காக வெகு பிரயாசப்பட்டு இரண்டாஞ் சவியேல் என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்

பறங்கிக்காரருடைய ஆளுகை யொழிந்துபோனபொழுது கொழும்பிலே இரண்டு பெரிய கோவில்களும் ஐந்து சிறிதானகோவில்களுங் கட்டப்பட்டன. காலியில் (Galle) ஏறக்குறைய (௬௱) மெய்க் கிறிஸ்தவர்களிருந்தார்களெனக் கேள்வியுண்டு. கல்த்துறையிலே (Cultura) ஒரு போதகரும், நீர்கொழும்பில் (Negombo) வேறொருபோதகரும், மட்டுக்களப்பில் (Batticaloe) இன்னுமொரு போதகருமாக மூன்று போதகர்களிருந்தார்கள். இனிவருஞ் சரு

சிகைகள் ஒன்றில் யாழ்ப்பாணத்திற் கிறிஸ்துமதம் வந்த விதத்தைப் பற்றிச் சுருக்கமாயெடுத்துக் காட்டுவோம்.

வேதவிசாரணை

Religious Inquiry

சகத்திருணீக்குந் தபனனெனவே-யுளத்திருணீக்கும் உதயதாரகையின் முகாமைத்துரைக்கு மகா நன்மை மலருக

உதயதாரகையில் மார்க்கத்தைப்பற்றியும் அச்சடிக்கப்படுமென்ற ஒழுங்குத் திட்டமுண்டுபண்ணிக்கொண்டது முக்கியமான காரியம் ஏனெனில் அதோனறுமே அத்தை வாசிப்பவர்களுடைய ஆற்றுமத்துக்கடுத்த காரியம் ஆகையால், நானும் ஒரு காரியமெழுதி என் மனவறிவு தேறி நலவழியிற் சேருமபடி துணிந்தேன் என்னவெனில்,

மோசே எழுதின இரண்டாம் ஆகமம், உ௰ அதிகாரம் ரு, சு வசனங்களில் "உன் பராபரனுகிய கர்த்தராயிருக்கிற நாம எரிச்சலுள்ள தேவனுயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்று பிதாக்களுடைய அவநியாயத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நான்காந் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம். ஆனாலும் நம்மைச் சினேகித்து நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டுந் தயவு செய்கிறவராயிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கின்றது இதிற் சொல்லியபடி பிதாக்களுடைய பாவத்துக்காகப் பிள்ளைகளிடத்திற் பராபரன் பழிவாங்கிறனென்றால் நான் கிறிஸ்தவனுகவேண்டியதென்னவென்றால் எண்ணம் உண்டாகின்றது ஏனெனில் எனது பிதாக் கிறிஸ்தவனல்லாததினால் நானும் பாவிதான் என் பிள்ளை பேரப்பிள்ளைகளும் பாவிகள்தான், ஆகையால் இப்போ இந்த ஊரிலே கிறிஸ்தவர்களாகிறவர்களுக்கு மோட்சமில்லையென்றெண்ணவேண்டியது அதுவன்றி எனது பிதா அஞ்ஞானியாயும் நான் கிறிஸ்தவனுயுமிருந்தால் என் பிள்ளை என் பிதாவை நோக்கிப் பாவியாகவும் என்னை நோக்கிப் பரிசுத்தவானுகவுமிருப்பான் அப்போ பராபரன் அவனைப் பேரிற் பழிவாங்குவாரோ? தயவுசெய்வாரோ? அல்லாமலும் ஒருவன் செய்த குற்றத்துக்காக வேறொருவனைக் குற்றவாளியாக்குகிறது அநீதமாய் முடியுமே

"அறிவறியாமையை யுறலகொள்ளலகொடையேவறருமவினு" என்னுமறுவகைவினுவுள் இது, அறியாவினுவாகையாலும் இக்காரியம் மறு காரியங்களைப் போல உலக அறிவுக்கடுத்ததல்ல ஆற்றுமவிடேற்றத்துக்கடுத்ததாகையாலும் கிறிஸ்தமார்க்கத்திற் கனிந்த அறிவையுடையோர் அன்புடனே யோரவிடை எழுதியெனது அறியாமையை அகற்றி என்னை நன்மார்க்கத்திலுயக்கும்படி மிகுந்த தாழ்மையுடன் மன்றாடிக் கேட்கிறேன் இப்படிக்கு

ஙஅஎ௱ சஉ ஆடி பங்குனி மீ உருதி-
கடடைவேலி வேதவினோதன்

கவனிப்பு

"வேதவினோதன்" என்பவர் காட்டிய வசனங்களையும் பின்னுற்சொல்லப்படும் வசனத்தையும் ஒன்றோடொன்று சமரசப்படுத்தி மலைவறுப்பதினுல அவரெழுதிய வசனங்களின் கருத்துத் தெளிவுற விளங்கும் அதாவது, எசேக்கியேல், ௰அ அதி உ௰ வசனம் "பாவஞ் செய்கிற ஆத்துமமே சாகும் குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை நீதிமானுடைய நீதி அவன் மேலே தானேயிருக்கும் ஆகாதவனுடைய ஆகாமியமும் அவன்மேலே தானேயிருக்கும்" இந்த வசனத்திலே ஒரு மனிதன் தன்னுடைய சொந்த அக்கிரமத்தையே சுமப்பதல்லாமல் மற்றொருவனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதேயில்லை. அப்படியே ஒரு மனிதனுடைய நீதியும் அவனுடைய சொந்தமான பொருளாயிருப்பதேயல்லாமல் மற்றொருவனுடைய பலாபலனுக்குப்போவதேயில்லை பின்னை "வேதவினோதன்" என்பவர் காட்டிய வசனங்களின் கருத்தென்ன? ஒரு பொல்லாத மனிதனுடைய புத்திரனுவன் தன் பிதாச் செய்த குற்றத்திலே யாதொரு தடையில்லாமற் கட்டாயமாய் அகப்படத்தான் வேண்டியதென்று சொல்லவில்லை பெரும்பாலும் பிதாச் செய்துவந்த குற்றத்திலே மகனும் அகப்படவேதுவாயிருக்கிறனென்று சொல்லவேண்டும். ஆகையினால் மகன் செய்த குற்றம் மகனுக்கேயுரியது. ஒரு கள்வனுடைய மகனுனவன் பெரும்பாலுங் கள்வனுய் வருகிறதில்லையா? ஒரு விபசாரனுடைய மகன் பெரும்பாலும் விபசாரனுய் வருகிறதில்லையா? அப்படியிருந்தும், அந்தக் குமாரன் கள்வனுயும் விபசாரனுயும் வரும்பொழுது அவன் குற்றவாளியாவதினால் ஆக்கினைத் தண்டத்துக்கு அவனே ஏதுவாயிருப்பான் இப்படி இவனடைய வந்தது தன் பிதாப் பாவஞ்செய்ததினாலல்ல தன் பிதாவைப் போலிவனும் பாவஞ்செய்ததினால் இப்படியடையவந்ததென்று நினைக்கவேண்டியது கயினுல ஒரு பொல்லாத மனிதன் எண்ணவேண்டியதென்னவெனில் தன்னுடைய பின் சந்ததியாருந் தான் செய்துவந்த பாவத்தைப் பின்றொடர்ந்து நாடி அவர்களும் பாவஞ்செய்ய ஏதுவாயிருக்கிறதினால் தான் பாவஞ்செய்யாது விடுவதே யோக்கியம் இன்னும் பொல்லாத பெற்றோர்களுடைய பிள்ளைகள் தங்கள் பிதாமாதாவின் வழிகளை விட்டுவிடவேண்டியது ஏனென்றால் அப் பிள்ளைகள் ஆண்டவனிடத்துக்குத் திரும்பி அவருடைய கட்டளைகளுக்கமையும்போது, மெய்யாகவே தங்களாத்துமத்தைத் தப்புவித்துக்கொள்வார்கள் மேற் குறித்த காரியங்களைத் திட்டமாய் விளங்குகிறதற்கு எசேக்கியேல், ௰அ. அதிகாரத்தை வாசிக்கவேண்டியது.

முகாமைத்துரையே,

மாங்கிஷம் புசிப்பது மிகவும் அடாத காரியமென்று சைவமார்க்கத்திலுந் திருவள்ளுவர் முதலான நூல்களிலுஞ் சொல்லியிருப்பதும், கிறிஸ்துமார்க்கத்தில் புசிக்கலாமென்று சொல்லியிருப்பதும ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட காரியங்களாயிருப்பதினால் அதைப் பற்றி நான் அறிவிக்குஞ் சில கருத்துக்களைத் தயவுபண்ணி உங்கள் உதயதாரகைப் பத்திரத்தில் அச்சடிப்பிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன் நான் மச்சம் மாங்கிஷம் புசிக்கிற பிதாமாதாக்களால் வளர்க்கப்பட்டு அப்பதார்த்தங்கள் பக்குவமாய்ச் சமைக்கப்பட்டால் மரக்கறியிலும் அதிக பிரியங்கொண்டு புசித்து அதின் நன்மை தின்மை இன்னதென்று விசாரியாமல் நடந்துவந்தேன் பிறகு தமிழருடைய நூற்போக்கைக் கண்டு, மச்சம் மாங்கிஷம் புசிப்பது பாவமல்லாதிருந்தாலும் அதை விட்டு வருவோமென்றெண்ணிச் சிறிது காலம் அப்படிச் செய்தேன் ஆனாலும் கிறிஸ்து மார்க்கத்திற் சோதந்த பிறகு அதில மாங்கிஷம் புசிப்பது பாவமல்லவென்று கண்டிருப்பதினால் முன்போல மச்சம் மாங்கிஷத்தைப் புசித்துவந்தேன் ஆனாலும் அப்படிச் செய்வது புசிக்குஞ் செயன் மாத்திரந்து என மனதுக்கு மிகவும் பொருந்தியதாயிருக்கவில்லை, ஆகையால் கிறிஸ்துமார்க்கம் மாங்கிஷந் தின்னலாமென்று சொல்லுவதுஞ் சைவமார்க்கந் தின்பது கொடிய பாவமென்று சொல்லுவதும் மிகவும் வித்தியாசமான காரியமாயிருப்பதினால் அத்தை விசாரிக்கத் தொடங்கினேன் என் விசாரணையில் நானறிந்து நிச்சயித்திருக்கிற காரியத்தையாவருக்கும் அறிவிக்க விரும்புகிறேன். ஊண்டு புசித்துச் சீரணிக்கத்தக்க படைப்புக்கள் யாவும் இருவகையாயிருக்கின்றன அவையெவையெனில், மரபோசனிகளும் மாங்கிஷ போசனிகளுந்தான் இவ்விருவகைப்பட்ட படைப்புகளின் சடங்களை வெட்டிப் பிளந்து உட்கூறுபாடுகளை ஆராயுமிடத்து அவையொன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றன. மாங்கிஷ போசனிகளின் அவயவங்கள் உரத்ததும் மாங்கிஷசீரணம் பண்ணத்தக்கதானதும், மரபோசனிகளின் அவயவங்கள் மென்மையானதும் நொய்மையானதுமாயிருக்கின்றன மனுஷனுடைய உள் அவயவங்களைப் பார்க்கும்பொழுது மாங்கிஷபோசனிகளில் தன்மையாயிருக்கின்றன. இதினால் நாம அறிவதென்னவானற பராபரன் மனுஷரைப்படைக்கிற பொழுதே மாங்கிஷபோசனிகளாயே படைத்தார் ஆகையால் மாங்கிஷம் புசிப்பது மனதுக்குப் பொருத்தமும் பழக்கமுமல்லவென்று ஒருவன் சைவ ஒழுங்கைப் பின்பற்றுவதன்றிப் பாவமென்றெண்ணி மாங்கிஷ போசனத்தைத் தள்ள நியாயங்காணுது இப்படிக்கு சத்தியவசனி

விலங்கியல்.

பதினசசங்கதிகள்	106	Gardener's Calender for May	105
		Summary of Tamil News -	106
		" English News	107

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம், சஞ்சிகை ௰] ௲௮௱௪௨ ௵ வைகாசி ௰௯, தேயதி வியாழக்கிழமை Thursday, May 19, 1842 [Vol II No 10

பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு

Historical sketch of the Pandian Kingdom

(Continued from page 97)

இந்தச் சங்கம் ஏற்பட்ட காலத்தைக் குறித்து விசாரணைபண்ணுகிறதற்கு இன்னுமொரு காரியமிருக்கின்றது அதாவது, திருவள்ளுவரைக் குறித்துச் சொல்லுகிற பரம்பரைக் கதையை நாம் நம்புவோமேயானால், அவர் சீவந்தராயிருந்த காலந்தான் அந்தச் சங்கமேற்பட்ட காலமென்று நாம் வைத்துக்கொள்ளவேண்டும். பின்னும் இவர் ஔவையாருடன் பிறந்தவரென்றுஞ் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி இந்தக் குடும்ப சரித்திரத்தைப் பார்த்தால் ஒருகட்டுக்கதையாயிருக்கின்றது ஆகையால் நாம் இதை நம்பவொண்ணாது தமிழ் வித்துவான்கள் இத்தனை போற்றுகிற கையெழுத்துச் சாதனத்திலே இவர் செய்த நூலை (௲௯௱) வருஷப் பழைய நூலாகச் சொல்லுகின்றது மேற்படி நூலினையிலே கொஞ்சம் மொழிபெயர்த்திருக்கிற கிண்டெர்ஸ்லி துரை (Mr Kindersley) இந்த முதனூலானது (௲௪௱) வருடத்துக்கு முன்னே எழுதினதாகத் தெரியவந்ததென்று சொல்லியிருக்கிறார்கள் மேலும் அந்த நூல் மிகவும் பிரயோசனமாயிருக்கின்றதென்று அவர் சொல்லுகிறபடியினாலே அது மிகவும் புராதனப்பட்டதென்று அநுமானிக்கத்தக்கதாயிருக்கின்றது இவைகளினாலே எல்லாம் திருவள்ளுவருடைய காலமானது ஆறாஞ் சதகத்துக்கும் ஒன்பதாஞ் சதகத்துக்கும் மத்தியப்பட்டதென்று நாம் நிதானிக்கலாம்.

குறளிலிருந்தெடுத்துக்கொண்டு இங்கிலீஸிலே மொழிபெயர்த்திருக்கிற சிலவற்றைக்கொண்டு நாம் நிதானிக்கத்தக்க அவ்வளவுமட்டும் பார்த்தால், மேற்படி நூலாசிரியர் சரியான இந்துமதஸ்தரல்லவென்று பாவிக்கிறதற்குச் சில முகாந்திரமிருக்கின்றது ஸ்ரீயாகாரியங்களையும் பக்தியோகத்தையும் விட்டு, நீதி மார்க்கங்களையும் அனுஷ்டான மார்க்கங்களையுஞ் சொல்லியிருக்கிறவராய்க் காண்கின்றார் இந்திரப் பதவியையும், பிரமமானநாளுந் தேவதாப் பதவிகளையும் அப்படியே பிராமணர்களுக்கும், ரிஷிகளுக்குஞ் செய்யவேண்டிய முறைகளையும் எடுத்துப் பேசுகிறபடியினாலேயும், இவர் ஒரு மதத்தையே அநுசரித்தவராயாவது காணப்படவில்லை ஆகையினாலே இவருடைய சித்தாந்தப் பிரவர்த்தகமானது பிராமணருடைய சித்தாந்தத்துக்கு விரோதமாயிருந்தபோதிலும், மதுரைத் தேசத்திலே சைனமதத்தையாவது, புத்தமதத்தையாவது எவ்வளவுமட்டும் பிரபலப்படுத்தியிருக்கிறரோ அது அநுமானத்துக்கிடமாயிருக்கின்றது என்னவாயிருந்தபோதிலும் மதுரை இராசாக்கள் பதாசாரங்களை அநுசரிக்கிறதுண்டு அந்தப்படிக்குக் கூன்பாண்டியனென்கிறவன் சட்டைத்தஸ்தனாயிருந்து சைனமதத்தை அநுசரிக்கவேண்டுமென்றிருந்தான் இந்தச் சைனமதமென்கிற சொல் பௌத்தமதத்துக்குக் கூடப்பிரயோகிக்கலாம் ஆனபோதைக்கும் அவைகள் இரண்டும் ஒன்றுபோல நினைக்கிறதற்குச் சரியான முகாந்திரமிருக்கின்றது பூர்வப்பட்ட வேதபாக்கியத்துவமானது கொழும்பிலிருந்து வந்ததாகச் சில வர்த்தமானங்கள் அடிபடுகின்றன ஆனாலும் அந்தப் பட்சத்தில் அது புத்தர்களுடைய மதமாயிருக்கின்றது அந்த வேதபாக்கியர்கள் துரத்தப்பட்டபோது அந்தத் தீவுக்கோடிப்போனார்களென்று சில வர்த்தமானங்களிலே தெரியவருகின்றது இன்னமும் பிரஸ்தாபங்களிலே அப்படியே காணுகின்றது மேலும் இந்தப் பௌத்தர்களைச் சயபுத்திலகத்திலிருந்து பூர்வீகத்திலேயே துரத்திவிட்டதாகக் காணுகின்றது உம்சீ (Humchi) இராசாக்களையும் வல்லாள, (Belal) இராசாக்களையுங் குறித்திருக்கிற சாதனங்களிலே சைனமதமானது மைசூரிலே (Mysore) இந்தக் காலத்திலேதான் ஏற்பட்டதாகக் காணுகின்றது முதன்முதற் சைன வித்துவான்களை ஞானசம்பந்தர் மதுரையிலே (Madura) சைவமாக்கினார் ஆனபடியினாலே கூன்பாண்டியனுடைய மதமும் சைனமதமென்று நாம் எண்ணவேண்டிய இடமுண்டு. ஆனாலும் சிவபூசையும், லிங்கபூசையும் பூர்வந்தொடங்கி நாள்துவரையில் மாறுமற் செய்துகொண்டு வருகிற பரத வருஷத்தைச் சேர்ந்த தெட்சண திசைகளிலே சைன மதமாவது, பௌத்தமதமாவது எப்போதாவது வியாபிக்கவில்லையென்கிறது உண்மையாய்க் காணுகின்றது (இன்னும் வரும்)

Life of Mohammed —மகமதுவின் சரித்திரம்

௰ அதிகாரம்.

[*The Prophet pretends to have a night-journey through the seven Heavens—Description of the memorable night by an Arabic writer—Account of the journey*]

மகமது நிசாற்புதப்பிரயாண விருத்தாந்தம்

மகமதுநபி தன்னுடைய நவமதத்தை ஸ்தாபித்த பன்னிரண்டாம் வருடத்தில் ஒரு நாள் இராத்திரிக்குக் கபிரியேல் தூதன் தன்னை மக்கா நகரியிலிருந்து எருசலேம் பட்டணத்துக்கும், எருசலேமிலிருந்து ஏழாம் வானத்துக்குங் கூட்டிக்கொண்டுபோனதாகவுஞ் சொல்லுகிறார் இதைக் குறிப்பாகக் காட்டும்படி கோரான் (௰௭)ம் அதிகாரத்திற் சொல்லியிருக்கிறதாவது 'மக்கா நகரியிற் கோவிலிலிருந்து எருசலேம் நகரியிற் கோவிலுக்கு இரவிலே தம்முடைய அடியானை எடுத்துப்போன ஆண்டவனுக்குத் துதியுண்டாவதாக, ஏனென்றாற் கேட்கிறவருங் காண்கிறவருமாகிய அவரே பராபரன்'' இச்சம்பவத்தை மகமது தற்புகழ்ச்சிக்காகத் தானொரு பரிசுத்தவானென்றும், பராபரனைச் சீனாய் மலையிலே மோசே யென்பவர் முகாமுகமாய்க் கண்டு பேசினதினாலே மோசேக்குத் தான் சரிவந்தவரென்பதைக் காட்டும்படிக்கும் இப்படியே வீணக் கதையை யெடுத்துத் தொடுத்தாரென்று நினைக்கிறது இதுகாரியத்தை மகமதுமதத்தார் மெய்யென்று நம்புகிறார்கள்.

மகமதுநபி வானத்துக்கெடுப்பட்ட சம்பவத்தைக் குறித்து அரபிய எழுத்துக்காரன் சொல்லுகிறதென்னவென்றால், ''சகல சராசரங்களும் அமைந்தடங்கியிருந்த ஒரு நாள் இராத்திரி மகமதுநபி தன்னுடைய கண்ணுக்குச் சரியான பெண்சாதி ஏயாசா (Ayesha) என்பவளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு படுத்திருக்கிறவேளையில், உறைந்த பனியிலுஞ் சிறந்த பளிங்கிலும் அதிகம் வெண்மையான எழுபது சோடு விரித்த செட்டைகளைத் தரித்த காபிரியேல் தூதன் வந்து நபியைத் தட்டியெழுப்பித் தான் வந்த சமாசாரத்தை அவருக்குக் கூறித் தானே கதவருகே கொண்டுவந்து கட்டி வைத்திருக்கிறதில் ஏறும்படி நபிக்குச் சொன்னார் அம்மிருகம் கழுதைக்குங் கோவேறுகழுதைக்குஞ் சமானமாயிருந்தது அம்மிருகத்தின் பேர் (Alborak) அல்பராக்கு, அத்தை அருந்தப்படுத்துதல் ''வெளிச்சம்'' என்று கருத்தாம் அதினுடைய நிறம் பால் நிறமாயிருந்தது கிறிஸ்துநாதருடைய காலந்தொடங்கி மகமதுநபியுடைய காலமட்டுக்கும் அம்மிருகம் இளைப்பாறிக்கிடந்ததினால் ஒருவருமிருந்ததில்லை மகமது அம்மிருகத்திலே பொற்றி ஏறினபொழுது அது ஆட்டியலைத்து அவரை ஏறவொட்டமாட்டேனென்றது உடனே அவர் ஒரு இடத்தைப் பரதீசிலே நிலைநிறுத்தி உனக்குத் தருவேனென்று சொன்னவுடனே அந்த மிருகமிணங்கப்பட்டு ஏறும்படி இடங்கொடுத்தவுடனே, கூட்டிக்கொண்டு போகவந்த காபிரியேல் தூதனுங் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டு கண்மூடி விழிக்குமுன்னே மக்கா நகரியிலிருந்து எருசலேமுக்குப் போய் எருசலேமிற் சேர்ந்தவுடனே மரித்துப்போன பரிசுத்தவான்களுந் தீர்க்கதரிசிகளும் வந்து அவரைச் சாதித்து அவர் மகிமையின் ஆசனத்துக்குக் கிட்டவரும்போது தங்களையும் நினைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள் மகமதுவுந் தூதனுங் கோவிலுக்குட்போனவுடனே தாங்கள் ஏறும்படி வைத்திருந்த ஒரு ஏணியைக் கண்டு ஏறிவந்து மிருகத்தை ஒரு மலையிலே கட்டி முதலாம் வானத்துக்குப்போனபொழுது அவ்விடத்திற் காவல்முகாரியாய் நின்ற ஆளுக்குத் தூதன் சொன்னது, ''என்னுடைய தோழன் மகமது நபியேயல்லாமல் வேறொருவருமல்ல'' என்றார் இவர்கள் முதன் முதற்கண்ட முதலாம் வானம் மலையளவு பருப்பமுள்ள நட்சத்திரங்களைப் பொற் சங்கிலிகளிலே தூக்கி அல

கரிக்கப்பட்ட நல்ல வெள்ளியின சாயலாய் இருந்தது இவ்விடத்திலே வயசுசென்று விழுகிழவனாய் இருந்த ஆதிபிதாவாகிய ஆதாமைக் கண்டவுடனே, அவரும் எழும்பி மகமதுவைச் சாஷ்டாங்கமபண்ணி அடியேனையும நினைத்தருளுமென்று சொலலி,மகமதுநபி தன புத்திரனாகவந்ததற்காக மிகவுஞ் சநதோஷப்பட்டார் இவவிடத்திலே மனிதரைப் போலவும, மிருகத்தைப்போலவும், பட்சிசாலங்களைப் போலவும அநேக சம்மனசுகள் இருந்தார்கள் இதற்கிடையே முதலாம் வானத்தில இருந்து இரணடாம வானத்துககுள்ளே(ருா)நாட் பிரயாணதூரமாகிய வழியைத் தலையினாற் தொடடுககொண்டு நிற்கிற இராட்சதப பிறபுககுச் சரியான ஒரு சேவலும நினறது அதினுடைய சத்தத்தையோ மனிதரும அரமசனிகளுந் (Fairies) தவிர ஆணடவன படைத்தமற்றும படைபபுகளெல்லாங் கேட்கக்கூடியதாயிருந்தது பிறகு மகமது நபியுந் தூதனும இரண்டாம் வானத்துககுப் போய் நோவாவையும, மூனறும வானத்தில ஆபிரகாமையும,அவருடனேகூட சகலவிதமான பீடங்களையும தனககு முன்வைத்துககொணடிருந்து பூமியிலகண பிறக்கிறவாகளின தொகை எவவளவென்றுஞ் சாகிறவாகளின தொகை எவவளவெனறுங கணககுப்போட்டிருக்கிற மரணத்தின தூதனையும நாலாம வானத்தில மிகவுஞ் சஙகிக்கப்படததக்க மோசே எனபவரையும, ஆறும வானத்தில யோவானஸ்நானனையும (John the Baptist) ஏழாம வானத்தில மகிமையின வெளிச்சந்தங்கிய யேசுகிறிஸ்துநாதரையுங் கணடார் "ஏழாம் வானத்திலுள்ள சகல சம்மனசுகளும பாடித்துதித்துக்கீர்த்தனமபணணிககொண்டிருந்தாகள மேலும,(எதூ)தலைகளும,ஒவவொரு தலைக்கு(எதூ)வாயகளும,ஒவவொரு வாயககு(எதூ) நாவுகளும, ஒவவொரு நாவுக்கு (எதூ) தொனிகளுமுள்ள வேறொரு தேவதூதனும அவவிடத்தில இருநதான"

'இநத ஏழாம வானமளவுங காபிரியேலதூதன் மகமதுவைக் கூட்டிககொணடுபோய அதறகபபால உடமைக கொண்டுபோகிறதற்கு உத்தரவிலலை. நீா தனியேதானே பராபரனின சிங்காசனத்தணடை சேரலாமெனறு சொலலித் தூதனும நினறுவிட, மகமதுநபி தனியேதானேபோகுமபொழுது, 'மகமதுவே உமமுடைய சிருட்டிகரைத் துதியமபணணும" எனறொரு சத்தங கேட்டது"

"பிறகு கடைசியாக மகமதுநபி பராபரனையுங் கண்டார் அவா இருவருககு விளஙகாத மறைபொருள இரகசியஙகளையும சொலலிக்கொடுத்ததுமலலாமல, நியாயத்தீர்ப்புநாளிலே சகல படைப்புகளுக்குள்ளும நீரே முதற் பாகத்தை அடைவீரெனறு பராபரன சொனனா இவைகளெல்லாவறறையுங கேடடுககொணடு திருமபிவருகிறவேளையிற் காபிரியேலதூதன் திருமபவும வழிபாாத்துக்கொணடு நினறு முனபோனமாதரியே திருமபவுங கூட்டிககொணடுவநது அவருடைய பதவியிற் சோத்துவிட்டுத் தூதனும மறைநதுபோனான'

[Abridgement of Good's Book of Nature]

கூட் என்பவர் செய்த பிரபஞ்சநூல்

இரண்டாம் பிரிவு. மூன்றும் அதிகாரம்.

மநுச்சாதியின் விசேடலட்சணங்கள்

க. மேலை அதிகாரங்களில் மனிதசாதிக்குக் கீழான பலவகை மிருகங்களையும் பற்றிப் பொழிப்பாய்ச் சில காரியங்களைச் சொன்னோம். இப்பொழுது மனுவர்க்கங்களையும் பிறமிருகஙகளினின்று மனிதனைமேற்படுத்தற்காய எடுப்பையும மனோகருவிகளையும் ஒருகுலத்தார் பிரிது ஒரு குலத்தாரினின்றும் வேறுதற்காயசந்தான நிலையையும பற்றிச் சாமானியமாய்ப் பார்வையிடுவோமாக

உ. மானிடதோற்றத்திலேமிகுபேதமுண்டு. பற்றைக்கோனியதேசத்தாருடைய உயரம் பன்மைபற்றி ஆறடிக்குமேலே ஏழடிமட்டுக்குமுண்டு. இலோப்லன்று, எக்குவிமோசு தேசத்தாருடைய உயரமோ பொதுமட்டாய் நாலடியுண்டு. இப்பால்,மோசை, லீலியபுட்டங்களினிறஞ்செறிந்துகலந்து எரோப்பையாரைப் பிரித்துக் காட்டுந் துய்யதோலுக்கும்,ஆபிரிக்காவிலுள்ள காப்பிரியின் நெய்க்கறுப்புள்ள முரட்டுத்தோலுக்குமுள்ளவேற்றுமையெவ்வளவு?

ஙா. ஆனாலும் மனிதரின் நிறச்சாயலிலேயுள்ள வேறுபாடு வெள்ளையுங் கறுப்புமாத்திரமல்ல பிரபஞ்சநூலாசிரியர் ஐவகைக்குலமுண்டெனக் கூறுகிறார்கள். இக்குலத்தவர்கள் ஆளுடைய முகரூபாலும் நடையாலும் இவைபோற் சாயலாலும் வேற்றினப்படுகிறார்கள். இவர்களைப் பற்றி மனதிலமையத்தகும்விசேடங்களை யெடுத்துரைத்துப் பின், இப்படியிவர்களுண்டாக்கப்பட்டதற்குக் காரணமுமியன்றளவு மெடுத்துக்காட்டுவோம்.

ச (கவது) எரோப்பையாருடைய அல்லது வெள்ளைக்காரருடைய கன்னங்கள் மிருதியுமல்லது சற்றே சிவப்பேறி, தலையுருண்டையாய் முகமொடுங்கி வளைந்து வாய் பொதுவாகச் சிறுத்து நன்றாய் அண்டாகாரமாய் நெற்றி சற்றே திட்டையாய், நாசி வட்டித்துக் கண்கள் நீலமாயல்லது புகராயல்லது சிறிதிடத்துக்கருமையாய், மயிர் பல சாயலாயொழுகியதுடைத்தாய் பிங்கலமல்லது புகர்நிறமாய் ஆட்களுங் கட்டழகுள்ளவர்கள்

ரு இக்குலத்தாருக்குள்ளே அதிகஞ் சிறந்தவர்கள் சின்ன ஆசியாவிலுண்டு சேக்காசன்மலைக்குத் தென்பாற்தீவுக்குஞ் சேக்காசரும்பிறரும் உலகத்திற் சிறந்தஅழகுள்ளவர்கள் இந்த இடத்திலேதான் மனிதனுதியிற் சிருட்டிக்கப்பட்டதென்றுநினைத்துக்கொள்ளவேண்டும். பூருவநிறம் வெள்ளையென்று சிலர் கருதியதற்கு இவ்விருததாந்தமோர்சார்பாயிருக்கின்றது.

சா (உவது) ஆசியாதேயத்தார் அல்லது கபிலவன்னத்தார் பிங்கலம், புகர் அல்லது எண்ணெய் நிறமுள்ளவர்களும், தலைசதுரிதது அலகென்புகள் அகன்று முகந் தட்டையாகிக் கண்கள் சிவத்துக் கறுத்து நாடி சற்றே புடைப்புக்கொண்டு மயிர் மெலகிக் கறுப்புக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்

எ. (ஙவது) அமரிக்கர் அல்லது சிவப்புவன்னத்தார் செப்புநிறமுள்ளவர்களும், தலை சற்றே சதுரித்து அலகென்புகள் சற்றே அகன்று முகம் ஆசியாதேயத்தாரைப்பார்க்கிலுஞ் சிறுகத் தட்டையாய்க் கண்கள் குழிந்து மயிர்தடித்து நேரிதாய்க் கருமைகொண்டவர்களாயிருக்கிறார்கள் (இன்னும்வரும்,)

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE

PART II.] *Varieties of the Human Race* [CHAP 3

1 In the preceding chapters we have given a rapid

sketch of the different classes of animals below the rank of man. Let us now proceed to a general survey of the human species, the traits and powers by which man is distinguished from other animals, and the family character by which one nation is distinguished from another

2 There is a great difference in the appearances of mankind The Patagonian is often nearly seven feet in height, rarely less than six feet, while the Laplanders and Esquimaux are commonly but four feet high. Then what a difference between the delicate skin, blended with the rose and lily, which distinguishes the *European race*, and the coarse skin and greasy blackness of the African negro!

3 But white and black are not the only varieties to be found in the complexion of men Naturalists reckon five races. These differ in many features of person and character, as well as complexion, and we will point out the most striking distinctions, and then endeavor to account for the manner in which these have been formed

4. *First*,—the *European* or *white race*, is fair, having the cheeks more or less red, the head globular, the face straight and oval, the forehead slightly flattened, the nose narrow, and slightly aquiline, the mouth usually small, the chin full and rounded, the eyes blue or gray, oftener than dark, and the hair yellow or brown, of different shades, and flowing.

5 The most perfect of this race may be found in Asia Minor. The Circassians and others who live south of the Caucasian mountains are the most beautiful persons in the world, and it should be remembered that in this spot of the globe man was first created This circumstance is of some weight in the conjecture that the original color was white

6 *Second*,—the *Asiatic* or *brown man*, is yellowish brown or olive, the head is nearly square, the cheek-bones wide, and the face flat, the eyes are small and black, the chin rather prominent, and the hair blackish and thin

7 *Third*,—the *American* or *red man*, is of a copper color, the head is less square, the cheek-bones less expanded, and the face less flattened than in the Asiatic, the eyes are deeply seated, and the hair is black, straight and thick

(To be continued)

கிறிஸ்து சமய செயானுகூலம்

(The final triumph of Christianity)

இந்து தேசத்திலே கிறிஸ்து சமயம் அதிகமாய்ப் பிரபலியப்படுமென்பதற்குத் தாட்சி, தீர்க்கதரிசனத்தில் அதிகந் தெளிவுறக் கண்டிருக்கிறதுமல்லாமற் காலவியற்கையைப் பார்த்தாலும் அப்படியே சொல்லவேண்டிய நியாயமுண்டு ஒவ்வொரு நாளும் விக்கிரகாராதனை வரவரக் குறையும்போது கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றியும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறதுமல்லாமல் இந்நாடுகளில் அநேக குருமார் வந்துசேர்ந்து பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து அநேக பிள்ளைகளைக் கூடிவரச்செய்து பலபலவிதப் போதனைகளை அவர்களுக்கனுதினமும் படிப்பித்து உண்மையான ஆண்டவனுரைப்பதை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்துவருகிறார்கள் தேசாதிபதிகளுந் தாங்கள் விக்கிரகாராதனைக்குச் செய்துவந்த ஒத்தாசையையுஞ் சற்றுச் சற்றாக விலக்கிவிட்டுவருகிறார்கள் இந்துமத மறுப்புப்போகுமென்றும் அத்தை அநுசரித்துவந்தவர்கள் அநுசரியாமல் விட்டுவிடுகிறார்களென்றும் இந்துமதத்தவர்கள்தானே தங்கள் கண்களினாலே தெளிவுறக் காண்கிறார்கள். இந்துதேசத்திலே கொஞ்சக்காலமிருந்தவனுக்குந் தானுமிவ்வேளையில் இவ்விடத்தில் நடக்கும் மாறுதல் கெட்டியாய்த் தெரியவரும் பராபரனுடைய இராச்சியங் கிட்டிவிட்டதென்பதற்குத் தாட்சியாகச் சீனத்திலே நடக்கிற யுத்த கலகங்களினாலும் அறிந்துகொள்ளலாம் சீனரோ தங்கள் இராச்சியத்திலொரு பங்கைச் சுறுக்காக இங்கிலீஷ்காரருக்கு ஒப்படைப்பனாலுங் காலமுங்கிட்டிவிட்டது

(Counsels to Parents)

பிதாமாதாச் செய்யவேண்டிய கடமைகள்

௧ உங்கள் பிள்ளைகள் என்னவிதமாயிருக்கவேண்டுமென்று நீங்கள் எண்ணுகிறீர்களோ அப்படியே நீங்களுமிருங்கள்

௨ உங்கள் பிள்ளைகள் என்னவிதமாய்ச் செய்யவேண்டுமென்று நீங்கள் எண்ணுகிறீர்களோ அப்படியே நீங்களுஞ் செய்யுங்கள்.

௩ உங்கள் பிள்ளைகள் செய்யவொண்ணாதென்று நினைப்பதை நீங்களுஞ் செய்யாமல்விடுங்கள்

௪ உங்கள் பிள்ளைகள் உங்களுடனே இருக்கிற காலத்தில் அவர்களுக்கு முன்மாதிரி காட்டி நடக்கிறது போல அவர்கள் உங்களுடன் இராத காலத்திலும் நீங்கள் அவர்களுக்கு முன்மாதிரிகாட்டத்தக்கவிதமாய் நடந்துகொள்ளுங்கள்.

௫ நீங்களெதைச் செய்யவேண்டுமென்றும் எதைச் செய்யாமல்விடவேண்டுமென்றுமெண்ணிப் பாருங்கள்

௬ அப்படிப் பார்க்கும்பொழுது நீங்கள் குறைவுள்ளவர்களாயிருக்கிறதாகக் காணவில்லையா? முதன்முதல் உங்களைத்தானே சீர்திருத்திக்கொண்டு பிறகு உங்கள் பிள்ளைகளைச் சீர்திருத்த ஆரம்பியுங்கள்

௭. உங்களைச் சூழவரவிருக்கிறவர்கள்தானே உங்கள் நடக்கையையும் பின்பற்றுவார்களென்பதைக் கெட்டியாய் நினைத்துக்கொள்ளுங்கள்

௮ நீங்கள் மனந்திரும்பி ஆண்டவனுடைய கிருபை உங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று நாடித் தேடினீர்களேயானால் அது உங்கள் வழியாக உங்கள் பிள்ளைகளுக்குங் கொடுக்கப்படும்

௯ நீங்கள் எப்பொழுதும் ஆண்டவனுடைய ஒத்தாசைவேணுமென்று தேடினால் உங்கள் பிள்ளைகளும் அப்படியே தேடும்படிக்கே போதிப்பீர்கள்

௰ நீங்கள் ஆண்டவனுக்கெவ்வளவதிகங் கீழ்ப்படிந்தவர்களாயிருக்கிறீர்களோ அவ்வளவுக்கதிகமாக உங்கள் பிள்ளைகளும் கீழமைந்தவர்களாயிருப்பார்கள் அப்படியே சாலோமோனுஞ் சிறுபிராயமாயிருக்கும்பொழுது தன்னுடைய சனங்களை ஆளும்படிக்குத் தமக்கொரு உத்தம இருதயத்தை அளிக்கும்படிக்கு ஆண்டவனிடத்திற் கேட்டுக்கொண்டார்

௰௧ ஒரு உபாத்தியாயன், ஆண்டவனுடன் ஐக்கியம்பண்ணுதலிலே வெதுவெதுப்பாயிருந்தாற் சந்தேகமில்லாமல் அவருடைய மாணாக்கர்களும் அந்த முன்மாதிரியையே பின்பற்றுவார்கள்.

௰௨ நீங்கள் பராபரனை விட்டுத் தொலைந்துப்போவது உங்கள் பிள்ளைகளுக்குப் பொல்லாங்காய் முடியும்

௰௩ அன்பு காட்டாத முன்மாதிரி சந்திரனுடைய ஒளியைப் போலக் குளிர்மையாயிருக்கும்

௰௪ உண்மையான நேசத்தைக் காட்டுகின்ற முன்மாதிரியானது சூரியனுடைய கிரணத்தைப் போலப் பிரகாசிக்கும்

அல்வழிவிலக்கு நல்வழியேதெனக்-கல்வியிலோருங்களித்தனாகொள்ளலாற்— தோகையாய்ந்து தெளிந்துளிர் நுமக்குப்- பேரறிவிலேன்றுதிபெரிதெனக்கொள்வீர்

விடை

இச்சிறுசொற்பொருளென்மனந்தெளிவுற
அச்சமில்சான்றீர் அருள்செய்வீரே
கற்பலுக்கௌரவமென்பதியாது?
இங்ஙனம் தமது பணிவிடைக்காரன் வண்ணைநகர்,
௲அ௱சஉ௯ வைகாசிமீ அ திகதி. ஓமாணுக்கன்

For the "Morning Star"

The Importance of Female Education,

Dear Friends and Countrymen,

You will readily acknowledge that our female community is subjected to many disadvantages and inconveniences among which, want of educa-

tion is the principal I say that it is the principal because without this no nation can rise in civilization In regard to this important subject a vain and ungrounded prejudice has pervaded the minds of even the most enlightened of our nation What is it that whispers my beloved countrymen that females should never be educated? Females not to be educated! Why? Are they not intelligent beings, endowed with precious souls which even the world cannot buy? Indeed, the essays upon the education of Females which have lately appeared in one of the pages of the "Morning Star" and in the "Aurora" by an educated female—Sinnammal, have so entirely met my views that I have felt desirous to have all points of the subject discussed by the same hands,—and this must be my apology for offering to you the suggestions of my mind, upon a subject that has long deeply interested me I propose to consider the subject in two points of view viz

1st *The importance of Female Education*

2d *The kind of education that ought to be given to Females*

As to the first part of my subject, I shall confine myself at present in stating a few particulars and will speak upon the second part of my subject in the next No of "the Star"

1st *The importance of Female Education*

Female education is very important, advantageous, and requisite, It produces much good both to the individuals educated and others

First, Female Education is very important, &c because God has created mankind with power to distinguish good and evil, and to acquire useful knowledge As the body is nourished by food and drink, so should our minds be by mental acquisitions We find a great difference between a learned mind and an ignorant one The mind of the learned is like a fertile soil, in which, you may see the useful tree bearing fruit all the year round, while that of the other class is like a barren desert, or a forest overgrown with weeds and brambles Moreover when a learned man has occasion to speak upon a subject, he speaks on it in order, like one making a garland of gems, while the case is different with the other I don't know why you advocate the education of males rather than that of females, or why you object to the latter Have not the females of our country ability to study and acquire useful knowledge? If not, how is it that they manage their household affairs with so much prudence and utility? Is it proper for you to confine them in one place, to make them of little undertaking, and consider them as mere brutes? Alas! that a superior being should be thus reduced to the circumstance of a brute! What a low and base opinion you must have, my friends, of females? a sex created by the beneficent Creator equal to man! But it may be said by some one that females will be injured by education Not at all, I say, because study enlarges the mind, gives good knowledge and wit, and qualifies them better to manage their household items Others may say, "females will become wicked, if they are educated" They will not become so, because they being as wicked by nature as males, will give themselves up to speak vain stories and listen to love songs, though they be not educated, ignorance and idleness lead to wickedness They should not be permitted either to speak or to listen to such stories and songs, but should study only such good books, as will make them chaste and truly pious But you may say, this is not the *custom* in our country True, but can we approve all that we have and do by custom Surely not, we find among all classes of men, in whatever rank they may be, the custom of stealing, lying, and the quarrelling of husband and wife, &c Can we approve of this? Can we not be prosperous and excellent, if we follow that which is good, and leave whatever we have by custom that is not good? Hence you are to consider that it is not a strange or unreasonable thing to educate your daughters though it is not customary in your country Let me remind you of Avvay, who is the authoress of old saying (ஆத்திசூடி) We find in these sayings the following remarks, "study when you are young, cease not to study Be diligent in studying, Desire to study" She does not confine these sayings to males only She says so because she was educated and knew the value of education She was a poetess This will be a good example out of many to encourage you to educate your females

Again, "Female Education produces much good, both for the very individuals, and others, because in the first place, as for the very individuals, they who are not educated, will when they have leisure, be idle and delighted to see vain shows, to tell vain stories, to cause quarrels, &c and of course become infamous But this is not the case with the educated, they will read good books and will earnestly desire to see and know all things Not only this, but they will also approve the good and reject the evil Are not these all great advantages? Can you dislike all these? Did not God create the females as he did the males in order to be acquainted with good manners and obtain happiness? You like them to be prosperous, esteemed, honourable, and active in mental exercise, and you would not desire them to be in the state of an insect, which is ignorant of where it is, or where it goes, and where it returns Therefore, you ought to educate your females, it will be an inestimable dowry by means of which they may support their lives The females of Christian lands are conspicuous for this and are treated as princes and queens by their parents and husbands In the second place, as for others, the parents should give their daughters to good husbands qualified in every thing so that the very daughters ought to be helps meet to perform all the business which their parents have How can they be fit for their husbands, if they do only perform their house affairs, such as, cooking, &c Have they such skill as to soothe their husbands, when they are doubting or alarmed at any thing? Suppose they have children and their husbands are engaged in several occupations, can they train up their children, to be good, and to do good, and can they teach them science? Alas! How many losses have you in your family? Do they not come because your females are uneducated? They could certainly do their duties and assist both their husbands and children, had they been rightly taught I shall state a few, further particulars on this point in connexion with the second part of my subject in the next No

Batticotta Seminary }
8th of April 1842 } J WHITE

(On Tamil Grammar)

இலக்கணக்களஞ்சியம்

[illegible]

(இரண்டாம் வேற்றுமையியல்)

வினைமுதல் [illegible] செயப்படுபொருளே, கருவி கொள்வோன் [illegible] (க)

[illegible] (உ)

[illegible] (ங)

[illegible] (ச)

[illegible] (ரு)

[illegible] (சு)

[illegible]

நது-அவனிடைநின்று-இவன் கொண்டது-அவன்கடைவல்லம்-அவன்வாயுரை-அவன்புடைகொடிது-என-வரும் (௭)

உருபெற்றதனையுமுருபையுமுருபு, நோக்கிவந்ததனையும் வேற்றுமையென்ப

இவ்-வேறுபடுதலால்வேற்றுமை-வேறுபடுத்தலால்வேற்றுமை-வேற்றுமையைமுடித்தலால் வேற்றுமையென்பார் (௮)

உருபினையேற்றசொல்பலபொருள்படுதலும், முருபுநோக்கியசொற் பலபொருள்படுதலு, மெனவிருகூறும்வேற்றுமையென்ப.

உம் வினைசெய்யிடத்தினிலத்திற்காலத்தில்-என-பொருண்மைச்சுட்டல்வியங்கோள்வருதல்-என-வரும் (௯)

ஒருவேற்றுமைக்கோருருபேவருதலு, மொருவேற்றுமைக்குப்பலவுருபுவருதலு, மெனவிருகூறுயவருமுருபுகளே, ஐகுவவொன்றேயல்லனபலவே (௰)

ஓருருபிற்கேபலபொருள்வருதலு மொருபொருட்கேபலவுருபுகள்வருதலு, மெனவிரண்டாகும் வேற்றுமையியல்பே, யவ்விரண்டனையுமுறையேயறைகுவன் (௰௧)

பகுபதம்பகாப்பதமிருவகைத்தொடர்பதம், வினைமுற்றுப்பெயர்குறிப்புமுற்றுப்பெயர், தொழிற்பெயராதியிற்றோன்றுமெட்டுருபே

இவ்-உருபார்தேயுள்ளனவெட்டுருபென்றதென்னெனின் எவ்வகைப்பெயர்க்குமீறாய்வேற்றுமை செய்வனவெட்டேயென்றுந்தேற்றேகாரத்தினுமிருநான்குருபு முற்றுந்தாற்பதா முருபேயன்வினைதெனவந்தவுமையாலுமென்க. அன்றியும் வினையுருபு தொல்காப்பியவிளிமரபினுட்கண்டு-எழுவாயுருபுவிதியையோர்சூத்திரத்திற் கூறுகின்றும் (௰௨)

(அகத்தியச்சூத்திரம்)

மலைமுன்வலிவரின்மெலிமிகுதலுமாம்

உம் மலைங்காடு-மலைஞ்சாரல்-மலைந்தேன்-மலைம்புல-எனவரும்-இவை பாண்டிநாட்டில் பெரும்பாலும் வழங்குகின்றன-மிகுதலுமென்றவும்மையால் வலிமிகுமெனப்பதுபெறும்

(அகத்தியச்சூத்திரம்)

ஆமெனுமிடைச்சொல்பொருளைத்தினுமருமே

உம் மண்ணுங்கட்டி-மின்னும்பூச்சி-தேற்றுமவித்து-புலவர்மொய்ச்சி-இவை-மணக்கட்டி-மின்பூச்சி-தேற்றுவித்து-எனவிடைச்சொற்றளிச்சொல்லினுஞ் சிறப்புப்-புலமொய்ச்சி-சிறப்பன்று ஆகலில் வழக்குச்சிறப்புப்பற்றிக்கூட்டிச் சொல்லுக

(இலக்கணத்திரட்டுச்சூத்திரம்)

வழுப்படவின்றிவழங்குதல்வழக்கே, வழுப்படவழங்குதல்வழக்கினிழுக்கே

உ- பாண்டிவளநாட்டார்-வாங்கிக்கொண்டுவா-என்றதை-வாங்கிட்டுவா-என்றும்-சோழவளநாட்டார்-அங்ஙனம்போனான்-என்றதை அந்தாலே போனான்—என்றும்—சேரவளநாட்டார் தாழை-என்றதை-தாளை என்றுங்கூறுதல் வழூஉவென்றுகொள்க

(அவிநயச்சூத்திரம்-அகக்குறிப்பு)

பெண்டிராயினுமைந்தராயினுங், கொண்டவேட்கையுள்ளத்துக்கருதிக், கொண்டுநனிசெய்வது குறியெனப்படுமே

(அவிநயச்சூத்திரம்புறக்குறிப்பு)

அதுவே, உற்றவரொழுக்கமு முகச்சிநோக்கமும், பற்றியுரையாடலும் பாங்கிற்கேட்டலு, மூடலுமுரைத்தலு முவத்தலும்பார்த்தலும், பாடலும்பரவலும் பணித்தலும்பணிதல், மணங்குகொண்டைகத்தலு, மழுங்குங்கொண்டிணர்தலும், குணம்புகழ்ந்துரைத்தலுங், குற்றங்கூறலுஞ், செய்ததுபொறுத்தலுஞ் செய்வாயதிருத்தலும், வைதுமகிழ்தலும் வாட்டங்காண்டலு, மணித்தனக்கைந்தாடைபெயர்த்துத்தலு, நாணுணகுதலுணயத்தலும் பார்த்தலுங், காணலகழ்கேட்கலொற்றே, பானல்பறைப்பணிப்பப்பருவ, மாலையேபுனமே மழையேவண்டே, மயிலேகுயிலேமானேயனமே, கிளியேகுருகே கிளத்தல்பிறவு, மென்றிவையிவற்றொடுந்தின் அரையாடலு, மொழிந்தியபுறக்குறிப் பெனவுணர்த்தனரே

(அகத்தியம்-மெய்ப்பாட்டுவகை)

மெய்ப்பாட்டியல்வகை மேதகவிரிக்கின், மெய்க்கட்பட்டுவிளங்கியதோற்றஞ், செவ்விதிற்றெரிந்து செப்பினமற்றதுவே, சுப்பிரயோகம் விப்பிரயோகஞ், சோகமோகமரணமென்னு, மைவகைக்கணையுளாக்கியகாமம், பையுளுறுகிடப்படருமவற்றுட், சுப்பிரயோகஞ் சொல்லுநினைப்பும், விப்பிரயோகம் வெய்துயிர்த்திரங்கல், சோகமவெப்புஞ் சோறுண்ணாமையு, மோகமயக்கமு மொழிபலபிதற்றலு, மரணமணங்கலு மயக்கமுமெனப, ராரணஞ்சான்றவறிவினோரே

(அகத்தியம்-அகமெய்ப்பாடு)

அகமெய்ப்பாட்டையறையுங்காலை, விளர்ப்பேபசப்பேமெலிவே விதிர்ப்பே, துளக்கந்துயர்த்தூமமல்சோர்தல், வேர்த்தல்வெருவுதல் விம்முதல்விரும்புதல், ஒப்பிலாமை யுருகுதன்மயங்குதன், மூரியுயிர்ப்பு மூச்சினைமுனிவல், சாரிகைகடத்தல் கழிகண்ணோட்டம், மிருந்துழியிராமை யாரமிழகம்ழுதல், வருந்திக்காட்டுதல் வாய்நனியுறுதல், சிந்தைகூர்தல் சோர்துயிலின்மை, கண்டதுமறுத்தல் காட்சிவிரும்ப, லுண்டிவிரும்பாமை யுரைத்ததுமறுத்தல், கண்ணீர்வழித்தல் கனவுநனிகாண்டலென, வெண்ணூற்றுறைய மென்மனார் புலவர்

(அகத்தியம்புறமெய்ப்பாடு)

புறமெய்ப்பாட்டைப் புகலுங்காலை, நற்சிரகாம நகையேவியப்பே, யச்சமவீரமுட்கோளிரக்க, மிழிபெனத்தோன்றின விவ்வகையெட்டு, மொவ்வொன்றுநான்கா யுறழ்ந்திடவவைதா, முப்பானிரண்டென மொழிந்தனர்புலவர்

ஆவற்றுள், இன்மையுமவன்பும வன்மையுங்கல்வியுங், களனுக்கத்திரிதருஞ்சீருங் காமமே-மயக்கம்பெயர்ப்பே யிகழ்வேநோக்க, நயப்புத்தோன்று நகையதுநல்லோ-நறுக்கண்புலமைப் பொருள்ளபண்பே, வெறுவிழித்தோன்றும் பெருந்தகுவியப்பே-சீற்றமொடுங்கல் சிந்தைகலங்கல்-மாறறலரவிலங்கலமற்றவாசசோத-லாற்றத்தோன்று மச்சத்தின்விளைவே-பகையேசெருவேயிகலேமுனிவே, மிகுவழித்தோன்றும் வீரத்தின்விளைவே- ஐவகைக்குரவர் தேவாமனை, ரெய்தாதெய்திய விபலப்பவையுட்கோள-வருத்தமிகழ்வே வலியின்மைபெருமை யிரக்கந்தோன்று மிளிவிடத்தே-நாற்றஞ்சுவையே தோற்றமுனறை-நிந்நாலவகைத்தா மிழிபெனப்படுமே

இப்படிக்குத் தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார்

(On Female Education)

உத்தரகண்டத்துதயதாரகையென்னும் பத்திரிகையை நடாத்துமுத்தமவையாவர்களுக்கும் அதின் முயற்சிக்காரருக்கும் என்னிருகையுஞ்சிரமேற்கொண்டோர் நமஸ்காரம்

நீவிர் மேலைச் சஞ்சிகையொன்றின் கண்ணேமைழக்கன்னி எழுதின கடிதத்தைப்பிரசுரஞ் செய்ததற்காகமிகவும் நன்றியறிந்தவளாயிருக்கிறேன் இதுநிற்க,

தங்கள் பத்திரிகை ஒன்றின் கண்ணே தோற்றிய மூன்று கடாக்களுக்கு விடை எழுதிய உடுப்பிட்டி மாணாக்கன் வேலாயுதர் சின்னத்தம்பி என்பவருடைய கடிதத்தை வாசித்தபோது, அது என் போலும் பெண்சனங்களுடைய சீர்திருத்தத்துக்கும் அறிவிலவளர்தலுக்குமோர் பிரதான தடையாயிருந்ததுமன்றி, மகா கனம்பொருந்திய துரைமாருடைய சங்கையையும் வீணாய் நிந்தித்ததுமாயிருந்தது அதேதினாலெனில், பெண்பிள்ளைகள் படியாததற்குக் காரணம் யாதென வினாவிய வினாவுக்கு விடையாய் இவ்வூரில் ஆண்பிள்ளைகள் தானும் படியாமலிருக்கும்போது பெண்பிள்ளைகளைப்பற்றிப்பேசுவதென்னை? என அவர் தந்தரமாகச் சொன்னாரே, ஐயோ! ஆண்பிள்ளைகள் படிப்பிலே முயற்சிப்படாதது தான் எங்களுடைய அறிவுக்குத் தடையாயிருந்தது? ஆ! இதாச்சரியமாச்சரியம்! என்போலும் பெண்சனங்கள் படித்திருந்தால் இனிமேல் எங்கள் பிள்ளைகளை எல்லாம் தகப்பமார் படிப்பிக்கச் சம்மதியாதிருந்தாலும் எவ்வளவு முயற்சியாய் நாங்களாயப் படிப்பிப்போம் மேலும் என்போலும் பெண்சனங்கள் புருஷமாரை எல்லாம் வீணாய்ப் பணத்தை அத்திலும் இத்திலும் செலவழிக்கவிடாமல் ஆத்துமலாபத்தையுங் கல்வியையுஞ் சகலரும் பெற்றுக்கொள்ளத்தக்க முயற்சியிலே செலவழிக்க முயற்சிப்பண்ணுவார்களே, இவ்வூரிற் பிரபுக்களுடைய பெண்பெண்டாட்டிகளும் படித்திருந்தால் அப்பிரபுக்கள் இப்பொழுது வீணாய்ப் பலபல எதிரிடையாயத் திருவிழாக்களையுங் கோவில்களையுமுண்டுபண்ணுகிறதற்குப் பதிலாகத் தரும்பள்ளிக்கூடங்களையும் ஏழைச் சனங்களுக்கு ஆத்தும நன்மையையுமுண்டுபண்ணத் தெண்டிப்பார்களே அதுவுமன்றி நல்ல படிப்பாளிகளுஞ் சற்குணசாலிகளுந் தெருவழியே தி

ரிய ஒன்றுந் தெரியாதவர்கள் துரைமாருடைய ஒத்தாசையினால் அதிக உயர்ந்த உத்தியோகத்திலிருக்கிறார்களென்றவருரைத்தார அம் மெய்தான், ஒன்றுந் தெரியாதவர்கள் சங்கைபொருந்த வேலைகளை எப்படிப் பார்ப்பார்கள். இச்சின்னத்தம்பி அவர்களுக்கொத்தாசைபண்ணுகிறாரா? நன்று, நன்று, நக்கிடத்தக்கதன்றிப் பயன்படுவதில்லையே, யாதொரு துரைமாரேனும் ஒன்றுந் தெரியாத இவர்களை வேலையிலே பாரபட்சமாய் அல்லது ஒத்தாசையாய் வைத்திருப்பதை இவர் உங்கள் பத்திரிகை வழியாய் அறிவிக்கவேணும் அல்லது கனம்பொருந்திய துரைமாருடைய சங்கைக்காய் இச்சின்னத்தம்பி தெண்டமிறுக்கவேண்டியதாயிருக்கும். இது யாவர்க்குந் துக்கமே, ஏனெனில், துரைமார் அறியவந்தால் மிகக்காத்திரங்கொண்ட காரியமாய் விசாரிப்பார்களல்லவா? படிப்பாளிகளாயுஞ் சற்குணசாலிகளாயுந் தெருவழியேதிரிகிறவர்களை இன்னாரென்று இச்சின்னத்தம்பி காட்டுவாரா? அவர்கள் மகா கனம்பொருந்திய போதிவேலையா அவர்கள் ஓர் தமிழ்ப்பண்டிதன் தேவையை என்று தாரகை வழியாய் விளம்பரம்பண்ணியும் அவரிடத்திற் போய் அந்த வேலையைக் கேளாமல்விட்டதேதோ? நடக்கிறதற்கு வருத்தமுள்ளவனாய் அல்லது செல்லப்பிள்ளையாயிருந்தாலும் மாதம் (௨௫) இறைசால் செலவழித்துக் காவுவித்துப் போய் வேலைபார்த்தால் அது அவர் தேறுதலுக்கு நல்லதாயிருக்கும். இங்கிலீஸ்ப் பாடையிற் கெட்டிக்காரராயிருந்து தெருவழியே திரிகிறவர்கள் சங்கைபொருந்த சுப்பிறீங்கோட்டிலே தொழிலுக்குப் பண்ணி (௫௰) இறைசால் பெற்றுக்கொள்ளலாமே? ஒன்றுந் தெரியாதவர்கள் தங்களைத்தானே கெட்டிக்காரரென்று கதையை விதைத்துக்கொண்டு குறவண்டைப் புழுப்போலே நல்லாய் மடங்கிக்கொண்டு படுத்திருந்து தாங்களேதானே சகலத்திலுங் கெட்டிக்காரரென்றுங் கர்த்தா யாதொரு வேலைக்கும் ஒத்தாசைபண்ணுகிறதில்லையென்றுங் கர்த்தாவிலுந் துரைமாரிலும் பழிபோடுகிறவர்களுமான இவர்கள் புத்தியில் விவேகபூரண தருவுக்குச் சரியே, மண்டசோற்றிற் கல்லாராயவர்களென்று கலவியிற் சிறந்த யாழ்ப்பாண மாணுக்கன் சொன்னது போல இச்சின்னத்தம்பி விடையில் யாருங் குற்றம்பிடிப்பானேன், அம்மறுமொழி விளம்புகிறதும் மாதா மாணுக்களைப் போலும் புத்திவான்கள் விடையெழுதவும் இவ்வூர்க் குருமாருடைய பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களிலே பிரபுக்களும் எளியவர்களுந் தங்கள் பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கவுந் தாழ்மையுடனேயும் நோமையுடனேயும் வேண்டா நிற்கிறேன். இங்ஙனம்

யாழ்ப்பாணம்
௪௨ ஆ சித்திரை மீ ௰௧ தீ. } தங்கள்பணிவிடைகாரி
ஓர் கன்னி

உதயதாரகையே,

“வெள்ளி” பேசினாற் “கல்லும்” பேசும்

இலக்கணத்திடைபெழுத்துத் திருக்கக்காரருக்கு வந்தனம் நீங்களிருந்திறந்தவர்களும் இலங்கிய விலக்கணங்களில் வல்லவர்களாகப் பறபலவாது செய்கிறீர்கள். ஆனாலும் “சூதும் வாதும் வேதனைசெய்யும்” என்கிற செய்யுளை மறந்தீர்கள் “யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு.” என்ற முடிந்ததே நீங்கள் இப்படி வாதுகள்பேசி உங்கள் சாதுரிய சாத்திரத்தைக் காட்டினதேயன்றி மற்றொன்றுமில்லையே செய்யவேண்டியவைகளை விட்டுச் செய்யவேண்டாதவைகளைச் செய்கிறீர்களே “வாயினாற் பலநூல் படித்துணர்ந்தும் நல்வழி பிறர்க்குரைசெய்தும் நீ லோகவாசார மோரணுத்துணையானும் நீங்கிலை நெஞ்சே தூய்தமிவண் பிறர்கொள்ளக் குங்குமஞ் சுமந்து செல்கழுதையென்றிற காயமானிடத்தினற கனறியுடன் களவுதீண்மையின்றேலே”—“ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைசெய்துந் தானடங்காப் பேதையிற் பேதையில்”—“கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்”—“கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என்ற வசனங்களையும் மறந்தீர்களே எங்களுயிரெனக் கண்பொழுதிற் றென்றிமடிந்து போகிற நீங்கள் ... இதமகெத்தலை ஆணவம் பாருங்கள் “ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுவர் கோடியுமல்லபல” இவ்வளவுமாய்க் கைக்குள்ளடங்கியிருக்கிறதே. உறங்குவதுபோலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு.” “நெருநலுளனொருவன் இன்றில்லையென்னும் பெருமையுடைத்திவ்வுலகு” “கல்வியைப் பெருமையாகக் கருதியே திரிவர் புல்லர், சொல்லிய ஞானநூலின் சூட்சத்தை அறியமாட்டார் வல்லவராங்களென்று வாதுகளதிகவும்பேசி எல்லையில்லாதகனமத் தெய்தியே முழுகுவாரே”—“சத்திய ஞானநூலின் மறைகளை அறியா மூடர், வித்தைகள் மிகவுங்கற்ற வீணராயிறந்துபோனார், அந்தநபெருமையாக அவனியிலறியச்சொல்லி, முத்தியை அறிவாரில்லை மூடர்க்கு மோட்சமுண்டோ?” “நிசமாக நாலவேதம் ஆறுசாத்திரம் நினைவதுவை மயக்கிலைக்கும் புராணசாத்திரம்-வசமாக நானமதத்தில் வந்த சாத்திரம் மற்றமற்றச்சாத்திரத்தின் வசமேதெல்லாங் குசமயக்குக் குசமயக்கு அப்பா அப்பா கூறுகிறேன் சுயவேத சாத்திரந்தன்னை—நிசமாக நம்பினபோதக்கிடேற்றமுண்டு நிலைஞானக்கண்ணொளியு நிறைகுந்தானே”— இவைபோன்ற அநேக ஞானப்பாடலையுதாரணமாகக்காட்டிச் சைவமதந் தப்பென்று நகைக்கிறார்களே அவைகளை நீங்கள் ஒருகாற் கேட்டு மறுகாதால் விட்டுவிடுகிறதன்றி அவர்கள் மார்க்கம் பொய் நமது மார்க்கம் மெய் அல்லது அவர்கள் மார்க்கம் மெய் நமது மார்க்கம் பொய்யென்று நிதானியாமல் குளிப்பாட்டின பன்றி திரும்பியும் போய்ச் சேற்றுக்குள்ளே கிடக்கிறதுபோல உணர்வற்ற பைத்தியகாரரைப்போலக் கிடக்கிறீர்களே. பூச்சப்பொன் பளபளப்பன்றி ஆணிக்கு நிற்குமா? இது விஷயத்தில் எந்த மார்க்கம் மெய்யென்று அறியவேண்டியது அவசியமல்லவா? “வாழ்நெஞ்சமே சென்றிட்டநின்றிதோவார்த்தை தெத்துரைசெய்வாய் கிழியாமியற்றுயர் தலத்திவ்வுடல் கிடைத்தன்றோ மற்றீதூழிகாலமிங்கிருக்குமோ நீயுமோர்ந்துளே யுள்பொழுதேகுழுமேழ்பவந் துடைத்தல்செய்யாயிதனை றெழுதரன் துணைத்தானே” என்னும் வாக்கியப்படியும் முன் சொன்னதுபோல உறங்குவதுபோலுஞ் சாக்காடு உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு என்றதன்படியும் எங்கள் சீவன் நிலையற்றபடியாற் காலதாமதம்பண்ணாமல் நீங்கள் கற்று வல்ல கலைஞரென்றது சத்தியமானால் நீங்கள் வருகிற சனிக்கையில் எந்தமார்க்கமுண்மையென்று நிலைநிறுத்த ஆரம்பம்பண்ணுவீர்களாக. அப்படியே கடவுளுந் துணைசெய்வாராக.

இவைநிற்க, இந்தப் பாதிரிமார் எங்கள் தேசத்தில் வந்திருந்துகொண்டு கிறிஸ்து மதந்தவிர்ந்த மற்றெந்த மதங்களுங் கட்டென்றுங் குருட்டாட்டமென்றும் அம்மதத்தாருக்கு மறுமையில் நேரிடுங் கோபாக்கினை எவ்வளவு பெரிதென்றும் அதற்கு இவர்கள் தப்புவித்துக்கொள்ளக்கூடாதென்றுந் தாங்கள் இதற்காக இவர்களை பேரிலே யனதுருகித் தங்கள் சொந்த தேசத்தை விட்டு இங்கே வந்து வாசம்பண்ணி இவர்களுக்கு உண்மையான வழியைப் போதிக்கிறோம், இந்த வழியாலன்றி எவரும் மோட்சத்துக்குட் பிரவேசிக்கக்கூடாதென்றுஞ் சொல்லுகிறார்களே அன்றியுஞ் சைவசமயத்திலிருந்து உதாரணங்கள் எடுத்துக்காட்டி அந்தப் பொய்யாக்குகிறார்களே அதைப்பற்றியும் அநேக புத்தகங்களை அடித்துவிட்டார்களே, அவைகள் தற்சமயசாட்சி, குருட்டுவழி, மும்மூர்த்தலட்சணம் முதலானவைகளே

“கடவுடந்தவேதத்தைக் கற்பதே நன்மை அவன்வழிநடப்பதே வன்மை, அவரைத் தொழுவதே குறைவின்மை மற்றெல்லாம் புன்மை இதந்தன்மையறிந்துண்மை பற்றினம்” இதன்படியே கடவுடந்த வேதத்தைக் காட்டுவீர்களாக. இப்படிக்கு

உனது தோழி யாழ்ப்பாணநகர், உரைகல்லு

We have received a communication from "A Lover of truth," containing strictures on an article that appeared in No 6, of the Morning Star, entitled "Auspicious occurrences, No 1" "A Lover of truth" objects to the remarks of "An Observer," that there is a similarity between the present state of the Jews, and the nations of Christendom, previously to the days of Luther, in regard to the comparative estimate and use, made of the oracles of God Regarding this as an incorrect statement, "A Lover of truth" takes occasion to remark at length in a general defence of the Roman Catholic Faith, and to propose several topics for discussion, foreign to the point in hand If 'an Observer," in replying to the communication before us, were allowed to indulge in the same latitude of remark as "A Lover of truth" has done, our humble paper would not suffice for reporting the controversy that must ensue Such a controversy should contain the substance of ponderous quartos and folios of three centuries Instead of aiding and abetting in such an infliction upon the reading portion of the community, for whose benefit our paper is chiefly designed, we would recommend that those who wish to see the length and breadth of the Protestant controversy with Roman Catholics, procure some standard works on each side of the question, and examine for themselves —provided always, that they pursue their inquiries in the clear light of the oracles of God, which they should have in their own hands, in a language which they can read and understand, for in this whole controversy, it is pre-eminently important, that we adopt

the motto, "to the law and to the testimony, if they speak not according to this word it is because there is no light in them "

We shall now give that part of the communication before us, which pertains to the objectionable point, contained in "An Observer's" communication

"I cannot but remind your correspondent, "An Observer," author of the article headed, "A Luther in Israel," appearing in your paper of, the 17th ult Vol 2d No 6, that he is grossly mistaken in the comparative view he has taken of the state of Christians before the days of Luther, in these words, viz "In several important particulars, their (the Jews') state, up to the present time, is similar to that of the nations of Christendom, who before the days of Luther, had to a great extent substituted the decrees of the Pope, the creeds of Ecclesiastical Councils and the traditions of the fathers, for the living oracles of God," words which include all Christians, Apostles themselves not excepted I am not however disposed to accuse your correspondent of wilful misrepresentation, but rather to *extenuate his conduct*, by attributing it to mere ignorance of the principles of the Catholic Faith, in imitation of our crucified Saviour, saying, "Father forgive them they know not what they do " It is not, nor was it ever held, or proposed by the Catholic Church, as an article of faith or otherwise, that the decrees of the Pope, the creeds of Ecclesiastical Councils, and the traditions of the Fathers, should set aside the Holy Bible, and be substituted for the lively oracles of God, to any extent, but on the contrary, we hold that they are calculated to enforce our adherence to the Law of God, and putting into practice the maxims of the Gospel in the same sense in which they have been recorded by the sacred penmen."

"*A Lover of truth" should have noticed that* "An Observer" does not affirm that it was "an Article of Faith that the decrees of the Pope should *set aside the Holy Bible*" but that the state of Christendom previously to the days of Luther was "*similar*" to that of the Jews of the present day, who, tho' they have not "set aside ' the Law of Moses, but make their boast of it, do nevertheless give greater prominence to the Talmud, in their religious observances,—even so as to make void the Law of God by their traditions

But has not "A Lover of Truth" informed himself that it is an article of the Romish Church, that the Traditions of the Church are of equal authority with the inspired Word? And does he not know that it was the unpardonable sin of Luther, that he aimed a deadly blow at the decrees of Popes and Councils, and Traditions of the Church, by showing their contrariety to the suppressed and prohibited Oracles of God? and for which, "decrees and traditions were for centuries substituted"' But instead of pursuing this inquiry in reference to other times and other countries, we wish to bring the subject nearer home, and to be distinctly informed on several points which we deem of great practical importance to the inhabitants of this Island at the present time

Our Saviour commanded, "search the Scriptures, for in them ye think ye have eternal life, and they are they which testify of me " John v 39

St Peter exhorts "we have a more sure word of prophecy" (referring to the Sacred Scriptures,) "whereunto ye do well that ye take heed, as unto a light that shineth in a dark place " 2 Peter i 19 —St Paul says, "*All Scripture is given by inspiration of God, and is profitable for doctrine*, for reproof for correction, and instruction in righteousness " 2 Tim, iii 10 —St Luke highly commends the inhabitants of Berea saying, ' these were more noble than those in Thessalonica, in that they received the word with all readiness, and *searched the Scriptures daily*, whether these things were so Therefore many of them believed, also of honorable women, which were Greeks, and of men, not a few " Acts xvii 11, 12

The points on which we wish to be definitely informed are

1 Are the principles and practices of the Roman Catholics of this Island in accordance with the foregoing Scriptures, and with a multitude of other Scriptures of similar import?

2 Would the leading members of that community regard it as an "Auspicious Occurrence," were they to be furnished with the requisite means for placing a copy of the entire Bible, or even of the New Testament, either gratuitously, or at reduced prices, in the hands of every individual of their community, who is able to read, and willing to receive such a treasure? If so we shall be happy to come forward with our contributions, in aid of so desirable a diffusion of divine truth

3 If they would not be in favor of a *promiscuous* circulation of the *entire* Scriptures, what limitation would they make, as to persons who should not receive them, or as to portions of Scripture which should not be imparted, and would the reason for such limitations be satisfactory to an intelligent community?

4 There is a deep impression upon the minds of the Roman Catholic population of this District that the Bible is a *prohibited book* Is this impression well founded or not? If so, what is *substituted* in its place? and what can satisfy the people that they are *Christians*, in the scriptural sense of that term?

5 If the Protestant translation of the Scriptures be objectionable, and this objection be urged against the distribution of them among the Roman Catholic community, how happens it that for three centuries past, there has been no translation, even of the authorized Latin Bible,—the Vulgate, for the benefit of those in connexion with the Church of Rome?—This question deserves, we think, the serious consideration of those who hold that there is no substitute for the oracles of God

6 In our intercourse with the Roman Catholics around us, it not unfrequently happens that on reading to them passages of Scripture, which are as fair translations of the Vulgate, as of the original Hebrew or Greek, it is strenuously denied that these are Scripture passages, such passages are affirmed to be the doctrines of Luther and Calvin! On whom rests the responsibility of the people being kept in this state of ignorance? and how can they appeal "to the Law and to the Testimony, ' as to "whether these things be so," while the Protestant Bible is a proscribed book, and no translation of it is furnished by their own spiritual guides?

These cannot, it is confidently believed, be regarded as captious questions of small practical importance We are very anxious to come to an explicit understanding with our Roman Catholic Brethren on this all important point of a *free circulation of the Sacred Scriptures* We wish to know wherein we agree with them, and wherein we differ And this is almost the only question pertaining to the Protestant and Roman Catholic controversy that we think it expedient to discuss in the "Morning Star "

An article, in reply to the foregoing inquiries, concisely written, and to the point will meet with an early insertion in our pages Extraneous matter will of course be excluded

---

(Answer to the question on Mathematics in No 8 Vol II)

To the Editors of the "Morning Star "

GENTLEMEN,

You will highly oblige the undersigned and many of your readers by inserting in your most valuable paper the following answer to the mathematical question proposed by Mr P C Hay, in No 8, Vol II

Let a, b, and c be the perpendicular, base, and hypothenuse of a right angled triangle Then, $a^2 + b^2 = c^2$ (Euclid Proposition 47 1 Book) By division and subtraction (axiom 3 ,) we have $(a^2 + b^2 - c^2) - 4 = 0$ (*) Adding ab — 2 or 2ab—4 (Euclid Book 1 41) $(a^2 + b^2 - c^2 + 2ab) - 4 = \frac{1}{2}ab = [(a + b + c) - 2] \times [(a+b+c) - 2 - c]$



b a

If we change all the signs in the expression marked (*) and proceed as before, we will have the second part of the question demonstrated

---

An answer to the following question is desired, viz. If we draw two circles inwardly touching each other, and let a diameter pass through the point of contact, then in the space comprehended between these two, if a series of small circles be inscribed, the first of them touching that part of the diameter, which is intercepted between the inner and the outer circle, and then if we let fall perpendiculars from the centres of the small circles to *the diameter*, what proportion do their radii bear to these perpendiculars? and what is the method of determining it?

Batticotta Seminary, }
April 25, 1842 }

H BUSHNELL,
a member of the 2d class

உதயதாரகைப்பத்திராதிபர்களுக்கு வந்தனம்,

உங்கள் உதயதாரகை ௨ புத்தகம் ௮. எண்ணிக்கையிலுள்ள "கே" என வா கட்டிய கடாவுக்கு விடைகொடுக்கிலை. எப்படி

யெனில்,
புயங்களிற்றனித்தனி பொருந்திய சதுரமே
மயங்கியே யிரண்டால மற்றுள கனசச
சதுரமேரென்னச் சாற்றினர் புலவர்

என்று சொன்னார் கணிதராதலின், இதனுட் கூறப்பட்ட சமமானவிருதொகையையும் வலப்படி இடப்படியெனவிருபடி கட்டி வைத்துக்கொண்டு, அவ்விரண்டையும் (ச) கீயந்து வலப்படியையாகுதல இடப்படியையாகுதல மற்றப்படியில் வாங்கி,

எழுபுயத்தரையை யடிப்புயத்தேற்றப்
பழுதறுபரப்பெனப் பகருநனனாலே

ஆதலின் இவ்விதமாயக் கண்ட பேற்றை இருபடியிலும் கூட்டி, முன் வலப்படியை வாங்கினால இடப்படியையும், இடப்படியை வாங்கினால வலப்படியையும இருகூறுக்கித் திருட்டாந்தமாமாறு கண்டுகொள்க.

வேறோர் வினா

வட்டமிரண்டொன்றினுளொன்றுருபுடையே மருவிய நறபொருந்தாதி வரைந்துவிட்டம், இட்டவிருமண்டலத்தினடுவமைந்து ஏழபெறு நற்றண்டமுனனாயினைத்தரித்தி, வட்டமிகப்பலதிட்டித் தொடரவைத்து மையமுதனாட்டுவிரேல் மட்டேரகை, விட்டவரைக்கெத்துணையாம்? அறியுமாறு விளம்புமுலகளந்தமதிவினருநாவீர

இப்படிக்கு

வட்டுநகர், சாத்திரப்பள்ளிக்கூடம் } உம வகுப்பிலோராமாணுக்கன் இராமநாதர்சுதன் அம்பலவாணன்
சஉ௰௩.ஆ சித்திரை மீ உரு திகதி }

௩ம். அதிகாரம்

நீத்தார்பெருமை—*The Praise of Holy Men*

௨௬. செயற்கரியசெய்வர் பெரியர் சிறியர்
செயற்கரியசெய்கலாதார்

பு. பிறப்பு ஒத்தவர்களாகிய மனிதர்களுக்குள்ளே எளியவைகளைச் செய்யாது செய்வதற்கு அரியவைகளைச் செய்பவர் பெரியவராம்: அந்த எளியவைகளைச் செய்து செய்வதற்கு அரியவைகளைச் செய்யமாட்டாதவர் சிறியவராம்

The great will do those things which it is difficult to do, the mean cannot do those things which it is difficult to do. *Drew*

---

௨௭. சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின்
வகைதெரிவான் கட்டேயுலகு.

பு இரசமும், உருவமும், பரிசமும், சத்தமும், கந்தமும், என்றுசொல்லப்பட்டதன் மாத்திரைகள் ஐந்தினுடைய கூறுபாடுகளையும் ஆராய்ந்து அறிகிறவனுடைய அறிவின் இடத்ததே உலகம்.

The world is within the knowledge of him who knows the properties of taste, sight, touch, hearing, and smell. *Drew*

---

௨௮. நிறைமொழிமாந்தர் பெருமைநிலத்து
மறைமொழிகாட்டிவிடும்.

பு. பொருள்நிறைந்த சொல்லுக்களையுடைய மனிதராகிய துறந்தவருடைய பெருமையை நில உலகத்திலே அவர் கட்டளையாகச் சொன்ன மந்திரங்களே பிரத்தியட்சமாகக் காட்டிப்போடும்.

The hidden words of the men whose words are full, will show their greatness to the world. *Drew.*

Definitions of the words expressive of the actions of the mouth, published in the last No.

To Utter	ஒலித்தல, இசைத்தல	To Recite	ஓதல
" Speak	பேசுதல	" Command	விதித்தல, கட்டளையிடல [ல
" Say	சொல்லுதல பகர்தல	" Rehearse	பாடம்போற்ற
" Articulate	தொனித்தல், எழுத்தறச்சொல்லுதல	" Announce	சாற்றல, பிரசித்தப்படுத்தல
" Pronounce	உச்சரித்தல	" Hoot	கூக்கூவெனல், கம்பலைபண்ணல
" Enunciate	தெளித்துரைத்தல	" Hallo	ஆர்ப்பரித்தார்ட்டல, அறைகூவல
" Tell	விளம்புதல, உரைத்தல	" Whisper	மிணுமிணுத்தல, குசுகுசுத்தல
" Talk	பறைதல, பேசுதல	" Name	நாமமிடல, பெயர்சூட்டல, நாமத்தாணைஞ்சுதல
" Converse	சம்பாஷித்தல, கதைத்தல	" Lisp	மழலைமொழிதல
" Discourse	விற்பனனித்தல பிரசங்கித்தல	" Stutter	கொன்னித்துப்பேசுதல
" Declare	வெளிவிடுதல, கூறுதல	" Sing	பாடுதல
" Bid	பணித்தல, கற்பித்தல	" Cry	அழுதல, அரற்றல
" Call	கூவல, கூப்பிடல, பெயராணழைத்தல	" Scream	கீச்சிட்டழுதல
" Invite	அழைத்தல	" Shriek	பீரிட்டழுதல
" Summon	அழைவித்தல, அழைத்தல	" Screech	செம்பியழுதல
" Exclaim	வெடித்துரைத்தல	" Yawn	கொட்டாவிகொள்ளுதல
" Relate	இயம்புதல, எடுத்துமொழிதல விபரித்தல	" Gape	கொட்டாவிவிடுதல
" Repeat	மேலெடுத்துமொழிதல, திருப்பவுஞ்சொல்லுதல	" Eat	உண்டல, புசித்தல
		" Sup	சாப்பிடல
		" Drink	குடித்தல, பருகல
		" Sip	ஆசமித்தல, சிறுகப்பானம்பண்ணல
		" Spit	வாயாணீருமிழதல, துப்புதல

[From a Selection of Christian Songs now in the press.]

வானதிதேவன் மைந்தனைப்
போற்றுவோமே.

கோளுளதவிதிறைகோதிரத்திலநா கோலமதாயப்பிறந்தார
வானதி

காவினிலேயதமேவைதின்றகனி காரணத்தாவியலபாயத
தேவனுமேமனுருபமதாமெய்மைமந்த தேடிவந்தேபிறந்தார வா

நீதியினுடையினுமெய்மைமேடிட நிறைத்து அலங்கரிக்க
மாதயவாயப்பழங்கதைதொடிந்தி மாட்டகத்தேபிறந்தார வா

சுந்தரமிலங்க பரஞ்சிபணிந்து துலங்குமருசந்தனிலே
வந்துதியாபல விலங்கதடாந்த வனந்தனிலேபிறந்தார வ

வல்லவரசரமைசசரரணமனை மாளிகையானதிலும
புல்லணையேமிகமேனமையெனறெணணிப்புகுந்ததிசயமே வா

பெதலகேமினித்ததிரித்துவ கத்தாவர்தாரெனவே
அத்தியந்தபய பததிமிகுந்தா காயதருமேடணிந்தா வா

அற்பொழுதாயா பரப்பொருள்சேயென அறபுதமாய்ததோழவே
உத்தமியாமமரிகெற்பமதுற்பவித் துத்தமனாபிறந்தா வா

தாதாகளாதி பதியருட்பாலச சுரககவழுதுண்ணவே
மாதவளாமிளங்கனனிதனடாலதனைவாயினினமாந்திடுவோன் வா

சீரார்பரதிகின்வாயில திறந்தவாதேடிவந்திவ்வுலகில
அருமவரடிசேருமினுங்சனுக் காணந்தமாகிடுமே வா

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

உ புத்தகம், சந்சிகை ம] நஅாசஉ ஹு வைகாசி மகூ, தேயதி வியாழக்கிழமை, Thursday, May 19, 1842 [Vol. II No 10

For the "Morning Star"

An answer to the Astronomical Question proposed by Mr T Balch in No 8 Vol. 2

The Question is "On what day of the year will the Longitude and Right ascension of the sun be severally equal to the complement of its Declination"

This I will consider under the following two problems

PROBLEM 1

To determine the time of the year when the sun's Longitude quals his co-declination

Let L represent the sun's Longitude
D his declination
A his Right ascension
w the obliquity of the Ecliptic

உங்கள் பத்திரிகையிலோர்சஞ்சிகையினுத்தம சுவிசேஷகனென்பவர் சாதிவித்தியாசமிட்டுவைப்புக்கட்டேயன்றிப் பின்னொருபொருட்பட்ட காரியமல்லவென்பதை ரூபித்துக்காட்டுதற்காக அநேக உசிததிருட்டாந்தங்களையும் விவிலிய போதங்களையும் எழுதின கடிதத்தை நான் வாசித்து மனப்பூரித்தியானேன் அவரெழுதினதற்குச் சார்பாய் நானுமோர் திருட்டாந்தவினுவொன்றை வினுவிச் சாதிவித்தியாசமேயில்லையென மலைவறுக்கின்றேன் அதாவது, ஒருவனுடைய தகப்பன் செட்டியுந் தாய் நளத்தியுமானால் அவர்களுடைய மகனென்னசாதி? தாய் வழிபார்த்து நளவனென்று சொல்லிற் செட்டியாதற்குக் காரணங்கிடைக்கைமுறைமையெங்ஙனே? ஆ, ஆ! செட்டித்துரையனாயினனென்று சில யூகிகளுத்தேசிப்பார்களே—"கோடிசீமானுயிற் கொம்பெனச் செட்டியாவான்" என்ற லேசுவிதியுமுண்டு. சாதிவித்தியாசமேயில்லையெனப் பெரியோர்யாவருங்கூறிய பிரத்தியட்சமுங்காட்டுகிறார்கள்.

இதன்பேரிலினியொன்று விரிவாயெழுதிவிடுப்போம்

பருத்தித்துறை } காரைக்கால் வெள்ளாளன்
வைகாசி ௫ தி. } இராமநாதர் சுந்தர்

(On Tamil Grammar)

மகா கனம்பொருந்திய உதயதாரகைப் பத்திரிகைக்கு

நன்னூல் கற்கப்புகுந்த ஓர் மாணாக்கன் நன்னூலில் வினவுங்கூடா-உதயதாரகையெனனும் பத்திரிகையின் வழியாய்ச் சகலருந் தங்களுக்கு விளங்காத நற்கருத்துக்களை வினவியறிகின்றமையால், நானும் நன்னூலில் எனக்கு விளங்காத ஓர் நற்கருத்தை வினவியறிய வேண்டுமென்றுணர்வுற்றேன் அஃதென்னவெனில், தாவினிடல்லைவிட்சடித்த விதியினேரிருபாயிரந் தோற்றியெனக் கூறிய வழி, எந்நூற்குமிருபாயிரமெனவென் சிற்றறிவின் விளக்கமாயிருக்கின்றதாகையானிடப்பாயிரங்களுட் பொதுப்பாயிரத்தை எந்நூற்கு மிலக்கணமாகிய நன்னூற்குக் கூறினதாயிராதது காரணம்பற்றி யஃதிஃதென்றோர்ந்திடக்கற்றறிவுடைய பெரியோர்சிற்றறிவுடையேனுக்குச் சற்றறிவிக்கவேண்டும் இப்படிக்கு

வட்டுநகர் சாத்திரப் பள்ளிக்கூடம் தில்லையம்பலம்
இராமலிங்கன்

(On Transmigration)

மறுபிறப்பு உண்டென்று சைவசமயத்திற் சிறந்த மகாத்துமாக்களன்றி மற்றும் அநேக தவத்திகள் இருஷியேசுரர்கள் முதலான பெரியோர்கள் சொல்லியிருக்கிறபடியாலும் இச்சமயத்தைச் சாராத சமயங்களேயன்றி மற்றெந்தச் சமயத்தவர்களும் அத்தையில்லையென்கிறபடியாலும், இத்தை வாசிக்கிற சைவசமயத்தவர்களாகிய முற்றுமுணர்ந்த பெரியோர்கள் இதுண்டென்று அத்தாட்சி பண்ணவேணும், அல்லது இதுதப்பறை கிறிஸ்துமார்க்கத்திற் சொல்லியிருக்கிறதே உண்மையென்று ஏற்றுக்கொள்ளவேண்டும். இதன்றி இன்னும் அநேகவினுக்கள் எனக்கிருக்கிற சமுசயத்தால் தோற்றுகின்றன, அவைகளையும் நான் எழுதும்போது அப்படியே நீங்கள் விடைகொடுக்கவேணும்

இங்ஙனம், தங்களூழியக்காரன்.
யாழ்ப்பாணம் உ௩ தி. பங்குனி மீ இராமன் கிட்டினன்.

உதயதாரகாவினோதருக்கு
[A Medical Query]

துரைகளே,

வைத்தியத்திலோர்வினு வினவுகிறேன். அஃதென்னெனின், முதலாவது, எல்லா நோய்க்காரருக்கும் உப்புப் புளிமுதலியவற்றைத் தள்ளி அரும் பத்தியத்தில் வைத்து மருந்துசெய்துவதே இத்தேசத்தில் முழுதும் வழக்கமாயிருக்கின்றது உவது. பெருநூல் அல்லாத சிலபல வைத்திய சாஸ்திரங்களில் உப்புப் புளி முதலியவற்றைத் தவிர்க்கச் சொல்லியிருந்தாலும் அவைகளெல்லாம் மகா கனம்பொருந்திய முனியேசுரர்களாற் சபிக்கப்பட்டிருக்கின்றனவே ஙவது அப்படியிருந்தும் அச்சபிக்கப்பட்ட நூற்களிற் சொல்லியபடி உப்புப் புளி முதலியவற்றைத்தள்ளித் தற்சமயத்தில் நோய்க்கும் நோய்க்காரர் பிரியத்திற்கும் ஏற்ற புசிப்பனவற்றைக் கொடாமற் பரிகரிப்பதினால் அதிக கேடாய் முடிந்ததைப் பிரத்தியட்சமாகக் கண்டிருந்தோம் சவது ஆயுள் வேதத்திலோர் பகுதியாகிய தேவ வைத்தியத்திற் சொல்லிய செந்தூரம் முதலியவையே பிரதான அவிழ்தம் அவ்விதமான அவிழ்தங்கள் செய்தற்குக் குருவின்றியமையா, அக்குரு உப்புப்புளி முதலானவைகள் சேர்த்தே உண்டாக்கப்படுகின்றன ருவது ஆகையால் அவ்வவிழ்தங்களும் உப்புப்புளி முதலியவற்றை முதற்காரணமாகக்கொண்டிருக்கின்றனவே அப்படியிருக்க நோய்க்கும் அந்நோயாளி விருப்பத்திற்குமேற்ற புசிப்பனவற்றைக் கொடாமல் அரும்பத்தியத்திற் போடவேண்டியதில்லையென்பதற்குத்தாரணம்

தன்வந்திரிவாகடம்
சௌமியகாண்டம்

துய்த்திடும்விருப்பந்தோன்றத்துயினடைக்கிடையூறின்றிப்
பத்தியமற்பமாகப் பருவரறேன்றுவண்ணம் என
வும்,

சஷ்டமுனி நிகண்டு.

சாரம்விட்டாற்காரமில்லை நிஷ்காரமாச்சுச் சகலரு
ருச்ச சகலகருத்தயங்கிப்போச்சு—எம்
அப்பனேலவணமொடுகாரசாரமறிவாகச் சொல்லிவி
ட்டேனுமுப்பதுக்குள்—எம்,

இவற்றிற்காதாரமாகச்-சிவஞான சித்தியார்

மண்ணுளே சிலவியாதி மருந்துகளருந்தியோடு
திண்ணமாயறுத்துக்கீறித் தீர்த்திடுஞ்சிலநோயெல்லாங்
கண்ணியகட்டிபாலுங் கலந்துடனருந்திதீர்க்கும்—என
சொல்லப்பட்டிருக்கின்றது

ஆகையால் நோய்க்காரரின் இச்சைக்கும் நோய்க்கும் ஏற்ற புசிப்பைக் கொடுத்து அதற்காகிய அவிழ்தம்பண்ணுதல் நோயை அனுபவிக்கிறவர்களை மேற்சொல்லியபடி அரும்பத்தியத்தில் வைத்து வேதனைப்பண்ணுவது சரியோ சரியல்லவோ என்பதை முற்றுணர்ந்த ஆயுள் வேதியர் யோசனைபண்ணி இதிற் பிழையிருந்தாற் பொறுத்து நல்விடையை உங்கள் உதயதாரகையின் வழியாக அறிவிக்க மன்றாடிக் கேட்கிறேன் இப்படிக்கு

௲அ௱ச௰உ ஆ சித்திரை மீ ௧ தேதி
உடுப்பிட்டி ஆயுள்வேதவினோதன்

மாயவித்தைமலைவை விலக்கல்
(On the pretended miracles of the heathen)

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

சாற்றரிய நீரினிற்றம்பனஞ் செய்தலுந் தாவியதல்மேலேகலுந் தணலினுளிருத்தலுந் தழலகையிலேந்தலுந் தலையறுத்தெதிர்காட்டலுந்-தனதுகண்களைவாங்கியெதிராக்கீட்டலுந்-தயங்குநாவறுத்தெறிதலுந—தனையெடுத்திடுமையுந் தனைமறைத்திடுமையுந்தையலை வசியத்தின்மையும—போற்றுமெட்சணிகளும் பூதங்களோட்டலும் பொன்வெள்ளிசெய்யுமவித்தையும் புதல்வரைப்பெற்றிடச் சூளிசங்கள்சட்டலும் போகிக்கமணி செய்தலும—புகைதானுமின்றியே சூதமுதலகட்டலும் புகலுமாரணவித்தையும்-பூமிவட்டஞ்செலக் குளிகைசெய்வித்தையும் பொசிப்பகற்றிடு வித்தையுங்-கூடாமைமறித்திடச்சமாதியிலிருத்தலுங் கூடுபோய்க்கூடேறலுங—குலவுநரைதிரைமாற்றக் கற்பமதுகொள்ளலுங்கோகரணகேசரணமுங—கூறுமிந்திரசாலமயேந்திரசாலமுங் கோபுரமவிழுந்தெழிலுங-குறளியாற்பலலகரும் தேறுவித்தையுங் கோடிசெப்பிடுவித்தையுங—காற்றையுட்டம்பனஞ்செய்து மேலெழுதலுங் காட்டுக்கண்கட்டுதொழிலுங் - கழறுபலதேவதைவசியமுங் குளத்துநீரைக் கரையேறிவரச்செய்தலுஞ் - திருஷ்டிமலைவழுதலான பலகோடிவித்

தையுங் காட்சியிற்காணில் பொய்யே —காரணனை நித்தியபரிபூரணனை வழிபடுங்காட்சியொன்றஃது மெய்யே

இவற்றினுட் சில கருவிகளாலுங் கைச்சமாத்திறனாலுஞ் செய்வனவன்றிச் சில அசம்பவமாகவேயிருக்கின்றன சிலர் இவைகளைத் தேவவல்லமையாற் செய்தோமென்று உலகத்தாரை வஞ்சிக்கிறார்கள் வஞ்சிப்போர் வஞ்சனையையும் வஞ்சிக்கப்படுவோர் மயக்கத்தையும் முகத்திற்கண்ணாடிபோன் மேற்கண்ட முறையே தெளிவாக்குவோம் இப்படிக்கு சத்தியப்பிரியர்

க நாகமுத்தாபிள்ளை பொன்னங்கால

சுப்பிரமணியக்கவிராயர்.

சகத்தாதிசாட்சி
[The world not eternal]

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

அதிட்டானசைதன்னியத்தின்கண்ணே சகத்து அபிவியாபகமான காலையில் அஃது அநாதி நித்தியமென்றும், அவ்வதிட்டான சைதன்னியத்தினின்று அச்சகத்து ஒரு பகிரெட்டமான காலையில் அஃது ஆதியநித்தியம் என்றும், சிலர் சொல்வது ஆகமசாஸ்திரங்களுக்கு அந்தயாசமே. ஏனெனின், அநாதிகாரணவஸ்துவாகிய பிரமத்தினிடத்திலே ஆதிகாரியவஸ்துவாகிய பிரபஞ்சந் தோன்றியது—இப்பிரபஞ்சத்தைப் பிரமத்தோடுசேர்ந்த அநாதிநித்திய பதார்த்தமென்றதெப்படி? அப்படியானால் அந்தப் பிரமத்தைப் போல இந்தப் பிரபஞ்சமுஞ் சாசுவதமாக இருக்கவேண்டுமே அவ்வாறில்லாமற் பிரபஞ்சந் தோன்றி அழியவேண்டியதென்னை? ஆதலால் சமட்டிவடிவாகிய மாயை அநாதி என்றும்—வியட்டி வடிவாகிய சகத்து ஆதியென்றும், ஆகமிகள் சொன்னவை சரியே இன்னுமாகம சாஸ்திரங்களிலல்லாமற் பரத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமில்லையென்றும் சகத்துக்குத் தோற்றமுமொடுக்கமுமுண்டென்றும் பிரத்தியட்சமாக அறியலாம் பஞ்சலட்சணப்பிரயோகப் பயன், நித்தியஞ் சுத்தமாயை நிலைபெறு தசுத்தமாயை என்றதும்-வாதிட்டம்-பரமம்மெங்குமென்றுமுண்டாரும், என்றதும் -அந்தரமிறந்துள்ள விகற்பமற்றறிவாயழிவிலாப் பிரமமேயிருக்க என்றதும், பிரபுலிங்கலீலை பரசிவபிரமமென்னும் பாடன்முதலாக நான்கு பாடலும், வேதாந்தசூடாமணி—நீங்கியவிகாரப்பிரமமாமீசன் என்னும் பாடன்முதலாக நான்குபாடலுங் காண்க.

இப்படிக்கு களத்தூர்,
சுவாமிமுதலியார் குமாரன் முருகேசமுதலியார்

An explanation of a verse from the Old Saying (மூதுரை)
சமரசம்.

மூதுரையில், "கவையாகிக்கொம்பாகிக் காட்டகத்தே நிற்கு
மவையெல்லாமல்ல மரங்கள் சவைநடுவே
நீட்டோலைவாசிக்க நின்றான்குறிப்பறிய
மாட்டாதவனேமரம்"

இச்செய்யுள் பாவென்வெள்ளையும் பாவலர் பாவினுள்வெள்ளையும் பாவுக்கசைசீரும் படித்தவர் நாவுக்கிசைசீருமாயப் பண்டுதொட்டுவழங்கி வருகின்றது கம்பென வழங்கிய சொல் உலக வழக்கிலன்றிச் செய்யுள் வழக்கிலியைந்தன்று ஆதலிற் கொம்பென்பதே நயந்ததிங்கு "நல்லமரமல்ல" என்பதும் "சவையகத்து" என்பதும் பாடமாயிருக்கின்றன "நீட்டோலைவாசிக்க நின்றான்குறிப்பறிய மாட்டாதவனேமரம்" என்றதை நீட்டோலைவாசியாநின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம். எனத்திரித்து நீட்டிய வோலையை வாங்கி வாசிக்கமாட்டாமல் மலைத்து நின்றவனும் ஒருவர் குறிப்பை யின்னதென்று அறியமாட்டாதவனுமே நல்ல மரமாம் என்று சென்னைப்பட்டினத் தச்சுப்பிரதியிலும் மானிப்பாயில் அச்சுப் பிரதியிலு மெழுதப்பட்டிருக்கின்றது இஃது கற்றவர் சொற்ற மூதுரைக்கொத்திருத்தலா ராகக்கோதுரையாம் அன்றியும் வாசியாநின்றான் என்பது வாசிக்கமாட்டாமல் மலைத்துநின்றான் எனச் சொற்கள் வருவிக்கப்படுதலானும் வாசிக்கின்றான் என உடன்பாட்டு வினைப்பயனுங் கொள்ளுந்தன்மையானும் மது பாடமின்மையானும் வாசியாநின்றான் என்று கூறுதல் முன்னவர் பாடலை மாறுதலாம், இனி நீட்டோலைவாசிக்க நின்றான் குறிப்பறிய மாட்டாதவனே மரம். என்றதற்கு என் சிற்றறிவிற்றோன்றிய மட்டுமெழுதுகிறேன், நீட்டிய வோலையை வாசிக்கமாட்டாதவனுந் தன்னெதிர் நின்றவனது குறிப்பின்னதென வறியமாட்டாதவனுமே மரமாமென்றவாறு. "வாசிக்க, அறிய" என்னுமிவ்விருவினையெச்சங்களும் மாட்டாதவ , என்பதில் எதிர்மறைமுற்றுவினைகொண்டு வாசிக்கமாட்டாதவ, நின்றான் குறிப்பறிய மாட்டாதவ எனத் தனித்தனிமுடிந்தன. மாட்டாதவன், கடைநிலைத்தீபம் நின்றான், வினையாலணையும் பெயர் நின்றான்குறிப்பு நின்றானது குறிப்பென விரிந்தது. கல்லாதவனையுங் குறிப்பறிய வொல்லாதவனையும் முதற்பிறப்பாள மனிதரினின்றும் பிரித்துக் கடைப்பிறப்பான மரமாமெனப் பொருள் விரித்து நிற்றலின மாட்டாதவனேயென்னு மேகாரம் பிரிநிலையில் வந்தது நீட்டோலை, தேமாங்காய் வாசிக்க, தேமாங்காய் நின்றான், தேமா குறிப்பறிய, கருவிளங்காய் மாட்டா, தேமா. தவனே, புளிமா, மரம், மலர் என்முடிந்தது இவற்றைச் சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போலப்பவரே யுய்த்துணரக்கடவர்.

வல்லிட்டித்துறை இப்படிக்கு
சித்திரை ௨ உ தி கதிர்காமர் ஏகாம்பரம்

கண்வளர்வாரைக் கடிதினெழுப்பல்

உதயதாரகையின் முகாமைக்காரருக்கு
மகா கனம்பொருந்திய அய்யாவே,

திருவெண்ணெய்நல்லூர் காத்திகேயர் குமாரன் இராமலிங்கபிள்ளையவர்கள் கடாவிய கடாவுக்கு, கு கந்தரவேற்பிள்ளையும், தாமோதரம்பிள்ளை சுதன் சிதம்பரபிள்ளையும் விடையெழுதாமல் மௌனமாயிருப்பது மிகுந்த ஆச்சரியமாகவிருக்கின்றது மேற்குறித்த இராமலிங்கபிள்ளை அவர்கள் உசாவிய உசாவுக்குச் சரியான விடை அவர்கள் துயிலையவிட்டெழுந்து அவ்வினாவிற்கு உத்தரமெழுதவும் அல்லது அவர்கள் தங்களுக்கு விளங்கவில்லையென்று எழுதவும் அப்படியே செய்யாமல் இருப்பது சரியல்லவென்றுணர்ந்து இருவரும் அதற்குரிய வழியை உதயதாரகை வழியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுநிற்கிறேன் இப்படிக்கு

[illegible] ஆ வை [illegible] மீ [illegible]. மட்டைநகர்
சோமநாதர் தவகுமாரன் விசுவநாததேசிகர்

பயனயமின்றிக் கிறுக்கிய கடாக்களை யுறுக்கிய திறன்மொழி

உதயதாரகைப் பத்திரிகையை நடாத்துமுத்தமனையியாவு ராகளுக்காரியாவர்தம

தங்கள் உதயதாரகைப் பத்திரத்தில், எம் பக்கத்தில் காத்திகேயர்குமாரர் இராமலிங்கபிள்ளையென்பவர் இருகடாப்பொறித்தார் "ஒன்றறிவதுவே" என்பதற்குப் பொருள் சரிப்படவில்லையெனப் புகன்றார் பொருளேதினும் சரிப்படவில்லையென்று அவர் புகலவரேல் மருளகன்று தெருளுற்றிடவோர் விடை எழுதுவோம் அதன்றிக, அவ்விராமலிங்கபிள்ளை என்பவர் "தோறகர் நுபோரவை துலைக்காது முட்டை" என்பதை யாதுநூலினுள்ளதென வினவுற்றார் அத்திருவெண்ணெய்நல்லூரிற்றானே சடையருக்கு முன்பாகக் கலவியிற் சிறந்த பெரியகம்பர் அரங்கேற்றிய இராமாயணத்தையேனும் அதற்கு உதாரணமாகவேனுங் கண்டறிந்திலரா? அதினால் அவர் அவ்வூரவரல்லவென்று விளங்குகின்றது இங்ஙனம்,

உடுப்பிட்டி திருவல்லை கு. பள்ளிக்கூடம்
கு. கந்தரவேற்பிள்ளை } இருவர் கையொப்பம்
தா சிதம்பரப்பிள்ளை }

☞ மேலே கண்டிருக்கிற "பயனயமின்றி" என்ற கடிதத்துக்குத் தேதியில்லாதிருந்து வெகு நாளைக்கு முன் வந்தும் அச்சடிக்கப்படாமலிருந்துபோயிற்று உதயதாரகைப்பத்திராதிபதி

உதயதாரகையை நடாத்திவருங் கனம்பொருந்திய வையாவர்களுக்கு வந்தனம்

தங்கள் தாரகை, ௫ம். சஞ்சிகை, ௫௦ம் பக்கத்தில் விரிக்கப்பட்ட கடாவுக்குத் திருமாலவரை வேளாளர் தெய்வம் வருணனென்றவருணருக

இவை பலவுணர்ந்த சியக்கியதுவுணராதனேறற- னவையெனவுணரான கொல்லோ நவின்றிடுமேதுவென்னை- புவனமுமுயிரும் யாவும் புரந்திடுமெந்தைபாதம்- கவமுடனெய்துவானென்னலத்தகவெய்துமோக்கம் இங்ஙனம் தங்கள் பணிவிடைக்காரன,

யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஓர்வேளாளன
சித்திரை ௰ ௨ தி

உன் பராபரனைச் சந்திக்கிறதற்கு எத்தனப்படு
[Prepare to meet thy God]

மனந்திரும்பாத பாவியே! பராபரன் உலகத்தை நடுத்தீர்க்கிற நாளொன்றுண்டு. அந்நாளில் யாவரும் அவருடைய சன்னிதானத்திற் சேருவார்கள், நீயும் அவர்களிலொருவன். ஆதலால் உன் தேவனைச் சந்திக்கவெத்தனப்படு, அவர் பரிசுத்தர், அவர் பாவத்தை அரோசிக்கிறவர், அவர் பாவிகளை வெறுக்கிறவர், பொல்லாங்கரைப் பகைக்கிறவர். நீயும் பொல்லாங்கன், நீயும் அவரை மறந்துவிட்டாய், அவருடைய வசனத்தைவெறுத்த நீ, அவர் விதித்த பிரமாணங்களை அவதூறுபண்ணியிருக்கிறாய், அவர் நியமித்த ஒய்வுநாளை அவபாவனைபண்ணினாய், அவரை அற்பமாக வெண்ணினாய் நீ அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணினதில்லை அவர் உனக்குக் காட்டின இரக்கத்தை மதியாமலுமனுபவித்துவந்தாய். உன்னுடைய தகாத நினைவுகளும் நன்றிகேடும் பெருமையும் அகிர்த்தியமும் நீ பேசின தகாத வசனங்களும் உனக்கும் அவருக்கும் நடுவே வெளியரங்கமாகும். யாதொரு பாவத்துக்கும் நீ போக்குச்சொல்லமாட்டாய் அப்படியிருக்க உன் செனனமுதல் மரணபரியந்தம் செய்த பாவங்களுக் கென்ன சொல்லுவாய்? உன்னுடைய பாவங்கள் பொறுக்கப்படாதிருந்தால் நீ ஆக்கினைக்குள்ளாகவே தீர்க்கப்படவேண்டும். நீ ஒரு பாவஞ்செய்தவுடனே உன்னை ஆக்கினைக்குள்ளாக்குவது அவருக்கு நீதி அவர் இரக்கமுமுள்ளவராயுமிருப்பதால் இந்நாளளவும் பொறுத்திருக்கிறார். அந்த இரக்கந்தான் உன்னுடைய பாவங்களுக்கு ஒரு பிராயச்சித்தத்தை நியமித்திருக்கின்றது உன்னை நித்திய மரணத்திலிருந்து மீட்கத்தான் தம்முடைய குமாரனை மரணத்துக்கொப்புக்கொடுத்தார். அவருடைய மரணந்தான் உன்னை இந்நாளளவும் உயிரோடே வைத்திருக்கின்றது குமாரன் உனக்காக மரித்ததென்று விசுவாசித்தாயேயாகில் உனக்காறுதல் கிடைக்கும். அப்பொழுது உனக்கு நேரிட்டிருந்த ஆக்கினையும் உன்னை விட்டுவிலகும். அவர் உனக்குக் காட்டின மன்னிப்பின் வழியை நீ அநேக முறை தள்ளி அதை அசட்டைபண்ணினாலும இன்னும் அவர் உன்னைக் கைவிடவில்லை அவர் உன்னை அங்கீகரிக்கத் திரும்பத் திரும்ப அழைக்கிறார். குமாரனும் எப்பொழுதும் உனக்காகப் பரிந்துபேசுகிறார். ஆவியானவரும் அநேகமுறை எச்சரித்திருக்கிறார். கிறிஸ்தவர்களும் நாளுக்குநாள் உன்னைத் தெருட்டுகிறார்கள். இதுவெல்லாம் அவருடைய இரக்கமல்லவோ! இப்படியிருக்க உன்னிதயம் நாளுக்கு நாட் கடினப்படுகின்றது. நீ உன் வழியைவிட்டுத் திரும்பாமல் நரகமட்டுக்கும் நடக்கிறாய் அவர் உனக்கிரங்குகிறகாலம் சீக்கிரம் போகின்றது. இப்பொழுதே உன் இரட்சிப்பின் நாள், இதுவே நற்பிரிய காலம், இச்சீவியம் முடிந்தவுடன் பழிவாங்குதலினுள்வரும் அந்நாளிலே குமாரனை விசுவாசிக்கிறவன் நித்திய சீவனைக் காண்பான், அவரை விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் பிதாவாகிய தேவன் உலகத்தை நியாயந் தீர்க்கும் அதிகாரத்தைக்குமாரனுக்கொப்புக்கொடுத்தார், அவருடைய நியாயாசனத்துக்கு முன்னே நாம் நிற்கும் பொழுது நாம் அவரில் வைத்த அன்பே நமக்கொதுக்கிடமாயிருக்கும் ஆதலால் நீ உன் அக்கிரமத்தைவிட்டுத் திரும்பி திரியத்துவ தேவனில் அன்புவைக்கவேண்டும், அப்படித் திரும்பாவிடில் நித்த நிற்பந்தமே உன் சுதந்தரம், நீ அப்பொழுது மலைகளே! அவருடைய சன்னிதானத்துக்கென்னை மறைத்துக்கொள்ளுங்களென்று கதறுவாய், அப்பொழுதுதானே தேவனுடைய கோபத்தின் உக்கிரத்தையு அதின் சாப அக்கிரத்தையும் உணர்வாய். பழிவாங்குதலின் மிலாறு உன்னைக் கீழே விழுத்தி அழிவுக்குக்கொண்டுபோகும், அவருடைய தீர்ப்பைத்தடுக்க வேறொருதேவனில்லை, அவருடைய கரம் சருவ இடங்களுக்கும் மகா வல்லபமுள்ளது. இப்படியிருக்க நீ அவருக்குச் சத்துருவாயிருக்க விரும்புகிறாயோ? மித்துருவாயிருக்க விரும்புகிறாயோ? உன்னுடனே சகவாசிகளாயிருந்த விசுவாசிகள் அவருக்குச் சிநேகிதராயும் அருகாசனத்தராயுங் காணப்பட நீ நரகத்திலே விழுந்து புலம்பவேண்டுமே, அவர் மாறாதவராயிருக்கிறாரே அவருடைய தீர்ப்புக்கு மாறுதலில்லையே, அவர் நித்தியமுள்ளவரே, அவருடைய தீர்ப்புந் நித்தியமுள்ளதே நீ இப்படிப்பட்ட தீர்ப்புக்கு அஞ்சமாட்டாயா? நீ நித்திய கோபாக்கினைக்குட் புகுதுகிறாயே, அந்த அக்கினி நித்தியமும் அவியாதிருக்குமே. நீ குமாரனை விசுவாசிக்கிறதற்கு இதுவே சமயம், இதுவே காலம். எங்கள் சீவனென்ன புகையல்லவா! எங்கள் சரீரம் காலமே அலர்ந்து அந்திபடமுன் வாடும் பூவல்லவா? எங்கள் ஆயுசின் காலம் போகப் போகப் பழிவாங்குதலினுள் அணுகி அணுகி வருகின்றதே, ஆதலால் இப்பொழுதே மனந்திரும்பு, இப்பொழுதே குணப்படு, இப்பொழுதே அவரைச் சந்திக்கப்பிரயெத்தனப்படு

௩ம் அதிகாரம்
நீத்தார்பெருமை—*The Praise of Holy Men*

௨௯ குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது.

பு துறவு, மெய்யுணர்வு, நிராசை முதலாகிய நற்குணங்களென்று சொல்லப்பட்ட மலையின் முடிவில் நின்ற முனிவருடைய கோபமானது தான் உள்ள அளவு கணப்பொழுதாயிருந்தாலுங் கோபிக்கப்பட்டவராலே தடுப்பது அரிது.

The anger of those who have ascended the mountain of goodness, though it continue but for a moment, cannot be resisted *Drew*

௩௰. அந்தணரென்போரறவோர் மற்றெவ்வுயிர்க் குஞ்,
செந்தண்மைபூண்டொழுகலான்.

ப. எல்லா உயிர்களிடத்துஞ் செப்பமாகிய கருணையை வைத்து நடப்பதினாலே அந்தணரென்று சொல்லப்படுபவர் துறவறத்திலே நிலைபெற்ற முனிவராம்

The virtuous are truly called Andanar, because in their conduct towards all creatures they are clothed with kindness. *Drew.*

1 ரி 144

No. XI

Messrs Editors,

Those of your Readers who have not given the subject their special attention will, I dout not, be surprised to learn that there are more than 80 *verbs* in the English language definitive of the operations of the human mind This circumstance illustrates the richness of the language and the power of composition possessed by one who has its multitude of Synonymes at full command —I send a list of the verbs alluded to with the most exact and critical definitions I could obtain I do not annex a list of *sentences* lest these might call for more room in your paper than you could reasonably allow. Will you kindly give your Readers the *Tamil* of each of these words? *W*

Through the medium of the *Mind* mankind

Think—To have the mind occupied on some subject.
Suppose—To receive a thing into the mind as true
Imagine—To form a notion or idea in the mind.
Believe—To have a firm persuasion of any thing
Deem—To conclude on consideration
Reflect—To turn back the mind upon its past operations or upon past events
Ponder—To view with deliberation
Meditate—To let the thoughts dwell on a subject
Muse—To be closely occupied in contemplation
Consider—To view a subject attentively
Regard—To notice favorably or with acceptance
Fancy—To believe or suppose without proof
Contemplate—To think upon studiously or consider with attention
Conceive—To form in the mind
Comprehend—To seize or contain in the mind
Understand—To receive or have the ideas expressed or intended to be conveyed by a speaker or writer
Apprehend—To understand without passing a judgement or drawing an inference
Conjecture—To throw together possible or probable events
Guess—To form an opinion without certain principles or means of knowledge
Divine—To think and know as independently as God
Surmise—To entertain thoughts on slight evidence that something does or will exist
Cogitate—To direct the thoughts to an object.
Entertain—To keep hold or maintain in the mind with favor
Will—To decide in the mind that something shall be done or foreborne
Wish—To have a desire either for what is or what is not supposed to be obtainable.
Choose—To take a thing among others
Prefer—To regard one more than another

ஆனி மாதம்.

சாதிமீ ஆனி யஙதீ முதல் ஆடி யஙதீ வரைக்கும

E date	ஆனி தேதி	வாரம்	நட்சத்திரம்		திதி.		யோகம்		கரணம	
13	க	தி	ஆ	உகூ	ப	ருகlll	வி	l	ப	கூlll
							அ	ருஉl	பா	உஎl
14	உ	செ	ம	உரு	ஷ	உருll	வ	சருl	தை	உருll
15	ங	பு	பூ	உஉ	ஸ	யகூll	சி	ஙஎlll	வ	யகூlll
16	ச	வி	உ	யஅ	அ	யகூlll	வி	ஙயll	ப	யகூlll
17	ரு	வெ	அ	யஙlll	ந	அl	வ	உஙll	சகு	அl
18	சா	ச	சி	யlll	த	ஙll	ப	யஎl	க	ஙll
					வ	ருருlll			வ	உஎlll
19	எ	ஞா	சு	அll	து	ருசா	சி	யசll	ப	உஎlll
20	அ	தி	வி	எlll	தி	ருச	சி	கூll	கவு	உரு
21	கூ	செ	அ	எl	ச	ருங	சா	உl	கர	உ[illegible]
							சு	ருசாlll		
22	ய	பு	கே	அll	0	ருஙll	சு	ருஎll	வி	உஙl
23	யக	வி	மூ	யகll	பி	ருரு	பி	ருசாll	பா	உசl
24	யஉ	வெ	பூ	யருl	து	ருஅ	மா	ருசாl	தை	உசாll
25	யங	ச	உ	உய	தி	சாய	வை	ருஎ	வ	உசாlll
26	யச	ஞா	தி	உருlll	தி	சlll	வி	ருஅl	வி	சlll
27	யரு	தி	அ	ஙகlll	ச	சாl	பி	ருசாlll	பா	சாl
28	யசா	செ	ச	ஙஅl	ப	யகl	ஆ	சாய	தை	யகl
29	யஎ	பு	பூ	சசாll	ஷ	யசா	ஆ	சl	வ	யசா
30	யஅ	வி	உ	ருயl	ஸ	உயll	சவு	உll	ப	உயll
July.										
1	யகூ	வெ	ரே	ருரு	அ	உச	சோ	ஙll	கவு	உச
2	உய	ச	அ	ருஅ	ந	உசாlll	அ	ஙll	க	உசாlll
3	உக	ஞா	பர	சாய	த	உஅ	சு	உlll	வி	உஅl
4	உஉ	தி	பர	கll	வ	உஅl	தி	க	பா	உஅ
							ரு	ருஎ		
5	உங	செ	கா	உlll	து	உஎl	க	ருசl	தை	உஎl
6	உச	பு	ரோ	உlll	தி	உசlll	வி	சகூll	வ	உசlll
7	உரு	வி	மி	சlll	ச	உகll	து	சச	சகு	உசll
			தி	ருஅ						
8	உசா	வெ	பு	ருஎ	*	யஎll	வி	ஙஎlll	நா	யஎll
9	உஎ	ச	பூ	ருஙll	பி	யஉll	அ	ஙக	ப	யஉll
10	உஅ	ஞா	ஆ	சகூlll	து	சாlll	வ	உஙlll	கவு	கூlll
11	உகூ	தி	ம	சருll	தி	க	சி	யசாll	க	க
					ச	ருஙlll			வ	உஙlll
12	ஙய	செ	பூ	சகll	ப	சஅlll	வி	அlll	ப	உசlll
13	ஙக	பு	உ	ஙஎll	ஷி	சங	வ	க	கவு	யகl
							ப	ருஉll		

வியாழக்கிழமைச் சங்கிராந்தி நாடி உசா,விநாடி ருசா கற்கடகரவி

SUPPLEMENT TO THE உதயதாரகை.—MORNING STAR.

௨ புத்தகம் சஞ்சிகை ௰௧] ௲௮௱௪௨ ௵ ஆனி. ௨, தேதி வியாழக்கிழமை, Thursday, June, 2, 1842 [Vol II No. 11.

Gardener's Calendar for June

Madras

Mean Temperature 88—*Average fall of rain* 1 46

If the season is at all favourable, this is a very desirable time to sow the first crop of celery, beet root, and asparagus in boxes, for transplanting towards the latter end of August, or beginning of September

Cabbage seed may be sown in boxes in all this month If the weather be favorable for transplanting, they shou'd be put out in the beds in the following month, and finally transplanted in August In ordinary seasons, good cabbages may be procured in this manner during the whole of October, November and December, by which time peas and other vegetables become abundant If the weather should continue very hot during September, without showers, the plants should be kept in the boxes until the end of September, or beginning of October

As it is desirable to get strong celery plants before the monsoon, fresh seed should be sown every fortnight from the middle of June until the end of October Beet also should be sown in successive crops and transplanted once or twice This vegetable is not likely to be injured by the heavy rains of the monsoon Asparagus seed should be sown in boxes towards the latter end of the month and transplanted in November, in rows two feet apart, and the plants one foot from each other The soil should be mixed with a large portion of rotten horse manure, it is scarcely possible to make the ground too rich for asparagus Fresh asparagus should be sown whenever procurable, and especially between the end of June and the beginning of December

In this month mangoes, oranges, pine apples, pumplenoses, plantains, pomegranates, cucumbers, melons, green melons, and limes are abundantly supplied at low prices in the market Carrots, turnips cabbage and other European vegetables are scarce and dear, but pavakai, poodalankai, greens and brinjals are procurable in small quantities

The following fruits and vegetables are also to be had in this month,—custard apples, sapidella, lemons, mangostan, parsnips, salad, and vegetable marrow

Bangalore

Mean Temperature 76—*Quantity of rain measured* 4 *inches*

The directions for this month are very similar in many respects to those given for May and April, in order to have the flowers and vegetables later in the season Mangoes are in great perfection Stake the dahlias put into the ground last month The natives plough their grounds and sow the east-nut The white grub of the cricket is often very numerous this months and commits dreadful havock This is the best month for sowing seeds from England, &c provided they arrive in the two or three preceding month but in general it is adviseable to sow them as soon as they are unpacked The fields for hay shou'd be scratched by the native plough and manured Cuttings and suckers of chrysanthemums, if taken off and planted in small pots, will flower in September

---

THE ENTRANCED FEMALE

Or, the remarkable disclosures of a Lady concerning another World

By Robert Young

(Concluded from page 94)

From the gates of hell Miss D—— was conducted to another position, whence she had a view of heaven, and hell, and earth, and she described the earth as appearing like a vast stage crowded with human beings, and full of confusion and blood From this stage persons were continually stepping off and others were rapidly approaching its edge, and would very soon disappear; amongst whom was Mrs L——, an intimate friend of ours, who died a fortnight afterwards Other persons, whom she named, were represented as near the edge of the stage, and although quite well when she made this communication, did, in every case shortly afterwards leave this probationary state One of the days in which Miss D lay entranced, was the holy Sabbath; and she told us that she knew where I and my colleague preached on that day, and from each chapel she perceived holy incense rise, which she described as mingling together and coming up before the throne, then taken by the Saviour and presented to the Father, whilst angels and all the company of heaven rejoiced together She also stated, that during one of Mrs Young's visits to the house where she lay entranced, she saw her sitting by her bedside, reading to the family a chapter out of St John's Gospel, and then saw her kneel down and pray with them She likewise gave us to understand, that *matter*, under none of its forms or modifications, is any interruption to vision or movements of spiritual beings

She was next taken to a place whence she was permitted to see the moral state of the world A female, holding a prominent situation in the church, was represented as sitting under a tree of most luxuriant and beautiful foliage, with a long tube in her mouth, by which she was drawing people to her, and the conducting angel informed Miss D—— that the tube indicated the power of this female's persuasive language, the foliage of the tree her religious profession, and its trunk the state of her heart On looking at the trunk, she beheld that its core was rotten, and full of venomous reptiles Miss D—— told this to the female in question, and from the unchristian temper she manifested on the occasion, and her subsequent conduct, she fully proved the correctness of the representation Another female, a professor of religion, was represented to her as having yielded to temptation, and withdrawn her heart from God, and when her backsliding was announced in the world of spirits, Miss D looked toward the Saviour, and thought she perceived the appearnce of blood trickling from his wounds, as if "crucified afresh" (Heb vi 6) When Miss D—— was at our house, she sent for this female, and in the presence of Mrs Young and myself, told her the above; and according to her penitential acknowledgement, it was a correct view of her spiritual state Miss D—— had likewise the moral condition and perilous circumstances of a young man brought before her He was in possession of religion, was represented as assailed by a very plausible temptation, and would make shipwreck of faith if he did not resist it. She made this disclosure to him also in our presence, and after some evasion on the subject, he appeared greatly agitated, and declared that such was his temptation, although he had not mentioned it to any one For some time he resisted, but finally fell into the snare, and his sad experience proved the correctness of Miss D——'s communication A lady whom she named was represented to her as attired in the purest white, and surrounded by a number of little children, whom she was striving to wash in pure water, that they too might be white and clean, and the angel told her that the lady's robe was indicative of her purity of heart, and her holiness of life, and that her employment symbolized the nature and effects of her exertions in the church of God I was well acquainted with this lady and could bear witness to the correctness of this picture, for she was in my opinion one of the holiest of women, and was exceedingly useful to children and young people, indeed the honoured instrument of bringing many of them to God. Another lady she described as standing at the entrance of the path leading to eternal life, with a

book in her hand, and crying to the giddy multitude,

"Come back, this is the way,
Come back, and walk therein"

This lady, who was well known to the writer, had made many sacrifices for the cause of Christ, and was, I believe, doing what she could to bring poor wanderers back to God. Many other things were mentioned by her, but which I cannot now so distinctly remember as to warrant my making any record of them here. There was a strange unearthliness about this young woman after this remarkable event. Previously her disposition was rather sullen, and there was an impression of sourness on her countenance, but the change produced by this occurrence was manifest to all that knew her. Her temper became the most amiable, and her countenance was lighted up with more than ordinary joy. But, strange to say, in a few months she allowed herself to be exalted above measure through the abundance of the revelation, and consequently lost much of her glory, but the rod of affliction led her to recover her forfeited enjoyment, and in about three years after this trance she died happy in the Lord.

No person is perhaps more disposed to scrutinize and to reject the disclosures of what are called trances and visions, than myself, and yet when they furnish so many marks of genuineness as those of Miss D——, I think they should be allowed their proper weight and influence in confirming and illustrating the doctrines of revelation. There is nothing in Miss D——'s disclosures inconsistent with that Book which is to be a light unto our feet, and a lamp unto our paths, and by which we are to regulate our faith and practice, but, on the contrary, there is the most perfect accordance. The word of God informs us that there is a world of spirits, into which men enter on quitting this life, and are happy or otherwise according to their moral character, and if the Lord should in some cases, for reasons best known to himself, lift the veil which conceals from our view that spiritual region, we ought not to reject the light thus let in upon us, but rather avail ourselves of its assistance for the better understanding of the word of God, and the realities of another state of existence.

With respect to the locality of the world of spirits, conjecture has been busily and fruitfully employed. Some suppose that it is in the sun, others that it is in the centre of the vast universe, attracting and governing all the celestial bodies in their revolutions but the opinion which to me appears most plausible, is that of its being in the air, and consequently all around us. It is true we perceive it not, because our "senses are holden." Our physical nature is supposed to be the veil, separating between us and the invisible region, but when this veil is removed by the hand of death, our souls will at once find themselves in that region, and discern things which, though now present, are not seen because spiritually discerned. This view of the subject seems to be countenanced by the sacred Scriptures. The mountain appeared covered with spiritual beings when the Lord, in answer to the prayer of the qrophet, opened the eyes of his servant, or drew aside the veil (2 Kings vi 17.) Stephen, at the time he was about to suffer martyrdom, "saw the heavens open, and Jesus standing at the right hand of God." Believers are to be "caught up to meet the Lord in the air," and the ministering spirits which "minister for them who shall be heirs of salvation," "do always behold the face of our Father which is in heaven." They do not leave the spiritual world to perform their ministrations, but are in heaven, it would seem, at the very time, they are "encamping round about them that fear the Lord." It is true that this view, as well as others, relative to the abode of separate spirits, involves difficulties not to be solved in this imperfect state, but it nevertheless appears to receive some sanction from the word of God, and is, in my estimation, more consistent with the condition of being entranced than any other opinion held on the subject.

It is also a very generally received opinion that spirits know each other in the invisible world. The rich man knew Abraham and Lazarus, and the Apostle, referring to a future state, tells us that "then shall we know, as also we are known." According to the testimony of Miss D——, she knew, without being informed, the various beings she met with in the world of spirits. It appears to be a region of knowledge intuitively obtained, without any laborious effort or inquiry. This view of the subject is calculated to strike terror into the hearts of those who, by their neglect or influence, destroy souls, as it supposes they will know their victims when they shall meet them in the world lying beyond the tomb, but it is a view well adapted to excite pleasurable emotions in the breast of those who "turn many to righteousness," as it encourages the hope of their recognising their "spiritual children" as their "crown of rejoicing in the presence of our Lord Jesus Christ at his coming."

There is another opinion, entertained by some persons, which does not appear to be without foundation in the word of God,—that the inhabitants of eternity know what is taking place in this world. The temptations presented to the mind by wicked spirits, the guardianship of angelic beings, the cloud of witnesses represented by the Apostle as looking from their place of rest upon Christians running the race set before them, and the joy felt in the presence of the angels of God over one sinner that repenteth, certainly very strongly countenance the opinion. This also agrees with Miss D——'s statement, for she told us most distinctly that the state and circumstances of the population of our globe were fully known to the inhabitants of the other world. How startling is the thought! What manner of persons ought we to be, in all holy conversation and godliness? If earth is without a covering to eternity, with what circumspection ought we to walk!

Now, if these things be so, if there be a state of future rewards and penalties, on which we must enter on leaving this state of trial, how important it must be, for eternal things to exert their due weight and influence upon us, that when we fail on earth, we may be received into everlasting habitations! Were we to judge of the relative claims of time and eternity, by the general deportment of men, we should conclude that the former were far more imperative than the latter, the perishing body more valuable than the immortal soul, and the pleasures of sin, which are but for a season, more to be desired than those unfading joys which are at God's right hand.

One of the persons that Miss D—— saw in torment, had been in the habit of violating the Christian Sabbath by matters of worldly business. I more than once reproved her for it, warned her of her danger, and exhorted her to flee from the wrath to come. She acknowledged the propriety of my remarks, but, like many, pleaded her secular engagements, and expressed a hope that at no very distant period she would be able to retire from business and attend to her soul. Unhappy woman! Procrastination has ruined many a soul, and it ruined hers, for whilst she was about to realize all that her earthly mind had long and ardently desired, the messenger of death suddenly and unexpectedly blighted all her hopes, abruptly put an end to her mortal life, and Miss D—— saw her in hell lift up her eyes, being in torment. "O that men

tals were wise, that they understood this, that they would consider their latter end!"

தாரகாதிபதிக்கு,

நாங்கள் சிறிது கிழமைக்கு முன்னே சில பல கடிதங்களை அனுப்பிவைத்தோம் அவைகளினமச்சிற்போடப்படவில்லை அதற்குப் பின்னால் அனுப்பின கடிதங்களை அச்சுப்போட்டிருக்கிறீர்கள் நீங்கள் தயவுபண்ணித் திகதியின்படி அச்சடித்தால் நலமாயிருக்கும் நாங்களெங்கள் தேறுதலுக்கும் மறுபேருடைய தேறுதலுக்குமாக வெழுதுகிறதேயல்லாமல மற்றுமபடியல்ல இடையெழுத்துக்கு வேற்றினங் கேட்டதுபோல நாங்களில்லாதவைகளையெழுதவில்லை உதயதாரகைவழியாய் நாங்களறியாததுங் கேளாததுமான வெகு காரியங்களைக் கற்றறிகிறோம உண்மைப் புலவரினாலேயன்றுமறிகிறோம். நீங்களெப்பொழுதுமிதை அச்சடிப்பிப்பீர்களென்று காத்திருக்கிறோம் உண்மையான களஞ்சியப்புலவராகிய மகாகனம்பொருந்திய, றீ றீ வேதகிரிமுதலியாரவர்கள் இலக்கணவிலக்கியக் களஞ்சியத்தினால அதிகாதேயுதலை அடைறோம் இப்படிக்கு உதயதாரகையைச் சந்தோஷமாய வாசிப்பவர்களிலொருவர.

பத்திராதிபர் குறிப்பு

"உதயதாரகையைச் சந்தோஷமாய் வாசிப்பவர்களிலொருவர் தயவுபண்ணி இனிமேல வரவிடுங் கடிதங்களைத் தேதியின்படி அச்சடிக்கவேண்டும" என்று கேட்டுக்கொண்டகேள்விப்படிசெய்வது சில பல காரியங்களினாலநியாயமாயக் காணவில்லை ஏனென்றால,

க௧வது சில கடிதங்கள் அச்சடிக்கப்படுவதற்குத் தகுந்ததல்ல

உ௨வது அச்சடிக்கத் தகுமானவைகளைப பின்போட்டுவைத்துச் சமயம வாய்த்தவேளைகளிற் பிரசுரஞ்செய்வதால அக்கடிதங்களால வரப்பட்ட பலாபலனற்றுப்போவதேயில்லை

௩வது காலவொழுங்கைப்பற்றி வருகிற சில கடிதங்களைச் சுறுக்கிலே அச்சடிக்கவேண்டியது தடைப்போட்டுவைத்துப பின்னொருவேளையிற் பிரசுரஞ் செய்வதிலயாதொருபிரயோசனமில்லை

௪வது சில கடிதங்கள் வந்தவுடனே அச்சடித்துப போடுவதுமேயென்று தாரகைப் பத்திராதிபதியவர்களுக்குத் தோற்றினாலும அது மறுபேருக்கப்படித் தோற்றுகிறதில்லை

இனிமேல அச்சடிக்கப்படக் கூடிய கடிதங்களைத் தெண்டித்துக் கூடியளவு சுறுக்காக அச்சடிப்பிப்போம உதயதாரகை வழியாய்த் தாங்களதிகந் தேர்ச்சியை அடைகிறோமென்று கேள்விப்பட்டதாலாக மெத்தச் சந்தோஷமாயிருக்கிறோம்

சருவவல்லமையுள்ளோனுக்கு ஸ்தோத்திரம்

உதயதாரகையின முகாமைக்காரரே

பொதுநன்மைக்காக உண்டுபண்ணிப் பிரபலஞ்செய்து வருகிற உங்கள் உதயதாரகைப் பத்திரிகையால் அநேகர் நயமடைகிறார்களென்பதற்குப் பிசகில்லை

ஆனாலும ஒரு பிறவிக் குருடன கெட்ட வஞ்சனைகளைக் கற்ற வயித்தியனாலொரு நிமைப பொழுதவன குருடகலச் செய்த சமையம ஒரு குட்டிகைச் சுவரை விட மற்றொன்றுங் காணமல அவன பூச்சக்கரத்தின வனப்புகளை வகைவகையாய்த்தொகுத்துரைத்தமேரையாய, சருவப்படைப்புகளுக்கு மேலோராயுதித்த இரட்சகராகிய முகமதுநபி (நாக்கதரிசி) நாயகம் அவர்களினது பிறப்பும் அவர்களினது திருச்செய்கையுந் திட்டாந்திரமும பரிசுத்தம்வந்த போதகமுமிருக்குந் திவ்விய பாங்குக்கு மாறுக அவரைக் குறித்துச சில மனப்பொறுமையுள்ள வஞ்சகர் அநேகப பொய்களைத் திரட்டி உண்டுபண்ணிய ஓர் கட்டுக் கதையை விசுவசித்துங்கள் பத்திரிகைகளிற் சமையத்துக்குச் சமையம் அசசிற் பதிப்பித்து வெளிப்படுத்திவருவது ஒரு விதத்திலுந் நியாயமில்லாத துறசெயலாயிருக்கின்றது ஆகையால இனிமேலக்கு அப்படிக்கொத்தவினைசெய்கையைச் செய்யாமல நிறுத்திப்போடுவதே யாவற்றும உத்தமம் அல்லது உள்ளதுபோல அத்தைப் பிறியமானால பதித்து வருவதே முறை! அப்படி அல்லவென்று நயினாராகிய நபிமுகம்மதவர்களுக்கு எதிரிடையாய் உண்டுபண்ணி அலலது உண்டுபண்ணிய பொய்க்கட்டை இனிமேலக்கும பதித்துவெளிப்படு த்துவது நன்மையென்றுங்கள் சிந்தைக்கொத்திருந்தால, வேதப்புரட்டிகளும் மார்க்க விரோதிகளுமாரென்ப பிறமதத்தார் அறிந்துதியானித்துச் சீர்தூக்கித் தெரியும்படி இதைக் குறித்து நானெழுதுங் கடிதங்களை எழுத்துக் குறறமபாராட்டாமல உங்கள் பத்திரிகைகளிற்பதித்து வெளிப்படுத்திவருவதே நீதியுறற செயலாம்

ஆதலால இக் கடிதத்தை உங்கள் அடுத்த பத்திரிகையிலோர் கோணத்திற் பதித்துப பிரசுரஞ் செய்து அத்துடனே இதற்குற்ற மறுமொழியும அறிவிக்கும்படி கேட்கிறேன.

காயிற்கோட்டையில ௲அ௱சஉ ௵ வைகாசி. ௴ கூதி. } உங்கள்உண்மையுள்ள ஓர் முஸ்லீம

பத்திராதிபர்களின் குறிப்பு

நாங்கள் உதயதாரகையிற் பிரசுரஞ் செய்துவருகிற மகமதுவின சரித்திரத் தொடர்ச்சி உண்மையானதுதானென்று நமபுகிறதற்கு நியாயமுண்டு ஆகிலும எங்களுக்குக் கடிதமெழுதிக்கொண்டவர் நலலபோதுமான நியாயங்காட்டி நாங்கள் செய்துவருகிற போக்குமொழுங்குந் தொடர்ச்சியுந் தப்பெனச் சொல்லி அவர் தாமே சரியெனக் காண்கிறவைகளை எழுதிவரக்காட்டுவரேல், அவர் எழுதியனுப்புவையை நாங்கள அச்சடிப்பிக்கிறதற்கு யாதொரு தடையுமிராது

மகா கனம் பொருந்திய முகாமைக்காரருக்கு வந்தனம்

பாட்டு

இன்னதினியதென்று இதற்குப் பொருளைச் சொல்வீர் இணங்க
வாருஞ் சுவாமி

தென்னகற்மதிவாழும் பூலோகந்தனிலுள்ள திருச்செந்தூர்வேலரைத் தேனீலையாலொரு தேரோட்டிவைப்பதும இன்ன

அவலைத்தெளிப்பதும் பயறுமுளைப்பதுமணிலேறினவிருட்சமடியோடே சாய்வதும இன்ன

பசுவைக் கண்டு புலி பயந்தோடிப்போவதும், பட்டணமெல்லாமொரு படலகொண்டடைப்பதும் இன்ன

பூனையை எலிதின்றுபுளித்தேப்பம விடுவதுமபூலோகமெல்லாமொரு பிடிக்குளடங்குவதும் இன்ன

ஆனையைச் சுட்டுப்பொன் கரித்துணிவெளுப்பதும்,அரிநாகங்கேருடன மேல் அழகாக வருவதும இன்ன

கோணமலையைக் காதிற் குண்டலமாய்த்தரிப்பதுங், குமரிகொண்டையிலலே கோபுரமறைப்பதும இன்ன

புலனுக்குமழுவுக்கும் யோகசேலமானதும், புருஷிலலாப்பெண்கள் பிள்ளையுண்டானதும இன்ன

கலனுக்கும் உருக்குக்குங் கத்தியுண்டானதுங் கனைந்த அரிசிதனில உழுந்து போட்டுவெந்ததும் இன்ன

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே,

இப்பாட்டின் அர்த்தம் என்னுடைய சிற்றறிவுக்குத் தோன்றுமையால் அடியேனுக்கு அவ் அர்த்தத்தைத் தோன்றப்பண்ணும்படிக்கு உங்கள் உதயதாரகைப்பத்திரிகை வழியாய் என்னுடைய சிற்றறிவுக்குத் தோன்ற அடியேன உங்களை மிகுந்த தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன இப்படிக்கு

௲அ௱சஉ ௵. வைகாசி ௴. ௰௬ திகதி. மதுரையில உருதிராமத்து குப்பிறன்டெண்டு குமாஸ்தா பெரியசாமி பிள்ளை குமாரன முத்துக்கருப்பபிள்ளை

கனம்பொருந்திய முகாமைத்துரையே,

தங்களுதயதாரகை, உ௰. புத்தகம. ௬ம சஞ்சிகை,௫ம பக்கத்தில மதுரை அப்பாவு நாயகர் குமாரன சின்னச்சாமி நாயகர் (அவர் எறபோது மானேசரென்று யானெண்ணுகையால) கட்டாவிய கட்டாவிற்கு யாரெனினு மெழுதிய விடையை வாசித்தறிய ஆசித்திருந்தேன ஆகிலும் அவற்றைக் கண்டறிந்திலன் முற்றறிந்தகற்றோர் சிற்றறிவோன கட்டாவைவிழ்த்தற்கு விநோதமல்லவென்றெண்ணினாரெனக் கருதி அந்நாயகர் போலுஞ் சிற்றறிவுள்ள யான் கற்றறிவளவிற் செப்பிய விடையை யுங்கள தாரகைவழியாய்ப் பிரசுரஞ்செய்யும்படி வந்தனஞ்சொலலிக்கேட்டுக்கொள்ளுகிறேன்

"நேரினமணியை நிரலபடவைத்தாங் கோரின" வெனனுஞ் சூ

த்திரஞ் சொல்லிய நன்னூலாசிரியர் அணியிலக்கணத்துடன் சொல்லவேண்டிய பொருள்கோளெட்டையுஞ் சொல்லிலக்கணத்துடன் சொல்லிய காரணந் தமக்குப் புலப்படவில்லையென்றார். நன்னூலாசிரியரவ்வுழிவைத்தது யாது காரணங் கருதியோவென்றால், மேல் ஒருமொழி தொடர்மொழி பொதுமொழியென்று வேறு பிரிவிப்ப காரணங்கருதி அஃதேற்பெரும்பாலும் யாப்பிற்கேயுடைமையின் அண்டே வைக்கற்பாறென்னின், சொல்லறிந்தியாப்பறிய வேண்டுதலின் சொல்லறிவுழி வைக்கவேண்டுமெனக் கருதினார் "அணி" யாப்பிற்கணியெனக் கோடல்வேண்டும். இஃதற்றிற் கிலக்கியச்சான்று காட்டல் வேண்டாது. இப்படிக்கு,

யாழ்ப்பாணம் ௲௮௱௪௨ ஆ } ஒரியாழ்ப்பாண மாணாக்கன்.
வைகாசி மீ ௨௮ தி }

(On the quality of a Poetic Verse)

உதயதாரகைப் பத்திராதிகாரிக்கும் மற்றுமுயற்சிக்காரருக்கும் பலகால வந்தனம்

தங்கள் பத்திரிகையொன்றிலங்கண சென்னைக்கல்விச் சங்கத்துச் செந்தமிழ்ப்புலமை நடாத்து மகாகனம்பொருந்திய, ம. ஸ்ரீ ஸ்ரீ விசாகப்பெருமாளையராற் செய்யப்பட்ட "வருவகுன்ற" என்னுங் கட்டளைக்கலித்துறை கவிப்பாவாயிருப்பதின் காரணத்தைக் கற்றுவல்லபுலவரிடத்திற் சகலநூல்களையுமதிநுட்பமாய்த் தோர்ந்தெழுதிய உடுப்பிட்டி வைத்தியலிங்கர் என்பவர் அக்கவியின் கடைசிரெல்லாங் கூவிளங்காயாயிருக்கின்றனவென்றே நான்காமடியின் கடைச்சீர் கருவிளங்காயாயிருக்கின்றதே அவ்வைத்தியலிங்கர் சகலநூல்களையுமாராய்ந்தெழுதினவராதலாற் கூவிளங்காயென அவராராய்ந்த நூற்களிலெந்நூலைத் தொட்டெழுதினார் என்பதைத் தயவுவைத்துப் பத்திரிகை வழியாயெங்களுக்கறிவிக்க வேண்டுகிறோம்

சுண்டிக்குழி ௲௮௱௪௨ ஆ } இப்படிக்கு
வைகாசி மீ. ௯. தி } சேசியாமபிள்ளைமொண்டான.

உதயதாரகைப் பத்திராதிபருக்கு

கனம்பொருந்திய அய்யாவே,

நான் உதயதாரகை, ௩ம் புத்தகம், ௨ஞ் சஞ்சிகையிற் கேட்டவினாவில் "விளங்காய்" என்றிருக்கவேண்டியதை மறவியினிமித்தம் "கூவிளங்காய்" என்றெழுதிப்போட்டேன் ஆகையால் அதை வாசித்தவர்களும் வாசிப்பவர்களுந் திருத்திவாசிக்கும்படி கேட்கிறேன்.

௲௮௱௪௨ம் ஆ } இப்படிக்குத்தங்கள் பணிவிடைகாரன்.
வைகாசி மீ ௨௫. தி. } சுப்பிரமணியர் வைத்தியலிங்கன்

மகாகனம்பொருந்திய முகாமைத்துரையே,

உங்களுதயதாரகை, ௨. புத்தகம், அ. சஞ்சிகை ௯௪ பக்கத்திற் காணப்படும் "அச்சிரமத்தாடல்" என்னும் பாதத்தினது அர்த்தங்களுங் கருத்தும் என்புலலறிவிற்குப் புலப்படவில்லை தமிழ்க்காதிகளிலுங் கண்டிலன் கற்றோராயினும் விண்டிலர். ஆகையாற்றங்கள் தாரகைவழியாய் இதைப் பிரசுரஞ்செய்து கற்றோரெழுதும் வியாத்தியையானுங் கோடற்பொருட்டு அதினவழியாய்ப் பிரசுரஞ்செய்ய மன்றாடிக்கேட்கிற தங்கள் தாழ்மையான மாணாக்கன்

யாழ்ப்பாணம். ௲௮௱௪௨ ஆ } வி காழாரன்.
வைகாசி மீ ௩௰ தி. }

திருநெல்வேலியிலே தேவாராதனைக்கென்று தேவாலயங் கட்டப்பட வேண்டியதாயிருக்கிறதன முயற்சிக்காக நாங்கள் அளவிறந்த சந்தோஷத்தைக்கொண்டிருக்கிறோம், ஆனபடியால் இத்தேவாலயத்தைக்கட்ட ஏற்பட்டிருக்குமெங்கள் சிநேகிதருடைய முயற்சி அநுகூலப்படவும், அதன்மூலமாகக் கிறிஸ்துநாதருடைய பரிசுத்த நாமமெங்கும் விஸ்தாரமாய்ப் பிரபலியப்படவும் நமபி ஆசையுடன் வரவுகாத்திருக்கிறோம —பத்திராதிபதி

உதயதாரகை முகாமைக்காரரவர்களுக்கு,

இதனடியிலெழுதிய விசேஷத்தைத் தங்களுதயதாரகையின் மூலமாய்ப் பிரசித்தமபண்ணும்படி யெழுதியனுப்ப அடிக்கடி ஆசையாயிருக்கும் பல அலுவல்களினாலே தடைப்பட்டேன். இப்போதுகூடியமட்டும் எழுதியிருப்பதினாலே மேற்சொல்லிய விசேஷத்தைப் பிரசித்தஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்

திருநெல்வேலிச் சீமையில் சர்ச்மிஷியோனைச்சேர்ந்த ஆசீர்வாதபுரஞ்சேகரத்தில் ௲௮௱௪௰ ஆ மார்கழி மீ கனம்பொருந்திய பெற்றிற்றையரவர்கள் விசாரணை வேதநாயகம் உபதேசி மற்ற உபதேசிமார் சபையின் மூப்பர்மார்களால் தேவாலயங் கட்டுச்சங்கமென்றொரு சங்கமேற்படுத்தப்பட்டது.

அந்தச்சங்கத்தின் பிரமாணங்களெவையெனில்

௧வது ஆசீர்வாதபுரமென்னுமிந்தச் சேகரத்தினெல்லைக்குள்ளே தேவாலயங்களைப் புதிதாய்க்கட்டவும் விஸ்தாரமாக்கவுஞ் செப்பனிடவும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தவேண்டும் அச்சங்கத்திறகுத் தேவாலயங் கட்டுச்சங்கமென்று பேர் கொடுக்கவேண்டும்

௨வது இந்தச் சேகரத்திலெவ்வொரு உபதேசிமார்களும் ஒவ்வொரு சபையில வேலைசெய்யத்தக்க ஒவ்வொரு ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் வருஷத்திலொருநாள் உயர்ந்த வருமானத்தையுண்மையாய்க்கொடுக்கவேண்டுவதுமன்றித் தங்களினத்தார் முதலான சிநேகிதர்களிடத்திலத் தருமமாகப் பணங்களை வாங்கிக் கொடுக்கவுமவேண்டும்

௩வது மேற்சொல்லியபடி ஒரு நாள் வருமானத்தைக் கொடுக்கிறவர்களும் வருஷத்திற்கு அரை பணம் கொடுக்கிற மற்றவர்களுஞ் சங்கத்தாராயிருக்கவேண்டும் வருஷந்தோறுமமார்கழி மாதத்துக்குள்ளாகச் சங்கங்கூடிவரவேண்டும்

௪வது. இச்சங்கத்தை நடப்பிக்கும்படி முதலாளியவர்களும், செகிரத்தேரியும், கமிற்றியார்களுமிருக்கவேண்டும் கமிற்றியார்கள் உபகாரிகளிடத்திலத் தருமமாகப் பணங்களை வாங்கப் பிரயாசப்படவேண்டும்.

௫வது இந்தச் சேகரத்தை விசாரிக்கிற கனம்பொருந்திய ஐயரமார்களும உபதேசிமார்களும் சபையின் மூப்பர்மார்களும கமிற்றியார்களாயிருக்கவேண்டும

௬வது இச்சங்கத்தின் கமிற்றியார் கூடிவந்து ஆலோசிக்கிற போது அதிகப்பேர் சம்மதியின்படி அல்லது முதலாளியவர்கள் சம்மதியின்படி திட்டஞ்செய்யவேண்டும்

௭வது எந்தச் சபையார் தங்களூரிற் கோவில் கட்டவேண்டுமென்றிருக்கிறார்களோ அவர்கள் தாங்களெவ்வளவு பணங்கொடுப்போமென்று கமிற்றியார்களிடத்திற் கேட்டுக்கொள்ளவேண்டும்

௮வது கமிற்றியார்கள் கூடிவந்து யோசித்துக் கனம்பொருந்திய ஐயர்மார்களிடத்திலத் தெரியப்படுத்தி மிஷியோனிலிருந்து பணங் கொடுக்கப்படுவதையறிந்து இச்சங்கத்திலுமெவ்வளவு கொடுப்போமென்று திட்டஞ்செய்யவேண்டும இச்சங்கத்தின் கமிற்றியாருடைய சம்மதியில்லாமற் செலவுசெய்யக்கூடாது

௯வது. இச்சங்கத்தினுதவியினாற் கட்டப்படுகிற கோவில்களிற் கல்லிலாவது மரத்திலாவது தேவாலயங் கட்டுச் சங்கத்தினுதவியினாலே கட்டப்பட்ட கோவிலென்றெழுதி வெளியரங்கமான இடத்தில வைக்கவேண்டும

௰வது. இச்சங்கத்தின் பணத்தினாலே கட்டப்படுங் கோவில்களெல்லாம சர்ச்மிஷியோனுக்குச் சொந்தமாகவேண்டும

௧௧வது. மேற்சொல்லிய பிரமாணங்களை மாற்றவும புதிய பிரமாணங்களைக்கூட்டவும் வேண்டுமானால வருஷாந்தக் கூட்டத்தில அப்படிச்செய்யலாம' என்பதே.

மேற்சொல்லிய பிரமாணங்களின்படி சங்கம நடந்தேறிவருவதையும் அதினாலுண்டான பிரயோசனத்தையும இந்தச் சேகரத்திற் புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்திற பிரவேசித்திருக்கிறவர்களுடைய நடபடிகளையும இனிமேலெழுதியனுப்ப ஆசையாயிருக்கிறேன

இப்படிக்கு விசாரணையுபதேசி

வேதநாயகம, ஆசீர்வாதபுரம

வேதாகம போதனை.

ஊர்ப்பிறந்தவர்களிக்காள்மட்டும் அநுசரித்துப் பின்பற்றிவந்த மார்க்கங்களுக்கு யாதொரு இடைஞ்சலையாகுதல்கேட்டையாகுதல் வருவியாமற் கிறிஸ்துமார்க்கமென்னவென்பதை மாத்திரங் கோவறுணமேந்துப் பள்ளிக்கூடத்தார் தெளிவுறவறிந்துகொள்ளும்படி வேதாகமத்தை அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களிற் கொடுத்து அத்தைப் படிப்பிப்பது அதிகந் திறமென்றதாக இந்துதேசத்துக்குச் செலவு நிசமிக்கப்பட்ட லாட் எல்லன்போரோ அதிபதியெண்ணியிருப்பதை அறிகிறது கிறிஸ்தவர்களுக்கு மிகவுஞ் சந்தோஷமாயிருக்கும். கோவறுணமேந்தார் பெரும்பாலும் தங்க

ன் குடிசனங்கள் அநுசரித்து வரும் மதங்களிற் றங்களுக்குக் கவலை
காரியமில்லையென்பதைத் திருட்டாந்தப்படுத்தும் பொருட்டு வே
தாகமங்களிற் கனிந்த அறிவினையுடைய உவார்திமாரை நிசமித்து
வேதாகமங்களைப் படிப்பியாமல் விட்டும், தமிழருடைய வேதசா
ஸ்திரங்களையும், மகமதுமதக்கோறானகமத்தையும் பள்ளிக்கூடங்
களிலிட்டமாய்ப் படிக்கிறதற்கு இடங்கொடுத்துவருகிறார்கள் இ
னிமேல் வேதாகமங்களையும் படிக்கிறதற்குக் கோவறணமேந்தார்
அந்தந்தப் பள்ளிக்கூடங்களுக்கு உத்தரவுகொடுப்பார்கள். வே
தாகமமிருக்கப்பட்ட மேன்மையையுந் தத்துவத்தையும் பார்த்தா
ல் உலகத்திலே பராபரன் மகிமைப்படும்படிக்கு மனிதருடைய மன
க்கருவிகளுக்கும் மனச்சாட்சிகளுக்கும் இசைந்ததாகவிருக்கிறதே
யல்லாமல் கோவறணமேந்தாராலாகுதல் அல்லது குருமாராயிருக்க
ப்பட்டவர்களாலாகுதல் வேதாகமத்துக்கு யாதொரு தத்துவத்தை
யாகுதல் அல்லது அதிகாரத்தையாகுதல் கொடுக்கவேண்டியதில
லலை இப்பொழுது பள்ளிக்கூடங்களுக்கு வேதாகமத்தைக்கொ
டுப்பதினால், சமயநிந்தனையையுங் கேடான காரியங்களையுமடக்கியி
ருக்கிற கோறான் புத்தகத்துக்கும் அக்கியானிகளுடைய சமய சா
த்திரங்களுக்குஞ் சரியானயோரிடத்தில் வரவிருக்கின்றது. இந்
தளவுங் கோவறணமேந்தார் வேதாகமங்களைப் பள்ளிக்கூடங்களு
க்கனுப்பாததினாற்றானே அறியாமையுள்ள அக்கியானசனங்க
ள் வேதாகமத்தின் மகிமையையும் அதின் மேன்மையையுஞ் சத்தி
ய போதனைகளையும் அறியாமலிருந்து விட்டார்களென்று காண
ப்போம் பராபரனையாராதனைபண்ணுகிறார்களோ அவர்களை அவ
ருங் கனம்பண்ணுவார்.

பிரயாணசங்கதி. லோட் எலவின்பரோவென்னும் பெயரையு
டைய இந்துதேசப் பதுத்தேசாதிபதியும் அவருடைய சமாசார
முஞ் சித்திரைமீ. ௨௨-தி அளவில் கற்குத்தாவைவிட்டு அலாகபா
த்துமுதலிய இடங்களுக்குப் பிரயாணமாய்ப்போயிருக்கிறார்

(A Question on Mathematics)

To the Editors of the Star

GENTLEMEN,

Please have the goodness to insert the following mathematical query in your most valuable periodical.

Given the three sides A B, B C, and C D, of a Trapazium inscribed in a semi-circle Required to determine the remaining side or diameter A D



P S The solution of this question is required with this restriction that it shall not be performed by Algebra

Batticotta Seminary
23d May, 1842 } ROBERT ADAIR

மண்டலார்த்தத்துள்ளே மருவிவட்டமொருபுயமாய
மண்டிவரையிறந்து மாசிராயச—கொண்ட
சதுர்புயத்தின் மும்புயமுந் தானறிந்துவிட்டமதாம்
எதிர்புயத்தையோரவிதியாது? இப்படிக்கு,

வட்டுக்கோட்டைச் சாத்திரப்பள்ளிக்கூடம் } சங்கரலிங்கம்
வைகாசி மீ ௨௩ தி } நாராயணன்

To the Editors of the Morning Star

GENTLEMEN,

Please insert the following Astronomical Query in your popular journal.

On what day of the next 12 years does the apparent diameter of Jupiter as seen from the Earth, increase fastest?

Batticotta Seminary
23d May, 1842 } THEODORE FRELINGHUYSEN.

இனிவருமாண்டொருபன்னிரண்டேட்டமுன்னெத்தினமே
தனியொளிபொலனின்ற் றேகமதிகதிசாலுமெனக்
கனிவுகொள்,சொற்பயில மெய்ப்புகழ்கொண்டகணிதவல்லீர்
புனையுரைதந்துதுஞ் சீர்த்தியை நாட்டுமிப் பூதலத்தே,

௲௮௱௪௰௨ வைகாசி மீ
௨௩ தி வட்டுக்கோட்டைச் } ஐயம்பிள்ளை சுதன்
சாத்திரப்பள்ளிக்கூடம் } கார்த்திகேசன்

For the "Morning Star"

Every prime number, 1, 2, and 3 excepted, is divisible by 6, on either being increased or being diminished by unity. These may be readily seen in any numbers taken at pleasure, as 5, 7, 11, 13, 17, 19, 23, 31, &c A demonstration of this property is required.

Batticotta Seminary
23d May, 1842 } GRIER DAVIDSON

ஒன்றிரண்டு மூன்றேமும் புனைவிலக்
கொண்டுகூட்டியன்றேலொழித்தாறினால்
நன்றிரிய நலநதருசேட்டமேல
இன்றிதனமெய்யியம்புங்கணிதரே

வட்டுக்கோட்டைச் சாஸ்திரப்பள்ளிக்கூடம் } சின்னத்தம்பி கந்தர்.
௲௮௱௪௰௨ வைகாசி மீ ௨௩ தி }

(*Useful Recipe*)

For the sting of a bee or other insects—Take a little mud from any puddle, and apply it wet to the wound, (renewing it if it gets dry,) for 15 or 30 minutes, or less time if the pain and swelling is gone

தேனீ அல்லது மறுவிசமான பூச்சிகள் குற்றினால் மருந்து - ம
ழை பெய்த தண்ணீர் வெகுநாளாய்க் கலங்கிநின்ற இடத்திலிருக்க
கப்பட்ட சேற்றைக் குழைத்தெடுத்துக் காலமணி அல்லது அரை
மணித்தியாலத்துக்கு அந்தக் குற்றுவாயிற் பூசு பூசினசேறு கா
ய்ந்துபோனாற் திரும்பவும் பூசு வருத்தமும் வீக்கமுந் தணிந்து
போனாற் காலமணி அரைமணியிலும் பார்க்கக் குறையப்பூசு—கை
கண்டது.

கொழும்பிற் புதுவை வீதியில் வாழும் வணிகரின் சபைநாயகனு
ன பேதுருவெனதித்து அனந்தப்பபிள்ளை அவர்கள் பிரிய சுதன
னுமீங்குவெனதித்து அனந்தப்பபிள்ளையும், மேற்படி அவ்வூர் வணி
கரில் மகிமைபெற்ற பிறியசுதனரியனும் ஆகிய
குவும் மணஞ்செய்யவடிக்கலாய், இம் மீ. ௰௩ தி பின்னேரம் அ
பரியந்தகொண்டாட்டமாய் அனைவரும் இனபந்தகளைக்களாய
ச் சேர்ந்து வணிகர்குலாசார வரிசையாம் படியே அந்தனியிற
செல்ல, கனம் பொருந்திய குருவாகிய சயித்தானு அந்தோனி
யுவென்னுமதிசிபிரஷர் திருச்சபை நீதியாம்படியே விவாகபந்தன
த்தின சக்கிரமேசனையீந்தாசீர்வதித்தார்

இம்மணவாளன் கல்வியில நற்குணாந்தவனுகவுஞ் சுகுணமகிமோ
த்தமனுகவுந் ததிபெற்றதால அவர் சுபமங்கல் கொண்டாட்டத்
தனறவர்ை வினவிய துரையோரும் உத்தியோகஸ்தர் வத்தகா
முதலிய செனாகளும் அவருக்கியந்தவிதி நன்கொடைகளுக்குஞ்
சொன்னவைத துதிப்புசாங்களுக்கும் அவரைப பிருபதயாக்கி
ய கடவுள் மென்மேலும் பிரபலியமாக வாத்தித்து வளாக்கவுந் தே
வகிருபைப்பிரசாததால அவருக்கியந்தருளிய இல்வாழ்க்கையின
சேலவபாக்கிய மினிதாயச் செழித்தோங்கவும் அத்தோடவா சி
னேகிதரின் விபகற்பவேற்றுமையற்ற நன்றியறிதலின் சித்தனுகூ
லத்தால நித்திய சமாதானத்தில கீழ்வாழ்க்கவுங் கிருபைசெய்தரு
ள்வாராக. கொழும்பில,

௲௮௱௪௰௨. வைகாசி. மீ. ௨௰௩ தி அவாசிலதரிலொருவன்
F S COSTE, *A Subscriber.*

மதுரை.

ஆனாலும் ஒரு யூதன் இந்தச் சத்தியத்தை முழுதும் வெறுப்பதையும், சிறுபராயந்தொடுத்து அவன் கிறிஸ்துவுக்கு விரோதமாகப் போதிக்கப்பட்டதையும் நோக்கிப்பார்த்தால் ஒரு அஞ்ஞானி குணப்படுவதிலும் ஒரு யூதன் கிறிஸ்தவனாக விசுவாசித்து மனந்திரும்புவதே மிகவும் அதிசயமாய் இருக்கும் அவர்களிலுள்ள வெளிச்சம் இருளாய்ப்போனதினாலே அந்த இருள் எவ்வளவு பெரிதாயிருக்கும் எப்படியெனில் கிறிஸ்துநாதர் பிறந்தநாள்த்தொடுத்து இதுவரைக்கும் ௲௮௱௪௰௨ வருடகாலமாயிருந்தும், அவரைச் சிலுவையிலறைந்தவர்களுடைய சந்ததியாராகிய யூதரோ இதுவரைக்கும் அவர் பிறந்ததை அறியாமல் அவர் வருவாரென்று இன்றைக்கும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்களில் அநேகர் துக்கப்படத்தக்கவிதமாய் நம்பி மோசம்போய் மனமடிவுகொண்டதினால் இப்படிப்பட்ட நம்பிக்கையை விட்டு ஐயமும் சமுசயமுமான எண்ணங்கொண்டு தங்கள் பிதாக்களுடைய பாரம்பரை நியாயங்களிலும் அவர்கள் எழுதிவைத்தவைகளிலும் ஆம், தங்கள் சுயவேத எழுத்துக்களிலேதானும் அவர்கள் சாதித்த விசுவாசத்தையும் விட்டுவிட ஆயத்தமாயிருக்கிறார்கள் ஆகையால், புறசாதியாரான கிறிஸ்தவர்களுடைய முயற்சிகளுடனே, யூதர் குணப்படும்படிக்கு தயிரியப்படத்தக்க தோற்றம் அவசியமாய் நடந்தேறுவதினாலேதான் பயபத்தியுடன் துதியைப் பராபரனுக்குச் செலுத்தும்படி ஏவிவிடுகிற இது ஒரு நற்செய்தியாயிருக்கிறது சத்தியமென்னும் வெளிச்சத்தில் அவர்கள் வரும்படிக்குப் பராபரன் தமது செயலினாலே அவர்கள் தப்புகளைத்தானும் ஒரு கருவியாகப் பாவிக்கிறார் உதாரணமாக, சென்றுபோன ௲௮௱௪௰ ஆம் ஆண்டளவில் கிறிஸ்து தோன்றுவாரென்று யூதச்சாதியாரில் மிகுதியான பங்கு அதிக உறுதியாக நம்பியிருந்தார்கள் இதைக் குறித்து நம்பி மோசம்போனதினால், நியூயார்க் (New-york) பட்டினத்திலுள்ள யூதச் சனங்களில் அநேகர் அவர் வருவாரென்ற நம்பிக்கையை விட்டு, அப்பட்டினத்திலுள்ள ஓய்வு நாட்பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் பிள்ளைகள் போய்ப் படிக்கவும், கிறிஸ்துவை வணங்கும்படி கோயில்களுக்குப் போகவும் இடங்கொடுத்தார்கள். ௩௰ வருடத்துக்கு முன்னே யூதர் குணப்படும்படிக்குப் பலவித கிறிஸ்தவர்களாலும் லந்தோம் (London) நகரியில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது பற்பல முகாந்தரம் பற்றிய அதிக பிரயாசத்துடனே அது நடந்தேறிவந்ததினால் அது ஸ்தாபிக்கப்பட்ட நோக்கம் அதிகமாய்ச் சித்திக்கவில்லை ஆகிலுஞ் சில யூதர் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களாவதினாலே அந்தச் சங்கத்தார் நல்ல வேளாண்மையின் முதற் கனியை அனுபவித்து அழுகிறார்களென்று நம்பலாம் உலகத்தின் பலதேசங்களிலுமுள்ள யூதரில் மிகுதியானவர்கள் கிறிஸ்து மார்க்கத்திற் சொல்லப்பட்ட காரியங்களைச் சோதனைபண்ண ஏவப்பட்டிருக்கிறார்கள் ஆனாலும் மேற்சொல்லியவைகளுக்குக் காரணமானதும் மிகவுங் கவனிக்கப்படத்தக்கதுமான ஒரு செய்தி என்னவென்றால், குணப்பட்டுச் சிறிதுகாலமாய் லந்தோம் நகரியிலுள்ள எபிஸ்கோப்பல் சபை உடனே சேர்ந்து, இப்பொழுது இங்கிலாந்து, அயர்லாந்து (Ireland) என்னும் பட்டினங்களிலுள்ள ஒன்றிப்பான சபையின் விஸபவாக (Bishop) கனம்பொருந்திய மிகாயேல் சாலோமோன் (The Right Rev Michael Solomon) என்ற ஒரு யூதன் எருசலேமிலே நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதுதான். அவர் பலஸ்தினாவில் (Palestine) இருக்கிற யூதருடைய குருவாகிய சங்கைபோந்த (Rev F G Eward) என்பவருடனேயும் முன் லந்தோம் நகரியிலுள்ள செப ஆலயத்துக்குச் சேர்ந்த ரபியாயிருந்த ஒரு குணப்பட்ட யூதனுடனேயுங் கூட ௲௮௱௪௰௧ ஆம் கார்த்திகை மீ உ௨ தீ, தாம் நியமிக்கப்பட்ட இடத்துக்குப் போக இருந்தார் சகல காரியங்களையுஞ் சீர்தூக்கிப்பார்க்கும்பொழுது, யூதச் சாதியாரிற் கிறிஸ்தவனை அந்தப் பரிசுத்த பட்டினத்துக்கு ஒரு விஸபு (Bishop) ஆக நியமிப்பது இஸ்ரவேலருடைய மீட்புச் சமீபித்திருக்கின்றதென்பதற்கு ஒரு அடையாளமாக எண்ணலாம் இதிலே சொன்ன காரியம் யூதச் சனங்களுக்குப் பராபரன் சொன்ன வாக்குத்தத்தங்களையும் அவைகள் நிறைவேறுதலையும் ஆராய்ந்துபார்க்கும்படி இத்தேசத்திற் பிறந்த கிறிஸ்தவர்களை ஏவத்தக்கதாயிருக்கின்றது இதைக்குறித்து உரோமருக்கெழுதின, ௰௧ ம் அதிகாரத்தை எவர்களும் வாசித்துப் பார்ப்பது பிரயோசனமாயிருக்கும் ஏனெனில், மரித்தோரிலிருந்து சீவனுண்டானதுபோல ஓரிரகசியமான காரியஞ் சொல்லப்பட்டது

(On certain pretended miracles)

உதயதாரகையின் முகாமைத்துரைகளே,

உங்கள் பத்திரிகையில் சிறியவனெழுதியதற்கு இடங்கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்னவெனில்,

நான் வெகுகாலமாகப் பெருவியாதி முதலிய பீடையிலழுந்தினபடியினாலே என்னுக்குண்டான ஆஸ்தியை விற்றுப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு வைத்தியங்கள் செய்வித்துஞ் சொஸ்தமடையவில்லை ஆனாலுஞ் சிலநாளைக்கு முன் வேதாரணியமென்னும் பெரிய சிவதலத்தில் மகா பெரிய தருமலிங்கசாமி அநேக அற்புதங்கள் செய்தாரென்றும் அநேகர் அவரிடத்துக்குப் போனதினால் தண்டேலகள் இடைவிடாமல் தோணியோட்டுகிறதே வேலையாக இருந்தார்களென்றுஞ் சனங்கள் அவரிருந்தவிடத்தில் மண்ணையும் அவருடைய ஒரு பனையிற் பொருக்குகளையும் வழுந்திப் புசித்துச் சொஸ்தமடைந்தார்களென்றுங் கேள்விப்பட்டேன் இப்போ அந்தக் கதைகளல்லை. அன்றியும் வடநகரிலே திருவிளக்குச் சன்னிதியென்று ஒருஸ்தலமுறபவித்திருக்குதென்றும் அதிலிருக்கிற அருள்பெற்ற பெரியோர் அநேக அற்புதங்களைச் செய்கிறார்களென்றும் அவர்களிலொரு யோகியனுக்கு மூருங்கையப்புலத்திற் செம்பாடு என்னும் இடத்தில் ஒரு உருவி ஒரு கரைப்பறைக்குள்ளிருந்து வெளிப்பட்டுத் தரிசனமாய் அவருடன் சம்பாஷணை பண்ணினதென்றும் உறுதியாய்க் கேள்விப்பட்டேன் இதுவன்றி யாழ்ப்பாணத்தில் நெருமாலக்கோயிலில் ஒருகுருஅட்சேகம் பண்ணப்பட்ட இடத்தில் மண்ணில் அநேக நோயாளிகள் ஒவ்வொரு பிடிமண் சாப்பிட்டுச் சொஸ்தமாகிறார்களென்றும் இப்படியே ஒவ்வொரு பிடியுள்ள அதுபெரிய ஆழியங்கிடங்காகிக் கைவைத்து அள்ளுகிறதற்கேட்டமையால் ஏணிவைத்திறங்கிறார்களென்றும், பின்பு கற்பாரவந்து பொறுத்தபடியால் அதற்குச் சம்பந்த பெரியோருடைய உத்தரவின்படி கூலிக்காரர் ஒராக்காலத்தில் அழுதழுது மண்சுமந்துகொண்டுவந்து அக்கிடங்கிற போட்டார்களென்றும் இப்போ அந்தமண் மெத்த அருமையாகி அக்கிடங்குக்குக் கதவுபோட்டுப் பூட்டி ஒருவர் திறப்புவைத்துக்கொள்ளுகிறதென்றும் பெரியோர் சொல்லக் கேள்விப்பட்டேன் அல்லாமலும், புதுமடத்தில் நெருமானகோவிலின் விக்கிரகத்திலிருந்து கட்டி அநேக அற்புதம் நடக்கிறதென்றுங் கேள்வியுற்றேன். இன்னுமொருகாரியமென்னவெனில் சிலுவையினுருவம் பதிந்த நண்டோட்டை வீட்டிற் பிலே கட்டித்தூக்கியிருந்தால் அவ்வீட்டுக் குடும்பத்தார் பிணிமுதலியவின்மையுறுமென்றும் அவ்வீடு அக்கினியால் எரியுண்ணாதென்றும் அதிற் கள்வர் திருடாரென்றும் நம்பிக்கைகொண்டு சில அறிவாளிக

ள் அந்த நண்டோட்டை வீட்டிறப்பிலே தூக்கியிருக்கிறார்களென்று நிச்சயமாகக் கேள்வியுற்றேன்.

இப்படி அநேக அற்புதப் பிரபலியங்களைக் கேள்விப்பட்டபடியால் எதிலே போவேனென்றென் மனமையப்படுகிறதினாலே இவைகளினுண்மையை அறிந்தவர்கள் அடியேன் பேரில் இரக்கங்கொண்டு நான் மேற்குறித்த எந்த இடத்துக்குப் போனாலும் அல்லது என்ன கிரியையைச் செய்தால் சொஸ்தமாகலாமென்று உதயதாரகை வழியாக அறிவிக்கும்படி மன்றாடுகிறேன்.

இப்படிக்கு
பஞ்சதந்திரப்பண்டாரங் குமாரன் தசதந்திரப்பண்டாரம்.

பத்திராதிபர் குறிப்பு

தர்மவிநகம் என்பவருடைய மாய அற்புதங்களும் வட்டுநகரிலுள்ள பெரியோருடைய அற்புதப்பிரபலியங்களுந் தந்நயம்பெருகுதற்கு எடுத்த உபாயதந்திரங்களென்றி பின்னொன்றல்லவே. அன்றியும், ஒரு இருஷியைத் தரிசித்துச் சமபாஷித்தாராம் என்று தசதந்திரப்பண்டாரங் கருதிய ஆள் தமக்கு நாயகமானவரிற் பற்றின்றி விலகித் தமது முன்னையாற் றம்மையும் பிறரையும் அனுப்பிக் கொண்டாரென்று மனமுடம்பட்டுச் சொல்லுகிறார். குருவானவரொருவர் அடக்கம்பண்ணப்பட்ட மண்ணைச் சாப்பிடுவதினாலல்லது கோவிலுக்குப் போவதினாலல்லது நண்டோட்டைக் கட்டித் தூக்கியிருப்பதினாலே நோய்கள் தீருமென்று உரோமானகத்தோலிக்கர் சொல்வதை ஏழைகளும் புத்தியீனருமேயன்றி மற்றியாரும் நம்புவது மதிகத்தையவுதான். "தசதந்திரப்பண்டாரம்" தம்பாவங்களை விட்டுச் சீர்திருந்திக் கிறிஸ்துவை நம்பிக் கடவுளிடத்துப் பிரார்த்தனையுடனே பரமபிதாவென்றுசெல்லும்படி விரும்புகிறோம். அவர் (கடவுள்) தம்மிடம் புகுகிறவனுக்குக் கொடாமலெந்த நன்மையையும் பின்வையார். பிதா பிள்ளையிலிரங்குவதுபோல ஆண்டவரும் தமக்கஞ்சுகிறவர்களுக்கு இரங்குகிறாரென்று தாவீது சொல்லுகிறார். "என்னிடத்து வருகிறவனைப் புறம்பேசற்றேனுந் தள்ளிவிடமாட்டேன்" என்று கிறிஸ்துநாதர் சொல்லுகிறார். இவைக்கமைந்து சத்தியவிரதமாய்த் தசதந்திரப்பண்டாரம் நடப்பாரேல் அவருடைய சரீரத்துன்பங்கணீங்காதுபோயினும் மனச்சாந்தமடைவாரென்று நிர்ணயமாயறிந்துகொள்வாராக.

(On the truth of Christianity)

சுவிசேஷ உண்மையைப் பற்றிய ஓர் கவனிப்பு

கிறிஸ்துமார்க்க உண்மையை விளக்குகிற அநேக அத்தாட்சிகளுக்குள் தீர்க்கதரிசனம் நிறைவேறுதலின் அத்தாட்சிகளுமுண்டு. இப்படிப்பட்ட தீர்க்கதரிசன வாக்கியங்களுக்குள் கிறிஸ்துநாதரின் சுவிசேஷஞ் சகல சாதிகளுக்கும் பல பாஷைக்காரருக்கும் பிரசங்கிக்கப்படுமென்ற வாக்கியங்களுமிருக்கின்றன. இவ்வகைத் தீர்க்கதரிசன வாக்கியங்கள் நாளுக்குநாள் நடந்தேறக் காண்கிறோம். ஆகா எலியாவின் வேலைக்காரன் சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கையத்தனை சின்ன மேகம் எழும்பிச் சீக்கிரத்திலே வானமெங்கும் பரந்து பெரு மழை உண்டாகக் கண்டதுபோல நாமுங் கிறிஸ்துவின் சுவிசேஷம் முதல் பெலஸ்தினாவிலுள்ள யூதேயாவினாரிலே சிறிதாயத் தோன்றியும் மிகுந்த இடைஞ்சல உபத்திரவங்களுக்குட் காலத்துக்குக் காலம் உலகத்தின் நான்குதிக்கிலும் பற்பல கோணங்களிலுஞ் சென்று அந்தந்தச் சாதியாரின் பாஷைகளிலே பிரசங்கிக்கப்பட்டு வருகிறதைக் காண்பதினாலே கிறிஸ்துமார்க்க உண்மை மகா தெளிவாய் விளங்குகின்றது. ஆனாலோ சிலர் இது இங்கிலீஸ்காரர் இராச்சியமாகையால் அவர்கள் தங்கள் மதாசாரத்தைப் பிரபலியமாக்குகிறார்களென்கிறார்கள். அப்படிச் சொல்லுகிறது தப்பு. ஏனெனில், இத்தீவை இங்கிலீஸ்காரர் பிடிக்குமுன் புறுத்துக்கீசரும், உலாந்தாக்காரரும் இதை ஆண்டிருந்தபோதும் அவர்களும் அச்சுவிசேஷத்தையே கூறினார்கள். அவர்களும் அந்த மதஸ்தராகவே இருந்தார்களெனில், அவர்கள் அம்மதஸ்தராகவும் அச்சுவிசேஷத்தைப் பிரசித்தஞ் செய்யப்பண்ணினவரும் யார்? கடவுளல்லவோ? அல்லாமலும் இந்த மகிமையுள்ள சுவிசேஷம் இங்கிலீஸ்காரருடைய அரசுக்குச் சேராத அநேக பிறதேச இராச்சியங்களிலும் அறிவிக்கப்பட்டு வருகிறதே. அமெரிக்கா, நியுசிலாண்டு, சொசயிட்டி, சாந்துவிச், தென் சமுத்திரத் தீவுகள், இலப்தோ என்னும் இவ்வகையான வேறநேக தேசங்களிலும் இச்சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறதே. இது எவரால் நடக்கிறது? இது இங்கிலீஸ் அரசாணியினது கட்டளையினாலே நடக்கிறதோ? அல்லவே, இது அவனுடைய கட்டளையினாலே நடவாமலக் கிறிஸ்துவின் சபையினாலே நடக்கின்றது. அச்சபை அப்படிச் செய்வது தேவனின் கட்டளையேயன்றி மற்றப்படியல்ல. "நீங்கள் புறப்பட்டு உலகத்திலெங்கும் போய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுங்களென்று" இயேசுவானவர் கட்டளையிட்டார் (மாற்கு ௰௬ ௰௫)

உலகத்திலே ஒரே தேவனுண்டென்று ஒத்துக்கொண்டால் அவர் எல்லா மனிதருடையவுந் தேவனாக இருப்பாரே. அவர் எல்லா மனிதருடையவுந் தேவனாகவிருந்தால் எல்லா மனிதருக்கும் இரட்சிக்கிற வழியையும் அறிவிக்கச் சித்தமாயிருப்பாரே, ஏனெனில் எல்லா மனிதரும் பாவிகள், அவர் தமது தயாபர குணத்தினாலே மனிதசாதிகளுக்கு இச்சீவியத்துக்குத் தேவையான பொது நன்மைகளை வித்தியாசமில்லாமற் கொடுத்தால் மறுமைக்கேற்ற ஆத்தும நன்மைகளைக் கொடாதிருப்பாரோ? கொடுப்பார். பின்னை அவைகளை எந்த வழியாகக் கொடுக்கிறாரென்று காண்கிறோம். சுவிசேஷத்தினாலே அல்லவோ, அதற்குச் சந்தேகமென்ன? வித்தியாசமின்றிச் சகல சாதிகளுக்கும் அதனை அனுப்பி அதின் வழியாய் மனிதருக்கு இரட்சிப்பைக் கற்பிக்கிறார். இவ்விதமாக வேதவாக்கியத்திலே அறியாமையுள்ள காலங்களிற் பராபரன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுது மனந்திரும்ப வேண்டுமென்று எவ்விடத்துமுள்ள மனிதர் யாவருக்குங் கட்டளையிடுகிறாரென்று எழுதப்பட்டிருக்கின்றது (அப். ௰௭. ௩௰,) ஆதலால் தமிழர் அறியவேண்டியது இது தேவனுடைய கட்டளை இது அவருடைய மார்க்கம் இதனை உங்களுக்கும் அவர் அனுப்பியிருக்கிறார். ஏனெனில், நீங்களும் பாவிகளாக இருக்கிறீர்கள். நீங்கள் இதனை ஏற்றுக்கொண்டால் இதினாலே பாவமன்னிப்பு, பரிசுத்த மோட்சகதி இவையெல்லாம் அடைவீர்கள். மற்றும்படி உங்கள் பாவங்களிலே கெட்டுப்போவீர்களென்றறியுங்கள்.

இப்படிக்கு
௲அ௱௫௰௩ பங்குனி மீ அதி
மட்டைக்களப்பு
யோவான் பிலிப்பு

உதயதாரகை பத்திராதிபர் துரையவர்களுக்கு வந்தனம்

தங்கள் தாரகை, உ ... ம் பக்கத்திற்கண்ட மதுரைப்பதி வாழும் கோமஸ்தர் பெரியசாமி முத்துக்கருப்பபிள்ளையவர்கள் எழுதிய பாட்டுக்கொத்த வேறோர் பாட்டின் அருத்தமென் சிற்றறிவுக்குப் புலப்படாமையால் அவ்வருத்தத்தைத் தங்கள் தாரகை மூலமாய் யானுமறிந்துகொள்ளும்படி உமது பத்திரிகையிலோர் கோணத்திற் பதிக்கும்படி வேண்டா நிற்கின்றேன். மேலுமிப்பாட்டில் யாதொரு பிழையிருந்தால் அதையுந் திருத்தி அருத்தத்தையும் அறிவிக்கும்படி கேட்கிறேன்.

பாட்டு, ராகம். மோகனம்

ஏதுக்கழுகுதிந்தலோகமதை
ஏனென்று கேட்பவரில்லையே.

சோதிக்குஞ் சோதிமந்திரகிரிவேலா சித்தமிரங்காமல் நினையும் நினையாமல் ஏதுக. பட்சியின் குஞ்சொன்று பாம்பை முழுங்கிற்று பதினாலுலோகமும் பாழாய்ச் சமைஞ்சுது, உச்சிதமாய்ப் பூனை ஆனையைத்தின்றுது ஒன்பது பெண்களை யோனொருவன் முழுங்கிற்று ஏதுக். எலிவந்துநின்றுது பூனையைத்தின்றுது எதிர்த்து பம்பானபேரை இயதின்றுபோச்சுது, புலிவந்துநின்றுது பசுவந்துதின்றுது பொய்யுமெய்யாச்சுது மெய்யும்பொய்யாச்சுது ஏதுக். எருதுபசுப்புலியும் ஆனையிலேறிற்று எள்ளைக்கொன்னென்றுசொல்லி எங்குநிலைச்சுது பொரிச்சதுநடக்குது அவிச்சதுமுளைக்குது பொய்யென்றுசொன்னவர் போவார் நரகத்தில் ஏதுக.

இப்படிக்கு
விநாயகமூர்த்தி

திருவண்ணைநகர் ஸ்ரீ. ஸ்ரீ த அம்பலவாணர் அவர்கள் எட்டாஞ் சஞ்சிகையிற் கனவைப்பற்றி வினாவியவினாவிற்கு "கனவியார்த்திப்பிரியன்" என்பவரெழுதிய விடை அவர் வினாவின் ஓர் பகுதிக்கு விடையாயிருக்கிறதினாலே மற்றப்பகுதிகளுக்கு யானறிந்தளவு பின்வருமோர் சஞ்சிகையில் விடையெழுதத் துணிகிறேன்.

௲௨ ஆ ஆனி மீ ௰க தி
இப்படிக்கு
உண்ணாநகர் கோவைத்தியன் சி விநாயகமூர்த்தி.

உதயதாரகையை வாசிப்பவர்களில் (உள) பேரால் எழுதப்பட்டது.

ஓய் பத்திராதிபதியவர்களே,

நாங்களனைவரும் கூடி உதயதாரகையைப்பற்றிப் பேசி முடித்த தீர்மானத்தைத் தங்கள் பத்திரிகையின் வழியாய் யாவருக்கும் அறிவிக்கும்படி பிரியங்கொண்டோம்.

தாரகையை வாசிப்பவர்களே,

௧வது நாங்களனைவரும் அறிந்தபடி ஆதிமுதல் நல்லூர் மாணாக்கனுக்குந் தமிழ்ப்புலவர் ம ஸ்ரீ ஸ்ரீ ஏவதகிரிமுதலியாருக்குமுண்டான தருக்கத்தின்பேரால் முதலியாரெழுதினதில் மாணாக்கன் வினயக்காட்டிய குற்றங்களைத்தானே முகாமைக்காரர் பிரசுரஞ்செய்தது சரியான காரியமல்ல. ஏனென்றால் "குட்டியாடு கொழுத்தாலும் வழுவழுப்புப் போகாதே"—முதலியார் தன் குற்றத்தை நிராகரித்ததுமன்றி அம்மாணாக்கன் மேலே(ய) சில குற்றங்களையுங் காட்டினார். அதன் பின் முகாமைக்காரர் மாணாக்கன் பேலே தயவாய் அவர் குற்றத்தை நிராகரித்துக்கொள்ளச்சொன்னார்களே. மாணாக்கன் நிராகரியாது விட்டதற்கு முகாமைக்காரரென்ன செய்வார்கள். பின்பு அவர்கள் பேலேல் குற்றஞ்சாட்டுகிறீர்கள்.

௨வது உடுப்பிட்டி இலக்கணநுட்ப விசாரணைகாரனென்பவர் வினவிய வினாவிற்கு யாழ்ப்பாண மாணாக்கர் விடையெழுதினயுத்திருட்டத்தை மறுத்து முன் முதலியார் அவர்கள் (ய) குற்றங்களை மாணாக்கன் மேற் காட்டினாரென்று இலக்கணநுட்ப விசாரணைகாரனும்(ய) குற்றங்களைக் காட்டினார். இதனால் அவ்வினாவையிவர் தறசத்துக்கல்லாமல் அறியாமையால் வினாவினாரல்லவென்று விளங்குகின்றதே. அறியாமையினால் கேட்டதானால் ம ஸ்ரீ ஸ்ரீ பரமசாமியையரைப்போல இவரும் யாழ்ப்பாண மாணாக்கன் விடையையொத்துக்கொண்டு இன்னும் இலக்கணக்கலைஞருந் தங்கள் கருத்தையறிவிக்கக்கேட்கலாமே. பின்பு யாழ்ப்பாணமாணாக்கன் தன் மேற்குற்றத்தை நிராகரித்துத் தன் விடையைத்தானே சரியென்று காட்டினதில் நாம் யாதுகுற்றங்களைக் கண்டோம். இவ்விருவருக்குஞ் சமாதானமென்று நல்லூர் ம சரவணமுத்து என்பவரெழுதிய கடிதத்தை யாருங் கண்டார்களே. அதைச் சமாதானமென்று சொல்லலாமா? ஒருவனைக் கேட்டுக்கொண்டதற்கா யொருவனைப் புகழ்ந்தும் மற்றவனைப் பிழையாக்கியுமெழுதுவது சமாதானமா? இதுவே யொருத்தலைவழக்கென்பார்கள். இவர் இலக்கணநுட்ப விசாரணைகாரனுக்காயெழுதினது சரியல்லவென்று சேட்சாவதானப்புலவர் முதலிய பற்பல விற்பன்னர்களிச்சமாதானத்தை நிராகரிக்க இவருக்காயும் அவருக்காயும் பலரெழுதியும் நியாயத்தின்படியே தமிழ் நன்குணர்ந்த யாழ்ப்பாண மாணாக்கன் விடைமேய துளக்கலாகாமலையென நிற்கின்றது. ஐயா இவ்விதத்தொந்தரவுக்கு முகாமைக்காரரென்ன செய்வார்கள்? இன்னுமவன் தானென்றவர் ஆருக்கு வெல்லியென்று கூறுக்குச் சொல்லக்கேட்டார். ஆரையோவென்றால் இலக்கணக்களஞ்சியத்திலே இடையினத்துக்கினமுண்டென்று கூறின ம ஸ்ரீ ஸ்ரீ அட்டவதானி [illegible]கரிமுதலியாரையே. இனிப்பிடிக்குப்பிடி செய்வாரப்பார்களா? இன்னுமவனுக்காய முதலியார் முறைக்குமுறை இடையினத்தைப்பற்றியெழுதுவாரா? எல்லாருஞ் சந்தோஷப்பட உதயதாரகையைப் பிரசுரஞ்செய்யக் கருத்தாவாலும் முடியாதே.

௩வது உடுப்பிட்டி மாணாக்கன் வைத்தியலிங்கனென்பவர் நன்னூற்காண்டிகையுரையின் "வருநகுல ஜ"என்னுங் கட்டளைக்கலித்துறை கவிப்பாவென்றிருப்பதின் காரணம் யாதெனவினவியதினுந் தருக்கத்தையுண்டுபண்ணி அந்த அறப்பேள்வி தாரகையில் எவ்வளவிடத்தைத் தடங்கல் பண்ணிற்றென்பதை நீங்களே பாருங்கள். வைத்தியலிங்கர் வினாவிற்றானே கருவிளங்காயையுங் கூவிளங்காயென இவர் எ, அ வரிகளுள்ளே ஒரு பிழைவிட்டால் பெரிய புத்தகங்களை உண்டுபண்ணி அச்சடிப்பிக்கும்போதெவ்வளவு பிழைகளுண்டுபடும். இதினால் தர்க்கம் வளர்க்கலாமா? இவ்வைத்தியலிங்கருக்கு விடையெழுதினவர்தானே வர வர வினயக் கூறிய குற்றங்களை நிராகரிக்கச் சமயமிட்டெல்லாமிருந்தும் இச்சின்னக்காரியத்தை இவ்வளவு பெருப்பிக்கலாகாதென்று விட்டுவிட்டதற்காய் அவருக்கு நாங்களனைவரும் மனமகிழ்ந்து சலாஞ்சொல்லுகிறோம்.

௪வது. திருவல்லை ம ஸ்ரீ ஸ்ரீ குமாரசாமிமுதலியார் பள்ளிக்கூடமாணாக்கன் ஸ்ரீ ஸ்ரீ பரமசாமியையர் வினவியவினாவிற்கு ஆ ஈர் பொதுரமபிள்ளை விடையெழுதியும் அதின் குற்றங்களை அறிந்தும் எடுத்துக்காட்டாமல் அவர் விடையையுமொத்துக்கொண்டு தாரகையை நோந்துகொண்டு மேலும் முற்றறிவுடையோரில்லை யெனக் காத்திருக்கிறாரே. ஐயோ வினயத் தூங்கிப்பவர்கள் பரமசாமியையரிடங் கொஞ்சநாளைக்குப் படியுங்களேன். இவர் நற்குருவின் சிஷ்ஷனாய்த் தோற்றுகின்றார்.

௫வது திருநெல்வேலி வைத்தியலிங்கரென்பவருடைய அவதானச் சோதனையைப் பிரசுரஞ்செய்யச் சற்றேனுமியாயமில்லை. இவர் சரவணமுத்துவின் சிஷ்ஷனாயிருப்பதால் சேட்சாவதானப்புலவரை ஏசியெழுதியிருப்பார். பின்னொருவர் மயிலைத்துரையிடத்தில் பாட்டைமாற்றமல் கொடுக்கச்சொன்னார். இனிஅவ்வைத்தியலிங்கர் வேறொரு பாட்டையுங் கொடுத்து உபகாரத்தையுங்கொடுத்தாலொகாதா? அதை என்ன செய்யவேண்டுமென்று எவர்கள் அவர்களனுப்புவார்கள்? ஆகையால் அவர்கள் அவதானத்தைக்காகிதத்தில் தமிழ்ப்படித்திருக்கும் பாத்திரமானதானே வைத்தியலிங்கரிடத்திலே ஒரு பாட்டைவாங்கி அதைப்பாத்திரமானவர்கள் தம் கலந்துக்கொண்டாலும் நல்லது. அல்லது சேட்சாவதானப்புலவர் பேற குற்றஞ்சாட்டவேண்டாம். இப்படிக்கு,

ஒருபதம்பெழுபோசொல்லுக்குமெழுதினது

யாழ்ப்பாணம் } மூத்ததம்பி அருணாசலம்
வைகாசி மீ ௰அதி }

ஏடிட்டரவர்களுக்கு,

ஐயாவே, தங்களுடைய உதயதாரகைப்பத்திரத்துக்கு நாங்களுஞ் சோப்ஸ்கிறைபராகக் கையொப்பம் வைத்து முறைமைப்போற் தங்களுக்குப் பணங்கொடுத்துவருகிறது தங்களுக்குத் தெரியுமானாலும் தங்களிதையறிந்திருந்து எங்களுக்கு இப்படிச் செய்கிறது சரியல்ல. அது என்னவென்றால் இனைக்கு நாலவிடத்துத் தவாலகந்தோறில் தங்கள் பத்திரிகை வந்ததோவென்று விசாரிக்கப்போனபோது அவ்விடத்திலிரண்டு பத்திரிகை மாத்திரம் வந்திருந்தது. அதில் ஒன்று வெஸ்தர் ரேஸ் என்பவருக்கும் மற்றொன்று இன்னமொருவருடைய பேருக்கும் இருந்தது. ஆனாலுமவர்களும் எங்களைப்போல் சோப்ஸ்கிறைபராயிருக்க அவர்களுக்குமாத்திரஞ் சீக்கிரமனுப்பவும் எங்களுக்கு இரண்டு மூன்று நாள் பிந்தியனுப்பவுந் தங்களுக்கு நியாயமல்ல. தாங்களிப்படிச் செய்வீர்களானால் தங்களுடைய சோப்ஸ்கிறைபர் குறையுமே அல்லாமல் கூடாதென்று நம்புகிறோம். இதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து தங்களுக்கனுப்புகிற காகிதங்களைத் தங்கள் பிரியம்போலச் சிலதைப் பிரசித்தம் பண்ணிச் சிலதைக் காகிதப்பிரதியுத்தரமாகப் போட்டுச் சிலதைச் சும்மா வைத்துக்கொள்ளுகிறீர்கள். அல்லது உங்களுக்கு முறையல்ல. உங்களுக்குப் பிரசித்தம்பண்ணக்கூடாத காகிதங்களைத் தாங்கள் காகிதப்பிரதியுத்தரமாக அறிவிக்கவேண்டும். அப்படியல்லாமற் சும்மா வைத்துக்கொண்டால் நல்லதல்ல. நாங்கள் வேலைவினைக்கெட்டுத் தங்களுக்குக் காகிதங்களையெழுதி அதற்குத் தபாற்செலவுங்கொடுத்து அனுப்புகிறதற்கு நீங்களிப்படிப்பண்ணுகிறது நியாயந்தான். ஆனாலும் தாங்கள் இனிமேலிப்படிச் செய்யாதபடிக்குத் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு,

கொழும்பில் சஉ ஆ } சப்ஸ்கிறைபர்
வைகாசி மீ ௰உ தி }

பத்திராதிபர் குறிப்பு

மேலேப் பிரசுரஞ்செய்திருக்கிற கடிதத்தைப்பற்றி நாங்கள் சொல்லும் மறுமொழியென்னவெனில், கொழும்புக்குப் போகிற தாரகைகளனைத்தையுமொரே வேளையிற் தபாலுக்கனுப்பிப்போடுகிறோம். அவைகளிற் சிலது முந்தியுஞ் சிலது பிந்தியும் அங்கிடம் வருவதினால் அது எங்கள் பேரிற் குற்றமல்ல.

இன்னுஞ் சில கடிதங்களை அச்சடியாமல் விட்டுப் போட்டுவைத்ததற்கு நாங்கள் போதுமான மறுமொழி சொல்லக்கூடாதுதான், ஆகிலுமினிமேற் கூடியளவு தெண்டித்துப்பார்ப்போம்.

ஓர்வினா

பவணந்திமுனிவர், தாமசெய்த நன்னூலின் பொதுப்பாயிரத்தின்கட் கூறியதுகூறலென்னுங் குற்றத்துக்கு மாறாகவுந் தாம சொன்னதற்கு மாறாகவும் மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சிலவற்றை யுத்தியுள்ளுங் கூறியதென்னை? இலக்கணத்தில் வல்லவரிவ்வினாவுக்குத்தரஞ் சொல்லும்படி கேட்கிறேன்.

வண்ணார்பண்ணை வைகாசி மீ. கதி கணபதிப்பிள்ளை வயிரமுத்து.

புதினசங்கதிகள்.

ஆபுக்கானிஸ்தான்.

சேனறல் போலக்கு என்பவர் சித்திரை மீ ௧௬ உ அளவிலே செலலாபாத்துக்குவந்து சேர்ந்து வீர பராக்கிரமமுள்ள சேல என்ற தளகர்த்தனைத் துணை கொணடார் லாகோர் தேசத்திலிருக்கிற பிரிட்டிஸ் கோவர்ணமேந்தாரைச் சார்ந்திருக்கைகொணடானவர் ஆபுகானிஸ்தானரோடு சமாதானம்பேசுகிறதாகவும் போஸ்மகமதுவை விடுதலைசெய்து ஆபுகானில் மறியறபடுத்தப்பட்டிருக்கிற சகலரையும் மீட்டுக்கொள்ளுகிறதாகவும் ஒரு பேச்சுணடு இச்சமாதானஞ் சுருக்குத் தீர்மானமாகுமென்றும அந்த மறியற்காரா எல்லாரும் திரும்பிச் சந்தோஷபரிபூரணத்துடன தங்கடங்கள் சினேகிதர்களிடத்துக்குப் போவார்களென்றும் காத்திருக்கிறோம

கொஞ்சநாளைக்குமுன்னே தற்செயலாய ஆபுகானிஸ்தானார் கைகளிலகப்பட்டுக்கொணட ஏரோப்பையார் மிகுந்த தயிரியத்துடனிருந்தவேளையிற் பிறகு அக்பாகான் என்பவர் அவர்களைக் காபூல நகரிக்கப்பாற கொணடுபோய்த் தீர்மானம்பணணியிருக்கிறதென்னவெனில, என்னுடைய பிதா மாதா முதலான சமாசாரககுடிவாழ்க்கைகளையும இங்கிலிஸ்சுக்காரர் மறியலிவிருந்து போகும்படி யுத்தரவளித்தாலொழிய நானுமோ என்கையிலகப்பட்ட மறியற்காரர்களைத் தப்ப விடமாட்டேனென்று சொலலியிருக்கிறதாகச் சில சமாசாரபத்திரிகைகளினாற் றெரியவருகினறது

மேற்கூறிய மறியறகாரா ஆணும பெணணுமாக இரணடு பகுதிபபட்ட கோட்டைகளுக்குள் வைககப்பட்டாலும அவாகளுக்குச் சத்துருக்கள் யாதொரு கேடும வருத்துவியாமல மெத்தத் தயவாய் நடத்தினாரகள

சீனம்

இங்கிலீஸ்காரர் தை மீ௳ அளவில (யசகோ) என்ற பட்டினத்திறசென்று சீனரிற் (௰உ) பேரைச் சங்காரமபணணி அவவிடத்திற கட்டியிருந்த சாவடிசத்திர முதலானவைகளையுமிடித்தழித்து மிகுதியான சனங்களை மறியறபணணிக்கொணடாரகள

சிங்கப்பூரிலிருந்துவந்த சமாசாரபத்திரிகைகள மூலமாய நாமறியவந்த தென்னவெனில, மாசி மீ௳ அளவிலே கிட்டத்தட்டப் பனனிராயிரஞ் சீனாகா நிங்போ என்னும பட்டினத்துக்குத் தெறகிலு மேறகிலுமிருக்கிற வாசலகள வழியாகச் சென்று மதிலகளிலத் தொறறியேறிப் பட்டினத்துக்குட்சென்று இங்கிலிஸகாரருடன யுத்தமபணணினவேளையில இங்கிலீஸகாரரும அதிவீரசூர சௌவுரிய பராக்கிரம நெஞ்சுத்துணிவுடன சீனரோடெதித்துத்திரத்து அவாகளைப பின்காட்டியோடப்பணணினவேளையில சீனரு மதிச்சீக்கிரவிரைவுடன பட்டினத்தைவிட்டுச் சென்று நிஙபோவின தெறகு வாசலுக்குட சென்றாரகள அவவேளையில (௨௱௫௰) சீனா மதிலகளுக்குட் பக்கத்திற் செத்துக்கிடக்கக்கணடாரகள

பிறகு சிஙகேஎன்ற பட்டினத்தில யுத்தம்நடந்தவேளையில சீனருமபபட்டினத்தின வடக்குச்சுதவில நினறபொழுது அவாகளை இஙகிலீஸ துப்பாக்கிகள கலைத்துத்துரத்தி (௬௰) சனங்களையும (௨) மஸதிருதுவக கத்தராளிகளையுஞ சங்காரமபணணிப போட்டாரகள் அவவேளையிலுஞ சீனா திஙகேஎன்ற நகரியிலும போருக்கெத்தனமபணணுகிறாகளென்று கேள்விபபட்டவுடனே இஙகிலீஸ பட்டாளஙகளிற கொஞசப்போ இவவிடத்திலும வந்து சீனருடன யுத்தமபணணிச் சீனரில (௬௰) பேரைச் சஙகாரமபணணி, அநேகவைப பாட்டான காயப்படுத்திப்போட்டாரகள பிறகு இஙகிலீஸகாரா சீனருடைய கப்பலகளுக்கு நெருப்புவைததுவிட்டுத் திரும்பிச் சிஙகேஎன்ற பட்டினத்துக்குப போயவிட்டாரகள இப்படி இஙகிலீஸகாரா பறபலவிடஙகளிற போர்செய்தாலும அவாகளிலொருவரெனகிலும உயிரிழந்துபோனதிலலை

SUMMARY OF NEWS.

AFFGHANISTAN —It is said that orders have been issued for the immediate evacuation of Affghanistan and that preparations are making for the return of the troops

The forces at Jellalabad were suffering for want of tents and other necessaries

The late Sir W. Macnaghten —It is now stated on apparently good authority that Sir W Macnaghten fell a victim to his own treachery He had made term with Ameen Oola, the chief of the rebels and had agreed to leave Cabul in a few days He afterwards sent secret word to Akber Khan that if he would assist him in securing Ameen Oola he would give him a pension of 2 Lacs of Rps a year and that his father Dost Mahommed should be permitted to return to the country Akber Khan demanded the proposal in writing which was given This paper he took to Ameen Oola and offered to seize the Envoy and bring him before him to answer for his treachery, and then planned the meeting at which he was killed

If this is true, the kind office of hangman which so many are ready to perform for Akber Khan's benefit might more justly be called into exercise in some other direction

In the Dharwar District near Belgaum, the Cholera is making frightful ravages At Kolapoor upwards of 5000 have died, it is said, and so great is the panic that several villages have been almost wholly abandoned

It is stated on the authority of the Wesleyan Journal that 100,000 Spanish Bibles were circulated in Spain between the 1st of September and March of the past year

It is said that in February last the Druses of Syria suspecting some treachery on the part of the British Agent assailed the English and American Missions, plundered and destroyed their establishments, burnt their books and Manuscripts and expelled the Missionaries from the country

NOTICE—is hereby given by order of His Excellency the Governor in Council, that it is intended to make the following charges upon all Letters and News papers, &c , sent or received by expresses overland to and from Bombay, from this date and until further notice, viz

On every letter not exceeding a quarter of an ounce in weight	2s
" Exceeding a quarter of an ounce and not exceeding half an ounce	3s
" Half an ounce and not exceeding one ounce	5s
" One ounce and not exceeding two ounces	10s
For every additional ounce in weight above the weight of two ounces	5s

And every fraction of an ounce above the weight of two ounces shall be charged as one additional ounce

For every News-paper, Price Current or Shipping Report	5½d
Viz	
Indian Postage - - - -	4½d
Ceylon Postage - - - -	1 d

The weight of the mail by such express is limited to 18 lbs

By His Excellency's Command,

Colonial Secretary's Office, *Colombo, 6th May* 1842

P ANSTRUTHER, *Colonial Secretary*

மானிப்பாய் அமெரிக்கன் மிசியோன்

அச்சுக்கூடத்திலபதித்துவந்தயோக்கரா திபூரணமாய நிறைவேறியாயிற்று அதை வாங்க விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணத்துச் சங்கைபோந்த பொசிவல ஐயரிடத்திலும, மதுரை சங டுவைபிற ஐயரிடத்திலும, ஒரு பிரதிக்கு ஐந்து ரூபாய விலை கொடுத்து வாஙகிக்கொள்ளலாம்.

CONTENTS —அட்டவணை

பாணடிவள நாட்டுச் சரித்திரச் சுருக்கம்	137	Historical sketch of the Pandian kingdom - - -	137
மகமதுவின சரித்திரம் -	ib	Life of Mohammed - -	ib
இந்துமதநிச்சயம் - -	138	On Hinduism - - -	138
புவனசாத்திரமும அதனைவிளக்கும படவிபரங்களும	ib	Outlines of Geography	138-139
கடிதங்கள் -	140-143	Communications -	140-143
பஞ்சதநதிரக்கதை -	144	Pancha-Tantra-Katei -	144
குறள—பழமொழி -	ib	Definitions of the words expressive of the actions of the mind, published in the last No	ib
சோபனசெயதி (உ வது)	145	Cural - - - -	ib
கடிதஙகள -	145-147	Auspicious Occurrences -	145
புதினசஙகதிகள் -	148	Communications -	145-147
		Summary of News - -	148

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம். சஞ்சிகை ௰௩] ௲௮௱௪௨ ௵ ஆடி. ௭, தேயதி வியாழக்கிழமை, Thursday, July, 7, 1842 {VOL II No 13

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 137

மதுரை இராசாக்களுடைய சரித்திரத்தில மேற்படி மதுரை இராசாங்கமானது போயவிட்ட பிறகு, கெடுதலையான துரைத்தனம்வந்து சேரிட்டதென்று சொலலியிருககுதேயொழிய அந்தக் கெடுதலையான துரைத்தனம இத்தனை காலமிருந்ததென்று சொலலியிருக்கவிலலை அந்தக கெட்ட துரைத்தனககாலம் போயவிட்டவுடனே ஒரு வேசிக்கும ஒரு பிராமணனுககும் பிறந்தவனுயும் மதுரைககடுத்த கோளமேன்கிற ஊரிலே குடித்தனக்காரனுயும் சந்திரகுலதீபனென்கிற பேரையுடையவனுயும இருந்த ஒரு துணிந்தவன மேற்படி மதுரைச்சிங்காசனத்தைக கைககொண்டான அவனுக்குப் பிறகு ௰௬ பேர அதை ஆண்டாரகள் அத்தைக கடைசியாய ஆண்டவனுடைய துரைத்தனத்திலேதான மதுரையானது துலுக்காணருடைய பாளயங்களாலே முதன் முதற சூழப்பட்டது இப்படிச் சூழந்துகொண்டது இதறகு முன்னடந்த காரியங்களையெலலாம இந்த இந்தக் காலத்திலே நடந்தனவென்று ஒரு தோராயபபடுத்திக்கொள்ளத்தக்கதாயிருககிறது

௲௨௱௯௰௬ வருடத்தில அலலா அததின என்கிறவனுடைய துரைத்தனததிலே துலுககாணக்கணத்தேசத்திலே கலகததை முதன் முதலாரமபித்தாரகள ௲௩௱௰ வருடத்திலும, ௰௧ வருடத்திலும, காபூர அலலது மாலேககுநாயப என்கிறவன முதலிலே ஒரு தண்டு கூட்டிக்கொண்டுவந்து இராமேசுரம வரைககுஞ் செயிததுககொண்டுபோயிருக்கிறபடியினுலே மேற்கூறிய கலகம இந்த கலகந்தானென்று சொலலப்படலாம மற்றொரு சாதனமானது இந்தக காரியம் ௲௩௱௨௰௪ வருடத்தில நடந்திருக்கிறதாகக காண்கினறது இது முசாயித்ஷா என்றவன ௲௩௱௪௰ வருடத்தில விசய நகரத்துககும கன்னியா குமரிககும மத்தியிலே இருககிற தேசங்களைக கலாபித்துககொண்டு இராமேசுரமட்டும ஏறிப்போன இந்தக கடைசிக கலகத்தையும முதற் கலகத்தையும ஒன்றுக்கிபபோடாவிட்டால இந்த ௲௩௱௨௰௪ வருஷமே போதுமானமட்டுஞ சமீபமாயிருககின்றது. இந்த இரண்டிலே எநதச சங்கதியிலேயும ௰௬ இராசாககளுக்குச் சொலலியிருக்கிற மூன்று சததங்களைப பாககிலுங குறைந்த காலமே நாம வைத்துககொள்ள வேண்டியது இப்படி வைததுககொள்ளுகிறது அவாகளுடைய இராசரீகங்களுக்கு மிகவுந் தகுமான மதிபபாயிருககின்றது ஏனென்றால அவர்களுடைய இராசரீகக் காலமுழுமையும கலகத்துக்கும கலவரததுககும இடமாயிருந்தபடியினுலேயும, அந்த இராசாககள் இராசாங்கத்தை அபகரித்துககொண்டவாகளும, அதலே துராகிருதமா வந்து நுழைந்துகொண்டவாகளுமானபடியினுலேயும, சமாதான துரைததனத்திலேயும சட்டப்பிரகாரம நடக்கிற துரைத்தனததிலேயும வைககத்தக்க மதிபபுக் காலத்தைப பார்க்கிலும மிகவுங குறைந்த காலமே இவாகளுக்கு வைக்கவேண்டியது

மேற்சொலலிய துரைத்தனங்களுடைய இராசரீககாலத்தில எவவளவாவது குறைத்துககொள்ளவேண்டியதாயிருநதாலும அந்தக காலத்தை மதுரை அழிநதவுடனே உண்டான கெட்ட துரைத்தனக காலத்திலே சரிப்படுத்திககொளளலாம. இந்தக கெடுதலையான துரைததனம எத்தனை காலம நடந்ததோ அது தெரியவிலலை அன்றியும அந்தத் துரைத்தனத்திலே செலுத்தின அதிகாரத்தினெலலையானது இவவளவென்றெத்துககொளளத் தகுந்ததாயுமிருககவிலலை. சோழராசாவானவன மதுரை இராசாவைத் துரத்திவிட்டு மறுபடியும அந்த இராசாவுககுச சில காலம மதுரையைப பொறுத்துக கொடுததுவிட்டான வலலாள சரித்திரத்தையக குறித்த சாதனங்களிலே பதினெராம பனனிரண்டாஞ் சதங்களிலே அவாகள மதுரை இராசாககளைத தங்களுக்குப பகுதிகட்டுகிறவாகளாக ஆககிககொண்டாரகளென்று சொலலபபடுகினறது ஆகையினுலே அந்தப பூர்வீககக்குடுமபத்திலே பிறந்த குலன இராசகுமாரரகள் மதுரை பிடிபட்டுப்போனபிறகும, மதுரை எரிந்துபோன பிறகும, மதுரை சிங்காசனத்திலே உட்காருகிற வழககமுடையவர்களாயிருந்தார்கள். அந்த வழககம எந்தமட்டும் இருந்ததென்றால, இந்த இராசாக்கள் வந்து சண்டை செய்ததினுலேயும தங்களுடைய தேசத்திலேயிருக்கிற குடிகள தங்கள் சொறபடி கேளாததினுலேயும பலவீனபபட்டுப் போய ஒரு துணிகரமுள்ளவன் முளைக்கடித்து ஒரு புது இராசாங்கம் ஏற்படுத்திககொண்டதற்கு இவாகள் இணங்கியிருநதவரைக்கும் போலக காண்கினறது, இந்த மதுரை இராசாககளே மதுரைச சிங்காசனத்திலிருநது ஆண்டாரகளென்று சொலலலாமபோலிருக்கிறது

(இன்னும் வரும்)

LIFE OF MOHAMMED.—மகமதுவின் சரித்திரம்

௰௬ அதிகாரம்.

(The prophet's first warlike attempt unsuccessful—The failure compensated in the second—Account of the battle of the Beder—This victory much boasted of—Difficulties in the division of spoil—Caab, a Jew assassinated at the instance of the prophet)

மகமதுநபி அதிக கோபத்துடன உத்தண்டமாய்க் கோறிஸ வங்கிஷத்துடன யுத்தஞ் செயதபொழுது, அவயுத்தத்தில அவர் சற்றும அனுகூல சித்தியடையவிலலை பிறகு கோறிஸ வங்கிஷத்தைச் சோந்த வத்தகர் கூட்டம சிரியாவிலிருநது மககத்துககுப போகிறதை மகமது கேளவிப்பட்டவுடனே தமது சிறிய தகப்பனாகிய ஆமசா என்பவரையும ௩௰ துரகதப்படைகளையும அவ்விடமனுப்பி அவர்களைப பிடித்திடக்குமபடி சொன்ன வேளையில, இது கருத்தை அந்த வாததகர கூட்டமறிநதவுடனே தாங்கள் போர் பொருவதிலுங குழப்பமிலலாமற் சமாதானததுடனே மககத்துககுத திருமபிவிடுவதே யோககியமென்று கண்டு போயவிட்டாரகள்.

மககததிலிருந்து ஏறககுறைய ௩௰ சனத்துடன அபூசோபியரின வங்கிஷத்துககுக கிழாககப்போன ஒரு பெரிய வத்தகர கூட்டம மகமதுவுககு விரோதமாகப பழிவாங்கத் தெண்டித்தபொழுது நபியினுடைய ஒற்றரினாலும தங்களுடைய ஐசுவரியமுஞ் செயிககலெகுவுமுள்ள சத்துருககள் தங்கள கைகளுககுக கிட்டவிருக்கிறார்களென்பதை நபிககறிவித்தபொழுது அவாகளைத் தொடாந்து மகமதுவும இன்னும பலருமபோய் அவாகளை மேறகொள்ளமுன்னே அவாகள் மககத்திலிருந்த தங்கட்டங்கள் சகோதரரிடத்தில ஒரு தூததனையனுப்பிக் கொளுசத் திரட்ட படைசனத்தை அதி சீககிரம அனுப்புமபடி கேட்டுககொண்டாரகள் அப்பொழுது சனங்களெலலாரும இவாகள கேட்டுககொண்ட கேள்வியைத தட்டினால தங்களுடைய வத்தகசாமானகளையுந் தஙகள் சாப்பாடு முதலான பண்டதாரத்தங்களையுமிழந்து போக வருமேயென்று கெடிமண்டிப் பயமடைநததினுல, (௯௱௫௰) சனத்தை அனுப்பினாரகள் அப்பொழுது மகமதுவும இன்னும (௩௱௰௩) இரணவீரரகளில மிகுதியானவாகளும ஒட்டகத்திலேறி நின்றாரகள் இவாகளில (௭௭) பேர் நாடோடிகளும, மிச்சப்பேர் படைத் துணைவாகளுமாயிருந்தாரகள் மகமது தமது உயிரையிழநதாலும பாக்கியம்போனாலும, சாதியழிநதாலும யுத்ததனதை நடப்பிக்கிறதறகெண்ணி யுடனே மகமது செபகாததனங்களுலே தமது சனங்களைப் போருக்குத் தைரியப்படுத்திச சருவ வலலமையுள்ள ஆண்டவன் அனுககிரகத்தினுலே நீங்களோ வெற்றியை அடைவீாகளென்றார் ஆண்டவனுத்தாசையினுலே தனககுச் செயானுகூலசித்திகிடைககுமென்பதை நிச்சயித்து துறந்திருப்பினும மனித ஒத்தாசையையும வாரதேடாமல விட்டுவிட்டதேயிலலை பிறகு மகமது தமது சேனைகள பதுங்கியிருக்குமபடி ஒரு கீழறையையும, அவாகள தணணீர குடிக்குமபடி அககீழறைககுக கீழே ஒரு நதியையு முண்டுபண்ணிச் சேனைகளுககளித்தார உடனே சத்துருககள் மலையிலிருந்து தாழவிறங்கினவுடனே மகமது சொன்னது. "ஆ, ஆண்டவனே! உமது சனமாகிய இவாகள் அழிந்துபோனால உமமையார் பூமியிலே தொழுதுகொள்ளுவாாகள். என் பிள்ளைகளே, தைரியங்கொண்டு

உங்கள் அத்திரங்களைச் செலுத்துங்கள் ஏனென்றால் நான் உங்களுடையதாயிருக்கின்றது"

அவரவர் புறத்துக்குச் சேர்ந்த தானைகள் யுத்தத்துக்காரம்பிக்கிறதற்கு முன்னமே ஆலி, ஆல்கெறேத் (Al Hareth) அம்சா (Hamza) என்று சொல்லப்பட்ட மூன்று போர் வீரர்கள் மகமது நபியின் புறத்துக்கும், கோறிஸ்வங்கிஷத்தில் மூன்று போர் வீரர்கள் மற்றப் புறத்துக்குமாக நின்று யுத்தஞ்செய்தவேளையில் நபி பக்கத்தாரே வெற்றிகொண்டார்கள் யுத்தமாரம்பித்தவேளையில் மகமது நபியும் ஆபுபீக்கரும் ஒரு விதமான சிங்காசனத்திலேறி நின்று காபிரியேல் தூதன் முதலான ௩௲ தேவதூதர்கள் வந்து தங்களுக்கொத்தாசை செய்யும்படி பராபரனிடத்திற் கேட்டார்கள் ஆனாலும் நபியினுடைய சேனைகள் சற்றே தளம்பாறினபொழுது அவர் தானேறிநின்ற சிங்காசனத்தைவிட்டிறங்கி ஒரு குதிரைமேலேறி ஒரு பிடிமண்ணையள்ளி வானத்திலெறிந்து சத்துருக்களிற பயந்து விழுந்தவுடனே கோறிஸ்வங்கிஷத்தார் சத்துருக்களுக்காற்றுமாற்றப் பறந்தோடி முதுகுகாட்டினார்கள் அப்படி ஓடிப்போயும் அவர்களில் அதிக தைரிய வீர பராக்கிரமமுள்ள (௭௰) போர் போர்க்களத்தில் மாண்டுபோனார்கள் வேறெழுபதுபேரை மறியற்காரராகப் பிடித்துக்கொண்டார்கள். மகமதுநபி பக்கத்தாரில் ஆகப் பதினாலுபேர் மாத்திரங் கொல்லப்பட்டுப்போனார்கள் உடனே மகமது பக்கத்தார் செத்துக்கிடந்த தங்கள் சத்துராதிகளுடைய தோல்களையுரித்துச் சொல்லக்கூடாத கொடுமையாய்க் கிணற்றிலெறிந்துவிட்டார்கள் பிறகு அதிக பாரப்பட்ட குற்றமுள்ள மறியற்காரரிலிருவரைக் கொன்று மிச்சப்பேரிடத்தில (௪௲) வெள்ளிக்காசை வாங்கிக்கொண்டு அவைகளைப் போகவிடலாமென்ற கட்டளை நிருபித்தலுண்டாயிற்று. கோறிஸ்வங்கிஷத்தார் தோற்றோடினவும் அவர்கள் தங்கள் பரிவாரங்களுடனே பத்திரமாய் மக்கத்திற் போய்ச் சேர்ந்தார்கள். இவர்களிடத்திலிருந்து மகமது நபி பக்கத்தார் அநீதமாய்ப் பறித்துக்கொண்ட உடைமைகள் மிகுதியானதினால் அவைகளைப் பிரிவுபண்ணிக்கொள்ளுகிறதிலே ஒரு பெரிய குழப்படியுண்டாயிற்று ஏனென்றால் மகமது நபிக்குதவிசெய்யவந்த அன்சார் (Ansars) என்ற இருபக்கத்திலுமுள்ளவர்கள் மிகுதியானவர்களாயிருந்தபடியால் தங்களுக்குத்தான் அவ்வுடைமைகளில் மிகுதியான பங்கு வரவேண்டுமென்று வழக்காடினார்கள் மகமதுமத முதல் விசுவாசிகளாயிருந்த முகோஜிரினஸ் (Mohajerins) என்றவர்களும் தங்களுக்குக் கன கூறு கிடையாது போனாலும் எல்லாருக்கும் போலச் சரியான பங்காகுதல் தங்களுக்குங் கிடைக்கவேண்டுமென்று வாதாடினார்கள். மகமதுநபி இதைத் தடுக்கும்படியெண்ணி ஓர் விதமாரீசம் பண்ணினார் எப்படியெனில் பறிபொருள் முதலானவைகளை ஐந்தாகப்பிரித்து அவைகளிலொன்றையெடுத்து யாசகருக்கும் தருமச் செய்கைகளுக்குமென்று வைத்துக்கொண்டு நாலு பங்கையுமெடுத்து எல்லாருக்குஞ் சரிவரப் பகிரும்படிக்கு வானத்திலிருந்து தமக்குக் கட்டளை நிருபித்தலொன்று அனுப்பப்பட்டதென்று சொன்னார் அவையாவன, கொள்ளையெடுத்த உடைமைகளைப்பற்றி அவர்களுமிடத்தில (மகமதுவிடத்தில்) கேட்பார்கள் அதற்கு மறுமொழியாக நீர் சொல்லவேண்டியதென்னவெனில், கொள்ளையுடைமைகள் அனைத்தும் ஆண்டவனுக்கும் நபிக்குமே உடைத்தானது ஆகையினாலே பராபரனுக்குப் பயந்து உங்கண்டுவே ஊராசிப்பட்டு ஒவ்வொரு காரியத்தையுஞ் சரிப்படுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் சத்திய விசுவாசிகளாயிருந்தால் பராபரனுக்கும் அவருடைய நபிக்குங் கீழமையுங்கள் நீங்கள் போர்க்குதல் கொள்ளைப்பொருளைச் சமபாதிக்கும்பொழுது அதில் ஐந்திலொரு பங்கைப் பராபரனுக்கும், நபிக்கும், அவருடைய இனசனத்துக்கும் தாய்தகப்பனற்ற எளியவர்களுக்கும், யாசகருக்கும், வழிச்செல்வாருக்குங் கொடுத்துவிடுங்கள் மகமதுநபி இதைச் சொல்லித் தன் பட்சத்துக்கெடுத்து வைத்துக்கொண்ட உடைமைகளோ அநேகமாயிரம் வெள்ளிக்காசுக்கு விலைமதிக்கத் தக்கதாயிருந்தது ஆகிலும், யாசகருக்கும், தாய்தகப்பனற்ற எளியவர்களுக்கும் அவரெவ்வளவு எடுத்துவைத்தாரென்பதை நாங்கள் சரித்திரத்தைக்கொண்டறிய ஏதுவாயிருக்கவில்லை

யுத்தம் நடந்ததைப்பற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில் ஒன்றையொன்று எதிர்த்த இரண்டு தானைகளைப்பற்றி உங்களுக்கு முன்னே காட்டப்பட்டது அதிலொன்று பராபரனுடைய சத்திய மதத்துக்காக அற்புதமாய்ப் போர்பொருதது. மற்றது நிரீச்சுரர்களாகவிருந்தபடியால அவிசுவாசிகளுக்காகப் போர்பொருத அவர்கள் விசுவாசிகளைத் தங்கள் சொந்தக்கண்ணுக்கு முன்பாக இருமடங்கதிகமாய் நிற்கக் கண்டார்கள் ஏனென்றால், பராபரன் தமக்குப் பிரியமானவர்களைத் தமதொத்தாசையினாலே பலப்படுத்துகிறார். இப்படியே மகமது மதத்தார் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக இருமடங்காகக் காணப்பட்டதைவிட வேறுமிரண்டு அற்புதங்களிவ்வேளையில் நடந்தன அவைகளிலொன்றென்னவாகில் மகமது கைநிறைய அள்ளி ஆகாசத்திலெறிந்த மணல்களைச் சத்துருக்கள் முகத்துக்கு விரோதமாகப் பராபரனுடைய பெலன் அதிக கெதியுடனே கொண்டுபோனதினாலச் சத்துருக்கள் பயந்து கெடிமண்டிப் பின்காட்டியோடினார்கள் வீடாவிலே கொல்லப்பட்ட சனங்களைக்கொன்றவர்கள் நீங்களல்ல பராபரனே அவர்களைக்கொன்றார்! மகமதுநபியே மண்ணைக் கைநிறைய அள்ளி ஆகாசத்திலெறிந்தவரும் நீரல்ல ஆண்டவனே அதைச்செய்தார் மற்ற அற்புதமென்னவெனில் மகமதுநபி முதன்முறை யுத்தஞ்செய்தபொழுது பராபரன் நபிக்குதவியாக (௲) தேவதூதர்களை வரவிடுத்தாரென்றும், பிறகு (௩௲) தூதர்களை வரவிடுத்தாரென்றும், இந்தப் பரலோக வாசியான துணைப்படைவர்கள் அனைவரும் கறுப்பும் வெள்ளையுமான குதிரைகளின்மேலேறிவந்து துணைசெய்தார்களென்றும், அப்போது காயாசம் (Hiazum) என்ற குதிரையிலேறிவந்த காபிரியேல் தூதன் தானே மேற்கூறிய யுத்தகலகங்களை அதிக வீர தைரியத்துடனே முடித்தாரென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது இதைப்பற்றி மகமதுநபி சொல்லுகிறதென்னவெனில், நீங்கள் கொஞ்சப்பேராயிருந்தபோதுதானும், வீதாரிலே ஆண்டவனுங்களுக்குச் சேயானுகூலத்தை யளித்தார் ஆகையினாலே நீங்கள் நன்றியறிந்தவர்களாயிருக்கும்படிக்குப் பராபரனுக்குப் பயப்படுங்கள். மெய்யாகவே நீங்கள் தொடர்ந்தோச்சியாய நின்றுபராபரனுக்கஞ்சினீர்களேயானால், உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு விரோதமாகவந்தாலும், ஆண்டவன (௫௲) தூதர்களைக்கொண்டுங்களுக்குதவிசெய்விப்பார்

காயாப் (Caab) என்ற ஓர் யூதனை மகமதுநபி கொல்லுவித்ததினால் அவருடைய பழிவாங்குதலின் குணமின்னதெ[illegible]வறிந்துகொள்ளலாம். எப்படியெனில் வெகுகாலமாக நபியினுடைய எண்ணத்துக்கு மிகவும் வேறுகூறாய் நடந்துகொண்ட காயாப் என்ற ஓர் யூதன் வீதாவில் நடந்த யுத்தத்திலிருந்து மக்கத்துக்குப் போய்ப் பிறகு மதீனாவுக்குப்போய்ப் பட்டணத்தில் மதில்களுக்குள்ளிருக்கிற சனங்களுக்குத் தனது புலமைகளை வாசித்துக்கொண்டிருந்துபிறகு சதியோசனையாய்க் கொல்லப்பட்டான்.

கூட்டேன்பவர் செய்த பிரபஞ்சநூல்

[Abridgement of Good's Book of Nature.]

இரண்டாம்பிரிவு.-௩ம் அதிகாரம். மனிதசாதியின் விசேடலட்சணங்கள் ௱௰ம். பக்கத்தினின்று.

௩வது ஆபிரிக்கா அல்லது கறுப்புவன்னத்தார் பிங்கல நிறந்தொடங்கிக் கருங் கறுப்பு நிறமட்டுமிருக்கிறார்கள் அவர்களுடைய தலையொடுங்கி முகங் கீழ்ப்பக்கத்தினீண்டு நெற்றி வில்வளைவாய்க் கண்கள் புறப்பட்டு மூக்குத் தடித்துத் தட்டையாகி உதடுகள் பிரதானமாய் மேலுதடு மிகத் தடித்து முரசெலும்புகள் திரண்டெழும்பி நாடி பதிந்து மயிருங் கறுத்துச் சுருண்டு கூந்தலாகி இருக்கின்றது. காப்பிரிகளுடைய முகவடிவம் ஐரோப்பியாருடைய முகவடிவத்தைப் போற் சற்றேனுமிராமற் பின்னொரு விகற்ப முகவடிவத்தினுங் குரங்கு முகவடிவமாய் இருக்கின்றது.

௪வது. ஆஸ்திறேலியா அல்லது பிங்கல வன்னத்தார் மகாக் கோனி மரநிறமுள்ளவர்கள் அவர்களுடைய தலையின்மேற் பக்கமொடுங்கி நெற்றி சற்றே விரிந்து மேன்முரசெலும்பு சற்றே திரண்டெழும்பி மூக்கு அகன்றும் உறுப்புடைத்தாகி மயிரும் நீண்டு தடித்துச் சுருண்டதாயிருக்கின்றது. இவ்விகற்பமானவர்கள் நவலாந்தாவிலே உண்டு. அவர்கள் ஐரோப்பியாருக்கும் ஆபிரிக்கருக்கும் நடுநிலையெனத் தோன்றுகின்றது.

௫வது. மனித சாதியை இவ்விதமாய்ப் பகுதியிட்ட சாதாரணப் பிரிவில் இரண்டு காரியங்களை நினைத்துக்கொள்ள வேண்டும். ௧வது. இன்னகுலம் இன்னவிதமாயிருக்குமென அறுதியிட்டலட்சணங்கள் அக்குலத்திலுள்ள ஒவ்வொருவருக்குமமைத்துக்கொள்ளப்போகாது. பிங்கலம் அல்லது செப்புவன்னத்தார் சுத்தவெள்ளைக்காரருக்குள்ளும் உண்டு. ஐரோப்பியாருடைய வடிவம் ஆ

ம். அதினுஞ்சிதமான தோல் கறுப்புவன்னத்தாருக்குள்ளுமுண்டு

௰௧வது இரண்டாவதாய், சில சாதியார் பிரதானமாய் ஏரோப்பையார் பிரதேசங்களுக்கு வலசை போகின்றமையால், அவர்கள் பூமியின் பல இடங்களிலே பரந்திருக்கவும் அவ்விடத்துள்ள சாதிகளுடன் கலந்திருக்கவும் ஏதுவாகின்றது ஆகவே, வெள்ளைக்காரருக்குள்ளே புகர்வன்னத்தானுடைய அகன்ற கன்னவெலும்புகளையுந் தட்டை முகத்தையும் அல்லது காப்பிரியினுடைய தட்டை மூக்கையுந் தடித்த உதடுகளையுங் காண்பதினும் ஆசியர் ஆபிரிக்கருக்குள்ளே ஏரோப்பையாருடைய வடிவங்கள் தோன்றக்காண்கிறோம்

௰௨வது சகல சாதியாரையுந் தேவனொரே இரத்தத்தாற் பிறப்பித்தாரென்று வேதஞ் சொல்லுகின்றது. சகலரும் ஒரே மனுச் சோடியினின்று தோன்றினார்கள் தங்களை விஞ்ஞானசிரியரெனப் பேர்கட்டிக்கொண்டிவ்வித கருத்திற்கொத்திசையாத சிலருமுண்டு முக்கிய சிருட்டிப்பையன்றி மனிதன் பூமியிற்றோற்றினானெனக் காரணங் காட்டும்படி இவர்கள் பல வழியாலும் பிரயாசப்பட்டார்கள்

௰௩வது. தாவின் என்னும் விஞ்ஞானசிரியர் மனுஷர் சிப்பியிற்றோற்றினார்களென்றெண்ணுகிறார் இக்கருத்து நாம் சிந்திக்கவுந் தகாத அளவுமடமையாயிருக்கின்றது வேறு சிலர் அளவையாற் சாதிக்கிறோமெனக்கூறி மனிதசாதி குரங்கு தேறித் திருந்திய நிலையென்று பாணிக்கிறார்கள் ஒறாங் அவுற்றங் என்னும் மோசாதிக்குரங்கு மனுசசாதியிற் சேர்ந்ததென்று லின்னியஸ் என்னும் பெரியவர்கூட எண்ணி அதைக் குரங்குக்கும் அசட்டு மனிதருக்கும் இடைநிலைத்தொடையாக நிறுவியிருக்கிறார்

௰௪வது அளவை நியாயத்தின் கர்வம் இவ்வளவு கலைவிற்பனரை மயக்கி உன்னதத்திலிருக்குந் தேவனுடைய வாக்கையும் அதிகாரத்தையும் புரட்டுதற்கு முயலப்பண்ணிற்றேயெனச் சிந்திப்பது நமக்கு மிகவுஞ் சஞ்சலமாயிருக்கின்றது கடவுளுடைய ஆலோசனை நிலைநிற்கும். எவ்வளவு ஆழமுஞ் சாதாரணமுமாய அவருடைய பிரமாணங்களைக் கற்கிறோமோ அவ்வளவு தெளிவும் புத்திக்கிசைவுமுள்ளனவாயவை தோன்றும் பிரபஞ்ச நூலையும் வேதாகம நூலையும் மெய்மையைப் பற்றவேண்டுமென்ற பதவிய ஆவலுடன் தோந்துபார்க்குமிடத்து அவை ஒன்றையொன்று விளக்கி வலியுறுத்துகின்றன.

௰௫வது. குரங்கினத்தையும் இவ்வித சிந்தைகொண்டு தோந்து பார்த்தால் அஃது மனுச் சாதியோடு சாராதென நாங் காண்போம் மற்றுங் குரங்கினங்களைப் பார்க்கிலும் ஒறாங் அவுற்றங் என்னுங் குரங்குக்கு மனிதருடைய கங்காளம் போலுங் கங்காளமுண்டு. ஆயினும் அதுவுந் தற்பவமாய விகற்புடைத்தாயிருக்கின்றது மனுஷனுடைய முள்ளந்தண்டிற் பார்க்க ஒறாங் அவுற்றங் உடைய முள்ளந்தண்டிற் பொருத்துகள் மூன்று குறைவு மேலும் இம்மிருகத்தின் வாயுப்புரையோடு சார்ந்த ஒருவகைப்பையுண்டு. அது வெள்ளைக்காரர் கறுத்தவர்கள் சிவப்பு வன்னத்தாரெவர்களுக்கேனுமில்லை.

(இன்னும் வரும்)

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

PART II.] *Varieties of the Human Race.* [CHAP. 3

(Continued from page 111)

8. *Fourth*,—the *African* or *black man*, varies from a deep tawny to a perfect jet The head is narrow, the face projecting towards the lower part, the forehead arched, the eyes projecting, the nose thick and flat, the lips particularly the upper one, very thick, the jaws prominent, the chin retracted, the hair black, frizzled and woolly. The countenance of the negro is more unlike the European, and more like the monkey than that of any other variety

9. *Fifth*,—the *Australian* or *tawny man*, is of a mahogany color, the head is narrowed at the upper part, the forehead somewhat expanded, the upper jaw slightly prominent, the nose broad, but distinct, and the hair harsh, coarse, long and curly This variety inhabits New Holland, and seems to form a middle point between the European and the African

10 In this general classification of mankind, two circumstances must be remembered First, the distinctive characters will not apply to every individual of the particular division to which they belong,—swarthy or copper colored persons are often found among the genuine white race and European features, and sometimes even a fair skin are to be met with in the black and tawny tribes

11. In the second place, we must recollect that the frequent migrations among some of the divisions, particularly the Europeans, would cause this race to be widely scattered, and prominently intermixed with the other races in their own particular divisions of the globe Consequently, we are more likely to meet with Asiatics and Africans possessing European features, than to find among the white race the wide cheek-bones and flat face of the *brown man* or the flat nose and thick lips of the negro

12 The Bible informs us that "God hath made of one blood all nations of men"—that all descended from one human pair There have been men, calling themselves philosophers, who were not satisfied with this plain and simple statement. These philosophers have, in various ways, endeavored to account for the appearance of man on earth, without any special creation

13 One philosopher, Darwin, conjectures men sprung from oysters this theory is too absurd to deserve attention Another class of men, pretending to reason, assert that the human race are only an improved edition of monkeys Even the great Linnæus thought the orang outang might belong to the human family, and he places it as the connecting link between monkeys and uncivilized men

14. It is a sad reflection, that the pride of reason should have deceived so many learned men, and made them attempt to subvert the word and authority of the Most High God But his counsels will stand, and the more deeply and generally his laws are studied, the more plain and rational they will appear The books of nature and of revelation mutually explain and enforce each other when examined with a humble and earnest desire after truth.

15 If, in this spirit, we examine the monkey tribe, we shall find that they cannot belong to the same race with man The orang outang has a skeleton more like the human form than any other species of the monkey, but even that is essentially different The vertebræ (little bones of the back) are less by three in the orang outang than in man Then the animal has a peculiar membrane, or pouch, connected with the larynx, or windpipe, which belongs to no division of man whatever, white, red, or black

[To be continued]

நீதிமொழிகள், ௰௩ அதி ௧—௫

ஞானமுள்ள மகன் தகப்பனின் புத்தியைக் கேட்கிறான் சரசக்காரனோ அலட்டுதலைக் கேளான் தன் வாயின் நற்கனியினாலே அவன் நன்மையைப் புசிப்பான், துரோகிகளின் ஆத்துமமோ கொடுமையைப் புசிக்கும். தன் வாயைப் பத்திரம்பண்ணுகிறவன் தன் ஆத்துமத்தைத் தற்காக்கிறான், தன் உதடுகளை அகலத் திறக்கிறவனுக்கோ கலக்கம் வரும். சோம்பேறியின் ஆத்துமம் இச்சித்தாலும் ஒன்றும் வராது, சாக்கிரதையுள்ளவர்களின் ஆத்துமமோ புஷ்டியாகும் நீதிமான் பொய்ப்பேச்சைப் பகைக்கிறான், ஆகாதவனோ வெட்கமும் இலச்சையுமுண்டாக்குகிறான்

கடிதங்கள்.

(Letter from a Missionary lady to native wives and mothers.)

என் அருமையான சகோதரிகளே,

நான் யாழ்ப்பாணத்தைவிட்டு வந்தபிறகு உங்களுக்கொரு காகிதம் விரிவாயெழுதக் காத்திருந்தும் எங்கள் குழந்தை துன்பமாயிருக்கிறதினாலும் எனக்கு ராக்காலங்களில் நித்திரையுமில்லாதபடியினாலும் வேலைகளைச்செய்ய நேரமுமில்லாதபடியினாலும் எழுதாமல் விட்டுவிட்டேன். இப்பொழுது இத்தேசத்தைவிட்டுச் சடுதியாய்ப் போகவேண்டிவந்தபடியால் நான் உங்களைமறந்துவிடவில்லையென்றதை நீங்கள் அறியும்படிக்கு இந்தச் சிறுக காகிதத்தை உங்களுக்கெழுதுகிறேன்.

நீங்கள் யாவரும் நித்திரைகொள்ளும் வேளைகளிலேதானும் அநேகமுறை நான் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நினைத்து நீங்கள் சலாக்கியராகவும் தேவ அறிவு உங்களுக்குள்ளே தலைப்படவும் வேண்டுமென்று தேவனைப்பார்த்து மன்றாடிவந்தேன். கிறிஸ்துமார்க்கத்தினால் உங்களுக்குக்கிடைத்த சலாக்கியங்களை நினைத்துப் பாருங்கள். நீங்கள் உங்களிருதயத்தை மெய்யாய்க் கிறிஸ்துவுக்கொப்புவித்து முற்றுமவரைப் பின்பற்றினால் எப்படிப்பட்ட நித்திய திரவியங்களுஞ் சந்தோஷங்களும் உங்களுக்குண்டாயிருக்குமென்று பாருங்கள். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் உங்களுக்குமாத்திரம் நியமிக்கப்பட்டிருக்கின்றனவோ? அல்ல உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமென்றதே வாக்குத்தத்தம்.

முதல் பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள். பின் இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படுமென்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். உங்கள் பிள்ளைகளை ஆண்டவரை நேசிக்கவும் அவருக்குக் கீழ்ப்படியவும் படிப்பிக்கிறதே உங்கள் முதற்கவலையாயிருக்கவேண்டும். இதற்காக நீங்கள் நாடோறுஞ் செபம்பண்ணுகிறதுமன்றி உங்கள் நடக்கையினாலும் புத்திமதிகளாலும் அவர்களைத் தெருட்டவேண்டும். அவர்கள் நல்லவர்களாகவும் பாக்கியசாலிகளாகவும் மற்றுஞ் சனங்களாற் சங்கிக்கப்படுகிறவர்களாயுமிருக்கிறது உங்களவிருப்பமென்று அவர்களுக்கறிவிக்கவேண்டும். பிள்ளைகளுக்கு உலகப்பொருள்களைத் தேடிவைக்கிறது பெற்றாருக்கு வழக்கம். அதுபோல நீங்களுமுங்கள் நேரங்களையும் உங்கள் வருமானங்களையுஞ் செலுத்திவருகிறது மோசம். இப்படிப்பட்டவர்கள் பராபரனிடத்திற் கொள்ளையாடுகிறார்களென்று வேதஞ் சொல்லுகின்றது. பராபரனுடையவர்களென்று உடன்படிக்கை பண்ணிக்கொண்டவர்களாகிய நீங்கள் பராபரனுடைய வசனங்களைவாசித்துச் செபம்பண்ணவேண்டிய வேளைகளிலும் உங்கள் நன்மைக்காக வைக்கப்படுகிற கூட்டங்களுக்குப் போகவேண்டிய வேளைகளிலும் உலகவேலைகளுக்குட்படுவதும் இப்பாசங்களாற் கட்டப்பட்டிருப்பதுந் தரித்திரருக்குஞ் சுவிசேஷப் பிரபலியத்துக்கு உதவி செய்யாமலிருப்பதும் பராபரனிடத்திற் கொள்ளையாடுகிறதாயிருக்கும். நீங்களிவ்விதமாய் நடப்பீர்களாகில் பராபரன் தமது உடன்படிக்கையிலே நிற்கிறவர்களுக்கென்று நியமித்திருக்கிற ஆசீர்வாதங்களை உங்களைவிட்டெடுப்பார். நீங்களுங்கள் பிள்ளைகளைப் பராபரனுக் கொப்புவித்து அவருக்குப் பயப்படுகிறதற்கேதுவான வழியில் நடத்துவோமென்று வாக்குப்பண்ணியிருக்கிறீர்கள். உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குஞ் சினேகிதராகிய அஞ்ஞானிகளை நீங்கள் சினேகித்தாலுஞ் சங்கித்தாலும் அவர்களுடைய நிலைபரம் பரிதாபப்படத்தக்கதென்று அவர்களுக்காகப் பரிதபிக்கிறதை உங்கள் பிள்ளைகள் காணட்டும். உங்கள் பிள்ளைகளை அஞ்ஞானிகளுடைய பராபரிப்புக்குக் கீழாகவிடாதபடிக்கு எச்சரிப்பாயிருங்கள். அவர்கள் கூத்துப்பார்க்கவாகுதல் சிற்றின்பப் பாட்டுகளையாவது சரித்திரங்களையாவது அஞ்ஞானத்தவர்களுடைய புராணங்களையாவது கேட்கவும் வாசிக்கவும் இடங்கொடாதிருங்கள். சுந்தரப் பூங்காவிலிருந்த ஆதாமேவாளைப்பற்றியும் பொல்லாதவர்களானவர்கள் அழிக்கப்படும்போது கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த நோவாவைப்பற்றியும் பராபரன் சொன்னபடிசெய்து ஆம் தன்னுடைய அருமையான குமாரனாகிய ஈசாக்கைத் தகனப்பலிசெலுத்தச் சம்மதித்த ஆபிரகாமைப்பற்றியும் யோசேப்பைப்பற்றியுஞ் சொல்லிய சரித்திரங்களை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களொவ்வொரு வார்த்தையையுங் கவனிப்பார்கள். இவ்விதமாக வேதமுற்றிலுமுள்ள சரித்திரங்களையுஞ் சொல்லுங்கள். அவைகள்வரவரப் பதுமையாயும் மெய்யானவைகளாயுமிருக்கும். நான் நடத்திவருகிறமாதிரி இதுதான். காலாகாலங்களில் அவர்கள் வேத சாத்திரங்களைச் சொல்லச்சொல்லிக் கேட்கிறார்கள். இப்படித்தான் தீமோத்தேயுவின் தாயும் பாட்டியாரும் அவனைப்படிப்பித்தது. அதுதான் அவனையப்படிப்பட்ட நல்லவனாக்கிற்று. உ. தீமோத். க அதி. ரு வசனம் ரு அதி. யரு வசனங்களைப்பாருங்கள். இக்காரியங்களைப் பலமுறையும் உங்களுடனே மாதக்கூட்டங்களிற் பேசினேனும். நீங்களவைகளின் மேன்மையைப்பற்றி அதிகமதிகமாய் உணருவீர்களென்று நம்பியிருக்கிறேன். மறுபடியும் உங்களெல்லாரையும் வந்துகாணுகிறது எனக்குப்பெரிய விருப்பம். கர்த்தருக்குப்பிரியமானால் இரண்டுவருடக்காலத்தில் இத்தேசத்துக்கு வருவோமென்று காத்திருக்கிறோம். இந்தக் கடதாசிக்கொரு மறுமொழியைப் பெற்றுக்கொள்ளுவேனென்று காத்திருக்கச் சமையம்போதாது. நாங்கள் அமெரிக்காவிலிருக்கும்போது உங்கள் காகிதங்களையும் வாசிக்கவிருப்பப்படுவோம். கோப்மமா காகிதமெழுதினபோது உங்களொவ்வொருவரையும்பற்றி வெவ்வேறுவெழுதினார்கள். உங்கள் சுகசெய்திகளைப்பற்றியும் உங்கள் சிலருக்கினனுங் குழந்தைகள் பராபரனுடைய கிருபையாலே பிறந்ததென்பதைப்பற்றியும் சந்தோஷப்பட்டேன். பிரதானமாய் வெக்காசு பெண்சாதி ஒரு குழந்தைக்குத் தாயாயிருக்கிறாள். அவளுமிந்தக் காகிதத்தை வாசிக்கிறது என்னுடைய விருப்பம். உங்களிற் சிலர் துன்பத்தினால் உபாதிப்பட்டீர்கள். இராகேல் அவ்வளவு வருத்தப்பட்டாளென்பதைக் கேட்டபோது துக்கப்படுகிறேன். அவளுக்கு வருகிற வருத்தங்களொவ்வொன்றும் தேவனிடத்திலிருந்துவந்து, எழும்பு புறப்படு இது உன்னுடையவிடமல்லவென்று சொல்லுகிற தூதனுக்குச் சரியென்று நினைப்பாளாக. எங்கள் பட்சமான பரமபிதா தமது பிள்ளைகள் தங்களெண்ணங்களை மேலான காரியங்களிற் செலுத்தும்படிக்குப் பலவிதமாய்ப் படிப்பித்து வருகிறார். சிலவேளைகளில் அவர்களுடைய சினேகிதரையும் சிலவேளைகளில் அவர்களுடைய திரவியங்களையும் சுகத்தையும் அருமையான பிள்ளைகளையும் எடுத்துக்கொள்ளுகிறார். கர்த்தரெனக்கானவரென்று உண்மையாய்ச் சொல்லுகிறவர்கள் மாத்திரம் நித்திய திரவியத்தையும் சந்தோஷத்தையுங் கொண்டிருக்கிறார்கள். எல்லாருக்கும் நன்மை செய்யுங்கள் பிரதானமாய் விசுவாசத்தின் வீட்டாருக்கு நன்மை செய்யுங்களென்ற வாக்கியத்தை மறவாதிருங்கள். எமிலியாவென்பவளும் இன்னுஞ் சிறு பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கிறாளென்றதற்காகச் சந்தோஷப்படுகிறேன். யாழ்ப்பாணத்துக்கொரு அச்சடியன் புடைவை அனுப்பவிருக்கிறேன். அதை எமிலியாவெடுத்து நாடோறும்பள்ளிக்கூடத்துக்குவருகிற பெண்பிள்ளைகளுக்கு ஒவ்வொரு சட்டை தைக்கத்தக்க அளவு கொடுக்கலாம். அது வரும்போது கோப்மமா எமிலியாவிடத்திற் கொடுக்கட்டும். உங்களொவ்வொருவருக்குஞ் சொல்லும்படி என்மனதில் அநேககாரியங்களுண்டு. ஆனாலும் இதையெழுதத்தானும் நெடுநாட்சென்றது. ஐயருமிருந்ததில் வருத்தமாயிருக்கிறார். அங்கேயிருந்ததைப்பார்க்க எனக்கிப்போது சுகம். ஆனாலும் மெத்தப் பெலன்கொள்ளவில்லை. உங்களுக்கும் உங்கள் நாயகமாருக்கும் ஐயர் சலாஞ்சொல்லுகிறார். உடம்புக்குச் சவுக்கியமானால் அவரும் அவர்களிற் சிலருக்கெழுதுவார். எங்களைப்பற்றி விசாரிக்கிற உங்கள் அயலகத்தாருக்குஞ் சலாஞ்சொல்லுங்கள். அறிவைக்கடக்கிற சமாதானம் இயேசுகிறிஸ்துவினிமித்தம் உங்கள் மனதிலும் இருதயத்திலும் இருப்பதாக. எங்களுக்காகச் செபம்பண்ணுங்கள். உங்களை எங்கள் தினசெபங்களில் நினைப்போம். உங்களையினி உலகத்திலே காணக்கூடுமேயாகில் அதிக சந்தோஷப்படுவோம். அதிலும் அதிகம் மோட்சத்திலே காணக்கூடுமேயானால் ஆண்டவருங்களுடனே இருப்பாராக.

(On Tamil Grammar.)

(Concluded from page 141.)

நடபாதி நட்பப்பொருள் விளக்குஞ்செயும் வித்துவாங்கிச சங்கப்பிரபுவாகிய சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்களுடைய வுரை பிழையென்று மறுத்திருப்பதைப்பற்றிய பேசுவது.

கவது. சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்கள் ஆறனுரு-வே-என்பதற்கு ஆறுமவேற்றுமைக்குறியாகிய அது வுருபு மேற்சொல்லிய எட்டு வேற்றுமையுருபுகளையுமேற்குமென்று சொல்வதைப்பற்றிய பெயரேயன்றி இடைச்சொல்லாகிய உருபு உருபுகளை ஏற்குமென

று சொல்வதெப்படி? அவர் செய்தவுரை சரியன்றென்று மறுக்கிறவர்கள், அவ்வுருபே யென்பதற்கு (எழுவாயுருபாம்பொழுதும்பொருண்மையினன்றி வடிவிலொருபடியாய நிற்கும்பெயரென்று பொருள்பண்ணாது) எழுவாயுருபு ஏனையுருபுகளையும் ஏற்கும் எனவும், எழுவாய்வேற்றுமையாவது பெயர்மாத்திரையாய்த் தோன்றிநிற்கு நிலையென்பவாகலின் அவ்வெழுவாய் நின்றவுருபே ஐம்முதலிய ஆறுவேற்றுமைகளினுருபுமேற்கும் எனவும் விளியுருபாவது பெயரதுவிகாரமேயாதலின் அவ்வெழுவாயுருபின் வேறல்ல எனவும் உருபுருபேற்குமென உடன்பட்டு உரைசெய்திருக்கிற கருத்தென்ன? நூலாசிரியர் வடிவில் வேற்றுமையின்மைபற்றிப் பெயரையே அவ்வுருபென்று இலக்கணையாய்ச் சொல்லியிருப்பதினால் உரையாசிரியரும் அப்படிப் பெயரென்று பொருள்பண்ணுவது விளக்கமென்றறிந்தும் எழுவாயுருபென்று இலக்கணமொழியாய்ப் பொருள்பண்ணினாரெனில் அப்பொழுது ஆறனுருபும் என்னுமிடத்தும் முற்புடைவேற்றுமைப்பொருளோடும்பிற்புடைப்பெயர்ப் பொருளோடும் நிற்கும் அது வென்னு மொழியை ஆறனுருபுமாய் நிற்கும் பெயரென்று சொல்லாமல் ஆறனுருபென்று இலக்கணையாய் நூலாசிரியர் கூறினாரென்றும் சங்கரநமச்சிவாயப் புலவரவர்களும் அதுபோல ஆறனுருபுப்பெயரேற்குமென்பதற்கு வதில் ஆறனுருபேற்குமென இலக்கணையாய் உரை கூறினாரென்றும் ஒப்புக்கொள்ளாமல்விட்டதென்ன நியாயம் ஆ! தனக்கோர் நியாயம் பிறர்க்கோர் நியாயமா! ஆனாலும் பூர்த்துப்பாராமல் மோசம்போனார்களோ தெரிந்திலம். சங்கரநமச்சிவாயப்புலவரவர்கள் அது என்னும் மொழி முற்புடைவேற்றுமைப்பொருட்குரித்தாயினும் பிற்புடை பெயர்ப்பொருட்கு முரித்தாய் நின்று எட்டு வேற்றுமை யுருபுகளையும் ஏற்குமென்பது பூரணமாயறிந்து உரைசெய்தாரன்றி அறியாமல் இடைச்சொல்லாகிய உருபு முருபேற்குமென்று மோசமாய்ச்செய்தாரல்லர் அறிந்தே செய்தாரென்பதற்கு எல்லையின்னு மதுவும் என்னுஞ் சூத்திரவுரையில், ஆறுமுருபேழுவாயாய் நின்று வினைப்பயனிலைகொண்டது என்று சொல்லியிருப்பதும், ஏற்குமெவ்வகை என்னுஞ் சூத்திரவுரையில் வினை முதலிய மூன்றும் வேற்றுமைகொள்ளாதென்று சொல்லியிருப்பதும், ஆறனுருபுமென்னு மிச்சூத்திரவுரையில் தன்னிருகிழமைப்பொருளும் மற்றவ்வுருபின் பொருளுந் தோன்ற என்றுசொல்லியிருப்பதும் அறிந்து செய்தாரென்பதற்கு மெய்ச்சாட்சியாயிருக்கின்றன இவ்விடத்து இருகிழமைப்பொருள், முற்புடை சம்பந்தப்பொருள், பிற்புடை கருத்தா முதலிய பொருள், உருபின்பொருள், முற்புடை இடைச்சொன்மைப் பொருள், பிற்புடை பெயர்ச்சொன்மைப்பொருள், உருபிற்கு முற்புடை ஒருபொருள் பிற்புடை ஒரு பொருளில்லை ஆக இடைச்சொன்மைப்பொருளொன்றும் முளதெனில், சாத்தனது குடையென்னும் பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்தப்பொருளும் ஓர் சார்பிடமடுத்து நிற்குமியல்பினால் உருபிற்கு இடைச்சொன்மைப்பொருள் ஒன்றும் மாத்திரமுள்ளது சரி, ஆனால் சாத்தனது என்னும் பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்தப்பொருளும் அது என்பது சாத்தனுக்குடைய ஓர் வஸ்து உண்மை விளக்குவதினால் அவ்வஸ்துவிற்கு நாமிப்பொருளும் ஓர் சார்பிடமடுத்து நிற்குமியல்பினால் உருபிற்கு முற்புடை இடைச்சொன்மைப்பொருளும் சாத்தனுக்குடைய ஓர் வஸ்துவின்குறியாய் நிற்பதினாற் பிற்புடை பெயர்ச்சொன்மைப்பொருளும், சாத்தனது வந்தது என்னும்பொழுது சாத்தனாகிய நாமிக்குச் சம்பந்தப்பொருளும் அது என்பதுவிளக்கும் சாத்தனுடையதாகிய வஸ்துவிற்குக் கர்த்துருப்பொருளும் உருபிற்கு ஓர் சார்பிடமடுத்து நிற்பதினால் முற்புடை இடைச்சொன்மைப்பொருளும் சாத்தனுக்குடைய ஓர் வஸ்துவை விளக்குங்குறியாய் நிற்பதினால் பிற்புடை பெயர்ச்சொன்மைப் பொருளுமுண்டென்பதெல்லாமறிக இருகிழமைப் பொருளென்பதற்கும் உருபின்பொருளென்பதற்கும் இவ்வாறு பொருள்கொள்ளாமல் ஆறும் வேற்றுமைக்குரிய தற்கிழமைப்பொருள் பிறிதின் கிழமைப்பொருள்களிலொருகிழமைப்பொருளென்றும் ஐம்முதலியவேற்றுமையுருபுகளிலொருருபின் பொருளென்றும் பொருள்பண்ணிச் சிலர் மறுப்பினும் முதற்குறித்த விருசாட்சியும் யாவராலும் மறுத்தற்கரிய பூரண சாட்சிகளாயிருக்கின்றன இவைகளையெல்லாம் மறுதலைப்பக்கின்றவர்கள் ஒருபொழுதும் வாசித்துப்பார்த்திலர் போலும் அல்லது வாசித்துப் பாராது மறந்தனர்போலும் இப்படி அவர் கருத்து முழுவதும் விளங்கச் சூத்திரம்போலத் தானே இன்னுமிலக்கண மொழியானுரை செய்திருப்பதைப் பாராமல் ஏற்குமெவ-மை, என்று சொல்லியிருக்கவும் பெயர்வழிப்பே, என்று சொல்லியிருக்கவும் அவைகளை அவர் யோசியாமல் இடைச்சொல்லாகிய உருபு இடைச்சொல்லாகிய உருபை ஏற்குமென்றுரைத்தது மோசமென்று சொல்லியிருக்கிறார்கள், ஆ, அவர் அவ்வளவு யோசனையற்றவரும் இவ்வகைப்பட்ட சூத்திரங்களை விளங்கிக்கொள்ள விவேகம் போதாதவருமாய் இப்படி லேசாயெண்ணவும் பேசவுந்தக்க வித்துவானா? அவருடைய வுரையினுட்பத்தைக்கண்டு அதிசயித்து மதிக்கும் நிறைகோற்சமான நிதானச்செவ்விய புத்திமான்கள் அப்படி ஒருபோழுதும் எண்ணவும் பேசவும்மாட்டார்கள்

உவது சாத்தனது என்பது குழையது கோட்டது என்பனபோலக் குறிப்பு வினையென்று சொல்லி மேலும் பதம் பிரித்து அகரம் சாரியையெனவும் துவ்விகுதியெனவும் வரையறுத்துச் சாத்தனைப் பகுதியென்று வரையறுக்கமாத்திரந் துணியாமல் மவுனமாய்விட்டார்கள், குறிப்புவினையானது பொருண் முதலாறினுந் தோற்றிமுன்னாறனுள் வினை முதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே என்னுஞ் சூத்திரத்தின்படி பொருண்முதலாறினுமூலமாயக் குழை ஊர் என்பனபோலும் பகாப்பதங்களினின்றுந் தோன்றி, குழையன், ஊரன் என்பன போலும் வாய்ப்பாட்டில் வழங்குவதன்றி சாத்தன் புலவன் என்பனபோலும் பகுபதங்களினின்றுந் தோன்றிச் சாத்தனது புலவனது என்பனபோலும் வாய்ப்பாட்டில் வழங்குவது முண்டோ? அப்படியாயில் குழையனது, ஊரனது, சிரவணனது, சதுமுகனது, கரியனது, கூத்தனது, இவையெல்லாம் குறிப்புவினையாமே, தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும் என்பதை அவர்கள் மறுத்தனர்போலும், அன்றியும் குழையது கோட்டது என்னுங் குறிப்பு வினைகள், குழையையுடையது கோட்டையுடையது எனக்குழையைக் கோட்டை உடைமைப்பொருளாய்க் காட்டுவதுபோலச் சில புலவர்களுடைய குறிப்பு வினையாகிய சாத்தனது என்பது சாத்தனையுடையது எனச் சாத்தனை யுடைமைப்பொருளாய்க் காட்டுகின்றதா? சாத்தனுக்குப் பிறிதொன்றையல்லோ உடைமைப் பொருளாய்க்காட்டி ஆறும்வேற்றுமைப் பொருண்மையினிற்கிறதென்றுணர்செய்கின்றது.

கவது சங்கர நமச்சிவாயப் புலவரவர்கள் ஆறும் வேற்றுமையுருபு எட்டு வேற்றுமை யுருபுகளையும் ஏற்குமென்றது உருபுருபேற்குமென்று சொல்லுதலாகிய பிழைபட்டு ஒரு வாற்றானுந் திறமென்று சொல்லப்படாமற் போய்விட வீரமாமுனிவர் ஆறும்வேற்றுமையுருபு ஐம்முதலிய ஆறுவேற்றுமை யுருபுகளையும் மாத்திரமேற்குமென்றது உருபுருபேற்குமென்று சொல்லுதலாகியபிழைபடாமல் ஒருவாற்றுற்றிறமென்று சொல்லவந்தவிசேஷமயாது? எழுவாய் விளி இரண்டையும் விலக்கிக்கொண்ட விசேஷந்தான் ஒருவாற்றுத்திறமென்று சொல்லப்பண்ணிற்றோ அல்லது வேறேது மொருவாறிருந்து பண்ணிற்றோ அறியவிரும்புகின்றனம்

இனி நூலாசிரியர் இலக்கணையாய உருபுருபேற்குமென்று சொன்னதுபோல உரையாசிரியராகிய சங்கர நமச்சிவாயப் புலவர் அவர்களும் உருபுருபேற்குமெனலிலக்கணையாய் உரைசெய்திருப்பதினால் எப்படி உருபுருபேற்குமென்று மலைப்பவர்களுக்கு விளங்கச் செய்யுந் தெளிவுரை வருமாறு

ஆறனுருபு மேற்குமவ்வுருபே, இ. ள். (பொருண்மையினொருவாறுறுனும் விகாரமின்றித் தன்னிலையினுறும் பெயர்களேயன்றி) ஆறும் வேற்றுமைப் பொருட்குறியாய் நிற்கும் அது வுருபும் (பெயர்ப்பொருண்மையோடும் ஏகதேசத்தில்) எழுவாய் முதலிய எட்டு வேற்றுமை யுருபுகளையுமேற்று வழங்கப்படும் என்று

இவ்வுரை தெளிவாயிருப்பதுமன்றி, ஏற்கும்- எனவும், பெயர்வ,- எனவும் சொல்லப்படும் சூத்திரங்களின் கருத்துக்கும் தொல்காப்பியத்தில் பிறிது பிறிதேற்றலு மென்னுஞ் சூத்திரக் கருத்துக்கும் அதினுரைச்சார்புக்கும் வீரமாமுனிவர் சொன்ன தொன்னூற் சூத்திரக்கருத்தின் சார்புக்கும் சங்கர நமச்சிவாயப்புலவர் அவர்களுடைய வுரைக்கும் சாத்தனது சாத்தனதனை என்பன முதலிய இலக்கிய வழக்கிற்கும் இயைபுமாயிருப்பதறிக

சம்பூரணம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி இலந்தை நகரில்
தில்லையம்பலவாணர் சுவாமிநாதன்

(Answer to the inquiry—who is the god of the Vellalas?)

கடவுட்டுணை

மங்கலம்பொலிதருமிங்கிலிசதிபாதந்
திங்களங்குடைநிழறங்குமம்புவியெல்லாம்
உதயதாரகைப் பிரபை வீசுமுத்தமப்பிரபுகளே,

உதயதாரகை ௨ம் புத்தகம், ௰௨ஞ். சஞ்சிகையில் சந்தேக நிவாரணப்பிரியன் கார்த்திகதிரித்தம்பி வினவிய வினவிற்கு விடை

வாய்மொழிபேசிவாதுகள்புரியி
னெய்வறவினர்களுழறுவரதனூற்
சங்கைகடவிரவேசதுரொடுமிபபோழ்
தங்கைகொணலவியினருங்கனியெனவே
முந்தைநாலுதாரணம் விந்தையாயப் பற்பல
எநதையீசனையெனசிந்தையிலிருத்தி
எடுத்துககூட்டி அடுத்துககோட்டித்
தொடுத்துநாட்டி விடுத்துககாட்டி
அறிவறிவித்துச் செறிவுறுவித்துக்
குறிபெறுவித்து நெறியுறுவிப்பன்
வாருமின்சாருமினேருமின்பாருமின்
உள்ளுமினறெள்ளுமினகொள்ளுமினவள்ளிதாய்
நவைதவவவைகவவவை நவமிவையே.

சாதிமரபு

ஆனாநான்முகன்முகத்திலந்தணர்மரபுண்டாகத்
தோளினிலரசாவற்கந் தோனறிடத் தொடைகடம்மின்
மீனவும் வணிகர் தங்கள்மெய்க்குலமுதிககத்துய்ய
தாளிணையதனில்வேளாஞ்சாதியுமுதித்தனறே

இது வேளாளரைப் பிரமாவின் பாதத்திற்றோற்றினவர்களென்றும், நாலாவதாய்த் தோற்றினதினால நாலாஞ் சாதியாரென்றும் படிப்பிக்கின்றது.

தொலகாப்பியம் பொருளதிகாரம் முதலாவது அகத்திணையியல், ௨௯ஞ் சூத்திரம்

அவற்றுள் ஓதலுந்தூதுமுயர்ந்தோராமேன்—இதன் பொருள்—அமமூன்றினுள் ஓதற்பிரிவும தூதிற் பிரிவும் அந்தணர்முதலியமூவரிடத்தனவென்றவாறு—மூவரையுமுயர்ந்தோரெனக்கூறவினவேளாளரை ஒழிந்தோரெனறுணர்கவெனச் சொலலியிருக்கின்றது

இது அந்தணர் முதலிய மூவரையுமேற்குலத்தோரென்றும் வேதமோதுதற்குரியரென்றும வேளாளா அவாகளுக் கீழ்குலத்தோரென்றும் வேதமோதுதற்குரியரலலரென்றுங் காட்டுகின்றது

இலக்கணவிளக்கம ௫வது. பாட்டியல் ௱௯௪ சூத்திரம்

நாலேகரகமுககோன்மறையே
யாயுங்காலை அந்தணர்க்குரிய

௱௯௫ சூத்திரம்

படையுங்குடையுங் கொடியுமுரசுந்
நடைநவில புரவியுங்களிறுந்தேருந்
தாருமுடியுந நேர்வனபிறவுந்
தெரிவுறுசெங்கோலரசர்க்குரிய

௱௯௯ சூத்

வைசியன்பெறுமே வாணிகவாழ்க்கை

௱௯௭ சூத் வேளாண்மாந்தர்க்குழுதூணலல-தில
லெனமொழிபபிறவகைநிகழச்சி

இவவிடத்து வேளாணமாந்தரெனச் சுயபெரும் உழுதூணெனச் சுயசிவியமும் குறித்துநாலாம் வகுப்பில வைத்து வேளாளா நாலாம வருணததவரெனபது பூரணப்படககாட்டியிருககிறா.

கவித்துறை பாட்டியல ௨௨.

காலையனசந்திரனிந்திரனகணடன காவலர்க்கு
மாலையன்சேயரனகணடனமாமறையோாககுநிதிக்
காலையன்காலனமைத்தவெழுத்துவணிகருக்கு
வேலையனகணடன வேளாளருககு விலககினவே

இதில்,செட்டிகள் மூன்றும வருணம் வேளாளர் நாலாம் வருணமெனறு அவ்வபபெயரினாலும அவவவ வகுபபினொழுங்கினாலுந தெரிகின்றது

உரிச்சொல்

ஒத்ததொழில்செய்வோரயனுருவில்வந்தோர்
முத்தொழிலோாவாணிகா மொயதனத்தோர்வத்தர்
எழினமலரோனபாதத்தில் வந்தோரியலேர்த்
தொழிலுடையோா சூத்திரரேயாம்.

இதினாலும மேற்குறித்திருக்கிறபடி சூத்திரரும நாலாம் வருணத்தாரும வேளாளரெனபது இலக்கம.

சூத்திரரும் நாலாம் வருணத்தாரும் வேளாளரெனபதற்கு இவவளவு திருட்டாந்தங்கள் போதும் இவைகளை அங்கீகரியாது மேவிட்டாரும் பேசத்தொடங்கினால் மேனூல்களிலிருந்து அநேக திட்டாந்தங்களெடுத்துக் காட்டி உண்மையைத் திணமையாய் நாட்டுவோமென்றறிக இப்படிக்கு

யாழ்ப்பாணம்	}	சகல சற்குணவசியன்
௲௮௱௪௨ஆ. ஆனிமீ ௨௨தி	}	சத்தியநிரணயசுவாமி.

பத்திராதிபர் குறிப்பு

வேளாள குலத்தவர்களே, உங்களைப் பார்க்கிலுஞ் சற்றும் மேம்பாடாயிராத உங்களுடனொத்த படைப்புகளிலும கீழ்த்தரமான நிலைமைக்கு உங்களைக் கொண்டுவருகிற சைவமதத்தைச் சத்தியமுள்ளதெனறு நம்பிவருகிற நீங்கள் எவவளவு மதிக்குறைவுள்ளவர்களெனறு பாருங்கள நீங்கள பிரமாவுடைய காலிலிருந்து தோற்றினவாகளானபடியால் வேதமோதலுககுத் தகுநத காரியமலல ஆனாலும பிரமாவுடைய தொடையிலிருந்து வசியா தோற்றினபடியால வேதமோத அவர்களுக்குஉத்தரவுண்டு உஙகளுககோ ஒரு தேவன.வசியருககோ வேறொரு தேவன் பிராமணருக்கோ பினனொரு தேவன. யாதொரு திட்டாந்தமுமின்றி இதை ஏன நமபுகிறீாகள் அது பாரப் புரளியென்று நீங்கள் நம்பவிலலையா? மறுபோ வேதமோதலுக்குரியவாகளாயிருக்கிறது போல நீங்களும் அபபடியே ஓதுகிறதற்குத் தகுதியினையுடையவர்களெனறு உங்கள் சொந்த இதயந்தானும் உங்களுககுச் சொலலிக் கொடுககவிலலையா? சைவா ஓதுகிறவேதமாவதெனன? அதைக் கற்றதினால் ஆராகுதல நயததையடைந்தாாகளா? வேதத்தைப படிபபதினால ஒரு மனிதன புத்தியடைவானா? அது ஒருவனை நலலவனாக்குமா? அது ஒருவனை மோட்சத்துக்குப் போகபபண்ணுமா? இலலை இலலை, அதிகமதிகமாய வேதத்தை அனுதினமும ஓயாமற் படித்தவாகளைப் பாருங்கள் அவாகள் மறுபேரிலும் புத்திக்காரரோ? அலலது மறுபேரிலும் நயப்பட்டவாகளா? இலலை, இல்லை வேதத்தைப் படித்ததினால அவாகளுககு வநத நலமெனன? அது அவாகளை அகநதைகொளளவேபணணிற்று அது மறுபேரை இகழந்து தள்ளவே எண்ணிற்று. தேவனுடைய சத்தியத்திலிருந்து விலகிபபோகப்பண்ணிற்று. அவர்களோ குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருககிறபடியால் இருதிறத்தாருங குழியிலேதானே விழுவாாகள் சத்தியநேசம அவாகளில இலலாதபடியால அவாகள் பொயயையே நமபுகிறாாகள வேதங்களைப படிக்கிறதற்குத் தகாதவாகளானால பிராமணருடைய பாதங்களை முத்தமிட்டுப் பகலின வெளிச்சத்தைக் காணகிறதற்குத் தலையை நிமிாத்திப பாராமல நகாநதுகொணடிருக்கும புழுவுககுச் சரியாயிருககிறதெனன? உதயதாரகை சொலவதைககவனிதது, உஙகளைச சிறையாககிககொள்ளுகிறதறகு விருமபுகிற மனிதர் கட்டிய பாரப் புரளியை விட்டுத் திருமபிச் சகலருக்கும அறிவிக்கப்படும பராபரனுடைய வாாத்தையைக கேளுஙகள ஒரு பிதாத்தன பிள்ளைகளில இரஙகுகிறதுபோல ஆணடவனுந் தமக்கஞ்சுகிறவர்களுககு இரஙகுகிறாா கெட்ட விககிரகங்களை விட்டுத் திருமபுங்கள், தபபறையான வேதங்களைவிட்டுவிடுஙகள ஏகசத்திய பராபரன கொடுத்த வேதாகமததை ஏற்றுககொணடு அவரையே வணஙகிச் சீவியுஙகள்.

(Answer to an inquiry on the true Religion)

சகலத்தையும் படைத்துக காக்கும் ஆதியை ஏதொரு ஒப்புவமையனறித் தொழுவோர்க்கு அவனுடைய கிருபையுணடாகட்டும

உதயதாரகையே,
வெள்ளி பேசினாற் கல்லும்பேசும்
கலலுப் பேசினாற் கணணும பேசும்

உனது ௨ம புத்தகம் ௰ஞ் சஞ்சிகை ௱௪௰ம் பக்கத்தில் இருள்நிறைந்த யாழப்பாணநகா உலாகலலெனற அவிசுவாசியின அஞ்ஞான வினவுககு விடை

ஆணடவன பிதாமாதா மனைவி மக்கள் பிறப்பிறப்பு துவக்கங்கடைசியுள்ளவனெனறும ஒரு புத்திரனைத் தாய்வயிற்றில மனுவாயப் பிறப்பித்திறப்பித்தானெனறும, நமபும் அஞ்ஞானத்தை அறவே விட்டகற்றி ஏதொரு இணையுங கணடிபபுமிலலாமல எஙகும நிறைந்த ஒருமையான சோதியே நமமைப்படைத்தாதரிக்கு

தமபிரானென்று விசுவசித்து உள்ளபடி வணங்குதற்கு நற்போதகஞ் சொல்லுவதெந்த வேதமோ அந்த வேதந்தான் கடவுடந்த வேதமெனக் கண்டுகொள்ளவேண்டியதுமன்றி மோட்ச பதிக்காசைவைத்தோர்களத்தை நம்பி அதின்படி நடப்பவாகளே நலவிடஞ் சேர்வார்களொழிய மற்றும்படி கத்தாவைக்குறித்து உணர்ந்து இவ்விதமென்றறியக்கூடாமல் தங்கள் சித்தத்திற் றோற்றினாற் போலப பன்மையிற் பொருள் விளைத்து மனப் பொறுமையிலுல வீணிலையில் நிற்பவாகள் சில மிலேச்சரை மருட்டித் தங்கள் நிலையிலாக்கும்படி மிகுந்த துலைதூரங்களிலிருந்து வந்து எண்ணறுப் பணத்தைச் செலவழித்தும் பிரயாசித்தும வெகு சாமார்த்தியங்களாய்த் தங்கள் அஞ்ஞானத்தைப் போதிவித்தாலும் அவர்களும் அத்தைப பினபற்றிய ஏழைகளுஞ் நரகாக்கினையில அமிழந்து போகக கூடிய பாதையே ஒழியக கத்தாவுக்குவாந மாாககமெனறத்தை எபபடி நமபககூடும

ஆகையாலெனது நேசத்தாரகையே மேற்சொல்லிய எங்கும் நிறைந்து கண்டிப்பு மிணையுமிலலாத சோதியை ஒருவனெனத்திடனாய் விசுவாசிக்குமபடி போதிவிக்குங் கடவுடந்தவேதமெந்த வேதமென விளக்கமாய்ப் பேர்தொகுத்து இந்தக் கருத்துடனே அறிவிக்கத் தயவுசெய்வாயாக

திருந்தரத்தினககலனுக்குமுன்னே
கருங்கலலைச் செப்பனிட்டாலுமொப்பாகுமோ?

இப்படிக்கு உனது தோழன் திவவியநகர் கண்ணுழி.

பத்திராதிபர் குறிப்பு.

தாரகையை வாசிப்பவர்களனைவர்க்கும் பரிபூரணசமாதானமுண்டாகக்கடவது

நீவிரனைவருமமைதியுடனித்தை யூன்றிச் சிந்திக்கவேண்டுமென்று உதயதாரகை உங்களைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகின்றது சத்தியமதம் யாதெனச் சுத்தகுணமுள்ளவாகளே தோந்துரைககட்டும இது தேவனுடைய ஆவியினாலன்றி மனிதனுடைய வாக்கால ரூபிக்கப்படுவதிலலை முதன முதல நியாயசாட்சி தோன்றட்டும். பின, மனிதரதை விசுவாசித்து அதற்கஞ்சி அதற்கமைந்து நடககட்டும் ஆனாலும,"திவவிய நகர் கண்ணுழி" எனறவரோ சத்தியவழி தமமிடத்துணடெனச் சொலலுகிறா சொலலியும அது ஏதென்று நமககுக காட்டவிலலை சத்தியவழி யலலாதது ஏதெனறு மாத்திரஞ் சொலலுகிறா இது வெளிப்படையலலவே மேலும நாம நிறுத்தினதற் காதாரமாகத் தமது சொலலேயனறிப் பிறா சாட்சிகாட்டவில்லையே பின்னை நாம் அவா சொலலுக்குடம்படலாமா? அவர் பூசியுஞ் சற்குணருமென்றெங்களுக்கெப்படித் தோனறும? பூசியுஞ் சற்குணமு முள்ளவர்கள் தானும் அத்தாட்சியினறி யாதொனறை வரையறவு பணணமாட்டாாகளே. முதல வெளிச்சந்தோனறட்டும் பிறகு நாம பாதையைக் காணபோம அ, ஆ! நான விடயங்களைக் காண்கிறேனெனறு குருடன் கூவெனபதினாலாவதெனன? அவனை நமக்கு வழிகாட்டியாய்க கொளவோமா? இதுவே நற்சமயம மனிதர் சகலவற்றையுமாராய்ச்சிபணண வாரமபமபண்ணியிருககிறாகள் விககிரக வணககம வீணுங் கேடுமாமென்பது தெளிவாயிருக்கின்றது குருக்கள் பிராமணா முதலானவாகளினால நமககியாதொரு நயமினறெனபதுந் துலாமபரமாயிருககினறது அவாகளையு மகற்றி விட்டுவிடுவோம பின்னை, சத்தியவழியாது? இது ஏழைகளுங கற்றறிநது இரட்சண்ணியமடைதறகுபயோகமாயிருககவேணடியதே இபபால"திவவிய நகா கணணுளி"எனபவா நமதறிவை விளக்கி உணமையை ஊட்டுமத்தாட்சிகளைக் கொட்டினாலனறி மற்றுமபடி யவா சொலவதை நாம நலலதெனறெடுககச சற்றெனகிலுமிடமிலலை.

(On Dreaming.)

உதயதாரகையென்னும பத்திரிகையை நடாத்தும மகாகனமபொருந்திய ஸ்ரீ ஸ்ரீ மைனாத்துரையவர்களே,

தஙகள் பத்திரிகையின் கண கனவைப்பற்றி விரிக்கப்பட்ட கடாவும்விடையுமோ யாவர்க்கு முபயோகமுள்ளதாயிருககினறன ஆயினுங் கனம்பொருந்திய ஸ்ரீ ஸ்ரீ.கனுவியாாத்திப்பிரியன தம்பாபிள்ளை அவாகளெடுத்துககாட்டிய "உடலறிவிளக்கச் செயயுள்களோ" கனவைபபற்றிய வினாவுக்கு விடையாயிருக்குமென் றெணணவேண்டும அச்செயயுள்களின கருத்தோ யாவருமெளிதினறியககூடியதலல அதையறியவேண்டுமெனற விருப்பம எனககதிகமாயிருககினறது. "எல்லாமறிந்தவரும் ஏதுமறியாதவருமில்லை" எனவாசகமிருத்தலால் ஆராகுதல் இதன் கருத்தை அறிந்திருக்கவுங்கூடும் வணணைநகர் விநாயகமூர்த்தி எனபவர், கனுவியார்த்திப் பிரியனெழுதியது, அவவினாவிற்கு ஒரேபங்கின் விடையென்றும மற்றதைத் தானெழுதுவோமெனறும வரைந்ததால இவரிடத்திலிச் செயயுள்களின பொருளையும் அவவினாவுக்குச் சரியான விடையையுமறிந்து கொளளலாமென்று மிகவும் அக்களிப்பாயிருக்கிறேன் விநாயகமூர்த்தி இச்செய்யுள்களினபொருளை அறியாதிருந்தால ஒரு பங்குககுமது விடையாயிருக்குமென்றறியககூடாது.அவரறிந்திருப்பாா அதை அவர் எனக்குத் தயவாயறிவிக்கவேணடும் இதுவுமனறி

வினாக்கள்

நாம் சிறிதுவேளை நித்திரையாயிருக்கிறபோது கண்ட கனாககளினபடி சிறிதுகாரியங்கள் சம்பவிக்கிறதெனன? சிலர் நிததிரையாயிருக்கிறபோது எழும்பி அங்கே இஙகே போய் வநது படுத்துவிடியற்புறந் தாம் படுத்திருநததேயனறி வேறியாதொன்று மிலலையென்று சொல்லவும அபபடிககொத்தவர்களெழும்பிப்போகிறபோது யாம கேட்கிறதுக்கு மறுமொழிசொல்லியும அதையுமவர்கள் மறககவேணடியதெனன அப்பொழுதவாகள் உயிரெங்கே? இன்னுஞ் சிலா நித்திரையிலதிகமாய் அத்தையும இத்தையும பேசுவதெனன? சிலா சுபாபமாய் நடக்குமபோது நித்திரையாயிருந்தும் விழுந்துபோகாமலும வேறு மோசமாயக் கிணறு பள்ளஙகளில விழாமலும போவதற்குக் காரணமென்ன?

சிறிதுவேளை நாமொருக்காலுங் காணாத இடத்தைக் கனவிற்கண்டதைப போய்பபாாத்தால நாம கனாககண்டபோது தோற்றினதுபோற் சரியாய் இருபபதை யானிரணடுமுறை கண்டேனிபபடியிருப்பதேது?

நிததிரையாயிருககிற போது நாம் சுவாபமாயிருக்கும்போது காணககூடாத கேளவிக்கு விடையைக கனவிற்கணடுகொள்வதெனன? இவவினாக்களுககெலலாமிடையினத்துக கினமுண்டெனறு மிலலையெனறுந தற்கிபபதுபோலத் தற்கியாமலும நீதிபபிரியன் வினவிய பத்துவினாககளுக்கும் விடையெழுதாமல வெலவிதங்களுக்கெனறுண்மைப் புலவர்களோடு வீணாயபொரும வீணர்போலிதற்கு விடையெழுதாமலும நித்திரையாய் வேறு காரியங்களை எழுதாமலும நலவிடையை அறிவிகக மன்றுடுகிறேன.

இப்படிககு
இடையினத்துக்கினமுணடெலபோ்ல   சி கா

(On the quality of a Poetic Verse.)

நுண்பிழையாய்வைத் திண்பிழையாக்கல்

உதயதாரகை உம புத்தகம் யகஞ் சஞ்சிகை ாகஉம் பக்கத்திலே சுணடிககுழியிற் கிச்சியாமபிள்ளை மொண்டான எழுதிய கடிதத்திற சிலபல பிழைகளிருககினறன என்னவெனில,

கவது, "விசாகபபெருமாளையராற் செய்யப்பட்ட வருங்குன்ற என்னுங் கட்டளைககவித்துறை" எனப் புகலுறா அது அவராற் செயயபபடடதலலவே.

உவது "கவிபபாவாயிருப்பதின் காரணத்தை" என் நவின்றுர் இதில ஐயுருபுக்கு முடிககுஞ் சொல்லெஙகே?

ஈவது "கறறுவலல புலவரிடத்தில" எனச் சாற்றினாா் இதன் பொருண் முடிபேது-தோந்து எனபதா?

சவது "எங்களுககறிவிகக மனறுடுகிறோம" எனக்கூறினாா் மனறுடடககாரா பலராயிருகக ஒருவா கையொபபம்வைத்தது சரியலல இறசகுவேலது எழுதப பயின்றவர்களிடம இத்தை விசாரிபபாராக

இபபடிப்பட்டவர், உடுபபிட்டி வயித்தியலிங்கர் விளங்காய் என்றதைக் கூவிளஙகாய என வோரெழுத்துப பிழையெழுதினதற்காக, மனுடா சகலர்க்கும மறவியுளதெனவோராது அவவறிவாளியிடம் எனன நூலைக்கொண்டபபடி எழுதினீா் என வினாவினது புத்தியலல தன குறறம்பாரான பிறர்குறறம பார்பபதெனனே.

யாதொருகாரணமினறி இவரில நானிப்படிக குற்றஙகாட்டியதெனெனறு ஒருவரு மாசசரியபபடத் தேவையிலலை இவரிலெனககியாதொரு கோபதாபமுமிலலை இவரை நானறிந்ததுமிலலை பினனை நானிதை எழுதன நியாயமென்னவெனறுல இவரும உதயதாரகைக்குக கடிதஙகளை எழுதுகிற பிறரும விழிபபாயிருந்து இனிமேல் இயறறமிழில இப்படிப்பட்ட பிழைகள் எழுதாதபடிககு ஓரெச்சரிப்பாயித்தை எழுதினேன. இயற்றமிழ வாசகம் எழுதுவது மிகப்பிரதானம

இப்படிககு,
௲அ௱சஉம ஆ ஆனிமீ கஉ ந் தீ.   ஒருவன்.

௪ம் அதிகாரம்

அறன்வலியுறுத்தல் —*The power of Virtue*

௩௪. மனத்துக்கண் மாசிலனாதலனைத்தற
னாகுல நீரபிற.

பு. அந்த விதத்தினாலே தருமத்தைச்செய்பவன் தன் மனசினிடத்திலே குற்றமில்லாதவனாகிறதாகிய அவ்வளவை யுடையதே தருமமாவது அது அல்லாத சொல்லும் வேடமும் பிறரறியச்செய்யும் ஆரவாரத் தன்மையையுடையவை

Whatever is done with a spotless mind is virtue, all else is vain show. *Drew*

That which in spotless purity preserves
The mind, is real virtue, all beside
Is evanescent sound. *Ellis*

---

௩௫ அழுக்காறவா வெகுளியின்னாச்சொன்னான்கு
மிழுக்காவியன்றதறம்

பு. பொறாமையும் ஐம்புலன்களிலே செல்லுகின்ற இச்சையும் அவை காரணமாகப் பிறர்மேற் செல்லுங்கோபமும் அந்தக் கோபத்தினாலே வருங் கடுஞ்சொல்லும் இந்த நான்குந் தள்ளுண்டு போக நடந்தது தருமமாம்.

That conduct is virtue which is free from these four things, malice, desire, hunger, and bitter speech *Drew*

No XI

Through the medium of the *Mind* mankind

(Continued from page 128)

VALUE—To hold in respect and estimation.
PRIZE—To value highly
ESTEEM—To regard with reverence, respect or friendship
ATTEND TO—To stretch or bend the mind to a thing
MIND—To have in the mind
REGARD—To fix the mind on as a matter of importance
HEED—To attend to a thing from a principle of caution
NOTICE—To think on that which strikes the senses
REMEMBER—To have in the mind an idea which has been there before
RECOLLECT—To call back ideas to the memory
CREDIT—To rely on the truth of something said or done
INFER—To draw or derive as a fact or consequence
CONCLUDE UPON—To make up the mind to a thing
DETERMINE—To end or settle a point in the mind
DECIDE—To form a definite opinion
PURPOSE—To set before one's mind an object to be reached or accomplished
DESIGN—To form in idea as a scheme
INTEND—To fix the mind on
MEAN—To design with reference to a future act
PROPOSE—To offer or present for consideration
JUDGE—To bring to issue the reasoning deliberations of the mind
DEDUCE—To gather a truth, opinion or proposition from premises
DELIBERATE—To consider and examine the reasons for and against a measure
ADMIRE—To regard with wonder or surprise mingled with approbation
WONDER—To be affected by surprise or admiration
SURPRISE—To throw the mind unto disorder by something suddenly presented to its view
ASTONISH—To confound with some sudden passion
AMAZE—To be so perplexed as not to be able to collect oneself
ASSENT—To express an agreement of the mind to what is alleged.
CONSENT—To yield to what one has the power the right or disposition to withhold.
APPROVE—To admit the propriety of a thing

[To be Continued]

ஆடி மாதம்.

சாதிம் ஆடி ௰சந்தீ முதல் ஆவணி ௰சதீ வரைக்கும

E date	தமிழ் தேதி	வாரம்	நட்சத்திரம		திதி.		யோகம்		கரணம	
14	௧	வி	அ	௩௪	ஸ	௩௭ll	சி	௪௭	க	௰l
15	௨	வெ	சி	௩௧	அ	௩௨ll	சி	௪௰ll	வி	௫
16	௩	ச	சு	௨௮lll	ந	௨௮l	சா	௩௪ll	பா	ll
									கவு	௨௭lll
17	௪	ஞா	வி	௨௭ll	த	௨௫	சு	௨௯ll	கர	௨௫
18	௫	தி	அ	௨௭l	ஏ	௨௨lll	சு	௨௫ll	வி	௨௨lll
19	௬	செ	கே	௨௮l	து	௨௧lll	ஆ	௨௨l	பா	௨௧lll
20	௭	பு	மூ	௧௰ll	தி	௨௨l	மா	௨௰	தை	௨௨l
21	௮	வி	பூ	௩௩lll	ச	௨௩lll	வை	௰௮lll	வ	௨௩lll
22	௯	வெ	உ	௩௮l	0	௨௯ll	வி	௰௮	ப	௨௯ll
23	௰	ச	தி	௪௩lll	பி	௩௰l	பி	௰௮lll	கவு	௩௰l
24	௰௧	ஞா	அ	௪௯lll	து	௩௪lll	ஆ	௨௰	தை	௨ll
25	௰௨	தி	ச	௫௯l	தி	௩௯ll	சவு	௨௧ll	வ	௭
26	௰௩	செ	பூ	௯௰	ச	௪௪l	சோ	௨௩l	ப	௰௨l
27	௰௪	பு	பூ	௨lll	ப	௪௮lll	அ	௨௪	கவு	௰௯ll
28	௰௫	வி	உ	௮ll	ஷ	௫௨ll	சு	௨௫l	க	௨௰lll
29	௰௬	வெ	ரே	௰௩ll	ஸ	௫௫l	தி	௨௫ll	வி	௨௩lll
30	௰௭	ச	அ	௰௭ll	அ	௫௯lll	சு	௨௪lll	பா	௨௬
31	௰௮	ஞா	பர	௨௰	ந	௫௭l	க	௨௩	தை	௨௭
AUG										
1	௰௯	தி	கா	௨௧lll	த	௫௬l	வி	௨௰ll	வ	௨௬lll
2	௨௰	செ	ரோ	௨௨l	ஏ	௫௪	து	௰௯lll	ப	௨௫l
3	௨௧	பு	மி	௨௧ll	து	௫௬lll	வி	௰௨l	கவு	௨௩
4	௨௨	வி	தி	௰௯lll	தி	௪௬ll	அ	௬lll	க	௰௯l
5	௨௩	வெ	பு	௰௭	ச	௪௧lll	வ	lll	வி	௰௪l
							சி	௫௩l		
6	௨௪	ச	பூ	௰௩lll	*	௩௬l	வி	௪௬lll	சது	௯l
7	௨௫	ஞா	ஆ	௰	பி	௩௰l	வ	௩௯l	கி	௩l
									ப	௨௭
8	௨௬	தி	ம	௫lll	து	௨௪l	ப	௩௧lll	கவு	௨௪l
9	௨௭	செ	பூ	௧lll	தி	௰௮	சி	௨௪l	க	௰௮
			உ	௫௬						
10	௨௮	பு	அ	௫௪l	ச	௰௨l	சி	௰௯lll	வி	௰௨l
11	௨௯	வி	சி	௫௧l	ப	௭	சா	௯lll	ப	௭
12	௩௰	வே	சு	௪௮lll	ஷ	௧lll	சு	௩	தை	௧lll
					ஸ	௫௫lll	சு	௫௪	கர	௨௭lll
13	௩௧	ச	வி	௪௭	அ	௫௪l	பி	௫௧lll	வி	௨௫lll
14	௩௨	ஞா	அ	௪௯ll	ந	௫௨l	மா	௪௭l	பா	௨௩l

ஞாயிற்றுக்கிழமைச் சங்கிராந்தி நாடி ௫௯. விநாடி ௰கல, சிங்கரவி.

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

புத்தகம் சஞ்சிகை [illegible]] [illegible] Thursday, July, 7 1842 [Vol II No 13

தாவீதெழுதின அ[illegible] சங்கீதம்

(Versification of the 8th Psalm)

[illegible]

[illegible]

[illegible]

அநுபல்லவி

[illegible]

சரணங்கள்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

Gardener's Calendar for July

Madras

Mean Temperature 85 7—Average fall of rain 3 73

In this month it is desirable to sow celery, beet, knol khole, cabbage, cauliflower, brocoli, asparagus, endive, lettuce, carrots, and turnips

Celery —Sow in boxes in this and the two following months Remove to beds when about three inches high, and into the trenches, as required, after being a month in the beds The trenches should be 2½ feet deep, fill ed up with a foot of light soil and stable manure, and afterwards gradually as the plant grows, with light soil, till within about six inches of the top Water for the first two months with the hand, after which they may be occasionally flooded

Another Way —Having sewn and transplanted as above, remove into trenches four feet apart, and about 18 inches deep, nearly filled with horse manure and rich earth As the plant grows bank up into ridges, with light soil By this method the root of the plant and not the stem, is watered when flooded

Knol Khole, Cabbage, Cauliflower, and Brocoli —Sow in boxes during this and five following months Remove in beds when two inches high, and transplant the cabbage and knol khole twice, and cauliflower and brocoli at least three times, allowing the growth of a couple of new leaves between each planting

Asparagus —Sow in beds in July and remove the plants in November, into raised beds of one or two rows When the berries become red, cut the plants two inches above the ground and dress the tops when they will be ready to cut in ten days By dressing the beds in succession asparagus may be produced for the table all the year —stable manure is the best, and the plant should invariably be watered by the hand, and never flooded except in the hot wind season Plants if taken care of will produce for 8 or 10 years they should be or wintered (roots cleaned of the earth and exposed for some days) and the ground dressed every second year

Lettuce and Endive —Sow in boxes and pots surrounded with water till the plants appear otherwise the small red ant will destroy them plant out as required, and tie up a few days before you cut Black town or St Thome manure is the best

Carrots —Sow in light deep sandy soil

Turnips —Sow in rich soil well manured

Peas —Should the fall of rain be considerable, throughout June and in the early part of this month a few peas may be sown once a fortnight until the monsoon, but the plant dies so soon after they begin to pod, even in the most favorable seasons that the produce is generally less in quantity than the seed sown

In the market all Europe vegetables are scarce and dear this month Brinjals, greens, vadderkay and other native vegetables are supplied in small quantities Mangoes and pine apples are getting out of season Plantains cucumbers and melons are plentiful

Bangalore

Mean Temperature 75—Quantity of rain measured 4 inches

Mangoes still continue till towards the end of the month, young plants should then be grafted and the trees pruned as soon as they have done bearing, as that is the only time when it can be done with impunity Cuttings of all trees and shrubs should be put in this month, as well as slips of artichokes which as soon as they have established themselves should be cut down close to the ground The natives generally sow the raggy and cholum and prepare the ground for rice, and plant cuttings of sugar cane Flower and vegetables may still be sown, and in regular seasons the cabbage tribe of the first and second sowings should be finally transplanted The first crop of hay is cut this month

AUSPICIOUS OCCURRENCES No 3

The lost Tribes of Israel found

Messrs Editors,

Since the publication of Auspicious Occurrences No 2, a rare volume has come to hand, entitled, the Nestorians, or the lost tribes Containing evidence of their identity as being the descendents of the ten Tribes of Israel with an account of their Manners, Customs, and Ceremonies, together with sketches of travel in ancient Assyria, Armenia, Media, and Mesopotamia, and illustrations of scripture Prophecy, by Asahel Grant, M D '

Doctor Grant, the author of this volume, is a physician in connexion with the American Mission to the Nestorians in Ooroomiah, in Persia, which was commenced in 1835

The Nestorians are a remnant of that branch of the Christian Church, in western Asia which derived its name from Nestorius, a Bishop of Constantinople in A D 431 The Nestorian Churches hold a prominent place in Church History through a period or more than a thousand years From the seventh to the thirteenth century, more especially, they prosecuted the subject of Foreign Missions, with great vigor and unparalleled success They extended their Ecclesiastical Establishments throughout the principal countries (including several parts of India) lying between Persia and China These Establishments and the numerous Churches connected with them, have been to a great extent broken up and overwhelmed by the persecutions of the heathen Emperors, the Mohammedan conquests, and by conversions to the Papal See A remnant of these Churches have found an asylum —a place of sure defence, in the almost inaccessible mountains of Kurdistan in ancient Assyria, north east of Mesopotamia These mountaineers are denominated the Independent Nestorians "They acknowledge no allegiance to any other power, either in church or state, and such is the nature of their local situation in the heights of these mountains, where they obtain all the necessaries of life, that they may bid defiance to the greatest number of the deadliest foes that may combine against them These hiding places appeared to have been purposely provided by the God of nature and of providence for the preservation of the people whom ere long he will delight to honor "

The two points of special interest in the volume before us, are first that Dr Grant is the only favored foreigner who in modern times, has succeeded in ascending the heights of these mountains and in reporting to the civilized world the wonders that are to be there witnessed In the achievement of this object, singlehanded and alone, Dr Grant passed through a series of adventures which in point of interest leave ordinary fiction, far behind

Under date of October 18th 1839 he gives the following notice of one of the last stages of his perilous journey — "Equipped in native style I set off at an early hour in the morning and after a toilsome ascent of an hour and a half I found myself at the summit of the mountain where a scene indescribably grand, spread out before me The country of the Independent Nestorians opened before my enraptured vision like a vast amphitheatre of wild, precipitous mountains broken with deep dark looking depths and narrow glens into a few of which the eye could penetrate so as to gain a distinct view of the cheerful smiling villages which have long been the secure abode of the Nestorian Church There was the home of a hundred thousand Christians around whom the arm of Omnipotence had reared the adamantine rampart whose lofty snow capped summits seemed to blend with

the skies in the distant horizon " On descending into the interior in the first large and populous village he was presently met by a young Nestorian, who, a year before when entirely blind had visited Dr Grant's residence at Ooroomiah, and whose eyes had been opened by the removal of a cataract This circumstance proved a sufficient passport, to Dr Grant throughout those regions Under date of October 26th 1839 he writes "Started for the patriarch's residence Having heard of my approach he sent a horse at eight in the morning, with some of his own men to escort me to his dwelling which stands far up on the mountain side At half past twelve I found myself in the presence of the Patriarch of the east—the spiritual head of the Nestorian Church, who gave me a cordial welcome "

Subsequently Dr Grant writes, "during five weeks which I spent at the patriarchal mansion I had an opportunity to see Nestorians of the greatest intelligence from all parts of their mountain abode and to elicit from them such information as I had not an opportunity to collect in any other way " The second, and the greater point of interest contained in the volume is the amount of evidence collected and presented by Dr Grant, that these secluded and independent mountaineers are no others than the *sons of Israel*—the descendents of the ten tribes who were at different periods carried into captivity by the kings of Assyria in the 8th century before the Christian era It may be easy perhaps to rebut and to neutralize certain parts of the evidence adduced by Dr Grant in support of this position, but it is believed sufficient evidence will remain to give a salutary impulse to the interest already awakened in the Christian world in behalf of God's ancient covenant people, the Jews The novel movement among the unconverted Jews as stated in Auspicious Occurrences No 1, the appointment of a learned converted Jew to a Bishopric in Jerusalem and the Holy Land, by the united efforts of the two greatest Protestant states of Europe, is mentioned in No 2 and now, the affirmed existence of a large body of Israelitish Christians, the remnant of a Church that has borne the burden and heat of the day, in her struggles with the dragon, the beast and the false prophet,—these are recent occurrences of a most auspicious bearing upon the best interests of the Christian Church and upon the world, especially when viewed in connection with such prophecies as are contained in Isaiah xi 10—16 and Rom xi 15

சாப்புரைச் சங்கராயுதம்

(On Tamil Grammar)

உதயதாரகைக்கு முகாமைக்காரராகிய மகா ஸ்ரீ ஸ்ரீ துரை யவர்களே,

சரவணமுத்துக்குச் சாபாக்காரத்திகைசய சாப்புரையெழுதினதெப்போலவெனில் எழுத்தறியாச் சிறுவனொடமலெழுந் தாணைவைத்துக் கிறுக்கிப்புநுபே வீட ஏனெனில் நூலாசிரியராகக் குருமுனையாசிரியர்களும் இடையினத்துள்ளே றகரம் சொல்லப்படாதிருக்கிறதென்று குறித்தும் நன்னூல் முதலிய நூற்களையும் அவ்வுரைகளையுமறியாதிருந்தும் தான் விறுத்திய றகரவனுயிருந்த விருவையும் பற்றவனொரு ஓசேர்த்தும் போ எழுத்தறியாமற் சாப்புரையெழுத வந்தாரோ? ஆகா, நன்றாயிருந்தது கலோதரு நனிநலார் சற்றும் புறச் சொல்லாதிருக்கப்பெறினெ றகர குறிலைக் கறக்க கடவ சண்பக வீட்டுக் கோழி தானே விலைக்குப் பூட்டிக் கொண்டது போல இடையினத்திறகின்மூண்டா லிடையினமெனப் பேசும் பெருதென றெப்புறுத்தனபோதே தன்னறிவின்மையையும் வப்புறுத்திக்கொண்டாம், என்பபோபெறுகீ பெருமைலா இனங்கட்டி இடையினமெனப் பேரிட்டாரெல்லாம் நூலவர்? பவளிருயிருந்த மழுளிவலிரணடினமாயிருந்து முயிரினமெனப் போபெருதொழுந்தவே தணிணி நுமுயிர்மெய்யெழுத்தெல்லாம் முயிர் மெய்யொழுத்தாம் இப்படிக்கு,

மெச்சடச வதானப்புலவர் முதலான பல புலவர்கள்

(Conversion of a Roman Catholic Priest,)

முகாமைக்காரரே,

நான் வாசித்திருக்கும் பத்திரிகையிலே சந்தோஷமான இரண்டு விசேஷங்களை அறிந்தேன் அவை யென்னவென்றால் பிரான்சு தேசத்தின் தென்பக்கத்திலும், கல்கத்தாப் பட்டணத்திலும் பாப்புமார்க்கத்தில் வளர்ந்து நெடுநாளாகப் பிரசங்கம் பண்ணியிருந்த போதகர்மார் அம்மதத்தில் அடங்கியிருக்கும் தப்பிதங்களைக் கண்டு அறிந்தபடியினாலே அதை நீக்கி விட்டுப் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தின் கிறிஸ்து சபையிலே சேர்ந்தார்கள் அவர்களில் ஒருவன் தன்னுடைய சிநேகிதருக்கெழுதிய காகிதத்தின சில வாக்கியங்களை எடுத்துக்காட்டுவேன் நான் பாப்புமார்க்கத்திலே பிறந்து அந்த மார்க்கத்தின் வேதப் பிரமாணத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும்படியாகக் குருவாக ஏற்பட்டபடியினாலே நாளாவீதத்திலே அந்த மார்க்கத்தைக் குறித்துச் சொல்லிய புத்தகங்களிலே கூடியமட்டும் மிகசாமாயப் பார்வையிட்டிருக்கிறேன் ஆனாலும் இப்புத்தகங்கள் பாப்புமார்க்கத்தாராலே செய்யப்பட்டிருக்கிறபடியினாலே அவர்களுடைய நியாயங்களுக்குப் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் சொல்லும் எதிர்மொழிகளை நான் அறியவில்லை அப்படியிருக்க ரோமான கத்தோலிக்குச் சபை மெய்யான சபையென்றும், மெய்யுபதேசம் போதிக்கிறதென்றும் நிச்சயமாயெண்ணிக்கொண்டேன். கல்கத்தாப்பட்டணத்தில அச்சிற்பதிப்பிக்கப்பட்டு விளங்கிவருகிற ரோமான கத்தோலிக்குப் பத்திரிகை சற்றேறக்குறைய மூன்று வருடத்துக்கு முன்னே வாசிக்கத் தொடங்கினேன் சில சில பத்திரிகைகளை வாசித்தபின்பு புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் இதிலடங்கிய காரியங்களுக்கு என்ன மறுமொழி சொல்லுவார்களென்று அறிய உச்சாகங் கொண்டேன் ஆனதாற் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் அச்சிற் பதிப்பித்த கல்கத்தா கிரிஷ்டின் அட்வோகேட்டென்னும் பத்திரிகையை வாங்கிக் கவனமாய் வாசித்துப் பார்த்துப் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தாரிடத்திலே சாறும் பிழைகளைக் குறித்து நிச்சயப்படுத்தக் கூடுமோவென்று இருந்தேன் நான் கொஞ்சக் காலமாக மாத்திரம் வாசித்தபொழுது ரோமான் கத்தோலிக்குப் பத்திரிகை காட்டுங் குணமாகாதென்றும் அன்பில்லாதனவென்றும் சுவிசேஷங் கறபிக்கிற பிரகாரத்துக்கு விரோதமாக இருக்கிறதென்றுங் கண்டறிந்தேன் இப்படியே நான் வசித்திருக்கையில் என் மனதிலே தோற்றிய சந்தேகமாவது நிந்திப்பான விதமாயத் தாக்கப்பட வேண்டிய சபை மெய்யான சபையாயிருக்கக் கூடுமோவென்று என் மனதிற்குத் தோற்றப்படவில்லை அப்பொழுது அதிக கவனத்தோடும் ஆசையோடும் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தாரெழுதின நியாயங்களை வாசித்ததினாலே என்னுடைய விசனமுங் கலக்கமும் அதிகப்பட்டது என் மனதிலுள்ள இந்தச் சந்தேகங்களெல்லாம் ஒரு சிநேகிதனுக்கு அறிவித்து அவனாலே தரும் நியாயத்தையும் ஆறுதலான ஆலோசனையையும் பெறுவேனென்று கொண்டேன் வேறொருவிசேஷத்தாலே புரொட்டெஸ்டாண்டு வேதத்தையடைந்து வசித்து அதற்கும் எனக்குமுண்டாயிருந்த சில முக்கியமான விஷயங்களைக்குறித்து சத்தியமிருக்குமென்று அறியும்பொருட்டு அயினிய தேசத்தாரிடத்திலே போய் அவனுடைய வேதத்தைக் காணக்கவேண்டுமென்று கேட்டேன் விசேஷமாய்ப் போய் மெய்யெழுதின உ ஆகமம் உய அதி ருவசனமும், க. கொரிந் யக, அத உம் வசனமும் பாக்கிமிடத்தில கத்தோலிக்குப் போதகர்கள் தங்கள் காரியத்துக்காக இவையினமும் பல வசனங்களை மாற்றினார்களென்று புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தார் சொல்லும் வசனத்தை மெய்யென்று கண்டேன்.

இப்படியே இந்தக் காரியங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ரோமான் மார்க்கத்திலிருக்கிற தப்பிதங்களை நீக்கிச் சத்தியத்தைத் தெளிந்தவனேனாகிப் போட உறுதிப்பட்டு விளக்கமாய் என்னும் விசுப்புநுட்பத்திலே போய் என்னையறுத்துக் கொள்ளவேண்டுமென்றும் நான் ரோமான் மார்க்கத்திலே வாங்கின சம்பளத்திலே குறைத்துக் கொடுத்தார் போதுமென்று செ ன்னே அப்படியே ஆறுமாசங் காத்திருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டேன் இன்னும் சில நியாயங்களை விஸ்தாரமாய்ச் சொல்லிக் காட்டி முன் தனக்குள்ளேயிருந்த சபையாருக்கு மினவுதல் செய்து திருப்பத்தைப்பெறுப்பட்டேன் அவர்களை விட்டுவிட்டார் அவரெழுதின நியாயங்களும், நிருபங்களும் எல்லாம் அறியவிரும்புகிறவர்கள் சென்னைப்பட்டணத்திலே யெய மீ யிள தீ அச்சிறபதிப்பித்த (United Service Gazette) என்னும் பத்திரிகையைப் பார்க்கக்கடவர்கள்

Dindigal June 15th

(On the obstacles to the advancement of the Tamil people)

உதயதாரகையின் முகாமைக்காரரே,

இத்தேசத்தவர்களாகிய எங்கள் ஊரார் பிறந்தவர்களுக்கு நன்மைசெய்யவும், நன்மைசெய்யப்படுவதைக் காணவும் பொருட்டாய உங்கள் விலையேறப்பெற்ற உதயதாரகையில், உம புத்தகம் கம இலக்கக் கடதாசியில இவ்வூரவர்களுடைய செலவிக்கைக்கு சீர்திருத்தத்துக்கும் அடுத்த மூன்று முக்கியமான கேள்விக

ளைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ இவ்வூரவனுஞ் சற்றே உங்களைப் போல இவ்வூரவர்களுடைய நன்மையை விரும்பியவனுமான படியினாலே முதலாங் கேள்விக்கு மறுமொழியாகச் சில காரியங்களைச் சொல்லுவேன்.

கேள்வி. தமிழ்ச் சனங்கள் அறிவிலுஞ் சன்மார்க்க நடையிலுந் தேறுகிறதற்குத் தடைகளென்ன?

இது தெளிவாய் விளங்கும்பொருட்டு இத்தை இரண்டு பிரிவாய்ப் பிரித்து, முதலாவது, அறிவிற்றேறுகிறதற்குத் தடைகளெவையென்றும், இரண்டாவது, நன்னடையிற்றேறுகிறதற்குத் தடைகளெவையென்றுங் காட்டுவேன். அவற்றுள் முதலாவதுக்கு நாலு பிரதான தடைகளுண்டு. அவையாவன, க. வது முயற்சியில்லாமை. இந்தத் தமிழ்ச் சனங்களுடைய நடைகள் பழக்கங்களை அறிந்த யாவரும் இது மெய்தானென்று மட்டுக்கட்டியிருப்பார்கள். வேண்டுமேயாகில் வெளியாகவுஞ் சொல்லுவார்கள். முயற்சியில்லாமையாகிய இது சகல வகுப்பான சனங்களுக்குள்ளேயுங் காணலாம். சத்திரியர் முதலான நாலு வருணத்தவர்களுக்குள்ளும் நாலு பதினெட்டெனச் சாதியென வழங்கி வரும் பலவித சாதியான சனங்களுக்குள்ளும் குழந்தைப் பருவம், வாலிப பருவம், முதலான பருவத்தவர்களுக்குள்ளும் இது சரிவரப் பரம்பி வருகின்றது. அன்றியும் இந்தக் கேடு ஒரு குறிக்கப்பட்ட இடத்தில் நின்றுவிடவில்லை. ஆனாலும் அது தொற்று வியாதிபோல மனிதர் வீட்டிலிருக்கும்பொழுதும், வெளிக்கிட்டுலாவும்பொழுதும், வயல் வெளிகளிலிருக்கும்பொழுதும் சரிவர எங்கும் அவர்களைப் பிடித்துக்கொள்ளுகின்றது. மேலும் மனுஷர் நாலுபேராறுபேர் கூடி அங்கங்கே இருந்து பேசுகிறபோது பலமுறைகளிலும் சில பணக்காரனைக் குறித்துப் பேசுகையில் பெயர் சொல்லி அவன் பெரிய பணக்காரன் அவனுக்குக் கவலையென்ன, சும்மாயிருந்து காலும் நீட்டிக்கொண்டு சாப்பிடுவானென்றதாகச் சும்மாயிருப்பது பெரிய ஆசீர்வாதம்போலெடுத்துப் பேசுவார்கள். இதினால் இவ்வூரவர்கள் வறுமைப்படுவதற்கு முயற்சியில்லாமை காரணமாயிருக்கின்றதென்று தோன்றுகின்றதல்லவா? இந்த முயற்சியில்லாமை கல்வி பயிலுமிடங்களுக்குள்ளும் நுழைந்து உலாவுகின்றது. இவ்வூரில் அநேகர் மிகவும் அதிகமாய்ப் படித்து மற்ற தேசங்களிலுள்ள கல்விமான்களைப்போலக் கல்வியில் மகா வல்லவர்களாய் வரக்கூடியவர்களாயிருந்தும் மிகுந்த முயற்சியில்லாமையினாலே மழுங்கித் தாழ்ந்து கிடக்கிறார்கள்.

உ. வது இவ்வூரிற் கல்விப்பொருளிலுஞ் செல்வப் பொருளே கனமடைகின்றது. செல்வப்பொருளைப் பார்க்கிலும் கல்விப்பொருளே மேன்மையுடையது எனத் தமிழ் நூல் அநேகம் பெருமைபாராட்டிப் பேசினும் இவ்வூரில் நடையைப் பார்த்தால் இதற்கு மாறாகத் தோன்றுகின்றது. கல்வியினாலேயல்லப் பணத்தினாலேதான் ஒருவன் மேன்மையடைகிறானென்பதை இவ்வூரவர்களில் ஒவ்வொருவனுஞ் சொல்லுவான். இவர்களுடைய நடையும் இதற்குச் சாட்சியாயிருக்கின்றது. கல்வி கற்கிறதிலும் பொருளைச் சம்பாதிக்க இவ்வூரவர்கள் மிகவும் பிரயாசப்படுகிறார்கள். ஏனென்றால், கல்வியினுஞ் செல்வமே கனமடைகின்றதென்று காண்கிறார்கள். இதற்கிசைய நீதிவெண்பாவில், "கல்லாதேயானாலுங் கைப்பொருளொன்றுண்டாயின்—எல்லாருஞ்சென்றங்கெதிர்கொள்வர்—இல்லானை இல்லாளுந் தேடாள் பெற்றெடுத்ததாயும்வேண்டாள்—செல்லாதவன்வாயிற்சொல்" எனக் காட்டப்பட்டிருப்பது திருட்டாந்தமாமாறுகண்டுகொள்க.

க. வது தகுதியான புத்தகங்கள் தமிழ்ப்பாஷையிலில்லை. மகா நுண்ணிய கருத்துக்களை அடக்கி வாசக அலங்காரம்பொருந்திய நூல்கள் அநேகமாயிருந்தாலும் வழக்கமும் பிரயோசனமுமுள்ள காரியங்களில் மனிதருக்கு அறிவைக் கொடுக்கத்தக்கவைகள் தமிழ்ப்பாஷையிலில்லை. இங்கிலீஸ்காரர் முதலான சில சாதிகளுக்குத் தெரிந்திருக்குஞ் சாஸ்திர சூத்திரங்களில் அநேகம் எங்கள் ஊரவர்களுக்குச் சற்றும் விளங்காது அறியப்படாதிருக்கிறவைகள். தாமும் மிகவும் பூரணமாய் அறியப்படவில்லை. மேலும் ஊரில் வழங்கிவரும் நூல்களும் வெகு காலத்துக்கு முன்னுண்டானவைகள். என்றாலும், இவையும் வழங்காநின்ற சகலமும் முழுதும் பூரணமுள்ளவைகள், இவைகளை மாற்றவாகுதல் இவைகளுடைய தொன்மைக் கூட்டக் குறைக்கவாகுதல் அவசியமில்லவேயில்லையென்றதாக எல்லோரும் இப்படிப்பேராயப் பேசுவதுமல்லாமல் இவைகளை மாற்றக் கூட்டக் குறைக்க நினைக்கிறவர்களையும் அதிதுட்ட விவேகிகளென்று இழிவாய்ப் பேசுவார்கள். இவ்வித

மான எண்ணம் இவர்களுக்குள் இருக்கிறதால் இவர்கள் அதிகமாய்த் தேறுதல் அடைகிறதற்கு வழியில்லை. இதினாற்றானே ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்தவர்களுடைய மனவறிவிலும் இப்போ இருக்கிறவர்களுடைய அறிவு அதிகப்படவில்லை. மேலும் இப்போ படிக்கும் மாணாக்கர் ஆயிரம் வருஷத்துக்கு முன் பிள்ளைகள் படித்த ஏடுகள்தானே படித்துவருகிறார்கள். இதினாலே இக்காலத்திற் பாகிரிமாரிடத்திற் படிக்கிறவர்களையும் அடக்கிப் பேசினேனென்று நினைக்கவேண்டியதில்லை. ஆனாலும் இங்கிலீஸ்காரரும் மற்றுஞ் சில சாதிகளும் எப்போதும் புதிதான தேறுதல்களைக் கண்டுபிடிக்கும்படி முயற்சியாய்த் தேடிவருகிறதினாலே சகல காரியங்களிலும் அவர்கள் எங்கள் சாதியாரைப் பார்க்கிலும் மேலானவர்களாயிருக்கிறார்கள்.

ச. வது. படித்தவர்களுக்கு யாதொருவருமானமுமில்லை. மாணாக்கர் பிரயாசப்பட்டுப் படித்துத் தேறுதற்கு அவர்களை ஏவும் காரணம் இவ்வூரில் இல்லை. மனங்கொண்டு யாதொருவன் ஒரு செய்கையைச் செய்வதற்கு இரண்டு காரணங்கள் மாத்திரமே உண்டு. அவையாவன, பலனடைதலும், புகழ்ச்சி பெறுதலுமே. இவ்விரண்டு காரணங்களுமில்லாதவிடத்து எச்செய்கைகளும் மனங்கொண்டு செய்யப்படாவாம். இவ்வூரில் ஒருவன் பலனடைகிற காரணமாய்க் கல்வி கற்க வளமில்லை. அல்லவென்று அவனுடைய கல்வி வல்லபத்தை அறிந்து அவனைப் புகழப் போதிய அறிவுள்ள மனுஷர் அநேகரில்லை. ஆகையினாலே இவ்விரண்டு காரணங்களும் பெலன்செய்யாதவிடத்துப் படிப்புக் குறைந்துபோகின்றது. மூகாமைக்காரரே, தமிழ்ச் சனங்கள் அறிவிற்றேறுகிறதற்குத் தடைகள் இன்னின்னவென்று காட்டினேன். இனி நன்னடையிலே தேறுகிறதற்குத் தடையின்னதெனக் காட்டுவேன். இதற்கு ஒரே ஒரு தடை மாத்திரம் என் மனதிற் காணப்படுகின்றது. அதென்னவெனில், இவ்வூரவர்களுடைய மார்க்கந்தான். "எந்தச் சனமுந் தாங்கள் வணங்கிவருகிற தேவர்களைப் போலேதானிருப்பார்கள்" என்று இங்கிலீஸ்காரர் சொல்லி வரும் பழமொழிப் பேச்சு மெய்யென்பது எங்கள் ஊரவர்களுடைய நடையினால் அத்தாட்சிப்படுகின்றது. இவ்வூரவர்களுடைய மார்க்க உபதேசங்களேயன்றி வேறொன்றும் இவர்களை இவ்வளவு தாழ்த்துகிறதில்லை. இவ்வூரவர்களுடைய மார்க்கத்தினாற்றானே இங்கிலீஸ்காரர் முதலான சில சாதிகளிலும் நடையிலே அவர்கள் மகா தாழ்வாய் எண்ணப்படுகிறார்கள்.

<table>
<tr><td>௲அ௱சஉ ஆண்டு ஆனி மீ ௰தி
வட்டுக்கோட்டை சாஸ்திரப் பள்ளிக்கூடம்</td><td>தமிழ்ாக்குபகாரி</td></tr>
</table>

ம்., ம். மைனாத் துரையவர்களே,

[On restoring the confused letters of a Tamil verse]

தங்கள் பத்திரிகை உம புத்தகம் கூ. சஞ்சிகையின் கண்ணே வைத்தியலிங்கர் அவதானத்தைச் சோதித்தறிய விரும்பினீரே. அவர் சோதனையைப் பற்பல புலவர்களால் அறியவேண்டியதில்லை. அவர்கள் கட்டளைத்தினாலே நானே காட்டுவேன். காட்டுகிறதற்கு உண்மைப்புலவரை ஏசியிருக்கிறார். உசம. சீரிலே சீட்டுக்கவியாய் மாட்டியிருக்கிறார். "சிறட்டாதமகருமப் பிரணவப்பொருளை உபதேசிக்குமெய்க்குருக்கள்" எனத்துவங்கி, 'மற்றதுசங்கேதகமே" என முடித்திருக்கிறார். இந்த அடையாளங்களால் அவதானச்சோதனையை அறிந்தேனென்றவுரெண்ணட்டும். அதற்குப்பகாரத்தைப்பண்ணட்டும் அட்சரத்திற்குப் பவுண் குறையாமற்கொட்டட்டும், கொட்டிப் பொதுவிற் கட்டட்டும். அதனபின்பவதானமமெய்க்கும். அதல்லவென்றவர்கள் சொல்லும்பொய்க்கும்.

சென்னப்பட்டினம் ௲அ௱சஉ ஆண்டு ஆனி மீ உயதி — இப்படிக்கு இராயசாமிமுதலியார் வீரராயப்பக்கவிராயர்

(On Tamil Classics)

இலக்கியக்களஞ்சியம்

மகா கனம்பொருந்திய மூகாமைக்காரருக்கு வந்தனம்

(பிங்கலந்தை சூவது)

பிசனஞ் செஞ்சந்தனத்தின் பெயரே சபீதைபொன் வண்ணக் குறிஞ்சியாகும். உடு அல்லிவெண்ணிறவாம்பலிற்ப உரசன

(ஏகபாத நிகண்டு)

அகமேமனமுமிகுபாவமும்பெருமவனிசொலலும- அகமே பொறு
மையுமானமாவுடன காவமாருமனறி- அகமேதனனுள்ளுமகட்டொ

குளுளு சிறப்பாகுமென்பர்-அகமேயிடத்துடன் வாழ்க்கை பாசமு
மாகுமன்றே

(தகரவேதுகை)

அத்திரியோட்டகம் விண்ணுங் கருணையுமாகுமென்பர்- அத்திரி மாவும் வரையுங்கழுதையுமாகுங்கண்டாய்-அத்திரிக்கயந்தனுடனே மிக்கவஞ்சனமாம்-அத்திரிதானுங் கறுப்புமென் றோதுவரானறவரே

அரும்பொருளட்டவணைச் சூத்திரம்

ஒளிசெந்தென் பனவிட்டிலுமின்மினியும-
பசற்குருடென் பதுகூகையெனப்பகர்வர்
சானவிருப்பிக்கலமாங்கும
வேனமரமென் பது மீன்சந்திரனவே
கனுக்கட்டுருவிக்கலவுருவிப்பணடும
புலவுருவியென் று போற்றுவர் புலவர்

(கயாகர நிகண்டு)

பரிதியாதித்தனிமகரன்பதங்கன் பனிப்பகைவிணமணிபென் றாழ-அருணன்மார்த்தாண்டன் பாற்கரனக்கிரோனாயிரங்கதிரின்றபனன-இருள்வலிசண்டன் சூரியன் மித்திரனெலவியம்போருக்கணபன்-தருமொழிவேந்தன் சூரனேசவிதாத்தரணிகண்கடரவனெனபர்.

அனலியே பகலோன் வெய்யவன் பானுவரியண்டயோனியெழுபரியோன்-கனலியேசானன்றோ விரோசனன்மாவே காலத்தையளந்திட்டோனிரவி-இனனவிரிச்சிகனே திவாகரனெனறியலெற்றையாழியனுதயன்- தினகரனருக்கனனாயிழுவிகர்த்தன செப்பிய கிரணனமாலியனே

வைத்திய நிகண்டு.

கொடிவேலியெருக்குநொச்சிகுமிழ சங்கு மாவிலிங்கு-கடியுசெமமுள்ளிநாரிகரந்தையேகண்டங்கத்திரி வெடிதரு முருங்கைவில்வமேவாசகொம்புசிறுமுட்டி பெருமுட்டிதாழைதூதுளைபாடலம்பஇனனமூலம்

(ஔவை நிகண்டு)

ஏலந்தக்கோலஞ்சூடனிலவங்கஞ் சாம்பிராணிகாலஞ் செலவுகிலசந்தோகங்குங்கத்தூரிபுனுகுமெளவல்-சோலமாமருவுவெட்டிகுங்குமமிலாமிச்சமவோ சாலுஞ் சண்பகஞ்சவ்வாதுசாற்றுஞ்சோடசவாசப்பேர்

(போதிய நிகண்டு)

தட்டுநீட்டுக் குறைற்றணவினின் றுருகற்றலொனடைகுறைதவில்லாமை-கொட்டுகிறகடின மிமையாணிக்குக் கூறுமாற்றறிவித்தல சோதி விட்டுவிட்டொளிதலமிகுபுட்டத்திருத்தல்வெவ்வழலவென்றியைக்கொள்ளல-கட்டிசாயத்திடுமிற் பள்ளங்கொண்டதிக கனங்கொள்ளல்கனக்கட்சணமே

(ஆசிரிய நிகண்டு.)

சங்கரனசம்பு சதாசிவனுமாபதிதாணுவேபூதநாதன்-சந்திரசேகரனீலகண்டனீமத்தாடி தற்பரனேட்டியோடாடியங்கணன் பசுபதியரன்சிவனுருத்திரனசூலாடிபாண்டரங்கனந்திவண்ணன் பகவனந்திநணபனசோதியமலனாநந்தனதி- மங்கைபாகன் சடையாடியரவாபரணனமழுவாளிகையாளி- மாதேவனிருமலனமறைமுதவியோகியானிடபேந்திகாமதகன் சங்காதரன் கறைமிடற்றண்ணலேமமுகன் காலகாலன் கிரீசன் சங்காளமுத்தனித்தம்பரமனுலமர்கடவுணிறணிகடவுளே க

பெருமான்புராந்தகன் காமாரியந்தணன் பிறைசூடிநாதனக்கன-பிஞ்சகன் பித்தனகபாலிகணணுதன்மூர்த்தி பேசரியனாமூர்த்தி-கருணாலயன் கொன்றைசூடி முனமுனந்தகாரியழலேந்தியொளிமுக்கண்ணன்விமலன் குழைவிலவி திரியம்பகனகரியுரித்தோன புராரி- பரனேறுவாகனனசடையோனமகேசுரன் பாயபுலித்தோலுடையினன்-பரசுபாணிபினாகபாணி யிறையோன் குலபாணயீசனநாதி- யருள்சேரனந்தனவரன் முதலவனீசானனென றறைபடுமெண்பத்தேழுமே- யமராபணியீசுரற்கினியபெயரினைமுமனநதமுண்டபிதானமே. உ

இவற்றுள் வருஞ் சிலவருமபதங்களைக் காண்க.

(On the Doctrines of the Catholics)

உதயதாரகைப் பத்திரத்தினது முகாமைத்துரைகளே,

இராச்ரிஷி ஞானப்பிரகாசத்துப்புவிஸ் என்னும் குருவானவர் புரோடெஸ்டாண்டு மார்க்கத்துக்கு விரோதமாயெழுதி துஅாசகம ஆ புதுவையிற் பெரியகோயிலைச் சேர்ந்த அச்சுக்கூடத்தில் அச்சுப்பதிப்பித்துப் பிரசுரஞ்செய்த சஞ்சீவியென்னும்புத்தகம் நம் கண்டம் அம அதிகாரத்தில் தேவவாசகியத்தில் ஒரு வார்த்தையாகிலும் தள்ளவும் புரட்டவும்படாதென்று கூறியிருக்கின்றது. இன்னும் அப்புத்தகத்தின் மேற்சொல்லுங்காண்டத்தின் சும் அதிகாரத்தில் யோசே உம ஆகமம உம் அதிகாரம சு ரு வசனங்களிற் சொல்லப்பட்டிருக்கும் வசனங்கள் அன்னியதேவர்களை விலக்குவாயென்னும் முதற் கற்பனைகொத்திருப்பதால் ஒரேகற்பனையாய் முதற்கற்பனையோடு சேர்ந்திருக்கிறதாயுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. தேவவசனத்திலே ஒருவார்த்தையாகிலும் தள்ளவும் புரட்டவும்படாதென்று சொன்னவர் சருவேசுபரனாற் கொடுக்கப்பட்ட கற்பனையிலிரண்டையொன்றாக்கினதும் பெரிய துணிவுதான் ஆகையால் நான் கேட்டதென்னவெனில், கவது சருவேசுபரனாற் கொடுக்கப்பட்ட திவ்வியவசனங்களைப் பாவியாகிய ஒரு மனிதன் தள்ளவுங் கூட்டவுந் தகுதியுள்ளவனோவென்றும், உவது சருவேசுபரன் தாம் கட்டளையிட்ட முதலாமிரண்டாங் கற்பனைகள் ஒரே கருத்தென்பதை அவர் அறியாதிருந்தாரோவென்றும் கூவது அப்படித்தான் ஒரே கருத்தென்பதை அறிந்தவர்கள் தேவவசனத்திற் சொல்லியபடி முழுவசனங்களையுஞ் சனங்களுக்குக் கொடாமற் சிலவசனங்களைத் தள்ளிப்போட்டதேதுக்கென்றும் அறிய விரும்புகிறேன்.

இன்னும் அப்புத்தகத்தின் முதற்காண்டம் கம அதிகாரத்தில் அர்ச இராயப்பர் அல்லது பேதுரு பாப்புமாருக்குத் தலைவராயிருந்தாரென்றும் சும அதிகாரத்தில் பாப்புமார் பேதுருவின் பின்னடியாராயிருந்தார்களென்றும் அநேக நியாயங்கள் சொல்லப்படுகின்றது. அர்ச இராயப்பர் பாப்புமார்க்கத்துக்குத் தலைவராயிருந்ததுண்மையானால், அர்ச சின்னப்பர் அல்லது பவுல் கலாத்தியருக்கெழுதின நிருபம் உ அதிகாரம் எ, அ வசனங்களில் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படிக்குப் பேதுருவைப் பலப்படுத்தினவர் புறத்தேசத்தாருக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினதால் விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்கு ஒப்புவிக்கப்பட்டதுபோல விருத்தசேதனமில்லாதவர்களுக்கு அப்படிச்செய்யும்படி எனக்கொப்புவிக்கப்பட்டிருக்கிறதென்று பவுல்தானே விருத்தசேதனமில்லாத புறச்சாதியாருக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி நியமிக்கப்பட்டேனென்றும், பேதுரு விருத்தசேதனமுள்ள யூதருக்கு அப்போஸ்தலனாயிருக்க நியமிக்கப்பட்டானென்றும் சொல்லியிருக்கப் பிறசாதியாராகிய பாப்புமார் பேதுருதங்களுக்கு முதல் அப்போஸ்தலனாயிருந்தானென்று சொல்வதெப்படி? இன்னும் உரோமபுரியிலுள்ளவர்களுக்கெழுதின நிருபம் யக அதி யஈ வசனத்தில் புறத்தேசத்தாருக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே புறதேசத்தாராகிய உங்களுடனே பேசுகிறேனென்று பவுல் சொல்லியிருக்க இவ்வசனங்களையெல்லாம் மறுத்துத் தன் தகப்பனை விட்டுத் தெருவிலே போகிறவனைத் தகப்பனென்று கூப்பிடுகிறதுபோலக் கிறிஸ்துவினாலே தங்களுக்கு அனுப்பப்பட்ட குருவாகிய பவுலைவிட்டு விருத்தசேதனமுள்ள யூதருக்குக் குருவாய் நியமிக்கப்பட்ட பேதுரு தங்களுக்குக் குருவாயிருந்தாரென்று தேவ வசனங்களை மாற்றித் தங்கள் மதப்படி சொல்வதை ஆர்தான் என்ன செய்யக்கூடும்? இவ்விதமாய்த் தான் அவர்களின் போதனையெல்லாம் மாறுபாடென்பதைச் சகலருந் தெளிவாயறிந்துகொள்ளலாம். இதலலாமல் பேதுரு தான் புறச்சாதியாராகிய பாப்புமாருக்குத் தலைவராயிருந்து பாப்புமார் அவரைப் பின்பற்றினவர்களானால் பேதுருவைப்போல விவாகம்பண்ணாமலவிடவேண்டியதேதுக்கு? பேதுருவாகுதல் எனக்குப் பின்வருகிறவர்கள் என்னைப்போல விவாகம்பண்ணினவர்களாயிருக்கப்படாதென்று சொல்லியிருக்கிறாரா? அப்படியான வசனம் உண்டென்பதையுங் காணோம். இதல்லாமல் பேதுருவானவர் தான் கிறிஸ்துவினாற் தலைமைப்பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன் விவாகம்பண்ணியிருந்தாரென்று சொல்லுவீர்களாகில் கிறிஸ்துவானவர் பேதுருவைச் சகலருக்கும் தலைவராக நியமிக்கும்பொழுது பேதுரு விவாகம்பண்ணியிருந்ததை அவர் அறியவில்லையென்று சொல்லக்கூடாது. பின்னை கிறிஸ்துவானவர் சபைக்குத்

தலைவர்களாயிருக்கிறவர்கள் விவாகம்பண்ணினவர்களாயிருக்கவேண்டுமென்றெண்ணிப் புத்தியாய்ச் செய்தாரென்று சொல்லவேண்டும், பாப்புமாரோ பேதுரு தங்களுக்குக் குருவென்று சொல்லியும் குருவுக்கு மிஞ்சின சீஷர்களாய்விட்டார்கள். இதுவுமல்லாமற் சுத்தவாளரையுஞ் சுரூபங்களையும் வணங்கலாமென்றும் அவைகளைச் சங்கிக்கவும் ஆராதிக்கவுந் தகுமென்றும், அநேக நியாயங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளிலே தேவ வசனத்தின் அத்தாட்சியாக ஒரு நியாயத்தையுங் காணோம். ஆகையால் கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களுஞ் சுத்தவாளரையும் சுரூபங்களையும் ஆராதனைபண்ணலாமென்று பிரசங்கித்த வசனங்களுண்டானால் அவைகள் எந்த அதிகாரத்தில் எந்த வசனங்களிற் சொல்லப்பட்டிருக்குதென்று அறிவிப்பீர்களாக. தேவ வசனத்தின் அத்தாட்சியில்லாமற் சொல்லும் நியாயங்களைப் புத்திமான்கள் உண்மையென்று சொல்லவுமாட்டார்கள் அவைகளை நம்பவுமாட்டார்கள். அவைகள் எல்லாந் தந்திரமும் அபத்தமுமென்று சொல்வார்கள். சாட்சியில்லாமல் ஒரு குற்றவாளியென்ன நியாயஞ் சொன்னாலும் இராசாக்கள் நம்பவேமாட்டார்கள், அப்படி நம்புவார்களானால் அவர்களைப் புத்தியீனரென்று சொல்லுவார்கள். இதுவுமன்றி உம் கண்டம் 17 அதி ஒருவன் சருவேசுரனையும் கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க மனுஅவதாரம்பண்ணினாரென்றும் விசுவாசித்தாலும் உரோமான் சபையிற் சேர்ந்திராதே போனால் மோட்சஞ் சேரமாட்டானென்றுஞ் சொல்லப்படுகின்றது. இது அவர்களுடைய பெரிய தந்திரமாயிருக்கின்றது. ஏனெனில் மேற்சொன்ன விசுவாசமாயொருவன் உரோமான் சபையிலிருந்தால் மோட்சஞ் சேருவனோ? அப்படிச் சேருவானென்று சொல்லமாட்டார்கள். புரொட்டெஸ்டாண்டுமார்க்கத்தாரும் விசுவாசத்தினால் மோட்சஞ் சேரலாமென்று சொல்லுகிறதில்லை. விசுவாசத்தோடே தேவகற்பனைகளையுங் கைக்கொள்ளவேண்டுமென்றே பிரசங்கித்துவருகிறார்கள். ஒருவனுங் கிறிஸ்துவின் சில நியாயங்களைக் கைக்கொண்டாலும் மோட்சஞ் சேரமாட்டானென்று மேற்சொன்ன அதிகாரத்திற் சொல்லப்பட்டிருப்பதால் கிறிஸ்துவின் முழுக் கட்டளைகளின்படி நடந்தவர்கள் மோட்சஞ்சேர்வார்களென்று அவர் அறிந்து "சில" என்று சொன்னார். ஆகையால் உரோமான் சபையில்லல, இம்மெய்ச் சபையிற் சேர்ந்து அவர் கற்பனைகளின்படி நடப்பவர்கள் மாத்திரமே மோட்சஞ் சேர்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

கொழும்பு சஉ (௵). வைகாசி மீ. உ. தி — சுவிசேஷகன்

(Do Beasts have Souls?)

இதற்குத் தயவுசெய்யுங்கள்

திருவல்லைக் கதிரவேற்பிள்ளையென்பவர் மனுவொழிந்த மற்றுஞ் சீவசெந்துக்கட்கறிவுக்குறைவேயன்றி ஆன்மாவற்றவைகளன்றெனச் சொல்லியிருக்கக் கிறிஸ்தவர்கள் மௌனமாயிருப்பதேது. ஆனாலும் கிறிஸ்தவர்களுக்குளொருவரேனும் மேற்சொல்லியதைப்பற்றித் தம் மதக்கருத்தையும் அறிவிக்கும்படி கிறிஸ்தவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இப்படிக்கு

ஆனைக்கோட்டை தமிழ்ப்பள்ளிக்கூடம் ஓர் மாணுக்கன்
கணபதிப்பிள்ளை காத்திகேசன்

பட்சிசாலங்களுக்கும் ஆத்துமமுண்டென்று சொல்லுகிறதற்கு நியாயமில்லை. அப்படியவைகளுக்காத்துமமுண்டென்று சொல்லினும் அத்தைத் திருட்டாந்தமில்லாமல் ஒத்துக்கொள்ளக் கூடாது.

பத்திராதிபதி

(Patience and Resignation—a Story)

சல்வி என்னும் பெண்பிள்ளை அழகுள்ளவளும் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்திற் பிரியங்கொண்டிருந்ததினால் இரட்சகராகிய ஆண்டவரிலே மிகப் பிரியங்கொண்டவளுமாயிருந்தாள். அப்படியிருந்தும் அவளுடைய மாதாவானவளோ ஆத்துமகாரியத்தைப் பற்றிச் சற்றேனும் கவலையில்லாதவளாயிருந்தாள். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலமே காலச்சாப்பாட்டு நேரமளவிலே சல்வியென்பவளை மாதா கூப்பிட்டுச் சுறுக்குப்பண்ணியோடிப்போய் அப்பம் வாங்கிக்கொண்டு வாவென்றாள். என் மாதாவே, இல்லைக்கு ஞாயிற்றுக்கிழமையல்லவாவென்று சல்வியென்பவள் சொல்ல மாதாவானவள் ஞாயிற்றுக்கிழமையானால் உனக்கென்ன? ஞாயிற்றுக்கிழமையானாற் காலச்சாப்பாடு எங்களுக்கு வேண்டாமாவென்றாள். அப்போது சல்வியென்பவள் சனிக்கிழமை இராத்திரி அப்பங் கொள்ளுகிறதற்கு மறந்துபோனபடியால் ஞாயிற்றுக்கிழமையை மீறுகிறதிலும் அப்பம் புசியாமலிருக்கிறதே திறமென்றதாக எண்ணினாள். அப்பொழுது இவளுடைய மாதா இவள் நெடுகவல்லோ மாறாக்காரியத்தைப் பற்றிப் பேசுகிறாளென்றெண்ணி அவளுக்கு முதுகிலொரு அடியடித்து நீ தானே அப்பம் வாங்கப்போகவேணுமென்று கண்டிப்பாய்க் கட்டளைபண்ணினாள். சல்வியென்பவள் அடிபட்டுவிட்டேனேயென்றதினால் மாத்திரமழவில்லை. தன் மாதா கவலையற்ற சென்மமாயிருக்கிறாளே யென்பதை நினைந்து மிகுதியாய் மனங்கசிந்தழுது பள்ளிக்கூடத்துக்கோடிப்போய்விட்டாள். பிறகு அவள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்தபொழுது மாதா அவளை வீட்டுக்குள்ளே போகவும் விடவில்லை சாப்பாடு கொடுக்கவுமில்லை.

பின்னை இவளென்னசெய்தாளென்றால் தன்னுடைய படுக்கைக்கருகே முழங்காற்படியிட்டு "ஆ! என்னுடைய அருமையான பிதாவே, இப்படிப்பட்ட நெருக்கிடைகளைச் சகிக்கிறதற்கெனக்குதவிசெய்தருளும். நானோ பசியும் பலவீனமுமுள்ளவளாயிருக்கிறேன். என் இருதயங் கலங்கிப்போயிற்று. என்து மாதா அறியாத ஒரு போசனமும்மிடத்திலுண்டு. வந்து என்னுடைய ஆத்துமத்தைப் போஷித்து எனக்கு உறுதியையுந் திடனையுந் தாரும்" என்று கண்ணீர்வடியுடனே செபம்பண்ணித் தன்னுடைய மாதாவினிருதயத்தையுமாண்டவன் தொடும்படி செபம்பண்ணினாள்.

அவளிப்படிச் செபம்பண்ணி ஒழிந்தபொழுது பசியினிட்டம் அவளுடைய நாவரண்டுபோயிற்று. திரும்பவுந் தொப்பியை எடுத்துப்போட்டுக்கொண்டு மெல்ல மெல்ல இறங்கிப் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டாள். இது காரியத்தை இவளுடைய தாயனவள் பார்த்துக்கொண்டிருந்தாள். இவளுடைய உபாத்தியருமோ இவளிற் சில காரியமிருக்கின்றதென்று கவனித்தார். இவளோடே படிக்குமாணுக்கர்களும் என்ன காரியமென்றறிகிறதற்கு விருப்பமுள்ளவர்களாயிருந்தாலும் இவளோ ஒருவருக்குஞ் சொல்லவில்லை. ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்திற் படிக்கிற பிள்ளைகளை ஒருவருக்கொருவர் ஐமத்தப் பட்சமும் இரக்கமுமுள்ளவர்களாயிருக்கிற வாடிக்கையுண்டு. இவள் பசியாயிருந்தும் மற்றப் பேருடனே கூடத்தானுந் தன்னுவாத்தியாயர் சொன்னவைகளை உற்றுக்கேட்டுக் கேட்கிற கேள்விக்கெல்லாம் மறுமொழி சொல்லித் தன் மாதா செய்த காரியத்தையும் தானடைந்த பசியையும் மறந்துபோனாள். அவள் வீட்டுக்குப் போகும்பொழுது பசியினாலறிவுகெட்டுத் தேம்பி விழவேதுவாயிருந்துங் கதவுக்குக் கிட்டப்போனவுடனே இவளுடைய மாதாவுக்கு இது காரியத்தைப்பற்றி இரக்கம் வந்ததுமல்லாமல் அவளுக்கு நல்ல அறிவும் வந்தது. உடனே மாதாவனவள் பிள்ளாய், நானுன்னை இன்று முழுதும் பசியாயிருக்கும்படி விட்டதற்காக நானெவ்வளவு துக்கமுஞ் சஞ்சலமுமுள்ளவளாயிருக்கிறேன். உனக்கு வைத்த இராச் சாப்பாடு இங்கேயிருக்கின்றது. இன்றைக்கு எதுவுஞ் சாப்பிடாயோவென்றும் அல்லது இது காரியத்தைப்பற்றி வேறொருக்குஞ் சொன்னாயோ என்றுங் கேட்டு ஒருக்காலுமிவளை மறுபடியும் ஞாயிற்றுக்கிழமைகளில் அப்பம் வாங்கிக்கொண்டு வாவென்றுசொல்லத் துணியவில்லை.

இதை வசிக்கிறவர்களே! இப்படிப்பட்ட நெருக்கிடை உங்களுக்கு வருகிறபொழுது நீங்களாரிடத்துக்கோடிப்போவீர்கள்! ஒருவன் நானென்னுடைய போத்தியடத்துக்கோடிப்போய் மருந்தியானச் சாப்பாட்டை வாங்கித் தின்பேனென்பான், மற்றொருவன் போதகவீடு தூரமாயிருக்கின்றதே நானென்னயலகத்தாரிடத்துக் கோடிப்போய் வாங்கித்தின்பேனென்பான். மேற்சொல்லிய சல்வியென்பவள் என்ன செய்தாள் இவளிரண்டிலொன்றையுஞ் செய்யவில்லை. ஏனென்றால் இவள் தன்னுடைய குடும்பத்தாரிடத்துக்கு அல்லது அயலகத்தாரிடத்துக்குப் போனாற் சந்தேகமில்லை மற்ற தொந்தரவுவருமென்றறிந்தாள்.

காகிதப் பிரத்தியுத்தரம்

[Answers to Correspondents]

மாகியுண சத்திய வித்துவானாகிய வேதகிரிமுதலியார் அவர்களுக்குப் புகழ்ச்சியாக உடுப்பிட்டி திருவல்லை பள்ளிக்கூடத்துக் கதிரைவேற்பிள்ளையவர்கள் எழுதிவரவிடுத்த செய்யுளில் முதலியார் அவர்கள் அனுப்பிவரும் இலக்கணவிலக்கியங்களின் "பொருண்மாரி

பெருகித்ததும்பாவழிந்து தாரகைவழிவரக் கண்ணுடியுண்டுந்தக் குண்டாடுவணடெனக் கைக்கொண்டதுடகொண்டுளோர் கணதிநந்தியநிறந்து முத்தித்தலக்கதவுந்திறந்துதவலால," முதலியார் அவர்கள் சந்ததம் வாழ்கவெனச் சோபனங்கூறியிருக்கின்றது.

சுணடிச்குழி, கா. அகத்தியர் எழுதிய கடிதத்தை அச்சடியாமல் விடுகிறோம்.

சாவகச்சேரி "நடாயர் குமாரன் நகைபபிணிநச்சான்" அவர்கள் எழுதிவரவிடுத்தகடிதத்தைப் பிரசுரஞ்செய்யாமலவிடுகிறோம்.

யாழ்ப்பாணம் "செயதுமீராலேவை அலலாபிச்சைமரக்காயர்" அவர்களனுப்பிய கடிதத்தைப் பிரசுரஞ்செய்வோம்.

மயிலைநகர் "அ வேலாயுதர்" அனுப்பிய கடிதம் அச்சடிக்கப்படும்.

சனிநீராடு எனபதைப்பற்றிச் "சமரசவிநோதன்" எழுதின கடிதத்தைப் பின்னொருவேளையில் ஒருவேளை பிரசுரஞ்செய்வோம்.

ஆயுள் வேதவிநோதனின் வினுவுக்கு விடையாக "முன்னேயிற்கவனி" அவர்கள் அனுப்பிய கடிதத்தைச்சுருக்கி மறுபடி எழுதியனுப்பிஞல அதனைத் திருப்பூர்த்தியுடன் பிரசுரஞ்செய்வோம்.

உள போ சொற்படிக்குமெழுதின மூத்ததமபி அருணாசலம் அவர்களுக்கு மாருக "இளையோன சாரிஸ்யக்குட்டி நண்பன் ஆயுள் வேதசிலே" எனக் கையொப்பமிட்டனுப்பிய கடிதம் வந்துசேர்ந்தது. அக்கடிதத்தில உதயதாரகைப பத்திரங்களை வாசிப்பவர்களின தேற்றத்துக்கு உபயோகமானயாதொன்றுமில்லை. மேலைச் சஞ்சிகைகளிலே உண்டான சில பல தருக்கங்களிலே சில பலகாரியங்கள் சகலருக்கும வெளிப்படையாகக் கலமேலெழுந்தாகவிருக்கின்றதென்கிறார். இதை அவர் சொலலத் தேவையிலலை. ஏனென்றால சனங்கள் சகலரும அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கும் கலமேலெழுந்துப போலாகிருக்குமேல இவர் சொன்ன பேச்சைச் சனங்கள் ஒப்புக்கொள்ளார்கள். ஆதலால இதனைப் பிரசுரஞ்செய்யாமலவிடுகிறோம்.

காத்திகேயர் இராமலிங்கபிள்ளை எனக்கையொப்பமிட்டு 'உறுக்கிய திறன்மொழிக் கிறுக்கிய மறுமொழி" என முகவுரைபோட்டனுப்பிய கடிதத்தை ஒரு வேளை பிரசுரஞ்செய்வோம்.

வன்னியிலிருந்து "ஆதலையற்ற ஏழைகளின அபயம்" எனக் கையொப்பம வைத்தனுப்பிய கடிதத்தைப் பிரசுரஞ்செய்வதினால அதில ஏற்பட்டவர்களுக்கு நயமவருமெனபதாக எங்களுக்கு வெளிக்கவிலலை. ஆகையினாலே நாங்கள் இதைப் பயிரங்கஞ்செய்யவிலலை.

நீர்கொழும்பிலிருந்தனுப்பிய கடிதம வந்துசேர்ந்தது. அதில, (மஎ) தெயதி வெள்ளிக்கிழமை பிரசுரஞ்செய்யப்பட்ட "சிலோன எறலடில" அச்சடித்திருக்கிற சமாஷணையைத் தமிழில மொழிபெயர்த்து உதயதாரகையிற் பயிரங்கஞ் செய்யுமபடி கேட்டுக்கொண்டவர் அபபத்திரிகை சிலோன் ஏறல்டை எங்களுக்கனுபபினுல மெத்தநலலது. ஏனென்றால, நாங்கள் அப்பத்திரிகைக்கு கையொப்பசுகாரரலல.

கொழும்பிலிருந்து சொப்ஸிறைபர் எனக் கையொப்பமிட்டனுப்பிய கடிதத்தை ஒரு வேளை பிரசுரஞ் செய்வோம்.

கொழும்பிலிருந்து "மததுவேஷியலல" எனக் கையொப்பமிட்டவர் கொழும்பிலிருக்குங் கத்தோலிக்கக் குருமாருடையவனுத்தத்தனத்தைப் பற்றி முறையிட்டு அவர்கள தங்கள் பணங்களைத் தருமஞ்செய்யாமலும, தாம சீக்கிரமிறந்துபோவோமெனபதை அறியாமலும பணங்களைச் சேமித்து வைப்பதேனென்று வினவுகிறார். அவர் அனுப்பிய கடிதம் பெரியதாயிருக்கிறதினால அதனை அச்சடிக்கமுடியாது. அவர் கருதியெழுதின குருமாருமஇதினால விழித்திருந்து தருமஞ்செயகிறதைப பற்றித் தங்கள் ஆண்டவன கறபித்த முன்மாதிரியைப பின்பற்றுகிறார்களோ அலல வேறுவென்று பார்க்கட்டும. (ஆகா ம௲ உஉ)

கொழும்பிலிருந்து "கநதப்பனமேஸதிரி" அனுப்பினகடிதத்தை ஒருவேளை பின வருஞ் சஞ்சிகைகளொன்றிற பிரசுரஞ்செய்வோம்.

காவிநகர் 'வா ம. பக்கிரமாலுமியார்" அவர்களனுப்பிய கடிதம வந்துசேர்ந்தது.

அறிவித்தல்

என்னைக்குறித்து உதயாதித்தபததிரிகை அனுப்புவிக்கும மகா கனமபொருந்திய பிதுவினுக்கு எண்ணிறந்த வந்தனஞ் சாற்றுகிறேன. அவர் தமது நாம தேயமெனக்கறிவிக்குமபடி போற்றுகிறேன.

இபபடிக்குத்
தமிழப்புலவர் வேதகிரிமுதலியார்

புதினசங்கதிகள்.

யாழ்ப்பாணம்

மரணசங்கதி—ஆகமகலாநிபுணரும, இராமாயணம், பாரதம், காந்தபுராணம,புவனசாஸ்திரம, வான சாஸ்திரம, கணக்குச் சாஸ்திரம், இலக்கணவிலக்கிய முதலானவைகளில மிகவும வலலவருமாய் வெகு காலமாக இவவிடத்திலும மற்றெவவிடங்களிலுமபேர்பெற்றிருந்த ஸ்ரீ. ஸ்ரீ சிறசிங்கமுதலியார் குமாரனும, தலையசிங்கமுதலியார் தமபியுமாகிய ஆறுமுகம அவர்கள இவவிடத்தில இருந்து கொழும்புக்கும் போய் அவவிடத்தில உண்டான காய்ச்சலினால் ஆனி மீ. ௰சதி காலஞ்சென்றுபோனபடியால நாமெலலாருந துக்கசாகரத்தில அழுந்திப புலமபி அழுகிறோம.

இப்படிக்கு
பிராதுயர்சிரங்கி சினனத்தமபி கநதர்

சென்னசங்கதி—ஆனிமீ உசுதி. காலமே தெலவிப்பழையிலொரு பிள்ளை பிறந்தது. அதற்குத் தலை, உ கால, ச. முகம, உ கணை, ச கழுத்து, க, முகம் தலைக்கு முன்னும் பின்னுமாக இருந்தது. நெஞ்சுக்குக்கீழ்ப்பட இரண்டு பிள்ளைக்குண்டான அங்க முழுவதும் வெவ்வேறுகச் சரிவர இருந்தது. நெஞ்சையுமோ நுட்பமாகப்பார்த்தால வெவவேறுகத்தோற்றிற்று. சொரூப இலட்சணம் ஒரு பிள்ளையினுடைய நெஞ்சிலே வேறொரு பிள்ளை நெஞ்சு வைத்து நித்திரைகொள்ளுகிறதற்குச் சமானமாயிருந்தது. அதிவிரண்டும பெணபிள்ளைகளாயிருந்தன. அதிலொன்றை ஆண்பிள்ளையென்றுஞ் சிலர் சொலலுவார்கள்.

இப்படிக்கு
புதினச்சங்கதிபபிரியன் அப்புக்குட்டி

கோவரணமேந்துப்பள்ளிகூடம — இவ்விடத்திலே சில வருடக்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த கோவரணமேந்துப் பள்ளிக்கூடங்கள் எடுபட்டுபபோனதற்காக மெத்த விசனப்படுகிறோம. ஆகிலும இனிமேல உண்டாகப்போகிற ஒழுங்குச் சட்டதிட்டங்களைக் கேள்விபபடுமபொழுது மெத்தச் சந்தோஷப்படுகிறோம. இனிமேல வைக்கபபட விருக்கும பள்ளிக்கூடங்களிலே படிக்க விரும்பும மாணுக்கர் மாதமொன்றுக்கு பெலசுக் கணக்காக ஆறுமாதப் பணத்தையும முன்னேறக்கொடுத்துப பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படிக்கவேண்டுமென்றும், அவர்களைப் படிப்பிக்கும் உபாத்திமார்களுக்கும அவரவர் கலவிச் சாமாாத்தியத்தினபடி சமபளங் கொடுக்கபபடுமென்றுங் கேள்விபபடுகிறோம.

திருக்கோணமலை.

படைச்சேவகர் கலாதி.—போன மாதம் கூ தெய்தி திருக்கோணமலையிலிருந்து கொழும்புக்குக் கோவரணமேந்தாருக்கு (சஞ) பவுண்காசைக் கொண்டுபோன ஒரு உரு தூற்றுக்குடியிலேவந்து நங்கூரமபோட்டு நின்ற அன்றிராத்திரி நடுச்சாமத்தில அந்த உருவிலிருந்த (கூ) மலாயச் சோலசரெழும்பி அந்த உருவிமேல்பான முதலாளிகளையடித்துப் பறித்ததுமன்றி மோசம்பண்ணவும நினைத்தார்கள். அப்பொழுது தளகர்த்தனெழும்பி அவர்களைப்பிடித்துக் கட்டிவைத்துப்போட்டார். அவருக்கும வெகுகாயப்பட்டிருந்தது.

உதயதாரகைபத்திரத்தினது முகாமைக்காரருக்கு மிகுந்த சங்கையோடு எழுதிக்கொள்வதாவது,

கொழும்பிலடிபபிற்றி கொமசாரியென்றால கந்தோரிலே சிறப்பாக ஏறபட்டிருப்பவராகிய கொழும்பு நாலுகடவத்தையிற்குளே செட்டித் தெருவில குடிபதியாயிருக்குஞ் செட்டிகளிலுவிஸ பீரிஸ ஆசாபபபிள்ளையவர்களின வளவுடையாராகிய மதலெனுயூரி ஒந்தாச்சி ௲அளஎ ஆ. மாசிமீ ௰சதி பிறந்து தனது ௰௫ வயதாகிற ௲அஉஉ ஆ ஆடி மீ சதி. குறித்தலுவிஸபீரிஸ ஆசாடபபிள்ளையென்கிற வாலிபகாரனுடன விவாக சமமந்தமபண்ணி எட்டுப் பிள்ளைகளைப பெற்று வெகு செலவிக்கையாகவும, தெயவபத்தியாகவும உய வருஷக்காலம வாழ்ந்துண்டிருந்து தனது முபபத்தஞ்சாம வயதாகிய ௲அசஉ ஆ வைகாசிமீ ௰௬ தெயதி வியாழக்கிழமை காலமே மரணித்துக்கொழும்பில றெப்பிரமாது தமிழசந்தொமஸ கோயிலின சவக்காலையில அடக்கமபண்ணபபட்டது.

இந்த அருமையான பெண்சாதியை இழந்த புருஷனுகிய எனக்கும் என பிள்ளைகளுக்கும் இவளின பிதாமாதா, சகோதரர், சுற்றத்தாருக்கும இவவுலகத்தில யாதொரு ஆறுதலிலலாததுக்கத்தளிபபுக்கிடமாயிற்று.

இந்த துக்க விசனத்தைத் தங்களின உதயதாரகைப் பத்திர

த்தால பிரசித்தப்படுத்தக்கேட்டுக்கொள்ளுகிறவனும் குறித்த உதயதாரகைப்பத்திரத்தை வளமையாக எடுத்துவரும்படி கை ஒப்பமவைத்திருக்கிறவனுமாகிய தங்கள்தாழ்மையுள்ள பணிவிடைகாரன

L. P. Aperappee

(புதுத் தேசாதிபதியவர்கள் வருகை)

மார்க்கஸடுவிட்டேல என்பவர் சென்னபட்டினத்துக்கும, சிறீ சி ஆதா என்பவர் வெம்பாய் பட்டினத்துக்குங் கோவரணதேசாதிபதியவர்களாக நிசமிக்கப்பட்டார்கள். இவர்கள் இருவருங் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரிக்கிறவர்களானதினால இராச்சியங்களை நலமாய் நடத்திக் கோவரணமேந்தார் விக்கிரகாராதனையுடனகொண்டிருந்த சோமானத்தை அழிக்க எடுத்த உபாயத்தை இவர்களே தீர்த்துமுடித்தது, லாட எலலபோரோ என்ற அதிபதி வேதாகமங்களைப் பள்ளிக்கூடங்களிற் கொடுத்துப் படிப்பிக்கவெண்ணியிருந்த எண்ணத்தையும இவர்களே சரிப்படுத்திக்கொள்வார்களென்று நம்புகிறோம

சென்னபட்டினம்.

இடியால சம்பவித்தமரணம சென்னபட்டினத்துக்கடுத்த பழைவேற்காட்டுக்கு மேற்கே சமீபத்திலிருக்கும போரூரிலே நாளது மே மீ௨ புதன்கிழமை சாயந்திரம சுமார் நாலுமணிநேரம மழைக்கோப்பாயிருந்ததைக் கண்டு ஒரு வண்ணானும வண்ணாத்தியும போனார ஏரியிலே காயவைத்திருந்த உடுப்புகளெல்லாவற்றையுமெடுத்துக்கொண்டு போகிற வழியில மடமடவென்று பெருஞ் சத்தத்தோடே பேரிடிப்பாய்ந்து விழுந்ததை வண்ணாத்தி கண்டு பயந்து கீழே விழுந்து இருதயம் கிழிந்து செத்தாள் அந்த இடிபே ரூரிலொரு பனையின்மேலவிழுந்து அதையிரண்டாகக்கிழித்துக்கொண்டு பாதாளமபோய்ச்சேர்ந்தது —அருணோதயம (மே) இலக்கப் பத்திரிகையிலிருந்தெடுக்கப்பட்டது)

சிதம்பரம்

வலங்கை இடங்கைச் சண்டை ஒப்புரவாகுதல் இராசதானியிலுள்ள நமது பிரபுக்களெல்லாம சிதம்பரத்தில நடந்த அக்கிரமச் சண்டையைக் கேள்விப்பட்டவுடனே இதுவரையில கலவாயச்சமந்திருந்த அவர்களுடைய இருதயம் தீப்பட்ட மெழுகுபோல உருகனபடியால இனிமேல வலங்கை இடங்கைக்கடசி யென்கிற நாமமே வழங்கக்கூடாதென்று அவர்களிலொவவொருவருந் தீமானமபண்ணிக்கொண்டார்களென்றும அந்தத் தீமானத்தை நிறைவேற்றுவதற்குக் கவர்ணமேந்தாருக்கு அர்சி எழுதிக்கொள்ளப் போகிறார்களென்றுங் கேள்விப்பட்டோம. —அருணோதயம (மே) இலக்கப் பத்திரிகையிலிருந்தெடுக்கப்பட்டது

வெம்பாய்.

வாந்திபேதி வெம்பாயில வாந்திபேதியென்னுங் கொடியவியாதி பிரவேசித்து நாசஞ்செய்துகொண்டிருக்கிறதென்றும, யசனானகளுக்குள்ளே சுசாஅம போ மேற்படி வியாதிக்குப் பலியானார்களென்றும, குசராத்தேசத்திலிருக்கும இராணியவர்களுடைய உடமையாகச் சென்னைச் சார்ந்தவர்களில, கூகெயாபயங்குனி மீ௨ கூ திகதி தொடுத்து நாயந் திகதிக்குள்ளாக மேற்படி வியாதியினால நாசமாய் போய்விட்டார்களென்றுஞ் சமாசாரபத்திரிகையினாற் தெரியவந்தது —அருணோ ய இல பத்திரிகையிலிருந்தெடுத்தது.

கல்கத்தா.

ஆனிமீ. ௨, ௩, ௪திகதி.அளவில ஒரு கடும புயலுண்டாகி அநேக சனங்களையும, ஆஸ்திகளையும அழித்துப்போட்டது ஆற்றில நின்ற கப்பல்கள் சிலது கரைக்கிழுண்டுபோனதும, சிலது பாய்மரந் தெறித்ததும, சிலது தாழ்ந்ததும, அதினால அநேகமாயிரஞ் சனஞ் சேதப்பட்டுமபோனார்கள் இதைக் குறித்துச் சமாசாரப் பத்திரிகைகள் சொல்லுவதென்னவென்ல, சேதப்படாத ஒரு கட்டுவேலையும், வனாந்தரமாகாத ஒரு தோட்டமுமில்லை. எங்கே பார்த்தாலும மரங்களுந் தடிகளும நிலத்திற சிதறுண்டு கிடந்தன

அமேரிக்கா.

அமெரிக்கன போர்ட் சங்கத்தார பணவரவைப் பற்றிச் சற்றே முட்டுப்பட்டுக் கடனபட்டிருந்தாலும, இப்பொழுது அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவர்களுடைய தயாளத்தினால அவர்கள் பட்டிருந்த கடனில, (நயந்து)ஸ்பானிஸ்டலலார கொடுத்துத் தீர்த்துப்போட்டார்கள் இப்பொழுது வேசிறறன எனறபட்டினத்திலே பராபரனுடைய கிருபை அதிகமதிகமாய வளருகிறது.

SUMMARY OF NEWS.

JAFFNA.

Supreme Court—We understand that Mr Justice Starke is to take the Northern Circuit, and that the Supreme Court is to be opened at Jaffna on the 20th inst

Friend-in-need-Society—We understand that at the annual meeting of this Society recently held at the Court House, the following Gentlemen were elected Officers

H O' Grady, Esq, *President*
F C Grenier, Esq *Treasurer*
The Rev J D Ondatjie, *Secretary*

The Society's funds, we are glad to learn, are in a prosperous state, notwithstanding a few of the Subscribers have withdrawn their subscriptions

Singular Monstrosity—A singular instance of mal-formation of the human form in the person of an infant, was exhibited in the District Court of Jaffna, on the 30th ult before W K Burleigh, Esq Judge of the Valligamoe Court, in whose District the child was born

The child was still-born and the mother had been confined only the previous night The child had two heads, closely united in one skull and one chest From the chest to the lower extremities, the body was divided into two parts, having two legs attached to each It had two hands on each side perfectly formed After the examination of the body it was carried back to the village where its parents reside The mother of the child is about 20 years of age The father by occupation is a silver smith

Importation of Sugar

Considerable misapprehension, we find, exists with reference to the provisions of the Ordinance No 9 of 1840 An impression had gone abroad, that when it came into operation, we, denizens of the north, would be entirely dependant on Colombo for our supply of this most *necessary* of all *luxuries*, instead of availing ourselves, as heretofore, of the close proximity of the Madras Presidency, to import from thence. A good deal of inconvenience has been the result—most causeless, as it now appears The gist of the Ordinance is embodied in the two first Clauses, which absolutely prohibit the importation of *Foreign Sugar*, and of sugar the produce of any British Possession into which Foreign Sugar can be introduced, except to be warehoused for exportation But, no Foreign Sugar can be imported into the Madras Presidency, except for the purpose above specified, therefore, Sugar can be imported into Ceylon from the Madras Presidency, if accompanied with a Certificate of origin from the Officer of Government at the place where it was put on board —*Communicated*.

MADURA.

W Elliott, Esq who has had in charge the Zillah Court of this city for some months has been relieved by G W A Forsyth, Esq who entered upon his public duties about a week since Mr Elliott returns to his former situation of Assistant Collector and has taken up his residence at Dindigul

For the "Star"

On the 31st of May a fire broke out in the Agraharum of Perricolum Cusbah of Thunkurray Talook—consuming it, and the flames being carried by the high winds across the river the house of the Zemindar of Vadukurray was also set on fire and he was unfortunate enough to lose property to the amount of 5,000 Rupees

We know the Magistrate has published the strongest injunctions prohibiting the practice of smoking chiroots and carrying burning torches and his generally called attention to every other means of avoiding conflagrations We cannot too strongly impress upon our Readers the desirableness of attending to such rules This warning is sufficiently severe

Madura June, 11, 1842

Birth—In Nugger, at Shemagah, on the 17th June 1842, the wife of the Rev. W Miller S P G F P of a son *Communicated*

CALCUTTA.

Terrible Storm—Calcutta has been visited with a storm, which raged with great violence on the 2d, 3d, and 4th of June, destroying life and property to a fearful extent In the river some vessels were driven ashore, some dismasted, and others sunk, and many persons were drowned The Bengal Hurkaru of the 4th June says, "The river is swarming with the remnants of boats, and the spars of pinnaces and ships, and the beach is actually strewed with planks and timber, the fragments of the river craft that have been destroyed " On shore says the Englishman, "scarcely a building has been left uninjured—scarcely a garden has escaped conversion into a wilderness In every direction branches of trees lie scattered over the ground, and in many of the streets in Chowringhee and along the garden Reach road, entire trunks have been prostrated carrying with them the walls and railings which formed the enclosures " "The damage at the Botanical garden is frightful—this once beautiful spot presents a wide field of destruction."

OVERLAND INTELLIGENCE.

ENGLAND —In Parliament the Income Bill had been passed to the 87th clause by a large majority

A Dinner was given by the directors of the East India Company to the MARQUIS of TWEEDDALE and SIR GEORGE ARTHUR, on occasion of their appointments to the governorship of the Presidencies of Madras and Bombay SIR GEORGE ARTHUR with his family and suite arrived at Bombay with the present mail The *Marquis of Tweeddale* with his family and suite will leave England for Madras about the middle of July

We understand that both the MARQUIS of TWEEDDALE and SIR GEORGE ARTHUR are men of Christian principle It augurs well for the interests of British India when such men are selected to lead in the administration of its affairs We sincerely hope that under their auspices the measures for abolishing the Government connection with idolatry will be forthwith completed, and that the advancement of Christian Education, or Education comprising the *study of the Bible*,—which it is said Lord Ellenborough has resolved on attempting, will be properly encouraged and put forward at all the presidencies

European troops to the amount of 1600 men had sailed from Gravesend for India

Messrs Hastie, Oswald and Johnston, members of Parliament, had remitted to the Provost of Paisley, upwards of £ 1,000 which they had received from gentlemen in Calcutta, Madras and Bombay in aid of the fund for the relief of the distressed operatives of Paisley

The Queen had been graciously pleased to accept of the two Pegue ponies, which Mr Waller of Madras had sent to the young Prince of Wales

A public meeting was to have been held at London on the 12th May, to take into consideration the delay which at present occurs in the receipt and departure of the India and other mails, when a detailed statement was to have been submitted, shewing the advantages in point of time which would be gained if mails were landed and embarked at Southampton instead of Falmouth

By the published correspondence of the Madras steam Committee the following interesting particulars of the increasing facilities for overland and steam communication, between England and India are obtained

The Pacha of Egypt has offered to aid the transit of passengers and goods through Egypt by appropriating a sum equal to £ 20,000 from his treasury for improving the road and building a large hotel at Suez

Beside this, carriages and horses have been provided by different competitors for conveying passengers, and the terms are much more moderate than they have been heretofore

Active exertions are being made to get a semi-monthly communication established between India and Europe

The Steamer *Hindustan* was launched on the 26th April and it was expected she would be ready to sail for India in October —The *Bentinck*, it was hoped, would be launched in September or October No definite arrangements had been made about the *Precursor*, as the *Agents* could not dispose of her except for cash

FRANCE.

The French Chamber was in session at the departure of the mail The ministry are united, they enjoy the confidence of the king, and are constantly gaining ground in the confidence of the better portion of the people "The events of the last year have demonstrated that there exist in France the elements of a strong conservative party, which only requires to be well officered to move forward in a regular and steady track " The whole administration of M GUIZOT and particularly that of the present session has been greatly to his honor By his firmness, energy and tact he has quelled the spirit of faction and inspired a reverence for the Government and laws to a degree which has not been felt for a long time in France His policy is decidedly pacific In his remarks before the chamber he stated, that "the foreign policy of the cabinet would be perfectly independent, as regards the whole world, and free from all special and exclusive alliances," that whilst it "discarded the notion of any such alliance, it intended to keep up friendly relations and to live in harmony with all the powers of Europe " "We are serious in our ideas of good understanding which it is our intention to maintain with Great Britain We have a profound esteem for its Government, and we will not permit our relations with it to be disturbed by the contagion of animosities and public credulity "

AMERICA.

Religious —The American Board of Missions, notwithstanding the depression of the finances of the country, had succeeded in liquidating its debt of $60,000 by the contributions of the Christian public Great attention was given to religion in many of the principal places In Boston it was said the work of divine grace was uncommonly powerful

Political —Intelligence is received from America to the 14th April Lord ASHBURTON had arrived at Washington, and it was hoped that his mission would lead to satisfactory results Mr CLAY in the senate had made a speech in opposition to the attacks of the partisan press on Lord ASHBURTON's character and mission, and remarked that "he hoped that the American people would greet the arrival of this gentleman as the messenger of peace " "There is no danger" said he "of any rupture with Great Britain if proper ability is employed in the management of the controversy.'

The finances of the United States were in a very depressed state Treasury notes, bearing 6 per cent interest were sold at from 3 to 6 per cent discount

The Mexicans had resolved on invading Texas with a force estimated from 8,000 to 14,000 We imagine nothing would suit the Texans better than this movement, and we should not wonder if the repulsion of this force were followed by aggressive movements on the part of the Texans, which will finally subjugate the whole of Mexico to Texan influence

NOTICES.

No 1

NOTICE is hereby given that the Sub-Committee of Education in the Northern Province will receive applications for the establishment of schools in any part of the Province until the 31st July next.

The applications to contain a list of the names of the boys that will attend, with particulars of their age, parentage, and residence, and an express declaration of the willingness of the applicants to comply with the condition that the contribution of 3d per month required of every scholar attending a school of the Commission, be paid in advance every 6 months

Jaffna 24th June, 1842 }
H O'GRADY,
Secretary

No 2

NOTICE is hereby given that a number of Masters being required for the Government schools in the Province, the Sub-Committee for Education will receive applications from candidates for such situations till the 31st of July next

The Candidates will be subjected to examination, and the preference will be given to those found to be best qualified The amount of salary will be fixed in the case of each master selected with reference to his qualifications

Jaffna 24th June, 1842. }
H O'GRADY,
Secretary

CONTENTS —அட்டவணை

பாண்டியராசாக்கள் சரித்திரக் குறிப்பு	149
மகமதுவின் சரித்திரம்	ib
கூட்டெடெ பண்டிதர் பிரபஞ்ச சுருக்கம்	150
கடிதங்கள்	152-155
குறள்	156
பஞ்சாங்கம்	ib
தாவீதெழுதின அம் சங்	157
கடிதங்கள்	158-160
கடிதங்கள்	ib.
[illegible]	161

Historical sketch of the Pandian kingdom	149
Life of Mohammed	ib
Abridgement of Good's Book of Nature	151
Communications	152-155
Cural—The power of Virtue	156
Synonymous words	ib
Panchangam	ib
Versification of the 8th Psalm	157
Gardener's Calendar for July	ib
Auspicious occurrences No III	ib
Communications	158-162
Summary of Tamil News	163
" English News	164

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

உ புத்தகம். சஞ்சிகை. ௰௪] ௲௮௱௪௰௨ ௵ ஆடி. ௨௧, தேயதி வியாழக்கிழமை, Thursday, July, 21, 1842. [Vol. II. No 14

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு.

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 149.

இந்த மதுரை தேசத்து இராசாக்களை அபகரித்துப்பண்ணிக்கொண்டிருந்த துரைத்தனமாவது, துலுக்கர்கள் வந்து அதம்பண்ணினவுடனே நாசமாய்ப் போயவிட்டது சில காலம் பொறுத்து மேற்படி மதுரை தேசத்துப் பூர்வீக இராசாக்களுடைய வம்சா வழியில் வந்த ஒரு இராசனானவன், கன்னட தேசத்தாருடைய சகாயத்திலே மறுபடியுஞ் சிங்காசனத்தைச் சம்பாதித்துக்கொண்டாலும் ஆனாலும் விசய நகரத்திராசனானவன் எண்ணினபடியே அந்தத் துரைத்தனத்துக்கு ஆரம்ப காலத்திலேயோ, ௰௫ம் சதகத்தின் மத்திய காலமான கொஞ்ச நாளைக்குப் பிறகோ பாண்டிய தேசமானது அவனுக்கே பகுதிகட்டும்படியானதாய்ப் போய்விட்டதாகவுங் காணப்படுகிறது. சிங்காசனமேறின இந்த இராசாவுக்குச் சோமசேகரனென்று பேர் இவனுக்குப் பின்னே சந்திரகுமார பாண்டியன வரைக்கும் பட்டத்துக்கு வரிசையாய் வந்த இராசாக்கள் (௰௭) பேர் மேற்படி சந்திர குமார பாண்டியனுடைய காலத்திலே கிருஷ்ண இராயருடைய காரியஸ்தனொருவன் தெலுங்கு இராசாக்களுடைய வமிசத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு மதுரை நாயகமாரென்று பொதுப்பேர் கொடுத்ததுமல்லாமல், அந்த மதுரை இராசாக்களுடைய பூர்வ இராச்சியமெல்லாஞ் சுருங்கிப் போய் அந்த மதிலடிவாரத்துமட்டும் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற அந்தக் கொஞ்ச அதிகாரத்தையும வாங்கிப்போட்டான்

தஞ்சாவூர் இராசாக்கள் கிழக்குத் திசையிலேயும், வடக்குத் திசையிலேயும் பூர்வத்திலேதானே தங்களுடைய சரகத்துக்கு மிஞ்சி வந்ததும, வல்லாள இராசாக்கள் மேற்குத் திக்கிலே தங்களுடைய சரகத்துக்கும மிஞ்சிவந்ததுமல்லாமல, துலுக்கருடைய கலாபனைக்கும் விசைய நகரத்து நாயகமார்கள் மதுரையிலே தங்கள் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொண்டதற்கு மத்தியிலே மதுரை இராசாக்களுடைய பூர்வ அதிகாரத்துக்குட்பட்டிருந்த தக்கண இராசியங்களெல்லாம் தனித்தனியாய்ப பிரிந்துபோயிற்று. விசேஷமாகக் கீழ்ச் சமுத்திரக் கரையிலே இருக்கிற விரிந்த தேசங்களாகிய இராமநாதபுரமும், மறவ தேசமும வெகு காலமாகப பாண்டிய தேசத்துக்கு அடுத்த முக்கியமான குடிகளாயிருந்ததை விட்டுப், பாண்டிய அதிகாரத்துக்கு அடங்காமற் சுதந்திராகனாயப் போய்விட்டார்கள.

சுவாதீன இராசாக்களாயிருந்த மறவ தேசத்து, அல்லது இராமநாதபுரத்து இராசாக்கள் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு இவர்கள மேலான வமுசஸ்தர்களென்கிறதாகத் தோத்திரம்பண்ணப்பட்டார்கள். இந்தக் குடும்பத்து மூல புருஷனானவன இராமரிருந்த காலத்திலுள்ளவனாயிருந்தான. மேற்படி இராமரானவர் இலங்காசயம்பண்ணின பிறகு மன்னாருக்கு எதிரே இருக்கிற ஒரு சின்னத் தீவிலே ஒரு லிங்கத்தை உண்டுபண்ணி அந்தத் தீவுக்கு அதுமுதல இராமேசுரமென்கிற பேர் கொடுத்து அந்த லிங்கத்தையும ஆலயத்தையும ஆதிசேதுபதியினுடைய விசாரணைக்குள்ளே இருக்கும்படியாகவும் மேற்படி ராமேசுரத்துக்கு வரப்பட்ட போக்கை விசாரணைபண்ணிக்கொள்ளும்படியாகவும் ஒப்புவித்தார் ஆதிசேதுபதியென்கிறது சேதுவுக்கு முதல் இராசா என்றார்த்தம இப்படி நடந்து வருங் காலத்திலே துரைத்தனம்பண்ணுகிற இந்தக் குடும்பத்தைப் பூசிதம்பண்ணவேணுமென்கிற வெத்தனம் சினறு போய்விட்டது நிச்சயம்பண்ணக்கூடாத வெகு காலமட்டுக்கும ஆதிசேதுபதியினுடைய சந்ததிகளென்று பாவிக்கப்பட்டவர்களெல்லாரும பாண்டிய இராசாவுக்குப் பராதீனர்களாகவும ஊழியக்காரர்களாகவும இருந்தார்கள் முசாயித்ஷா என்றவன மதுரைக்கு வந்த சில வருடத்துக்குப பிறகோ [illegible]ம் வருடத்திலேயோ இராமநாதபுரத்தை ஆண்டவன் மதுரைக்குட்பட்டிருந்ததை நிக்கிரகம்பண்ணிவிட்டான. அவனுக்குப் பின அரசாள வந்தவர்கள் அந்தத் தேசத்துக்கடுத்த தேசங்களிலேயும், தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்தி வந்ததினாலே அது முதற் பெரிய மறவ தேசமென்றும், சின்ன மறவ தேசமென்றும் சொல்லிக்கொண்டு வந்தார்கள். மதுரை நாயகமார்களுக்கும், தஞ்சாவூர் நாயகமார்களுக்கும் இருந்த விரகசித்திரங்களினாலே மேற் சொல்லிய இரண்டு தேசங்களையும் வெவ்வேறு சமுஸ்தானங்களாகப் பிறகு பிரித்துக்கொண்டார்கள் அவர்களுக்கடுத்த சத்துருக்களுடைய கலகத்தினாலேயும், அவர்களுடைய விரக சித்திரங்களினாலேயும் சேதுபதிக்கு ஒரு சாசுவதமான ஏற்பாட்டைப்பண்ணிக்கொள்ள அதிகாரமில்லாமற்போயிற்று. மதுரை தேசத்துத் தெலுங்கு இராசாக்களும், தஞ்சாவூர் மராட இராசாக்களும் அவனவனுக்கு மேலான அதிகாரமுண்டென்று வழக்காடி ஒவ்வொரு காலத்திலே அந்த அதிகாரத்தைப் பண்ணிக்கொண்டும வந்தார்கள். கடைசியிலே காருடக நபாபுகள் துரைத்தனத்தை வகித்துக்கொண்டார்கள். அது பெரும்பாலும வேறுந் துரைத்தனத்துக்குக் கொஞ்சமேலாயிருந்தது கடைசியிலே சென்னபட்டணத்துக் கோவர்னமேந்தார ௲௮௱௧௨ம் வருடமுதல இரண்டு மறவர்களிடத்திலேயும் பகுதி வாங்கிக்கொண்டு ௲௮௱௧ம் வருடத்திலே ஆறுகாட்டு (Arcot) நபாபிடத்தில உடம்படிக்கை பிறப்பித்துக்கொண்டு சாவ அதிகாரமும தாங்களே பெற்றுக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

௰௪ அதிகாரம்.

(Mohammed alters the Kebla—Many of his followers greatly offended thereby—Mohammedan institution of prayer—Appoints the fast of Ramadan—Account of this Ordinance)

மகமதுநபியோடிப்போன (Hejira) இரண்டாம் வருடத்திலே அவரும அவருடைய சிஷர்களும முன்னே தங்கள் முகத்தை நேராகாட்டித் தொழுதுவந்த கெப்பிலா* (Kebla) என்கிற திசையை மாற்றினார்கள். கிழக்குத்திசையிற் பரம்பிவந்த மதங்களை அநுசரித்தவர்கள் அநுட்டிக்கும்பொழுது தங்கள் முகங்களைச் சில சில திசைகளுக்கு நேராகாட்டிக்கொள்ளுகிற வாடிக்கையுண்டு. யூதர்கள் எத்திசையிலிருந்தாலுந் தங்கடங்கள் முகங்களை எருசலேம் நகருக்கு நேராக ஏறெடுத்துச் செபம்பண்ணுவார்கள் அப்படியே அரபியரும் மக்கத்துக்கு நேர்முகங்காட்டித் தொழுதுவருகிறார்கள். சேபியரும (Sabians) துருவநட்சத்திரத்துக்கு நேராகவும், நெருப்பையும வெளிச்சத்தையுந் தேவனென்றெண்ணி அர்ச்சனை பண்ணிவந்த பாரசியரோ சூரியோதயமாகுங் கிழக்குத்திசையை நோக்கியுந் தொழுதுகொள்ளுவார்கள். இதைப்பற்றிக் கோருனில் கூறியிருப்பதைக் கேளுங்கள் என்னவெனில "ஒவ்வொரு மதத்தவர்களும் நோக்கித்தொழுகிறதற்கென்று வானத்திலே சில பல பகுதிகளையுடைத்தாயிருக்கிறார்கள்" மகமதுநபியும முதன்முறை மத்தினாவிற்சேர்ந்தபொழுது தம்மை யூதருடனே சிநேகம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தைப்பற்றியாக்கும தம்முடைய சிஷர்கள் அனைவரும எருசலேமைநோக்கித் தொழுதுகொள்ளவேண்டுமென்று கட்டளைபண்ணியெருசலேமைப் பரிசுத்தபட்டினமென்றும், நபிமார்களுடைய பட்டினமென்றுஞ் சொல்லிவந்தார். மகமதுநபி மூன்றொருவேளையில இந்த எருசலேமைத்தானே வணங்கித் தொழுதுகொள்ளுமிடமாகவும தம்மைப் பின்பற்றுகிறவர்கள் வந்தடையுந் தானமாகவும பண்ணிக்கொள்ள எண்ணமாயிருந்தும, யூதர்கள் சற்றுங் கீழ்ப்படியாதசனமென்று கண்டோ அல்லது தமது மற்றுமுண்டான அநுசாரிகள் வெகுகாலமாக மக்கந்தானே பரிசுத்தபட்டினமென்றெண்ணி வந்ததினாலேயோ (என்னவோ தெரியாது) ஆறேழுமாதத் தவணையிலே தாங்கள் முன் நேர்நோக்கித் தொழுதுவந்த கெப்பிலாவைவிட்டுச் சகலரும மக்கத்துக்கு நேர்நோக்கித் தொழவேண்டுமென்று சகலருக்குங் கட்ட

* "கெப்பிலா" என்பது மகமது மதாநுசாரிகள் நேர்நோக்கித் தொழுந்திசை.

ரபண்ணினார். இந்தப்பட்டினம் அவருடைய சொந்தமல்லாதிருந்தும் அதிகாரம் முஸ்லீம் துரைத்தனத்தாருடையதாய்வருமென்று நிச்சயமாயறிந்துகொண்டு தமது சீஷர்களுடைய பரிசுத்த பட்டினமாய் வைத்துக்கொண்டார் கோறுனிற்சொல்லியிருப்பதென்னவெனில், "நீரெவ்விடத்திலிருந்தாலும், தேவாலயத்துக்கு நேராக உமதுடைய முகத்தைத்திருப்பும்; உங்களுக்கு விரோதமாகச் சனங்கள் தருக்கத்தைத் தொடுக்காதபடிக்கு நீங்களெங்ஙனமிருந்தாலும் உங்கள் முகங்களை இவ்விடத்துக்கே நோக்குங்கள்" மகமதுநபி இப்படியே அந்த இடத்தை மாற்றினதினாலே அவருடைய சீஷரில் அநேகம்பேருக்கது போதாமையாயிருந்ததினாலும், இப்படியே அவர் செய்தது ஒரு நபியினுடைய கோட்பாடு நடைக்குப்போதாதென்றவர்களறிந்ததினாலும் மிகுதியான சனங்கள் அதினிமித்தம் அவரைவிட்டோடிப்போய்விட்டார்கள் ஆனாலும் மகமதுநபி யூதரிலே கடுவஞ்சமாய்ப் பொறுமைகொண்டிருந்ததினால் தான் மாற்றின ஒழுங்கே அதிக உத்தமமென்று விடாது பிடித்துப் பிடிவாதங்கொண்டு கோறுனில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறதாக அவர் சொன்னதென்னவெனில், 'நாங்கள் முன்னே தொழுதுவந்த கெப்பிலாவிலிருந்து நம்மைத் திருப்பினவாரென்று அறியாத மூடச்சனங்கள் கேட்பார்கள் கிழக்கும் மேற்கும் பராபரனுக்குடையதென்றும், அவர் தமக்குப் பிரியமானவர்களைச் செவ்வையானவழியிலே நடத்துகிறாரென்றுஞ் சொல்லும். இவ்வானத்தைநோக்கித் தொழுவேனென்ற நியமமுமின்றி யும்முடையமுகத்தைப்பற்பலதிசைகளுக்கும் ஐயுறலாய் நோக்கக் கண்டோம் ஆனாலும் உமக்குப் பிரியமாயிருக்கிற ஒரு கெப்பிலாவுக்கு நேராகத்திருப்புகிறதற்கு நாமும்மை ஏதுவாக்குவோம். ஆகையினால் மக்கத்துக்கு நேராக உங்களுடைய முகத்தைத் திருப்புங்கள். மெய்யாகவே, வேதாகமங்கொடுக்கப்பட்டவர்களுக்கு நீர் பலவித அடையாளங்களைக்காட்டினாலும், நீர் நோக்கித் தொழுந்திசையை அவர்கள் நோக்கமாட்டார்கள். அவர்கள் நோக்குந்திசையை நீரும் நோக்கமாட்டீர்."

'மகமதுவின் விசுவாசப்பிரமாணத்திலே தொழுவதைப் பார்க்கிலும் மேம்பட்டதாய்ப் பின்னொன்றும் விதித்திருக்கவில்லை. தொழுவதே அர்ச்சனைசெய்வதிற் பிரதான அர்ச்சனை. மகமதுநபி தாம் தொழுதல்தானே மார்க்கத்தின் தூணும், பரதீசின் திறவுகோலுமாயிருக்கிறதென்றும், [illegible] பண்ணியமதத்திலொன்றிலேனும் கடுகத்தனையுமில்லையென்றுஞ் சொல்லிவந்தார். அவர் தமது சீஷர்களுக்கு ஒருநாளிலே ஐந்து பிரதான நேரகாலத்தைத் தொழுகிறதற்கென்று விதித்துவைத்திருக்கிறார். அவையாவன, (௧)வது. காலையிலே சூரியோதயத்துக்கு முன்னும் (௨)வது. மத்தியானமுச்சிதிரும்பினவுடனேயும், (௩)வது. மத்தியானத்துக்குமாலைநேரத்துக்குமிடையிலும், (௪)வது மாலையிலும், (௫)வது இரவிலுந்தானே. மகமதுமதத்தார் கோவில்மணியை அடித்து வழங்காதகாரணத்தினாலே மேற்சொல்லப்பட்ட தருணங்களிற் பறைமுறைசாற்றுகிறவர்கள் பள்ளிவாசலில் நின்றுகொண்டு சகலருக்குமறிவிப்பார்கள். அப்பொழுது பள்ளிவாசலுள்ளிருந்தவர்கள் பள்ளிவாசலிலும், வெளியேயிருந்தவர்கள் தங்கள் சவுக்கங்களை நிலத்தில விரித்தும் முழந்தாட்படியிட்டுத் தொழுவார்கள், அவ்வேளையில் அவர்களுடைய வீடுகளில் அக்கினிபற்றித் தீ[illegible] எரிந்து சாம்பலாய்ப்போனாலும், அல்லது மாற்றார் நினையாதபிரகாரமாகச் [illegible] அவர்களிருந்தவிடத்தைச் சுற்றிக்கைபோட்டு வளைந்து பதிவிருந்து அவர்களைச்செயம்பண்ணவெண்ணினாலும் அவர்கள் [illegible]விட்டோயந்தொழுகை மல அதிகமனதுடனே தொழு[illegible]ருமத்தை முடிப்பார்கள். ஓகோ இதுமாத்திரமல்ல அவர்கள் தொழும் நேரத்தில், இருமல், தும்மல், சொறிதல் இவை முதலானவை சம்பவித்தால், திரும்பத் தொடங்கித்திரும்பத் தங்கள் மந்திரத்தை ஓதித் தொழுவார்கள் இவர்களிப்படித்தொழும்பொழுது பற்பலவித அங்கசேஷ்டைகளைப் பண்ணுவார்கள் எப்படியெனில், கைமேற் கைவைத்துத்தொழுதல், குனிந்துநின்றுதொழுதல், முழந்தாளில்நின்றுதொழுதல், நெற்றியைநிலத்திற்படவைத்துத்தொழுதல், தலையைப்பக்கமாயாட்டித்தொழுதல், இவைமுதலான அங்கசேஷ்டைகளே.

மகமதுநபி தமது மதத்தார் அனுட்டிக்கும்பொருட்டு ஸ்தாபித்த விரதத்தைப்பற்றி அவர் சொல்லிவந்ததென்னவெனில் "உபவாசமே மார்க்கத்தின் கதவென்றும், முறையாய் விரதமனுட்டித்தவன்தானே பராபரனுக்கு நன்றியறிதலைக்காட்டுவானென்றுந்தான்." கோறுன்முறைப்படி நோன்பிருந்து புலனையொடுக்கி அனுட்டவனின் சிந்தனைவைத்து அவரைச் சேர்த்துட்ட நினைத்துக்கொண்டிருப்பதே அங்கீகரிக்கப்படும் விரதமாயிருக்கின்றது இதைப்பற்றிக் கோறுன் சொல்லுவதாவது "ஆ சத்தியவிசுவாசிகளே! சனங்கள் அனைவரும் அஞ்சும்படிக்கு உங்களுக்கு முன்னிருந்தவர்கள் விரதமனுட்டிக்கும்படிக்குக் கட்டளைகொடுக்கப்பட்டதுபோல அப்படியே நீங்களும் விரதமனுட்டிக்கவேவேண்டியது. கொஞ்சநாளைக்கு நீங்களுபவாசம்பண்ணுவீர்கள். ஆனாலும் அவ்வேளையில உங்களில் ஒருவன் நோயாளியாயிருந்தாலும், அல்லது பிரயாணத்திலிருந்தாலும் அவன் மற்றநாட்களில் அவ்வளவுநாளைக்கு உபவாசம்பண்ணட்டும். உங்களிலொருவன் விரதமனுட்டிக்கும் முறையின்படி நடந்து பிறகு அதை விட்டுவிட்டானேயாகில் அவன் ஆதுலர்க்குத்தானங்கொடுத்துச் சரிக்கட்டிக்கொள்ளவேண்டியது. அப்பொழுது அவன் சரிவர முறைப்படி விரதமனுட்டித்தவனென்றெண்ணப்படுவான். இரமதான் (Ramadan) என்றமாதத்திலே நீங்களுபவாசம்பண்ணவேண்டியது ஏனென்றால் அம்மாதத்திலேதானே கோறுனாகமம் வானத்திலிருந்தனுப்பப்பட்டது". இஸ்லாமதத்தார் ஒரு அமாவாசிதொடுத்து மற்ற அமாவாசிவருமளவும் முழுமாதமாய் நோன்பிருக்கவேண்டியது அம்மாதமுழுவதும் அவர்கள் நன்கிரான பண்டபதார்த்தங்களைச் சாப்பிடவாகுதல், வெற்றிலை புகையிலைத்தூளாகிய கஞ்சா முதலானவைகளைக் குடிக்கவாகுதல், பெண்களுடன் சஞ்சரிக்கவாகுதல் ஏற்படமாட்டார்கள். பகற்காலத்திலே யாதொருபதார்த்தங்களை உட்கொள்ளவுமாட்டார்கள். பிறகு இரவிலே பள்ளிவாசலுக்கு முதலாளியாயிருக்கப்பட்ட இமான (Imam) என்னுங் குருக்கள் விளக்குகளைக் கொளுத்திவைத்தாலொழிய யாதொன்றையும் புசிக்கவுமாட்டார்கள் விளக்குகள் கொளுத்தப்பட்டவுடனே சகலரும யாதொரு தடையுமின்றித்தாங்கள் நோன்பிருந்த அன்று பகலமுழுதுந் தின்கிற சாப்பாட்டளவு இரவிலே யற்பலஇனிமையானபதார்த்தங்களை யுண்டு பெண்களுடன் உல்கவாழ்வில் பிரமாறுவார்கள் இதைப்பற்றிக் கோறுன சொல்லுவதாவது, "ஒருவெள்ளைநூல இராக்காலங்களிற் கருமைகொண்டதாய்க் காணப்படுகிறதினாலே அந்தக் கருநிறம் பொழுதுவிடிந்தவுடனே வெண்ணிறமாகுமளவும்," லௌகீக[illegible] சுகானுபவங்களை அனுபவிக்கவேண்டும் பிறகு விடிந்தவுடனே சகலரும் விரதமனுட்டிக்கத் தொடங்கியார்கள், அரபியருடைய வருஷக்கணக்குச் சாந்திரவருடமாயிருப்பதினாலே (௩௩) வருடகாலத்திலுள்ள ஒவ்வொருமாதமுஞ் சௌரவருடத்தின் பற்பலபருவங்களிலும் வரும்ஆகையினாலே கோடைகாலத்திலே இரமதான் என்றமாதம் வரும்பொழுது அவர்கள் பிடிக்கும நோன்பு அம்மாதத்தின்வெயில் மிகவுகோரமாயிருப்பதினால் மிகவுமருந்தவநோன்பாயிருக்கின்றது அன்றியும் அம்மாதவரையில், எழியவர்கள் பகற்காலத்திலே வேலைசெய்து ஒரு சொட்டுத் தண்ணீர்தானும் குடித்தாலும் அவர்களைப் பிடித்துக்கொன்றும்போடவேண்டுமென்றுங் கட்டளையுண்டு.

தென்சமுத்திர தீவில் நடந்த சங்கதி.

(Missionary Enterprises in the South Seas.)

௱௨௰ம பக்கத்தினின்று.

அறிவாளிகளிருக்கிற தேசங்களிலே வழங்கிவருகிற நியாயப்பிரமாணங்களைப்போல இவர்களுக்கு மிகவுங்கடுமையான நியாயப்பிரமாணங்களை நாங்கள் உண்டுபண்ணும் அவர்களுக்குள் வழங்கிவந்த பழக்கமெல்லாவற்றையும ஒரு முறையோடே தவிர்த்துப்போடக்கூடாமலுமிருந்ததினாலே இடைக்கிடையே சில குழப்பங்களுமுண்டாகக் கூடியதாயிருந்தன எப்படியெனிற் கிறிஸ்துமார்க்கம இவர்களுக்குப் போதிக்கப்படமுன்னமே இவர்களில அநேகர் ஒன்றுக்கதிகம அநேகபெண்களுடனே கூடிவாழுகிற வாடிக்கையை யுடையவர்களாயிருந்தார்கள். இவர்களில் அநேகர் குணப்பட்டு ஞானஸ்நானம்பெற ஆயத்தமாயிருக்கையில் அப்போதிவர்களை நோக்கி "அநேகம் மனைவிகளை யுடையவர்களாயிருக்கிற நீங்கள் ஒருத்தியை மாத்திரஞ் சொந்த மனைவியாகவைத்து மற்றவர்களுக்குஞ் செலவுகொடுத்துத் தாபரிக்கக்கூடுமேயானால் அவர்கள் மாத்திரம ஞானஸ்நானம பெறலாமென்று கேட்டுக்கொண்டபோது" காத்திராதபிரகாரமாக அநேகர் அதற்குச் சம்மதித்தார்கள் இப்படிச் சம்மதித்தவர்களில் இருபது இருபத்தைந்துபேர் சற்றே தொந்தரவுபண்ண நினைத்தார்கள். அந்தவூரிராசாவும இவர்களுக்குள் ஒருவராயிருந்தபடியால எங்களுக்கதிகம் கலக

கமாயிருந்தது. இவர்கள் சபையிலே சேர்ந்த சில நாளைக்குப் பின்பு சொன்னதென்னவெனில், தாங்கள் சிறிது நாளைக்கு மாத்திரம அந்தக் கூத்திப்பெண்களை விட்டுப் பிரிந்திருக்கவேண்டியதாக்குமென்றெண்ணினது மல்லாமல் முற்றுமவர்களை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமென்பதை விளங்கிக்கொள்ளவில்லையென்றும், அப்படியே விளங்கினதுண்டானால அந்த வேளையிலேதானே தாங்கள் கெட்டிக்காறிகளாயொவ்வொருத்தியைத் தெரிந்துகொள்ளக் கூடுமென்றுஞ் சொன்னார்கள். காரியங்களிப்படித் துலம்பிக்கொண்டபடியினாலே இதை அமர்த்திப்போடுவதற்கு(மித்தமனும்) நாங்களும் யோசனைபண்ணி எல்லாருமொருமிக்கக் கூட்டங்கூடும்படி செய்து ஒவ்வொருவனும் அவனவனுக்குப் பிரியமானபடியேயொவ்வொரு பெண்ணைத்தெரிந்து எலலாருமறியத்தக்கதாய் அவர்களைப் பிரஸ்தாபமாகக் கிறிஸ்துமார்க்கமுறைப்படியே கைப்பிடித்துக்கொள்ளவேண்டுமென்றும், அவர்களோடே சேர்ந்திருந்த மற்றும பெண்சாதி பிள்ளைகளுக்கு அவனவனே கூடியமட்டுஞ் சீவனத்துக்கேதுவும் வழிபண்ணவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டோம். சனங்கள் இராசாவின முன்மாதிரியைப் பின்பற்றக்கூடியவர்களானபடியினாலே இராசாவிடத்திலே "இதைப்பற்றி உமமுடைய வெண்ணமென்னவென்று விசாரித்தோம்" இராசா பிரத்தியுத்தரமாக நாங்கள் செய்கிற வயணம் நலலதுதானென்றேற்றுக்கொண்டு தாம் பெண்சாதிகளாய வைத்திருந்த மூன்று பேரில ஒருத்தியைச சொந்தப்பெண்ணாக ஊரறியக் கைப்பிடித்துக்கொண்டான். அவர்களில் ஒருத்தி தான் கைம்பெண்ணாகவிருக்கவேண்டுமென்றெண்ணி அரணமனையைவிட்டு ஓரிடத்திலத் தனித்திருக்கப்போனாள். இவள் இராசாவின் பிள்ளைகளை நலலாய் அனைத்து நடத்தி இராசா ஒன்றுக்குங் கவலைப்படாதபடிக்கு அவருடைய சமுசாரத்தின காரியங்களைத் தளம்பாமற் சாமார்த்தியமாய் நடத்தினவளானபடியினாலே இவள் தனியே வாசமாயிருப்பது சரியலலவென்று அநேகர் புத்திசொலலி அவளுக்காகத் துக்கித்தார்கள். நாயகனும அது திறமலலவென்று அவளுக்குப் புத்திசொன்ன போது, அவள் சொன்னதென்னவெனில், இராசா எதுகளிலொருத்தியைத் தமது சொந்த மனைவியாகத் தெரிந்திருக்கிறவிடத்தில நானும இருக்கச் சமபவித்தால ஒருவேளை இராசா ஏலனியமித்தியம் பாவஞ்செய்யச் சோதிக்கப்படக் கூடுமென்று சொன்னதினாலே அவள் தனியே வாசமாயிருப்பது நலலதென்று நாங்களு மொத்துக்கொண்டோம. இராசா இவ்விதமாகத் தம்முடைய நடத்தையை மாற்றினதினாலே அநேகம பெண்சாதிகளையுடையவர்களும எங்களெண்ணம்போல ஒவவொருத்தியை மாத்திரந் தெரிந்து கைப்பிடித்துக்கொண்டார்கள். இத்தொந்தரைகளுக்குப் பின்பு இவ்விடத்திலேயெலலாம பொழுங்காய நடந்துவந்தன.

(இன்னும வரும)

இலங்கைத்தீபக கிறிஸது சமயோற்பவவிருத்தாந்தம்
THE HISTORY OF CHRISTIANITY IN CEYLON.

(Translated from the "Friend")

யாழ்ப்பாணத்தை உலாந்தாக்காரர் (Dutch) பிடித்தாண்ட பொழுது அவ்விடத்தில் பிறஞ்சிஸ்கன்ஸ் (Franciscans,) சேசுத்திஸ் (Jesuitz,) தோமினிககஸ் (Dominicans,) என்னும்வரிசைகளிலுள்ள (சய) அல்லது (ருய) தேசிகரிருந்தார்கள். யாழ்ப்பாணநாடு வலிகாமம் (Walligamo) வடமராட்சி (Waddermaratchie) தென்மராட்சி (Tenmaratchie) பச்சிலைப்பள்ளி (Pachelapally) என நான்குபிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. வலிகாமம் டிஸ்திறிக்கில் (District) (யச) உலாந்தாக் கோவில்களுண்டு. அவைகளிற் தெல்லிப்பழையிற் (Tillipally) கோவிலதிக பிரதானமாயிப்பொழுது அமெரிக்கன் மிசியோன்தலங்களிலொன்றாயிருக்கின்றது. அது பெரிய கட்டுவேலையாய் அதிவிரண்டு வரிசையான தூணணிகளும், அக்கோவிலுக்கயலில் சேசுத்திஸ்குருமாராற் கட்டுவிக்கப்பட்டவீடுஞ் சிறப்பானமுற்றமும் புரோசனமுள்ளதோட்டமுமுண்டு. (துசாருஅ) ஆண்டு ஆவணிமாதத்தில் பால்தியஸ் (Baldeus) என்பவர் கிறிஸ்துமார்க்கத்தை இந்நாடுகளிற் போதித்துவந்தார். மறுபடி (துசாளச) ஆண்டு தைமாதம் ஊரவர்களிற் (யஉ) பேர் தேவானுமான அல்லது ஞானமான திரவியமாகிய சக்கிறமேந்தை அனுபவித்தார்கள். சித்திரை மாதத்திற் சக்கிறமேந்த அனுபவித்தவர்கள் (யரு) பேரும், அப்போதகர்வ்விடத்தைவிட்டுப்புறப்படுமுதல் (ஙய) பேரளவுக்குங் கூடினார்கள். (துசாகரும) ஆண்டில் அவர்களிஸ்தாபித்திருந்த பள்ளிக்கூடங்களில் (து) பிள்ளைகள் அளவுக்குப் படித்தார்கள். அவர்களில் (சாஅய) பேர்மாத்திரங் கிறிஸ்துமார்க்கத்தின் சத்துவாரத்துக்கடுத்த யாதொரு கேள்விக்கு மறுமொழிசொல்லத் திராணியுள்ளவர்களாயிருந்தார்கள் சிலவேளைகளிற் கோவிலிற் பிரசங்கங்கேட்குர்படி (உது) பேரளவுக்கு வந்து கூடுவார்கள். இக்கோவிலிலும் மற்றுங் கோவில்களிலுங் கழுமரங்கள் நாட்டப்பட்டு அவைகளிற் சேசுத்திஸ்குருமார் பிரதான பெருநாட்களில் இரட்சகர் பட்டபாட்டையும் அவரடைந்த மரணத்தையும் விவிலியவிலுள்ள மற்றுங் கதைகளையும்பற்றிய வருத்தமானங்களை ரூபங்களினாற் சனங்களுக்குக்காட்டினார்கள்.

மல்லாகம் (Mallagam) என்னுங் கோவிற்பற்றுக் கொஞ்சக்காலத்துக்குள் ஒரு மஸ்திறேத்து (Magistrate) இருக்குமிடமாகி அவ்விடத்திற் செங்கல்லினாற் கட்டப்பட்டு அதற்கருகாக ஒரு வீடுமுண்டு மல்லாகத்தில் இப்பொழுது ஒரு டிஸ்திறிக்கட்கோடுண்டு (District Court.) இககோவிலைப் பறங்கிக்காரர் கட்டிவைக்க உலாந்தாக்காரர் முற்றாகக் கட்டிமுடித்தார்கள். இவ்விடத்தில் ஸ்தாபித்திருந்த பள்ளிக்கூடத்தில் (உஈ) பிள்ளைகளும், ஞாயிற்றுககிழமைத் தேவாராதனைவேளையில் (ஈ) பேரும் வந்து கூடுவதுண்டு.

மயிலிட்டிக் (Mylitty) கோவிற்பற்றிலே (சுருஈ) அல்லது (துசஈ) சனங்கள் பிரசங்கத்துக்கு வருவதுண்டு. இககோவில் கல்லாற்கட்டப்பட்ட ஒரு பெரிய கட்டுவேலையாயிருக்கின்றது. இவ்விடத்திலொரு உபாத்தியாரும் (எஈருய) பிள்ளைகள் படிக்கிற ஒரு பள்ளிக்கூடமுமிருந்தது.)

சுத்தசங்கீதம்பொழித்தவனையாழவி-லதொட்டுமிகப்
பத்தியுறதியினிமையிறபாடியபாடலகளாற்
சித்தமுருகமுவூட்டியபோதவன் செவ்விருத
யத்திவிருநதகவித்திறமேநயககானதுவே—கவித்துறை

ஆனதிதுபோன்றதுமுன்யாருமறியாதவராய்ப்
போனமெனச்சொலலுகிறதோ பொயயன்றுஞான
னருளிறைலைபின்திசமாம்பொருளெனநிலறே
மருளறயாங்கண்டோமகிழந்த—வெணபா (அருளுதயம்)

கடிதங்கள்.

(On Tamil Grammar)

இலக்கணக் களஞ்சியம்.

மகா கனம்பொருந்திய முகாமைக்காரருக்கு வந்தனம்.

(அரியவிதி பொதுவியல்)

இட்டுவிட்டிரண்டும் வினையிடைச் சொல்லே. உ-ம்-எழுந்திட்டான-வந்துவிட்டான்-இவை எழுந்தான்- வந்தான்-என்றும் வருமெ-எ-று

(அகத்தியம்)

மண்ணிடத்திருப்பன தாபரசங்கமே
விண்ணிடத்திருப்பனவிண்மணிமதிமுதல்
புனலிடத்திருப்பன சலசரமுதலிய
அனலிடத்திருப்பன புகைசுடர் முதலிய
காலிடத்திருப்பன விருகந்த முதலிய
திசையிடத்திருப்பன கடன்மலைமுதலிய
மனதிடத்திருப்பன வாடல பாடற்பிற
உயிரிடத்திருப்பனவுயிர் ஞானமுதல்
காலக்கணிருப்பன கோடைகுளிர்பனிமுதல்

(இலக்கணத் திரட்டு)

உயிர்ப்பொருளுயிரிலாப்பொருளிருவகைய,ஊருதல் பறத்தல் நடத்தலெனவே, மூவகையாகுமுயிர்ப்பொருளினமே. இயற்கை செயற்கை யிருவகையினமு, முயிரிலாப பொருளென்றுரைத்தனர் புலவா

(துவலயாநந்தம்)

உயர்திணையஃறிணைப் பெயர்ச்சொல் வினைச்சொல், பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழில்வகை, யாண்பால பெண்பால பலர் பால் வேற்றுமை,பிறபெதிரவு நிகழ்வெனக்காலமூன்று, தன்மை முன்னிலை படர்க்கை மூவிடங், கோட்பொருள்புனைபொருளிடு குறிகாரணப், பெயாபொதுச் சிறப்புப் பருபதமபகாப்பதம, விகாரந்தோற்றுமை யாறுவழக்கிய, லியற்சொற்றிரிசொற்றிசைச்சொல வடசொன், முனமொழிபினமொழி மறுமொழிவினையொழி ,காரணச்சொல் காரியச் சொல்காரண, காரியங்காரியங் காரணமெய்ப்பொரு, ளுபமானப் பொருளுபமேயப்பொரு, ளுதாரணச் சொல்லுடன் விசேடணவிசேடியம, கருத்தாகருமமுடிவுசொற் சொற் பொருட், பயன்பொதுச் சிறப்புட் குணமெய்க்குண, மைவகைப புணர்ச்சி யோகம்வியோக, மாதாரப் பொருளாதேயப்பொரு, ளுயர்ச்சி தாழ்ச்சி சமமெனவறைத, விவ்வகையலங்காரத்துறுப்பென, வரியபெறலென்றறைந்தனர் புலவா எனின்—இச்சூத்திரத்துட்சொற்களனைத்துமலங்காரத்துறுப்பெனக் கண்டுகொள்க. அலங்காரத்துறுப்பே சொலவிலக்கணம-சொலலெனினுஞ சத்தமெனினுமொக்கும் சத்தம்-தருககம்-மீமாங்கிசை-என்னு மூன்று வகைநூலுங் காட்டவேண்டிய பொருட்டுக்குவலயாநந்தமெனப் பெயரிட்டவாறறிக—குவலயாநந்தமென்னுநூலியலறிவிக்குங்கால்- உறுப்பியல்-அணியியல-சித்திரவியல-எனமூன்றுமஉறுப்பியல்-சத்தவிலக்கணம-அணியல்-மீமாங்கிசையிலக்கணம-சித்திரவியல-தருககவிலக்கணமாகச் சொலலப்பட்டிருக்கின்றன. இனிமேலிவ்விதிகளிற் சிலகாட்டுவோம். இந்நூல மாணிக்கவாசகராற் சொலலப்பட்டது.

(இலக்கணத் திரட்டு)

இயம்புகாரகப்பதமிருபத்துநான்கே அவையே-காரணக் கருத்தா கருமகருத்தா, தெரிந்த கருத்தா, தெரியாக் கருத்தா, தலைமைக்கருத்தா தலைமையில கருத்தா, வறுவகையாகுங் கருத்தா காரகம

அசலமென்னவதியுஞ்சலமென்னவதியு, மாயிரண்டாகுமவதிக் காரகம.

அககாரணமும்புறக்காரணமு,மிருவகையென் பகாரணகாரகம் கொளிககாரகமூன்றெனக் கூறுவா

ஆர்வககோளியும டைபபுக்கோளியு மிரப்புக் கோளியுமென மூன்றாகும்.

பற்றுககருமம் விட்டுக்கரும, மிருபுறக்கருமந்தான்றெரி கருமந் தெரியாக்கருமந் தீபகக்கருமம்,கருத்தாக்கருமம காட்டிய[illegible]வமுங், கருமகாரகமெனக் கருதினரே.

சேர்பாதாரங்கலப்பாதாரம், பொதுவாதாரமயலாதாரமென் னால்வகையாமாதாரகாரகம்.

இவற்றுதாரணங்களினிவரும் பத்திரிகையில் வேறிலக்கணச் சாட்சியோடு விளக்குவம்.

(வீரசோழியங் காரகப்பதப்படலம்)

மேதகு நற்றொழிற் செய்வான் கருத்தாச் செயுங் கருவி, நிலை கரணஞ் செயப்பட்டதுநிறமார்கருமம், யாதெனினீங்குமவதியதாமிடமாதாரமாங், கோதன்று கோளியுங் கொள்பவனுருங் கொடியிடையே.

இ-ள-தொழில்செய்பவன் கருத்தாகாரகம், [illegible] யாதல கருவிகாரகம செய்யப்பட்டது கருமகாரகம்- நீங்குவதவதிகாரகம—இடமாதாரகாரகம்-கொள்பவன்—கோளிகாரகம்-எ-று— க

(வீரசோழியங் காரகப்பதப்படலம்)

வரைநின்றிழிந்தங்கோர் வேதியன் வாவியின் கண்ணிவிர்ந்த,விரைநிறை பூவைக்கரத்தாற் பறித்து விமலனுக்குத்,தன் நின்ற தீவினை நீங்கவிட்டானென்று சொலலுதலும், உரைநின்ற காரகமாறும் பிறக்கு மொளியிழையே உ

இ-ள-வரையவதிகாரகம்-வேதியன் கருத்தாகாரகம்- வாவியாதாரகாரகம்-பூ கருமகாரகம்-கரங் கருவிகாரகம்-விமலன் கோளி காரகம—காரகமாறுங்காண்க.

(துவலயாநந்தஞ் சித்திரவியல்)

ஒன்றிய சங்கை யொன்றுச் சங்கை, யெனவிருசங்கையியம்பப்பெறுமே.

காரணந்தோன்றிய விகற்பத்தின்படி காரியமுடிவுதோன்றுஞ் சங்கை

காரணவிகற்பங் கலவாக்காரியங், காரியவிகற்பங் கலவாக் காரண, மிருவகையொன்றிய சங்கையெனப்பெறும '

இப்படிக்குத் தமிழ்ப் புலவர் வேதகிரி முதலியார்

தற்புகழ்ந்தோரைத் தடுக்கும் வினு

குவ்லயாநந்தச் சூத்திரமு—மூலைபுனைசேலகண் முனிந்தார்ப்பது போற், கசடறக் கற்றோர் கல்வியாற்றலாற்றலைப்புகழ்ந்தருமெனப பெறுமே. இவ்விதிப்படி கசடறக்கற்றவனா யாழ்ப்பாணம உரைகல்லு என்று கையொப்பம வைத்த தோழி சொலலட்டுஞ் சொலவி வெல்லட்டும். இப்படிக்கு

பொன்னங்கால சுப்பிரமணியக்கவிராயா, களத்தூர்மாப்
பிள்ளை சுந்தரம இருவர் கையொப்பம்.

உரைகல்லு என்ற சொல்லு தோழிக்குச் செல்லவே செல்லாது ஒருககாலும வெல்லவே வெல்லாது, கலவிக்குரைகலலு அவவ்தானோ? கற்றோர்களேற்றுக்கொண்டு உரைகல்லு என்ற பட்டங்கட்டினாகளோ?அவன்தானே கட்டிக்கொண்டானோ சொல்வாளாக. இப்படிக்கு திண்டுக்கல அண்ணாமலைத்தேசிகர்
ஆறுமுகபபுலவர், சிவசங்கையச்சைமுத்தாபிள்ளை

உதயதாரகையை நடப்பிப்பவருக்கு

அய்யாவே,

தங்கள் தாரகை இரண்டாம் புத்தகம் ஒவ்வொரு சஞ்சிகையிலும பிரசித்தஞ் செய்துவருகிற எங்கள் ஆண்டவராகிய முகம்மது நபியின் சரித்திரத்தை வாசித்தேன். அது மிகவும் எனக்கு மலைவைக் கொடுக்கின்றது. அதில் இருக்கும் சமுசியங்களை விளுவுவதிலும அது பார்த் தெழுதும புத்தகத்தைப பற்றி விளுவுவது நலமென்று எண்ணுகிறேன. இது என அறிவுக்குத் தோற்றுகிறபடி ஆனை அடியைக் கண்டவனைக் கண்டவன ஆனையைப் பற்றிவிபரிக்கத் துணிந்தது போல, முகமமது நபியின் சரித்திரத்தைககண்டவனைக் கண்டவன் எழுதின புத்தகத்திலிருந்து இதைஎழுதுகிறீர்கள் என்றெண்ணவேண்டும் இல்லாததை எழுதுகிறவர்கள் கடைசியிலே நாயனுக்குக் கணக்குக் கொடுககமாட்டார்களே. ஆகையால் முகம்மது நபியின் சரித்திரத்தைத் தாங்கள் கோறுன் பாஷையில் இருந்து எடுத்து எழுதுகிறதோ? அல்லது கோறுனில

இருந்து இங்கிலீஸ்படுத்தின புத்தகத்திலிருந்து தமிழ்ப்படுத்தி எழுதுகிறீர்களோ என்பதையும், அப் புத்தகம் உங்களுக்கு எவ்விதமாகக் கிடைத்ததென்பதையும் எனக்கு அறிவித்தால் அதிலிருக்குந் தப்பிதத்தை நான் உங்களுக்கு அறிவிப்பேன். அப்படியே தம்பிரான் துணைசெய்வாராகவும்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை. இப்படிக்கு
தங்கள் பணிவிடைகாரன்,
The work entrusted, to them, such as gentleman's coats, caps, &c &c. Ladies' dresses, bonnets, stays, &c. &c will be delivered at the time promised, charges as usual, and excepting thread, country tape and country buttons they must be supplied with the other requisites

One month's credit allowed for the payment of their bills

J N Bastiansz and P A Jansz further beg to lay copies of the following testimonials, and trust to realize the patronage and encouragement of the public of Jaffna, in their undertaking

"This is to certify that John Nicholas Bastiansz has been employed by "me for the period of eighteen months as a Tailor, and I have to inform "all such as may employ him, that he is a steady, as well as a proficient "man to his trade ' (Signed)

Jaffna 27th June 1842 MARY STOREY, *Dress Maker*

"The bearer of this Philemon Jansz was our Tailor upwards of three "years—last year being chiefly sick, we had to get another in his place "He is a neat worker, can make either dresses for Ladies or Children " I paid per month 18 shillings or Rds 12 during the time he was able to "serve us " (Signed)

January 29th 1842 MARY PERCIVAL

Jaffna 11th July 1842.

NOTICE.

Mr Francis Toussaint begs to inform the Public that he has for sale at his Commercial Room in the Main street, Pettah, Superfine shooting gunpowder in Canisters of a pound each at two shillings per Canister for ready money

Jaffna, June 15 1842.

அறிவித்தல்

மெஸ்தர் பிருஞ்சிஸ் தொசேனை அவர்கள், சகலருக்கும் அறிவிக்கிறதாவது வேட்டையாடுகிறதற்கான உயர்ந்த தரவழி வெடிமருந்து ஒவ்வொரு றுத்தல், சப்பங்கிச் சாயந்திரந்த வெல்லைத் தகட்டிற செய்த கனிஸ்தரென்னுஞ் செப்புகளில் அடக்கிக் கொழும்பிலிருந்து வந்த நாளையிலே அவருக்கு வந்திருக்குதென்றும், யாழ்ப்பாணம் வெள்ளை மனுஷரிருக்கிற பெரிய தெருவுக்குச் சேர்ந்த கொம்மர்சல் றூமென்னும் வர்த்தகசாலையில் கனிஸ்தர் ஒன்றுக்கு செப்புப்பொன் ஆக்கு இரண்டு சிலிங்கு வீதமாகக் கைப்பேற்காசுக்கு விற்கவைத்திருக்கிறார்

யாழ்ப்பாணம் சீதாரியில் ௲அ௱சஉ ஆனி மீ ௧௫ தேதி

CONTENTS —அட்டவணை

	pages.		
Historical sketch of the Pandian kigdom	165	பாண்டிவள நாட்டுச் சரித்திரம்	165
Life of Mohammed	ib	மகமதுவின் சரித்திரம்	ib
Missionary Enterprises in the South Sea	166	தென் சமுத்திரத்திவில நடந்த சங்கதி	166
The History of Christianity in Ceylon	167	இலங்கைத்தீபக் கிறிஸ்து சமயோற்பவவிருத்தாந்தம்	167
Communications	168-170	கடிதங்கள்	168-170
The Zebra-Pancha Tantra Katei	171	விலங்கியல்— பஞ்சதந்திரக் கதை	171
The great Astrologer—A Story	172	ஒரு கதை—பழமொழி	172
Versification of Daniel iii	173	தானியேலின் தீர்க்க.	173
Auspicious Occurrences No 4	ib		
Answers to Correspondents	174	புதின சங்கதிகள்	174
Summary of News	175		

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

௨ புத்தகம். சஞ்சிகை ௰௫] ௲௮௱௪௰௨௵ ஆவணி. ௪, தேயதி வியாழக்கிழமை, Thursday, August, 4, 1842 [Vol. II No 15

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

Continued from page 165

இந்தப் பிரகாரம் மதுரை ராச்சியமானது கல்லல்பட்டிருக்கிற ஸ்திதியில, அத்துமின்றி எல்லைப்புரட்டிக்கொண்டவர்கள் சேதுபதி ஒருத்தன மாத்திரமேயல்ல, அடுத்த தேசமாகிய திருநெல்வேலியிலுங் கூட நாயகமாருடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்த மதுரையினின்றும பிரிநதுபோய்விட்டது. இப்படிப் பிரிந்துபோனபோதைக்கும் மறுபடியும இந்தத் தேசத்தைத் திருப்பிக்கொண்டார்கள் பின்பு சுவாதீனமாயிருந்த ஒரு பாளயக்காரன் அந்தத் தேசத்தைத் தனகைவசப்படுத்திக்கொண்டான் எதுவரைக்குமென்றால இந்தப பரத வருஷத்திலே தெக்கண கண்டத்திலே கானுடக நபாபினுடைய அதிகாரம வியாபித்த வரைக்குந்தான அப்புறம் இந்த நபாபினுடைய அதிகாரங்களும் இவனுடைய மற்றச் சுதந்திரங்களும் இங்கிலீஷ துரைத்தனத்துக்குள்ளாக்கப்பட்டன. மேலும இந்த ராமநாதபுரமுந் திருநெல்வேலியும அல்லாமல் இன்னம அநேக சின்னப பாளயப்பட்டுகளுந் தன்னரசாகவேயிருந்தன முதலாம் நாயகன் மதுரையைச் சுவாதீனம் பண்ணிக்கொண்டதின பேரிலே மதுரையின பூர்வீக துரைத்தனத்தார்கள செய்த குற்றத்துக்குப் பகைதீர்த்துக்கொள்ளும்படி ஐந்து இராசாக்கள் ஏகோபித்தார்கள். இந்தச் சிற்றரசு பாளயங்களெல்லாம் போன சதகத்தின மத்தியில இங்கிலீஷ தண்டுகளை மிகவும வருத்தப்படுத்தின தெக்கண தேசத்துப பாளயக்காரரிற் சில பாளயக்காரருக்கு முன்னோர்கள் மற்றவர்கள்ளரென்றால மதுரை ராசாங்கத்தைக் கடைசியிலே பாழாக்குகிறதற்கு வந்த விசய நகரத்து ஸ்தோமங்களுக்குக் கும்மக்குச் செய்த உாவாகளுக்குப பதினாறுஞ் சதகத்துக்கு மத்திய காலத்தில விசுவநாதநாயகனை விட்டிருந்த ஊர்களிலிருந்தவர்கள்தான். கொள்ளையிடுகிறதினாலேயும குறும்புபண்ணுகிறதினாலேயும் சீவனம்பண்ணுகிற இந்தச் சின்ன அதிகாரங்களைக் குறித்துத் திருநெல்வேலி தேசத்திலேயும திரிச்சிராப்பள்ளி தேசத்திலேயும (எ௨) பேரென்று சுதேஸ்தருடைய சாதனங்களிலே சொல்லப்படுகிறது அவர்களுக்குள்ளே அதது மீறின அதிகாரமிருந்தபடியால இவர்களுடைய இந்த எழுபத்திரண்டென்கிற தொகையானது அதிகரித்துங் குறைவுபட்டும எப்போதும மாறுபட்டும இருந்திருக்கவேண்டியதல்லாமற் சரியாயிருக்கவேண்டியது ஆரோக்கியமும மனித சஞ்சாரமுமில்லாத காட்டுக்குள்ளே அவர்களுடைய குடியிருப்பிருந்தபடியினாலேதான அவர்கள் பிழைத்திருப்பதற்கு ஏதுவாயிருந்தது மேலும் இந்தச் சுதேஸ்தருடைய துரைத்தனமானது அவர்கள் முழுதுமெடுபட்டுப்போகத் தக்கதாயிருந்ததில்லை ஆகையினாலே மூன்று சதகக காலத்துக்குள்ளே இந்தப் பரத வருஷத்தின தெக்கண கண்டத்தை அநேகஞ் சில்லறை அதிகாரிகள் தங்களுக்குள்ளே பகுத்துக்கொண்டார்கள் இவர்களை அந்தத் திருடர் கூட்டங்களுக்குத் தலைவரென்றுதானுஞ் சொல்லக்கூடாது அவர்களுக்குட் நேர்த்தியாயிருந்து கொள்ளையடிக்கிறவர்கள் பயிரங்கமாய்க்கொள்ளையடிக்கிறதைப் பார்க்கிலும சில்லறைத் திருடர்களை மேன்மையானவர்களென்றெண்ணிக்கொண்டு அவர்களுக்கு அநேகம பேர் துணையாயிருந்தாலொழியக் களத்திலே ஒரு எதிரியுடன சண்டைபண்ணத் துணிவுகொள்ளுகிறதில்லை நிலங்களை உழுது பயிரிடுவதற்கு அதிக சோம்பலுள்ளவர்களாயும் நிலைமையான வீடுகளைக் கட்டிக்கொள்ளாமற் கொள்ளையாடிச் சீவனம்பண்ணினார்கள் ஆகையினாலே அவர்களுக்கெப்போதும சீவனத்துக்கேதுவாயும புகலிடமாயுமிருக்கிற அடவிகள் விருத்தியாகிறதற்கேயல்லாமல அவைகளை வெட்டியெறிகிறதற்கு எவ்வளவும இஷ்டமில்லாதிருந்தார்கள் இப்படியினாலே பாளயக்காரர் கைப்பற்றியிருந்த தேசங்கள் மனித சஞ்சாரமில்லாத இமசகரமான காடுகளாயப பரவிப் போகும்படியாயிருந்தது ஆச்சரியமல்ல. மேலும் குடிவாழ்க்கை மார்க்கங்களை அபிவிர்த்திபண்ணுகிறதற்கு விவேகமுஞ் சக்தியுமுள்ள ராசரீகமானது ஏற்பட்டிருக்கவேண்டியது அப்படியேற்பட்டிராவிட்டால உழைப்பாளிகளான சனங்களைக் காப்பாற்றுகிறதற்கு ஏற்கனவே யோக்கியமானவைகளென்று கொண்டாடத்தக்கவைகளுங் காவேரிக்குத் தெற்கேயிருக்கிறதுமாகிய நல்ல தேசங்கள் கிறிஸ்துமார்க்கமுண்டாக வெகுகாலத்துக்கு முன்னமே எந்த ஸ்திதியிலே இருந்தவைகளாகப பரம்பரையாய்ச் சொல்லப்படுகின்றனவோ அந்த ஸ்திதியாய் மாறிப போயிருக்கவேண்டியதுதானே ஆகையினாலே அத்தேசங்கள் இராவணனுடைய சம்மந்தமான இராட்சதர்களும அனுமான் சம்மந்தமான வானரங்களும இன்னம ஒருதரம வாசம்பண்ண யோக்கியமான காடுகளாய விடத்தக்கவைகளேயல்லாமல மற்ற யாருக்கும் வாச யோக்கியமான ஸ்தானங்களாயிருக்கத்தக்கவைகள் அல்லவென்று நாம நிர்மாணித்துக்கொள்ளத்தக்கது

[இன்னும வரும.]

Life of Mohammed — மகமதுவின் சரித்திரம்

௰௫. அதிகாரம்.

(The Koreish undertake a new Expedition against the Prophet—The battle of Ohod—Mohammed and his army entirely defeated—His followers murmur—The prophet's poor devices to retrieve the disgrace incurred in this action—Resolves it mainly into the doctrine of pre-destination)

மக்கத்தில் உள்ளோர்க்குடிகள், மகமதுவுடன முன் பண்ணினயுத்தத்திற் தோல்விபோனதினாலே மெத்த மனமடிவும அவிசுவாசமுங்கொண்டு மகமதுவுக்கு விரோதமாகத் திரும்பவும படையெடுத்துப் போகவேண்டுமென்றெல்லாரும அவரவரே வேகங்கொண்டு மக்காவிலிருந்து தங்கள சத்துருக்களை முற்றிக்கைபோடும்படிக்கு ஆரம்பித்துப்போனார்கள் அப்பொழுது மகமது தானைகளின தொகை மிகுதியுங் குறைவாயிருந்ததினால, பட்டணத்தின மதிலுக்குட்பக்கமாக நின்று யுத்தம்நடப்பிப்பது திறமென்று மகமது தடைபண்ணினவேளையில, அவருடைய தானைகள் முன்னொருமுறையிற் செயானுகூலமடைந்ததினால இதிலுந் தாங்களே வெற்றியடைவார்களென்ற நம்பிக்கையினால அவர் பண்ணின தடையைக் கேளாமல வேகங்கொண்டு கூக்குரலிட்டு வெளியிலநின்று போர்நடப்பிக்கிறதற்கு நபியைக்கேட்டவுடனே அவரும பதியனாய்ச் சம்மதித்து நீங்கள்தானே வெற்றியை யடைவீர்களென்று நானமபிக்கையுடனே சொன்னார் அப்பொழுது மதினாவுக்கு வடக்கே (௪) மயில தூரமாகிய ஒகட்டு (Ohod) என்றமலையிலே மகமதுவின இரண வீரர்கள் (௲) பேரும பாளயமிறங்கிஒவ்வொரு வருணத்தவர்களும் மும்மூன்று கொடிகளையும பிடித்து அதிற பெரிய கொடியை நபிக்குமுன்னே கொண்டுபோம பொழுது மகமது நபியுத்தத்தைஆரம்பியுங்களென்று சொல்லுமளவும,தனுவேதத்திலமிகத்தோச்சியடைந்திருந்த (௫௰) விலவீரர்கள் தானையின முன்னணியிலே நின்றார்கள் அப்பொழுது மகமதுவுக்குவிரோதமான கோறிஸ்வங்கிஷத்தாரும் அதற்காயத்தமாய நின்றவேளையில அரபியருக்குள்ளே போர்த்தொழிலில மிகவல்லபமுள்ள (Caled) காலட என்பவன இராவுத்தர்க்கு முதலாளியாய நின்றான் அப்பொழுது ஆபுசேபியனின மனைவியாகிய (Hinda) இண்டா என்பவளும,மக்கத்திறபேர்போந்த வேறும (௰௫) பெண்சனங்களும இடைவிடாமற் தம்புருக்களைத்தொனித்துத் துடுப்புகளைத் தைரியப்படுத்திக்கொண்டிருந்தார்கள் அவ்வேளையிற போருமாரம்பித்தது அதிசீக்கிரத்து செயானுகூலத்தை யடைவீர்களென்று மகமதுவுந் தமது வீரர்களைத் திடப்படுத்தினார் அப்பொழுது மகமதுவின சத்துருக்களுடைய போரணி சற்றேகொலைந்து போனதினால மகமதுவின வளத்துக்கே வெற்றிகிடைக்கிறது போலிருந்தது அப்பொழுது முன்னணியினின்ற வீரர்கள் தங்களுக்குத்தானே வெற்றிகிடைத்து விட்டதென்றெண்ணி யாவருமவரவரே இரணகளத்தில அங்குமிங்குஞ் சிதறிப்போனார்கள் அப்பொழுது அவர்களுடைய சத்துருக்களிலொருவனாகிய காலட என்பவன் செயமடைகிறதற்குத்

ருணமிது தானென்றெண்ணித் தனது குதிரைப்படைத்தலைவனை மகமது சேனையின் முன்னணியில் விட்டுப் பிறகு "மகமது கொல்லப்பட்டான்" என்று உரத்தசத்தமாய்க் கூவென்று சொன்னான். மகமது செத்தானென்ற இந்தப் புரளியான வீண்கதை எங்குமெட்டினதினாலே அவரைச்சார்ந்த துணைவர்களெல்லாரும் தைரியவீனப்பட்டு அங்குமிங்கும் கலைந்து ஓடினார்கள். அப்பொழுது மகமது இதைக்கண்டு தன்னுடைய தடுப்புகள் கொலைத்தொடாதபடிக்குப்பணணியுங் கூடாமற்போயிற்று.

மகமதுவுந் தைரிய பராக்கிரமத்துடன் போர்செய்தார். மோசத்துக்கெல்லாந் தாமே எதிர்த்துநின்றார். ஒரு கைவேலினாலே முகத்திற் காயமும்பட்டார். ஒருகல்லு அவருடைய பற்களையுடைத்துத் தவிடுபொடியாக்கிப்போட்டது. அவர் குதிரையாலும் விழுந்துகிடந்தார். அவ்விடத்திலே அவருடைய அநுசாரிகளில் அநேகர் அவரைக்காவிக்கொண்டு மறு இடத்துக்குப்போகாவிட்டால் அவரன்றைக்குச் சாவடைவதே நிச்சயம். இது சத்தியம். அவருடையபோர்வீரர்களில (௭௰) பேர் களத்தில் மடிந்தார்கள். நபியின் சிறப்பபனாகிய காம்சா (Hamza) என்பவனுமடிந்தவர்களிலொருவன். அனைவரும் அவஸ்தையான உயிர்ச்சேதத்துக்குக்கப்பட்டிருந்தார்கள். அநுசாரிகளுங் காரியத்தைக் காணக்காண முறுமுறுக்கத் தொடங்கினார்கள். நபியோ தங்களை அனுப்பிப்போட்டாரென்றுமெண்ணங்கொண்டார்கள். சனங்களுமிப்படிப்போக, மகமதுநபியுஞ் சனங்கள் செய்துகொண்ட பாவத்தினாலே இப்படிவந்ததென்றார். ஆண்டவனிப்படியெல்லாஞ் செய்தது அவர்களுடைய விசுவாசபத்தியைச் சோதிக்கிறதற்கென்றுஞ் சொன்னார்.

இதைப்பற்றிக் கோறானிற் சொல்வதைக்கேளுங்கள் * ஒகட்டென்னுமலையிலே விக்கினமுங்களுக்குச் சம்பவித்தபிறகும் இதெல்லாமெங்கனமிருந்துவந்ததென்று கேட்கிறீர்களா? அதற்கு மறுமொழி இதெல்லாமுங்கள் வசமாயவந்தது. ஏனெனிற் பராபரன் சருவவல்லமையுள்ளவர். பராபரன் தமக்குச் சொந்தவர்களாரென்றுஞ் சேராதவர்களாரென்றும் அறிகிறதற்கே இப்படிச்செய்தார். ஒகட்டிலே யுத்தம்நடந்தவேளையில் உங்களிற்சிலர் பொல்லாப்புச்செய்ததினாலேதான் தோற்றோடிப் பின்காட்டினீர்கள்.

தங்கள் தங்கள் ஆட்கள் இரணகளத்திலே மடிந்துபோனார்களேயென்றெண்ணிப் புலம்பும்வார்க்கு மகமது சொன்ன புத்தியாவது "செத்தவர்கள் போருக்குவராமல் வீட்டிலே ஒளித்திருந்தாலும் அவர்கள் தலையில் விதிப்படி அன்றைக்குச் செத்துத்தான் போவார்கள்" இதைப்பற்றியுங் கோறான் கூறுவதைக்கேளுங்கள் * "சத்தியவிசுவாசிகளே, விசுவாசியாதவர்களைப்போல நீங்களுமிராதையுங்கள். பராபரனுத்தரவுகொடாமல் ஒருவனுஞ் சாவதேயில்லை. ஒவ்வொருவருடைய தீர்ப்பும் புத்தகத்திலேதான் வரைந்திருக்கின்றது. ஒகட்டிலே மடிந்துபோனார்களென்று நீங்கள் நினைத்தவர்கள் சாவதேயில்லை. அவர்கள் தங்களுயிருடன் ஆண்டவனிடத்துக்குப் போய்விட்டார்கள். பராபரனுடைய தயவு அவர்களுக்குக் கிடைத்தபடியால் மிகுதியுஞ் சந்தோஷப்படுகிறார்கள்" இன்னுங் கோறான் சொல்வதாவது "இராசிக தெய்வீகமொன்று மனிதருக்குப் பூமியிலே சம்பவிக்கிறதில்லை. நாம் சிருட்டிக்கப்பட்டதற்குமுன்னமேதான் எங்கள் தீர்ப்புப் புத்தகத்திலேதான் எழுதியிருக்கின்றது."

* கோறான் ௩ அதி.   * கோறான் ௩ அதி.

கூட்டேன்பவர் செய்த பிரபஞ்சநூல்

[ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.]

இரண்டாம்பிரிவு.-௩ம் அதிகாரம். மனிதசாதியின் விசேடலட்சணங்கள் ௱௫௬ம். பக்கத்தினின்று.

௰௬. இவ்விதமையிருப்பதினாலும் அது வாயுப்புரையுடன் சார்ந்திருப்பதினாலும் குரங்கினங்களாற் சற்றேனும்பேச ஏலாது. ஆம் மற்றும் யாதோ காற்கான் மிருகத்திலும் அது தீர்க்கமான சத்தமிட ஏலாததாயிருக்கின்றது. மனிதனை குரங்கிலிருந்து தோற்றினானென நிறுத்தும் விஞ்ஞானசிரியரொவ்வொருவரும் தம் மதத்தை நாட்டுவதற்குமுன்னே அம்மிருகங்களிலொன்றைப் பேசப்பயிற்றுவதே முறை.

௰௭. மனிதருக்குங் குரங்கினத்திற்குமுள்ள பிரிகொருதற்பலவிகற்பமென்னவெனில், பின்னையதாய குரங்கினத்திற்குப் பாதங்களில்லை. அவை ஏறுகிறதற்கேற்றளவாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. குரங்கின் நாலுகால்களின் நுனிகளுங் காரியத்தளவிலே கைகளேயாம். மனிதன் நிமிர்ந்திட்டமாய் நடக்கிறதற்குதவுவது காற்பெருவிரலே, ஆனாலும், குரங்கின் அவற்றங் இலேயோ இது சுத்தகைப்பெருவிரலாயிருக்கின்றது.

௰௮. ஆதலால் மனிதன் வேற்றினமாயிருக்கின்றான். அவன் நிமிர்ந்திட்டமாய் நடப்பதற்கே யுண்டாக்கப்பட்டான். அவனுடைய மூளையிலே பகுதிகளும் பூரணலட்சணங்களுமுண்டு, அவை பிறமிருகமொன்றற்கேனுமில்லை. அவன் பேசவுங் காரியங்களை அளவிடவும் தன் சிருட்டிகரை வணங்கவுங் கூடும். ஆயினும் வேறுவினா ஒன்றுமெழும்புகின்றது. மனிதரனைவரும் ஒரேமரபுவழியாரா? அப்படியானால் நாமிப்பொழுது காணும் விகற்பங்களுக்குக் காரணம் யாதோ? அவ்வவ்வினங்களுடையவும் சாதிகளுடையவும்முகச் சாயல் வடிவங்களிலே வேறுபாட்டை யுண்டாக்கினதேதோ?

௰௯. நாம் அறிந்த பிரதானகாரணங்கள் பின்வரும் நாலுமே. அவை பூமி, உணவு, சீவியம்விடும்விதம், மரபுவழியாய் வரும்வியாதிகள். பூமியானது தோலநிறத்தையும் மிகுதிபற்றி ஆள்வளர்ச்சியையும் அதிகரிக்குமிலட்சணமுடைத்தாயிருக்கின்றது. உட்டண பூமிப்புறங்களிலே சகலவித ஆழிய நிறங்களும் சைத்திய பூமிப்புறங்களிலே சகலவித மென்னிறங்களுங் காணலாம். எங்கள் பூமிப்புறத்திலேயும் எங்கள் மேவிலே வெயிற்பட்டுவந்தால் அந்தோல் புகராய் அல்லது புள்ளிபட்டுப்போகின்றது. எங்கள் தோல் வெள்ளையாயும் அழகியதாயும் இருக்கவேண்டுமானால் நாம் சுடுவெய்யிலிலே காயப்படாது.

௨௰. பூண்டுகளும் அவைபோல் மனுஷனும் அப்படியே பல மிருகங்களும் நிழலிலே வெளிறாகின்றது. கிரட்சரேகையைச் சார்ந்த உட்டணபூமிகளிலுள்ள பறவைகள், மிருகங்கள், புட்பங்கள் ஆம், மச்சங்கள் கூடத் தங்கள் புள்ளிகள், இறகுகள், இதழ்கள், செதில்களிலே உலகத்தின் மற்றும் புறங்களிலுள்ளவற்றைப்பார்க்கிலும் அதிக [illegible]லககநிறமுள்ளனவாக இருக்கின்றன.

௨௧. நிறத்தைத்தரும் முதலடை நிலைபயதார்த்தமென்னவெனில், தோலினது இடைப்படையாயிருக்கின்ற வன்னநீரே என அறிந்துகொள்க. இது பலவிதமிருகங்களிலேயும் வேற்றுவகைச் சாதிகளிலேயும் மனிதருள் ஆட்களிலேயும் விகற்பம் விகற்பமான தடிப்புள்ளதாயிருக்கின்றது. இது மிகுதியாயிருக்கிறவிடங்களிலே சூரியனுடைய சூடும் ஒளியும் மட்டாயப்பட்டுவரும்போது வடிவமானது இருள்கொண்டு உரத்துத் தோற்றத்திலே நெய்ப்பற்றுள்ளதாயிருக்கின்றது. தோலினிறத்தினாலே மயிரும் ஒற்றுமைநலமாய்ப் பிரேரகப்பட்டு உரத்துக்கரியதாகின்றது.

௨௨. வேற்றுவகையுணவுகள் வடிவத்தின்மேல அதிகரிப்புடையதாயிருக்கின்றது. எண்ணெய்யும் மஸ்துக்களும் பரிமாறினால் அரையீரலிலே சேட்டைகளையுண்டாக்கி மிகுந்த பித்தநீரைச் சருவாங்கமும் பரப்புகின்றன. மாமிசமே முற்றும் புசித்துவருகிறவர்களுக்கு உரத்தவடிவமுண்டு. பாவனை பழக்கங்களிலுள்ள வேறுபாடும், மனிதருடைய புறவடிவத்தின்மேலும் மனநடைகள்மேலும் அதிகரிப்புடைத்தாயிருக்கின்றது. பூமியெங்கும் கிறிஸ்துமதமே தலைப்புகுந்து சகலமனிதரும் அதன் விதிப்பிரமாணங்களுக்கமைந்துநடப்பரேல் வினைவயதிறகுரிய தேறுதல் காரணமாயச் சடத்திற்குரிய விமரிதமான மாறுதல்கள் பிறக்கும்.

௨௩. சத்தியகிறிஸ்துமதம் மனிதரனைவரையுஞ் சகோதரராக்கச் சாதிகளின்ங்கள் குலங்களென்றவரம்புமோ அழிந்துபோம். மரபுவழிபற்றியே மனுசசாதிகளுக்குள்ளே குலப்பிரிவுகளும் விசேடலட்சணங்களுந் தோன்றுகின்றன. இரத்தரோகம், கயரோகம், பிளவை, குட்டம், விசர் போலும்வியாதிகள் பெற்றார் அல்லது பிதிர்வழியாற் பிள்ளைகளிலுந் தோன்றநாம் காணகிறோமே.

௨௪. அதுபோல மனம் புத்திகளின்சாயல் வடிவம் [illegible]ாங்கம் இலட்சணங்களும் ஒருமட்டுக்குப் பிள்ளைகளிலுந் தோன்றுகின்றன. அப்படியே தற்செயலால் அல்லது யாதொரு பரோகாரணத்தால் ஒருமனுடனிலே நிலைபட்ட விசேடலட்சணங்கள் அவனுடைய பின்சந்ததியாருள்ளுந் தலைப்பட்டுவரும். இது மூலமாய், மனுசசாதிக்குள்ளே இப்பொழுது தோன்றும் பலவிகற்பங்களுக்கும் யுத்திகேற்பக் காரணநாட்டலாம்.

௨௫. உருபு சாயல்களைப்பற்றிய இவ்விகற்பங்கள் நிகழ்வது மனிதனில் மாத்திரமல்ல. நாய், ஆடு, பன்றிச்சாதிகளிலேயும் மனுவகையிலே காணக்கூடியதுபோல வடிவு நிறவிகற்பங்கள் தோன்

றுகின்றன காபபிரியுடையவும ஐரோப்பியனுடையவும் தலையோட்டிற்குள்ள வேற்றுமை, காட்டுப்பன்றியினதும் வீட்டுப்பன்றியினதுந் தலையோட்டிற்குள்ள விகற்பத்தைப்பார்க்கிலும் யாதோர் காரணத்தால் மிக்கனவலல ஆயினும அவ்விரண்டும ஒரே சாதிவகையிலுள்ளன

௨௬ மனிதரிலுள்ள வேற்றுவேற்றுச்சாதிகளின் அந்தர்க்கரணங்களிலே வெளிப்படையான மிகுவேற்றுமையுண்டென்பது நிச்சயம். மனதின் சாயல அல்லது புத்தி விருத்தி சரீரத்தின் சாயல்கள் தோன்றியனபோல் ஒருமட்டுக்குச் சந்ததி சந்ததியாய் வரும என்று அறிக. யுத்தியும் படைமையும விவேகமும மூடத்துவமும சந்ததி சந்ததிவழியாய் வருகின்றன ஆனாலும, சரீரத்தைப்பார்க்கிலும மனமானது சாதனைபிறபேறறங்கொள்ளும் ஒரு சந்ததியின மனோகருவிச்சேட்டைகொள்ளத் தொடங்கில அதன பின வருஞ சந்ததியிலே அது காரியபபடுத்தோனறும்.

௨௭ ஐரோப்பையர் மனோகருவிகளிலே தலைமையடைதற்கு ஏதுயாதெனில் அக்கருவிகளைத் தொழிற்படுத்தற்காயியன்ற விருத்தாந்தங்களே, தமமிடமாகவேண்டுமென்ற முயற்சிகளும கிறிஸ்துமார்க்கத்தின அதிகரிபபுமே வெள்ளைக்காரருடைய மனோகருவிகளைப் புலப்படுத்தற்குரிய தலைமை யேதுககளாயிருந்தன.

௨௮ புகா, சிவபபு, கறுப்பு, பிஙகலம் எனனும வனனததாரில் ஒவவொருவனுந் தனனாலியனறளவு இஷ்டம் கிறிஸதுமதம என்பவறறின விதைகளைத் தனனிருதயத்தில வித்தடும் அப்பொழுது யாவரும ஒரு நிகராகித் "தேவன சகலசாதியாரையும ஒரே இரத்தத்திலிருநது பிறபபித்தார" எனறுணாந்துரைககக கறகுமளவும நனனயமான வெள்ளைக்காரச்சாதிககு நிகராவாாகள்

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

PART II.] *Varieties of the Human Race.* [CHAP. 3.

(Continued from page 111)

16. In consequence of this pouch, and its connection with the larynx, it is impossible with the monkey tribe ever to speak, indeed it is less capable of making an articulate sound than almost any other quadruped. Every philosopher who maintains that man originated from monkeys ought, before he publishes his opinion, to be obliged to teach one of these animals to speak.

17 Another essential difference between men and the monkey tribe is this the latter have no feet,—they are formed only for climbing, and the terminations of their four supporters are, in fact, hands, the great toe is that which assists man in walking erect, and this is a perfect thumb in the orang outang.

18 Man is, then, a distinct race he only was formed to walk upright, his brain has parts and perfections which no animal possesses, he can speak, and reason, and worship his Creator. But another question arises Are all men of the same race?—And if so, what has been the cause of the diversity we find? What has made such a difference in the features and complexion of different tribes and nations?

19 The chief causes we are acquainted with are the four following climate, food, manner of life, and hereditary diseases *Climate* has a great influence on the color of the skin, and often on the stature of men. All the deepest colors are to be found in hot climates, all the lightest colors in cold ones. We see in our own climate, that an exposure to the rays of the sun will turn the skin brown or freckled If we wish to have the skin fair and white, we must not be exposed to the hot sunshine

20. Plants, also, whiten in the shade, as well as man, and so do many animals. Indeed, the birds, beasts and flowers, and even the fishes of the hot climates under the equator, are brighter colored in their spots, feathers, leaves, and scales, than we find them in any other part of the world

21. The immediate matter of color, you will recollect, is the pigment, which forms the middle layer of the skin. It differs in thickness in different kinds of animals, and in the different nations and individuals among men. Wherever it is most abundant, the complexion, upon a common exposure to the heat and light of the sun, becomes darker, and coarser, and greasier in its appearance The hair is usually influenced by the color of the skin, and becomes also coarser and darker.

22. *Different kinds of food* have a great effect upon the complexion. Oils and spirits produce an excitement of the liver, and hence throw a great deal of bile into circulation. Those who live almost wholly on animal food have a coarse complexion. The difference, too, in manners and customs has a great effect on external appearance, and on the minds and character of men If the Christian religion could be introduced over the whole world, and all men would obey its divine precepts, astonishing physical changes would be produced by moral improvement.

23 True Christianity will make all men brethren, and then the barriers between castes, and tribes, and nations will be broken down, and it is from *hereditary* sources that almost all distinctions and peculiarities among the human race originate. We see diseases, such as gout, consumption, scrofula, leprosy, and madness, are inherited by children from their parents or ancestors

24 So likewise, the features, complexion, shape, and the qualities of mind and disposition are inherited in a great degree, and likewise the peculiarities, which accident, or some mysterious cause has stamped on one human being, will be transmitted to many succeeding generations In this way, we can rationally account for the great differences now to be found among the various races of mankind

25 Man is not the only animal in which such variations of form and feature occur The dog, the sheep, and the swine genus especially, show as great diversities in the frame and color as can be found in the human species. The difference between the skull of a negro and that of a European, is in no respect greater than that which exists between the skull of a wild boar and that of the domestic swine, yet these both belong to the same species.

26. There is, to be sure, a great apparent difference in the intellectual faculties of the different varieties of man. But remember that the features or talents of mind are inherited, in a great degree, as well as the features of the body. Wit and dulness, genius and idiotism, run in direct streams from generation to generation. But the mind, even more than the body, may be improved by cultivation, and when the intellect of one generation is called into exercise, it will have a striking effect on the succeeding

27 The European race owes its superiority in mental powers to circumstances which have called those powers into action The efforts to obtain personal liberty, and the influence of the Christian religion, have been the chief means of perfecting the faculties of the white man.

28. Let him then, as far as possible, plant the seeds of

freedom and Christianity in the hearts of every people, and then the *brown*, the *red*, the *black*, and the *tawny* man will assimilate with each other, and with the more favored white race, till they learn to *feel*, as well as acknowledge, that ‘ God hath made of one blood of all nations of men.”

இலங்கைத்தீபக கிறிஸ்துசமயோற்பவ விருத்தாந்தம்

THE HISTORY OF CHRISTIANITY IN CEYLON.

Translated from the “Friend ”

Continued from page 167

அச்சுவேலிக் (Atchuvaly) கோவில்கல்லாற் கட்டப்பட்ட பெரிதும் உயர்வுமான கட்டுவேலையாயிருக்கின்றது. அது (௨௲) பேர் இருக்கத்தக்க விசாலமான கோவிலாயிருக்கின்றது. அதை உலாந்தாக்காரர் கட்டிமுடித்தார்கள் இந்நாட்டிற் சில விருத்தப் பிராமணர் இருந்தமையாற் சனங்கள் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரித்து நடப்பதில் மிகவும் பிரியங்கொண்டவர்களாயிருக்கவில்லை. பிலிப்பு என்னு நாமமுள்ள ஒரு பிராமணன் சத்திய வேதத்தின் உண்மைகளை அறியாமல் வேதத்திலுள்ள போதகத்துக்கடுத்த பிரிவுகளைப் பார்க்கச் சரித்திரப் பங்குகளில் அதிகம் பிரியமுள்ளவனாயிருந்தான் ஒருகவிராயப் பிராமணன் ஞானஸ்நானம் பெற்று மறுபடி நமதாண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் நடையையுங் குணத்தையும் பற்றிய சரித்திரத்தைக் கவிதையாய்ப் பாடிவைத்தான்.

உடுவிலக் (Oodooville) கோவிலுக்கருகேயுள்ள பெரிய வீட்டில் முன்னொரு பிறஞ்சீஸ்கன் சன்னியாசி (Franciscan Friar) ஒருவர் இருந்தார். இவ்விடத்தில இஸ்தாப்பித்திருந்த பள்ளிக்கூடத்தில் மாணுக்கர் (௲) பேரும், பிரசங்கம்பண்ணும்வேளையில் (௲) சனங்களும் வந்து கூடுவார்கள் இக்கோவிற்பற்று இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் தலங்களில் ஒன்றாயிருக்கின்றது இவ்விடத்திலே பெண்பிள்ளைகளைத் தருமத்துக்குப் படிப்பிக்கிற ஒரு பெரிய பள்ளிக்கூடமுமிப்போதிருக்கின்றது.

வட்டுக்கோட்டைக் (Batticotta) கோவிற்பற்றிலே ஒரு பெரிய அலங்காரமான கோவிலிருந்தது. அடுத்தாப்போலே வேறொரு உயர்ந்த வீடுங் கட்டப்பட்டிருந்தது. அவ்விடத்திலுள்ள பள்ளிக்கூடங்களிற் படித்த பிள்ளைகளினது தொகை ஏறக்குறைய (௲) பிரசங்கங் கேட்கும்படி வந்துகூடினவர்களும் ஏறக்குறைய (௨௲) பேருண்டு. இது இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் தலங்களில் ஒன்றாய் இருக்கின்றது. இவ்விடத்தில் (௲அ௱௨௰) ஆண்டளவில் ஒரு பெரிய சாஸ்திரப் பள்ளிக்கூடத்தை அமெரிக்கன் போட் (Board) சங்கத்தார் ஸ்தாபித்தார்கள். அதில் இப்பொழுது கிட்டத்தட்ட (௨௱) பிள்ளைகள் படிக்கிறார்கள். பற்பல கலவியிலுஞ் சாத்திரசூத்திரங்களிலு மிகவுந் தேறிவருகிறார்கள்.

பண்டத்தெருப்புக் (Pandirteripo) கோவிற்பற்றிலேயுள்ள கோவில் மெத்தச் சிங்காரமான வில்வளைவுள்ளதாய்க் கட்டப்பட்டது. இவ்விடத்திலுண்டாக்கிய பள்ளிக்கூடத்தில் (௲) ஆண்பிள்ளைகள் நாடோறும் படித்துவருவார்கள். அவர்கள் மிகவுங் கல்வியிலே தேர்ச்சிகொண்டவர்களானதினால் பாப்புமதத்திலுள்ள காரியங்களை நிராகரிக்கத் தகுதியினையுடையவர்களாயிருந்தார்கள். இவ்விடத்திலுள்ள சனங்களும் மெத்தத் தேவபத்தியுள்ளவர்களாயிருந்தபடியாற் பிரசங்கவேளைகளிற் கிட்டத்தட்ட (௩௲) பேருக்கு வந்து கோவிலிற் கூடிப் பிரசங்கங்களைக் கேட்பார்கள். இது இப்பொழுது அமெரிக்கன் மிசியோன் பிரயாசப்படுந் தலங்களில் ஒன்றாய் இருக்கின்றன

சங்கானைக் (Changany) கோவிற்பற்றிலே நல்லவடிவான கோவிலொன்று கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றது. செங்கன் மதிலாற் சூழ்ந்த வேறொரு வீடும் முற்றமும் அங்கே கட்டப்பட்டிருந்தது. அவ்விடத்திலுள்ள பள்ளிக்கூடங்களைப் பிரதானமாய் அம்புரோசியோ என்பவர் (Ambrosio) மெத்தச் சாவதானமாய்ப் படிப்பித்து வந்தார் இவ்விடத்திலுள்ள சனங்கள் தேவ காரியங்களில மெத்தச் சாக்கிரதையாயிருந்தபடியாற் பிரசங்கவேளைகளில் வந்து கூடுஞ் சனங்களை அடக்கிக்கொள்ளுகிறதற்கு அந்தக் கோவில் மெத்த விஸ்தாரமற்றதாயிருக்கின்றது

(இன்னும் வரும)

பழமொழி

அஞ்சுகாசுப் பறக்குதிரையும்வேணும் ஆற்றைக்கடக்கப்பாயவும் வேணும்
அவசரகாரனுக்குப் புத்திமட்டு
அணிலேறவிட்ட நாய்பார்ப்பதுபோல
அத்தத்தினமிடுக்கலோ அம்பட்டன பெண்கேட்டது.
அடிச்சட்டிக்குள்ளே கரணம்போடலாமா?
அடிமேலடியடித்தால் அம்மியுநகரும்.
அடபுசாவ மகன கப்புபிடிக்கிறது
ஆனையிருந்து அரசாண்டவிடத்தே பூனையிருந்து புலம்புகிறது
இல்லாதது பிறவாது அள்ளாதது குறையாது
உதரநிமித்தம் வெகுகிருதவேடம்
உடையவனில்லாச்சொம் ஒருமுழங்கட்டை
உப்புவாணிகனுக்குத்தெரியுமா கற்பூரவிலை
உரலில் அகப்பட்டதுலக்கைக்குத் தப்புமா?
ஊணனகருமமிழந்தான உழுததன பெண்ணிழந்தான்
எள்ளேன் காயகிறது எண்ணெயக்கு எலிப்புழுக்கையேன கூடக்கிடந்தகுற்றத்துக்கு
எலிக்குப்பயந்து வீட்டைச்சுட்டாற்போல.
எட்டாதபூத் தெய்வத்துக்கு
ஒருநாட்கூத்துக்குத் தலையைச் சிரைத்ததுபோல
கரணந்தப்பினால் மரணம
கனவுகண்டபணம செலவுக்குதவுமா?
கடுகுசிறுத்தாலு காரமபோகாது
குடிக்கிறதுகூழ்கொப்பளிக்கிறதுபனிநீர்
குருடனுக்குப்பால் கொக்குப்போல
குடிக்கிறதுகூழாம இருக்கிறது சிங்காசனம்

(திருட்டாந்த சங்கிரகம்,)

கடிதங்கள்.

உறுக்கிய திறன்மொழிக்கு இறுக்கிய மறுமொழி

(On Tamil Grammar)

உதயதாரகை ௨ம் புத்தகம் ௪ஞ் சஞ்சிகையில் திருவல்லைவாளிக்கூடம் கு கதிரைவேற்பிள்ளை எழுதியபடி "ஒன்றறிவதுவே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரம் பிழையாகத் தோன்றுகின்றது ஏனெனில் தொல்காப்பியத்தில் "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" எனவும்,—தொன்னூல்விளக்கம் உரிச்சொல்லியல் ௨௫ சூத்திரத்திற்கு மேற்கோளாக "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" எனவும்—நன்னூல் உரியியல் ௩௪ சூத்திரம் புல்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர், எனவும்,—சூடாமணிநிகண்டு ௰௨வது கூஅந் செய்யுளில் 'உற்றறிபுலனொன்றுற்புல்மரமேயோரறிவிற்சேவன' எனவுமிருக்கின்றன இவற்றின் கருத்தென்னையெனின் "ஓரறிவுயிர்களாவன மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிகின்றவையாம்"

இப்படித் தொல்காப்பியத்தில் "ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே" என்றிருக்கவும் அதற்காதாரமாக வேறநேக நூல்களிலிருக்கவும் மேற்சொன்ன கதிரைவேற்பிள்ளை இவைகளை அறியாமல் "ஒன்றறிவதுவேயொன்றறிவதுவே" எனப் பிழையெழுதியும், ௰௪ஞ் சஞ்சிகையில் "பயன்பயின்றிக இறுக்கிய கடாக்களை உறுக்கிய திறன்மொழி" என்று ஏழெட்டுமுளத்திலே ஒருபெயருமுண்டுபண்ணித் தாமெழுதினதற்குப் பொருளேதினும் சரிப்படவில்லையென்று கட்டினால் மருளகன்று தெருளுறிடவோர் விடையெழுதுவோம் என்று மனத்துணிவாகச் சொன்னார் ஆகையால் வேம்பழகுழபொன்றும் பேசாமல் ஒன்றறிவது வேயென்பதற்குப் பொருள்சொல்வாராக அது தமது கைமோசம் அல்லது அச்சுக்கோத்தவர்களின் மோசமென்று சொல்ல இனிமேலிடமில்லை

இதுநிற்க, தா. சிதம்பரப்பிள்ளைக்கு நான் சொல்லுகிறதென்னவெனில் 'தோறகாதுபோரவை துலைக்காதுமுடலை' என்றது இராமாயணத்தில் இன்னபடலத்தில் இத்தனையாம் பாட்டிற்கண்டிருக்கின்றதென்றவர் சொல்வாராக இப்படிக்கு

௲அ௱௪௨௲ ஆனிமீ } காத்திகேயா இராமலிங்கபிள்ளை
அதி }

Messrs Editors,

I have for several years been surprised to see how Christians of great eminence translate heathen books and pass off heathen words with a Christian sense, and then how they take their own translations and Christian interpretations for the ground of great praise, when a heathen never dreamed of those thoughts which pass through the Christian's mind when reading these translations The practical illusion and unfairness of this is, that heathens are encouraged to take the Christian interpretation and then turn round to the Missionary and say, Do not our poets say so? and even converts from among the heathens will quote a heathen stanza with a Christian interpretation instead of the Bible.

As evidence of what I say I beg to subjoin the definitions of அறம் found in the Rev Dr Rottler's Dictionary, that your readers may understand the *meaning* of "Virtue" as given in the translations of the Cural which appear in your paper

An Old Observer.

அறம், அறன், virtue, compare தருமம் particularly, benefaction, charity, alms see யோகம், 27

Note—Thirty-two acts of charity are particularized viz

1. ஆதுலர்க்குச்சாலை.—Building poor-houses
2. ஓதுவார்க்குணவு—The giving of maintenance and education gratis
3. அறுசமயத்தார்க்குண்டி—Feeding those who belong to one of the religious sects *see* அறுசமயம்
4. பசுவுக்குவாயுறை—Feeding cows
5. சிறைச்சோறு—Feeding prisoners
6. ஐயம்—Giving alms
7. தின்பண்டநல்கல்—Providing for travellers.
8. அறவைச்சோறு—Feeding the destitute
9. மகப்பெறுவித்தல்—Giving assistance in child-birth.
10. மகவுவளர்த்தல்.—Educating children.
11. மகப்பாலவார்த்தல்—Giving milk to infants *see* மக, an infant, மகச்சோறு, மகச்சோறளித்தல்
12. அறவைப்பிணஞ்சுடுதல்—Burying the poor.
13. அறவைத்தூரியம்—Clothing the destitute
14. சுண்ணம்—Distributing chunam used with betel
15. நோய்மருந்து—Curing diseases.
16. வண்ணார—Paying for washing the cloths of the poor
17. நாவிதர்.—The same for shaving
18. கண்ணாடி—Giving a looking-glass.
19. காதோலை—Giving Cadjan, or Palmira leaves to women for their ears
20. கண்மருந்து—Giving medicine for the eyes.
21. தலைக்கெண்ணெய்—Giving oil for the head
22. பெண்போகதானம்—The bestowing of a virgin.
23. பிறர்துயர்காத்தல்—Redressing injuries
24. தண்ணீர்ப்பந்தல்—Keeping water-pandals, which are thatched places, where persons are stationed to give to drink to the thirsty
25. மடம்—Erecting building for the reception of Bramins, Pandaiams, Pilgrims, &c.
26. தடம்—Making tanks
27. சோலை—Planting groves, topes, &c.
28. ஆவுரிஞ்சுதறி—Erecting stakes, at which cows may rub themselves
29. விலங்கிற்குணவு—Feeding all kinds of animals
30. ஏறுவிடுதல்—Giving a bull for covering a cow.
31. விலைகொடுத்துயிர்காத்தல்—Giving money to save life.
32. கன்னிகாதானம்—Giving assistance towards a marriage.

(On Nydatham)

அளக்கர் புடைசூழுமளக்கரிடையெங்குமளக்கரும் பெருமைசேர் விளக்கொளித்தாரகை விரித்தருளியகத்திருவிரித்திடு மகா கனந்தாங்கிய துரையவர்களுக்குச் சந்ததம் வந்தனந் தந்தனம்

புவியரசோண்ட புரவலருக்கும் அதிவீரராம பாண்டியனுலியற்றப்பட்ட நன்னயக்கருமபெனும் நைடதத்திலே, சந்திரோவாலம்பனப்படலம், மனையதோவாலம்பனப்படலம், சுயம்வரப்படலமென்னும் இம்மூன்று சொற்களுக்கும் பொருள் விளங்காமையால் முற்றறிவுடையோராய மொழிவருமபெரியோர் சிற்றறிவுடையோனாகத்திருளியத்து நலவிடையெனும் நறு நெய்யை வார்த்தருள் செய்யக் காத்திருக்கிறேன். கடவுடுணை,

இங்ஙனம் யாழ்ப்பாணம் வயிரவநாதர் ஆறுமுகம்

(A Question on the Tract Spiritual milk)

முகாமைத் துரையே யான் எழுதுவதைப் பின்வருஞ் சஞ்சிகையிலத் திருத்திப் பிரசுரஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்

அவையாவன,

ஞானப்பால் ௬ங் விஞ

இறக்கும்பொழுது நமது சரீரமும் ஆத்துமாவும் எங்கேபோகும்?

விடை சரீரம் அழிந்துபோம் ஆத்துமா அழியாமல் நரகத்துக்கு அல்லது மோட்சத்துக்குப் போம் இந்த விடைப்படி ஆர் மோட்சத்துக்கும் ஆர் நரகத்துக்கும் போவார்கள்—௪௪ ௬ஞ் ௪சு ௭ம் விஞ விடைப்படி நடுத்தீர்ப்பு நாளிலே கர்த்தர் நடுத்தீர்த்தப்பின் பொல்லாதவர்கள் நரகத்துக்கும் நல்லவர்கள் மோட்சத்துக்கும் போவார்கள் இதினால் ஞானதீபிகை வேதபொழிப்புப்படியாதபடி மலைக்கிறேன் கற்றவல்லோர் இதிற் பிழைபாராதபடி விடையெழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் இப்படிக்கு

௲அ௱௪௨௲ ஆனிமீ உயதி மயிலைக்கோ

அப்பாக்குட்டி வேலாயுதன், வயது ௭.

பத்திராதிபர் குறிப்பு.

அந்தகனுக்கந்தக மந்தகாரமெனக் கூறுவதமையாமைபோல அவிசுவாசிகட்கு வேதாந்தமமையாது. குணநிதரான கடவுள் கொடுத்த வேதம் புலப்பித்தமாயிருக்குமென விசுவாசிகளோர்ந்து

வேதத்துட்சமைந்த நியாயத்துக்கடைந்துநிற்பதன்றித்தமது சிஞ்ஞத்துவத்தைக்கொண்டு சருவஞ்ஞத்துவத்தைப் பரீட்சிக்கவும் மேவிடவும் எண்ணார்கள். ஆகையால் வேதவிசுவாசிகள் வேத வசனத்தைக்கொண்டே அசங்கியானத்தை நிவிர்த்திசெய்வது முறையெனக் கருதி முன்பவர்க்கு வேதத்தைக்கொண்டு உதாரணங்காட்டுதும். லூக்கா ௰௬ அதி. ௨௨ வச. பின்பு அந்தத் தரித்திரனானவன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான். மத். ௰௭ ௩. மோசே எலியா என்பவர்கள் அவரோடே பேசிக்கொள்ளுகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள். லூக்கா ௨௩ ௪௩. இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய். அப். ௭ ௫௯. கர்த்தராகிய யேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று மரித்தான். குறித்த வசனங்களினாலே தேகாந்தத்தில் ஆத்துமாக்கள் சுவர்க்க பாதலங்களிற் சேர்ந்து சுகதுக்கபோகஞ் செய்வதாய் விளங்குகின்றது. ௧ கொரி. ௰௫ அதி. ௪௨ வச. மரித்தோர் உயிரோடெழும்புதலுமுண்டாயிருக்கும். அழிவுள்ள சரீரம் விதைக்கப்படும் பின்பு அழிவில்லாமையாயெழுந்திருக்கும். கனவீனமான சரீரம் விதைக்கப்படும் பின்பு மகிமையாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ள சரீரம் விதைக்கப்படும், பின்பும் பலமாய் எழுந்திருக்கும், ஜீவனுள்ள சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும், இரத்தமாமிசமுடைய சரீரமுமுண்டு ஆவிக்குரிய சரீரமுமுண்டு. ௨ கொரி. ௫ ௰ அவனவன் தன் சரீரத்தினாலே நடப்பித்த நன்மைக்காகிலுந் தின்மைக்காகிலுந் தக்கவைகளைச் சரீரத்திலே அடையும்படிக்குக் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டுமே. அப். ௰௭ ௩௧. ஒரு நாளைக் குறித்தார் அதிலே அவர் தாம் நியமித்த ஒருவரைக்கொண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுப்பார் அவரை மரித்தோரில் இருந்தெழுப்பினதினாலே அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். யோவா. ௫. ௨௮, ௨௯. இதைக் குறித்து ஆச்சரியப்படாதிருங்கள், என்னத்தினாலெனில், பிரேதக்குழிகளிலுள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படிக்கும், தின்மைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படிக்கும் எழுந்து புறப்படுவார்கள். யோவான். ௬. ௩௯, ௪௦. அவர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகாமல் கடைசிநாளிலே அவர்களை எழுப்பும்படிக்கு என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கின்றது. குமாரனைக் கண்டு அவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் நித்திய ஜீவனை அடையும்படிக்கும் கடைசி நாளிலே நான் அவனை எழுப்பும்படிக்கும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கின்றதே. யோவான் ௰௧ அதி. ௨௪ வசனம் மார்த்தாள் சொன்னது, கடைசிநாளிலே மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும்பொழுது அவனும் எழுந்திருப்பானென்று அறிந்திருக்கிறேனென்றாள். அப். ௨௪ ௰௫ மரித்தோராகிய நீதிமான்களும் அநீதிமான்களும் மறுபடியும் உயிரோடெழுந்திருப்பார்களென்று இவர்களும் அடைந்துகொண்டிருக்கிற நம்பிக்கையைப் பராபரன்மேல் வைத்திருக்கிறேன். ௨ இரா. ௨ ௰௧ எலியா பெருங் காற்றிலே பரமண்டலத்துக்கு ஏறிப்போனான். ௧ தெசலோனி. ௪ ௰௬. அப்பொழுது கிறிஸ்துவில் இருந்து மரித்தவர்கள் முதலாவது எழும்புவார்கள். குறித்த வசனங்களினாலே மாமிசோத்தானமும் நடுத்தீர்ப்புமுண்டென்று விளங்குகின்றது.

சமரசம் மனிதர் யாவரும் ஆத்மதேகசம்பந்திகளாய் உட்கரணம் புறக்கரணமென்னும் இருவகைக் கரணங்களினாலும் நலவினை தீவினை என்னும் இருவினைகளையும் சனன முதல் மரணபரியந்தமாகச் செய்தறிந்து வருகிறார்கள். இவைகளை ஆத்துமாவாவது தேகமாவது தனித்து நடப்பிக்கிறதில்லை. ஆதலால் அவ்விரண்டும் கூடியின ஆசாரங்களின் பிரயோசனமாகிய சுகதுக்கங்களை அவ்விரண்டுங் கூடியேயருந்துவது நியாயமாயிருக்கும். அப்படி அவை அருந்தும்படி மாமிசோத்தானமும் நடுத்தீர்ப்புமுண்டாயிருக்கின்றது. அந்த உயிர்த்தெழுதல் உலகாந்தத்திலென்று தேவன் நியமித்துக்கொண்டபடியால் தேகாந்தத்திலே தொடங்கி உலகாந்தமட்டும் ஆத்துமா தனியே சுகதுக்கத்தை அனுபவிக்க இடங்கொடுக்கிறார். தேகாந்த முதல் உலகாந்தபரியந்தம் ஆத்துமா தனியே சுகதுக்கப்பூரியாயிருக்கிறதென்றும் உலகாந்த முதல் அநந்தம் தேகத்தோடு ஆத்துமாவாய சுகதுக்கம் சீவியமடைகிறதென்றும் வேதத்தின் கருத்தென அறைந்துகொள்ளுகிறோம்.

சனிநீராடு

ஓர் சமரசம்

மகா கனம்பொருந்திய உதயதாரகாதிபரே,

அவ்வையாரருளிச்செய்த ஆத்திசூடியில் சனிநீராடு என்பதற்கு இயற்றமிழாசிரியர் ஸ்ரீ, ஸ்ரீ. இராமாநுசகவிராயரும், மகா கனம் பொருந்திய சரவசாஸ்திரப் பண்டிதராகிய, ம ஸ்ரீ ஸ்ரீ சரவணப்பெருமாளையருஞ் செய்த உரைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கிறதினாலே கற்பவர்கள் அதோவிதோ சரியென ஐயங்கொள்வதை நீக்கும்பொருட்டு உதாரணங்களெடுத்துக் காட்டி இவர்களிருவருரையில் இவ்வுரை சரியென எழுதத் துணிந்தேன். இராமாநுசகவிராயர் உரையின் கருத்து சநிக்கின்ற நீரிலே நீ ஸ்நானஞ்செய் இவ்வுரை தப்பு.

ஸ்ரீ, ஸ்ரீ. சரவணப்பெருமாளையரவர்களுரையின் கருத்து சனிக்கிழமையில் நீரிலே முழுகு இஃதே சரி என்பதற்கு உதாரணம், ஆத்திசூடி வெண்பா. "ஞாயிறுயிராக்கிறுதிங்கண்மபராருள்செய்கிலா செவ்வாய் பிணிதுக்கங்குரு நாள்வாழ்வுபோம்-தூயவெள்ளி-போடிதெல்லாம் புன்னைவனபூபாலா மிக்கபுதனோடு சனிநீராடு" எ-ம்- இன்னுமோர் நூலில் "அருக்கன் ஞாயிறழகழிக்குமழகார் திங்கள் முகுணடாம்- செருக்குஞ்செவ்வாயுயிர்போக்குஞ் சேர்ந்தபுதனும பொருளுண்டாங்-கருக்கும் வியாழன் கருத்தழிக்குங் காணு வெள்ளி நோயுண்டாம்- பெருக்கங்காணுஞ்சனியெண்ணெய் பேணியூற்றும் பெரியோரே" பிறருங் கூறினார். நான் பிற்கூறியதைக் கற்கும் மாணாக்கர் கைக்கொள்ளுவதே நலம். இப்படிக்கு

யாழ்ப்பாணம். ஆனிமீ ௰௪தி. சபரசவினோதன்.

(On Female Education).

உதயதாரகையே,

நீ ஒவ்வொரு நாட்டிலுமிருக்கிற படிப்பாளிகளையும் படிப்பற்றோர்களையுமதிநுட்பமாயாராய்ந்து அவர்கள் புத்தி நுட்பத்தையும் புத்திதிட்பத்தையுமதிதிட்பமாய் எங்களுக்கு அறிவிக்கிறாயே ஆயினும் என்போலும் பெண்பிள்ளைகள் சகல நூல்களையும் ஐரோப்பையிலிருக்கும் பெண்சனங்கள் பயிற்றப் பயின்று வருவதுபோல நடப்பிக்கவேண்டுமென்று நீ மிகப் பிரயாசப்படுகிறாயே உனக்கு நாங்கள் என்னகைம்மாறுசெய்குதும் உன்னுங்கள் உய்குதும். அமெரிக்கன் குருமாரும் வெஸ்லியோன் குருமாரும் இவ்வூரில் வந்து பெண்பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுமென்று மிகப் பிரயாசப்படுத்திரிகிறதை இவ்வூரில் மூடாத்துமாக்கள் நன்மையென்றெண்ணாது உடுப்பிட்டிய முருகன் வேலாயுதர் சின்னத்தம்பி தந்திரமாக ஆண்பிள்ளைகள் படிப்பிலே முயற்சிப்படாதபோது பெண்பிள்ளைகளைப் பற்றிப் பேசுவதெல்லாமேன்? என மறுமொழி சொன்னது போற் தங்கள் பிள்ளைகள் படித்திருந்தால் மிகக் கெட்ட நடத்தைக்குரியவர்களாய்விடுவார்களென்றெண்ணித் தந்தர மறுமொழி பேசுகிறார்களே ஐயோ! எழுதவும் வாசிக்கவும் இவ்வூரில் ஆண்பிள்ளைகளைப் பார்க்கிலும் அதிக கெட்டிக்காரராயுஞ் சகல சாத்திர சூத்திரங்களில் வல்லவர்களாயுமிருக்கும் ஐரோப்பை, அமெரிக்காவிற் பெண்பிள்ளைகளெல்லாரும் இப்பொழுது படியாமலிருக்கிற இவ்வூரிற் பெண்பிள்ளைகளைப்போற் கெட்ட நடத்தையுள்ளவர்களாயிருக்கிறார்களா? ஐயோ! சருவேசுரனே மேற்குறித்த சின்னத்தம்பியோவுந் தந்திரிகளுடைய வீணான எண்ணத்தை மாற்றி நாங்களுந் தேவரீரை அறிகிற அறிவிலே வளரவுஞ் சகல நூல்களையும் இங்கிலிஷ்சாதிக்காரருடைய பெண்பெண்டாட்டிகளைப்போலுணரவுங் கிருபைசெய்வீராக.

உதயதாரகையே, இடையினத்துக்கியார் விடையெழுதியும் தமிழ்நங்குணாந்த யாழ்ப்பாண மாணாக்கன் விடையே தெள்ளக்காட்டலென நிறகின்றது போலப் பெண்பிள்ளைகள் படிப்பதைப் பற்றி யாரென்னதந்துப்பண்ணினும் படிப்பதே நலமென எல்லாருக்குமறிவிக்க சுந்தரி அம்மாள் சொன்னதின்படி நிறைவேறாத காரணமென்ன? அவ்வம்மாளுக்கு வந்த இடைஞ்சலென்ன? சுழுக்காய் எனக்கு அறிவிக்க மன்றாடுகிறேன். இன்னும் நீ செய்யவேண்டியதொன்றுண்டு அஃதென்னவென்றால், இவ்வூரிலும் இன்னுஞ் சிலவூர்களிலும் இருக்குங் கற்றவர்கள் தங்கள் பெண்டுகளையெல்லாம் இளந்தாரிகளாலுந் துற்குணராலும் நிறையப்பட்ட தமிழ்க்கோவில்களுக்குப் போகச் சந்தோஷமாய் விட்டுப் பெற்றபிதாவைப் போல நீதவானாலும் படிப்பாளிகளாலுஞ் சற்குணசாலிகளாலும் நிறையப்பட்டிருக்குங் கோடுகச்சேரி முதலிய இடங்களுக்கு யாதொன்றுக்கும் போகவிடாமல் மறித்துத் தங்கள் ச

டகையைக் காத்துக்கொள்ளுகிறோமென்று திரியும் வீணர்களைப் பற்றிச் சிறிது வசனங்களைப் பேச இடந்தருவாயோவென்றெனக்க றிவி?

இப்படிக்கு

௲௮௱௪௨ ஆ. ஆடி மீ ௰௮ தீ. உனது தோழி
கொழும்புத்துறை சின்னச்சிப்பிள்ளை.

என்னருமைத்தாரகையே,

உன் மூலமாயென்னைப் பற்றி விளுவும்புலவர்களின்னுமுண்டா? உண்டானால் மற்ற மற்றச் சஞ்சிகைகளில்க்கொண்டுவா—கொண்டுவந்தால அந்தந்தப் புலவர்களுக்குமடுத்தவிடையை ஒரே முறையிற் கொடுப்பேன் அவர்களெடுத்தவெடுப்பையுந் தடுப்பேன "கற்றறிவாயப்பயனென்கொல்வாலறிவனற்றொழாரேயெனின்."

இப்படிக்கு உனது தோழி
யாழ்ப்பாணநகர் உரைகல்லு

(On the pretended Miracles of the Heathen)

கனம்பொருந்திய உதயதாரகைப் பத்திராதிபரே,

தமிழர் வழிபாடுபண்ணுகின்ற தேவர்கள் மெய்த்தேவர்கள் அல்லவென்றும அவர்கள் மோட்சகதி பெறும்படி செய்யுங் கிரியைகள் அவமென்றும் பாதிரிமார் பற்பல புஸ்தகங்களிலுங் காட்டிய நியாயங்கள் சரிதானென்று அவர்கள் சொல்லியும் இன்னுந் தாங்கள் பூசித்துவருகிற விக்கிரகங்களாலப் புதுமைநடக்கிறதென்றும் மந்திரஞ் சித்தியாகிறது மெய்யாயிருக்கிறதென்றுஞ் சொல்லிப் புத்தியீனமாய அவையே தங்கள் வேதம மெய்யென்பதற்கு அத்தாட்சியென்று விக்கிரக பத்தியைவிடாமற் கொண்டாடுகிறார்கள ஆதலால, விக்கிரகங்கள் புதுமைசெய்கிறதில்லையென்று தமிழர் உணருமபடி சில நியாயங்களை இச் சஞ்சிகைப் பத்திரிகைவழியாய்ப் பிரசித்தஞ்செய்து பின் வருஞ்சஞ்சிகையில மந்திர தந்திரத்தைப்பற்றிச் சில காரியங்களைக் காட்டும்படி விரும்புகிறேன.

விக்கிரகங்கள் புதுமைசெய்கிறதில்லையென்பது.

தமிழர் தங்கள் விக்கிரகங்கள் செய்கிற புதுமைகளென்னவென்று சொல்லுகிறர்களேயாகில சிலர் அநேககாலம பிள்ளையில்லாமல இருந்து நாக பிரதிஷ்டையும உருத்திராபிஷேகமுஞ் செய்யப் பிள்ளைபெறுகிறர்கள். சிலர் கொடிய வியாதியினால சாக ஏதுவாயிருந்து தாங்கள் முருகமூர்த்தியினுடைய கோயிலைச்சுற்றிக் கும்பிட்டடியழித்து இலிங்காதாரிகளினால சங்குநாதம பண்ணுவித்து அவர்களுக்கமுது கொடுப்போமென்று நேர்த்திசெய்ய அதுபோல வியாதி நீங்கிப் பிழைத்திருக்கிறார்கள். கண்ரோகம வந்து செய்யாத பரிகாரமெல்லாஞ் செய்தும மாறாமல அம்மாளுக்குக் கண்மலர்செய்து தருவோமென்று பொருத்தனைசெய்யக் கண்வருத்தம நீங்குகின்றது காய்ச்சலவந்து ஒன்றுக்குந் தீராமற், பிள்ளையாருக்கு மூன்றுதேங்காயுமடித்து முப்பத்திரண்டு தோப்புக்கண்டமும போடுவோமென்று பிரார்த்திக்கக் காய்ச்சல விட்டுப்போகின்றது. பிள்ளைகளுக்கு அக்கரமுதலிய பிணிவந்துக்கும் போதில, வள்ளிநாயகிக்கு ஏழுவீட்டில மடிப்பிச்சையெடுத்து ஏழு சிறுபெண்களுக்குச் சருக்கரை அமுது கொடுப்போமென்று வேண்டுதலசெய்ய அதுபோலச் சுகப்படுகிறார்கள். இன்னுமிப்படியே அளவிறந்த புதுமைகள் நாடோறும நடக்கின்றனவெனகிறார்கள் இவ்வகைப் புதுமைகள் பொன், வெள்ளி, செம்பு, கல, மண மரமுதலியவைகளினாலியற்றிய வுருவங்களினால நடக்கின்றனவென்றும நம்புகிறார்கள் இது மெய்யேயானால உரோமான்வேதக்காரருந் தங்களுக்கு வியாதி நோவுமுதலிய இக்கட்டுகள் சேருங்கால தங்கள் சுத்தவாளருடைய உருவங்களுக்கு முடிமாலை,வாள்,மெழுகுதிரி,தென்னம்பிள்ளை,அள்ளுபணம முதலானவைகளைத் தங்கடங்கள் இயல்புக்குத்தக்கதாகத் தருவோமென்று நேர்த்திக்கடனசெய்து அவர்களும அப்படிச் சித்திகாணகிறார்களென்றுசொல்லுகிறார்கள். அதுபோல இஸ்லாமார்க்கத்தாரும் அந்தந்தத் தலங்களிலே அடக்கமபண்ணப்பட்டிருக்கிற தங்கள் சாய்புகளைப் பிரார்த்தித்து அனுகூலப்படுகிறர்களென்றுஞ் சொல்லுகிறார்கள் இவைகளெல்லாரும புதுமைகள்செய்தால பின்னை எல்லாவேதமும மெய்யானவேதமென்று சொல்லவேண்டுமே அதைத் தமிழர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஏனெனில நம்பினவனுக்கு எல்லாந்தேவுக்களாயிருக்கிறதென்று சொல்லித் தங்கள தேவர்களாற் சகாயமடையாதிருக்கும்போது மற்றும்மார்க்கத்தவர்களுடைய உருவங்களையும் பீர்சாய்பு முதலானவர்களையும பிரார்த்திக்கிறார்கள் இப்படி எல்லாவேதமும மெய்யென்று தமிழர் ஏற்றுக்கொள்வதுபோல உரோமான வேதக்காரரும ஏற்றுக்கொள்ளுகிறார்களோ இல்லையே. இஸ்லாமார்க்கத்தாரும் அப்படிச்சொல்லச் சம்மதிக்கவில்லையே அவர்கள் தங்கள் மார்க்கந்தவிரச் சைவசமயம், உரோமானமார்க்கம, இறப்பிறமாது வேதமுதல மற்றுண்டான எல்லா மதங்களும இபிலீசென்னும்ப சாசினாலுண்டான மதங்களென்று சொல்லுகிறார்களே. ஆனதால இவ்வகைப் புதுமைகளைக்கொண்டு தங்கடங்கள் வேதம் மெய்யென்று எண்ணப்படாது

எந்தெந்தவேதக்காரரிலும் வியாதிநீரப் பிரார்த்தித்துச் சுகப்படுகிறதுமுண்டு சுகப்படாமற்போகிறதுமுண்டு. நேத்திரவியாதி வந்து குணமாகிறதுமுண்டு, குணமில்லாமறபோகிறதுமுண்டு நெடுநாட் பிள்ளையில்லாமலிருக்கிறதுமுண்டு, பின பிள்ளைபெறுகிறதுமுண்டு. அவரவர் எண்ணினகருமஞ் சித்தியாகிறதுமுண்டு அசித்தியாகிறதுமுண்டு இச்செய்கையானது சருவத்திற்குங் காரணக்கடவுளாகிய தேவனுக்குரித்தேயன்றி விக்கிரகங்களுக்காவது கிரகதாரைகளுக்காவது இறந்துபோன சுத்தவாளரின உருவங்களுக்காவது இஸ்லாமார்க்கத்தாரின் சாய்புகளுக்காவது உரித்தென்றுசொல்லப்போகாது.

விக்கிரகங்களினால் இவை சம்பவிக்கிறதென்று எண்ணுகில அவ் விக்கிரகங்களின கண்ணை அல்லது மூக்கை அல்லது கை காலை இயாதொருவன் கெடுத்துப்போடும்பொழுது அவைகள் தங்கள் சுபவல்லமையினால முறிந்துபோனவைகளைத் திரும்பச் சீர்ப்படுத்திக்கொள்ளுகின்றனவோ? அல்லது தங்களுக்கு அக்கேட்டைவருவித்தவனைத் தண்டிக்கின்றனவோ இப்படிச்செய்யக் காணோமே. மட்டைக்களப்பிலே இறைக்கு இரண்டு வருடத்துக்குமுன இவ்வகைப் புதுமைசெய்கிறதென்று நம்பியிருந்த அநேகவிக்கிரகங்களைக் கள்வர் கெடுத்தும அவைகளின்பொருளைக் கொள்ளையாடியும அவர்கள் இயாதொரு தண்டனையுமடையாமற் சுகமே வாழ்ந்திருக்கிறார்களென்று இவ்வூர்த் தமிழரும அதை அறிந்திருக்கிறார்களே. ஆனதால தங்களுக்குவருகிற ஆபத்தைத் தீர்க்கமாட்டாதவர்கள் மற்றும்பேர்களைக் காப்பாற்றி அவர்களுக்குத் தேவையான உபகாரங்களைக் கொடுக்கிறார்களென்று நம்புகிறது புத்தியீனமல்லவா?

மேலுஞ்சிலர் எண்ணுவார்கள் விக்கிரகங்களையும இறந்துபோன சுத்தவாளரையும் நம நோக்கிப் பிரார்த்தித்துக்கொள்ளுங் காரியத்தைச் சிலபோதாகுதல நமக்குச் சித்திக்கத் தேவன சித்தமாகிறரே ஆனதால விக்கிரகங்களையுஞ் சுத்தவாளரையும பிரார்த்திக்கிறது பாவமல்ல,அவர்களையும வழிபாடுபண்ணலாமென்று எண்ணுவீர்களாகில சேனுகள் கள்வர்,தூர்த்தர், குடியர், கொலைபாதகர் முதலான தீயவர்கள் தாந்தாம இச்சித்தவைகளை அடைவதினால அவர்கள் செய்யும பாதகங்கள் பாவமல்லவென்று சொல்லுவீர்களா? இல்லையே அப்படியே இதுவுமிருக்கின்றது. விக்கிரகங்களையுஞ் சுத்தவாளரையும பிரார்த்தித்துத் தாந்தாம இச்சித்தவைகளைப் பெற்றுக்கொள்வதினால விக்கிரகபத்தியுஞ் சுத்தவாளர் வணக்கமும பாவமல்லாமறபோகாது

இன்னும வியாதிவந்து திருந்தலுஞ் சிலகாலம் பிள்ளையில்லாதிருந்து பின பிள்ளைப்பெறுதலும மற்றும விரும்பின காரியஞ் சித்தியாகுதலும புதுமையல்ல. இவை உலகத்திலே இயல்பாய நடக்கின்றன. ஆனாலும புதுமையெப்படிக்கொத்ததோவெனில எமது இரட்சகராகிய இயேசுவானவர் தமது வார்த்தையினாற் பிறவிக்குருடருக்குப் பார்வையளித்தது ஊமையரைப் பேசப்பண்ணி முடவரை நடக்கப்பண்ணி பசாசுகளை மனிதரிலிருந்து அகற்றிச் செத்தபிரேதங்களை எழுப்பி ஐந்தப்பங்களை ஐயாயிரம்பேருக்கசனமிட்டு மிகுந்தவைகளைப் பன்னிரண்டு கூடைநிரம்ப வெடுக்கச்செய்து தண்ணீரை முந்திரிகைப்பானமாக்கக் கடுங்காற்றுக் கடலையுமடக்கி அமையவும்பண்ணின இவ்வகைச்செய்கையே புதுமையென்று சொல்லத்தகும

இப்படிக்கு,

மட்டைக்களப்பு
௲௮௱௪௨ ஆ. ஆடி மீ ௭ தீ } யோவான பிலிப்பு

(சொல் வினா)

சங்கதியென்பதென்னை?

இச்சொற்குப் பஞ்சலட்சணம் பகருமின்.

இப்படிக்கு
இ. யா.
ஞானமுத்துப்பிள்ளை
நாகமுத்துப்பிள்ளை } இருவர் கையொப்பம்

No. XI

Through the medium of the *mind* mankind,
(Continued from page 156)

CONCUR—To unite or be conjoined with the opinions of others
DOUBT—To waver or fluctuate in opinion
DEMUR—To delay determination or conclusion
HESITATE—To stop or pause respecting decision or action
SCRUPLE—To hesitate from the difficulty of determining what is right or expedient
WAVER—To be unsettled in opinion.
FLUCTUATE—To be irresolute or undetermined.
DISCERN—To discover by the intellect
DISTINGUISH—To discern critically
APPRECIATE—To value merit
ESTIMATE—To judge and form an opinion of the value
COMPUTE—To cast or estimate in the mind
RATE—To fix the relative value in one's mind by deduction and comparison
RUMINATE—To think again and again
CONFIDE IN—To believe with assurance
EXPECT—To entertain at least a slight belief that an event will happen
ANTICIPATE—To have a previous view or impression of some thing future
TRUST—To rely or rest the mind on the integrity, veracity, justice or friendship of another
AWAIT—To look for or expect
SUSPECT—To imagine to be guilty but upon slight evidence
ACQUIESCE—To be easy about or contented with a thing
COINCIDE—To have oneness of opinion and feeling concerning the same thing
FORESEE—To know an event before it happens
FORGET—To let a thing pass from the memory

வெஸ்லி ஆபிரகாம் என்பவர் பாடிய

தோத்திர ஞானக் கும்மி

கடவுள் வணக்கம்

ஸ்ரீ ஞானக்கும்மித் தமிழ்ப் பாடச் சர்வ சிவ தயாபரன் காப்பாமே
பார் ஞான சத்திய வேதச் சுடரெங்கும் பாயந் தொளி செய்யுமே
ஞானப்பெண்ணே — க
ஏகங் கெங்குமே யொளியாய் அருவாகிய வேக பராபரனை யெல்லாந்
தங்கும் வாக் கத்தராம் வாக் கத்தரெல்லோரே சங்கீதம் பாடு ஞானப்
பெண்ணே — உ
அல்லும் பகலும் பராபரன் பாதம் மடுத்து வணங்கியே சங்கீதத்தால்
அல்லேலூயா அல்லேலூயா வென்றே யவர் ஆநந்தம் பாடுவாய்
ஞானப்பெண்ணே — ந
நித்தியமான பரிசுத்தர் ரட்சகர் தேசத்திலஞ் ஞானத்தோரை
யெல்லாம் [ஞானப்பெண்ணே — ச
பொறுத்து ரட்சிக்கும் அவர் கர்த்தர் நல்ல புகழினைப் பாடுவாய் ஞா
னந் தங்குணத் தவ்வ்ரந் துகரத்தவர் நாமம் பாடுபட்டவர் தம் பதமே
சேர்ந்திடும் கிறிஸ்தவர் பாடுஞ் சங்கீதச் சிறப்பினைக் காண்பாயே
ஞானப்பெண்ணே — ரு
இப்படி யெல்லா வுலகோரும் போற்றிட எங்கும் நிறைவொளி பா
யருவானதை [கேள் ஞானப்பெண்ணே — சா
மெய்யப்படியே யவர் சொல்லத் துணியலாம் வேதஞ் சொல்லக்
ஆதியிலாழப் புனலையே வெளியொளி யாயசை வாடும் பராபரனருள்
மேதினிதனைப் படைப்பதற்கே சித்தமெத்தவுங் கொண்டாரே
ஞானப்பெண்ணே — எ
ஆநந்தத்திருச் சித்தந் தனில் ஆறும் வார்த்தை ஆனது தானே பரா
பரனும
தங்கும் பராபரனுயிரட்சகர் தானுனதற்புதம் ஞானப்பெண்
ணே — அ
அப்பொழுதே கபராபரனவர் அண்டபிண்டங்களடைக்க
வெண்ணிச [ஞானப்பெண்ணே — கூ.
செப்பிடும் வானமருந்தங்கி நீர் கூவுடன் சேரப் படைத்தனர் ஞா
சேரும் நீர்தனைச் சமுத்திரமென்றுந் தெரிந்த மண்டேட்டினைப்
பூமியென்றுஞ் [ணே — ய
சாருமிரவி மதியுடு பலவிதத் தாலொளி யாக்கினர் ஞானப்பெண்
பகலிரவென்று பிரித்ததற்காகப் பகலினுக்காகும் பகலவனும்
புகலிரவிற்குச் சந்திர தாரகையைப் பொறுப்பாக வைத்தார் ஞா
னப்பெண்ணே — யக
இப்படியாகப் பலவிதமாகவே யெல்லாம் படைத்தபின் றருசா
யலாய [பெ●ணே — யஉ
மெய்ப்படியாகிய மானிடர் தங்களை மேலாகச் சகண்டாரே ஞான
அப்பொழுதா தாமைப் படைத்தவனை யச்ந்த தகிந்திரைக் கொள்ள
வைத்து [ரே ஞானப்பெண்ணே — யந
ஒப்பாயவனவிலா வெலும்பெடுத்துப் பெண்ணுருவாகச் செய்தார்
அப்படிப் பெண்ணுனை யவரை ஆதாமுக்குத் துணையாக்கி
ஒப்புடன் தோட்டத்திலனவரை வைத்தே உண்மையிற் சொன்ன
ஞானப்பெண்ணே — யச

(இன்னும் வரும்)

ஆவணி மாதம்.

சாதிம் ஆவணி யரு தீ முதல் புரட்டாதி யச தீ வரைக்கும்

E date	தமிழ் தேதி	வாரம்	நட்சத்திரம்		திதி.		யோகம்		கரணம்	
15	க	தி	கே	சஎl	த	ருகl	வை	சருlll	தை	உகlll
16	உ	செ	மூ	சக	ஏ	ருகll	வி	சக	வ	உகll
17	ந	பு	பூ	ருஉl	து	ருந	பி	நநlll	ப	உஉl
18	ச	வி	உ	ருகூll	தி	ருருll	ஆ	நகூl	கவு	உசll
19	ரு	வெ	தி	கூய	ச	ருகூll	சவு	நகூll	க	உஎlll
20	சா	ச	தி	கlll	0	சாய	சோ	சசll	வி	ந lll
21	எ	ஞா	அ	எlll	0	ச	அ	சகlll	ப	ச
22	அ	தி	ச	யசl	பி	அlll	சு	சநl	கவு	அlll
23	கூ	செ	பூ	உயll	து	யநlll	தி	சசlll	க	யநlll
24	ய	பு	உ	உகll	தி	யஅll	சு	சருll	வி	யஅll
25	யக	வி	ரே	நகlll	ச	உஉl	க	சருlll	பா	உஉl
26	யஉ	வெ	அ	நசா	ப	உரு	வி	சருll	தை	உரு
27	யந	ச	பர	நகூ	ஷ	உசாlll	து	சச	வ	உசாlll
28	யச	ஞா	கா	ச	ஸ	உசாl	வி	சகl	ப	உசாl
39	யரு	தி	ரோ	சகll	அ	உஅ	அ	நஅ	கவு	உஅ
30	யசா	செ	மி	சக	ந	உசl	வ	நநll	கர	உசl
31	யஎ	பு	தி	நகூll	த	யகூlll	சி	உஅl	வி	யகூlll
SEP.										
1	யஅ	வி	பு	நஎ	ஏ	யஎ	வி	உஉl	பா	யஎ
2	யகூ	வெ	பூ	நநlll	து	யஉl	வ	யருll	தை	யஉl
3	உய	ச	ஆ	நயl	தி	எ	ப	அl	வ	எ
4	உக	ஞா	ம	உசாl	ச	க	சி	lll	ச	க
					*	ருச	சி	ருஉl	சது	உஎ
5	உஉ	தி	பூ	உஉ	பி	சகூ	சா	சருlll	தி	உஉ
6	உந	செ	உ	யஅ	து	சநl	சு	நஅl	பா	யசாl
7	உச	பு	அ	யசl	தி	நஎlll	சு	நக	தை	யll
8	உரு	வி	சி	யக	ச	நஉ	பி	உசl	வ	ருl
9	உசா	வெ	சு	அll	ப	உஅlll	மா	யஅ	ப	ll
									பா	உஎll
10	உஎ	ச	வி	சாlll	ஷ	உருll	வை	யஉll	தை	உருll
11	உஅ	ஞா	அ	ருlll	ஸ	உசll	வி	எlll	வ	உசll
12	உகூ	தி	கே	சாl	அ	உஉl	பி	ச	ப	உஉl
13	நய	செ	மூ	எlll	ந	உஉll	ஆ	க	கவு	உஉll
							சவு	ருஅl		
14	நக	பு	பூ	யlll	தீ	உச	சோ	ருஅll	க	உச

புதன்கிழமைச் சங்கிராந்தி நாடி, ருஎ விநாடி உசல கன்னிரவி.

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

௨ புத்தகம் சஞ்சிகை ௰௫] ௲௮௱௪௰௨வரு ஆவணி. ௪, தேயதி வியாழக்கிழமை, Thursday, August, 4, 1842. [Vol. II No 15

(Versification of the 9th Psalm)

தாவீதின் ௯ம். சங்கீதம்.

சிந்து

முத்திரைப்பல்லவி

தற்பரனே நினைந்- தாழ்ந்துவணங்குவன்
தமியனையருள்வீரே

அநுபல்லவி

சிற்பரன் மீதுயர்-கீர்த்தனம்பாடுவன-சிந்தைமகிழ்ந்தடி-வந்து
னைநாடுவன—தற்

சரணங்கள்

ஆசனமீதுஉல்-லாசகொலுவினைம-ஐயனேநியரைக்-கொய்து
சதாநிலம வாசநகரைகின—மூலமதாசகிநிடை- ஆசன்மீதினி-யாய
மஅருளினீா—தற்

பூவலயத்திடை—நீதிபுரிந்தெனி-மானவாவாழ்ரா-ஞயபராபர-தா
வுவரேதினை-நாமமறிந்தவா-பாவினிற்சியோனின -நேசாகொண
டாடுவன் —தற்

தாட்சண்டமென்மீத-தாருந்தயாபர-சாதிகளோவெட்டு- கே
ணியினமாள்வரே—காட்சிதருமபரன- மாட்சிமறந்தவா—மீட்சி
யிலாநர—காடசியடைகுவா—தற்

Gardener's Calendar for August

Madras

Mean Temperature 84 6.—*Average fall of rain* 4 76

Successive crops of all the vegetables sown in July should be planted this month, more especially celery and beet, which should be fit to transplant a second time before the monsoon These two vegetables are less likely to suffer by excessive rain than most others Artichokes should be sown in beds during this month, three inches between each seed, so as to allow the removal of the plants in November without disturbing the roots To propagate by suckers, take off the suckers, and prick them out six inches apart, and when they become well rooted, transplant into deep rich soil, setting them two feet apart If large, suckers may be planted at once where they are intended to remain

To prevent artichokes running to leaf, and producing small heads, when the plants are from ten to fifteen inches high, cut them off close to the ground and cover them over with light dry manure, when they have advanced a few inches repeat the operation If the young plants are tied up for a few days before being cut off, they will become blanched and may be eaten as salad

French beans and scarlet runners may be sown during this month and until February They should be planted in rows two feet apart north and south, and be well supported with sticks, or with an arched bamboo trellis, which is very ornamental

Europe vegetables continue scarce and dear Brinjals, greens, and other native vegetables are to be had Mangoes, pine apples, and oranges, are very scarce Plantains continue in abundance

Bangalore.

Mean Temperature 74—*Quantity of rain measured* 5 5-8 *inches*

Oranges, loquats, and alligator pears in season Insects are excessively numerous and destructive The orange tribe should be budded and marched, and propagated by gooties Plant beds with early strawberries Still sow a few vegetable and flower seeds Continue grafting mangoes Transplant cotton Propagate carnations and pinks by layers Begin collecting seeds of early flowering annuals Dahlias are in perfection

---

(From the Madras Almanac for 1842)

Hints on the Theory and Practice of Gardening.

(Continued from page 82, No 7)

The effect of cold on plants is to increase their excitability, that is, it renders them more susceptible of being acted on by the stimulus of heat Heat by its stimulus diminishes excitability and if long continued would exhaust it altogether Nature provides against this result by the periodical fluctuations of light and heat of the day and night During the day every part of the plant is strongly excited, and its power of evaporation and assimilation most energetic As evening advances and the stimulus of light and heat, is withdrawn, the excitement subsides and reaches its minimum during the night Plants, therefore, like animals, have their diurnal seasons of action and repose During the day their system is exhausted of fluid by exhalation of aqueous fluid, and during the night, when perspiration ceases, the waste is made good through absorption by the roots

The alteration of seasons seem intended to produce the like effects in a more extended manner This is very evident in the temperate zones, where the cold of winter arrests vegetation for months together, and renders the plant so excitable that the rise of a few degrees of temperature in spring at once excites active vegetation It is much less so between the tropics, but here also it is observable, as indicated by the fall of the leaf of some trees, and the nearly total arrest of vegetation in most during some part of the hot season

This wonderful similarity of effects in living beings, originating in the action of opposite extremes of the same cause (heat) has not received the attention which it seems to merit from philosophers, and no satisfactory explanation has yet been given of it Before indeed any explanation can be given, it is indispensably necessary that our observations, on the proportion usually borne to each other, by the temperatures of the earth and atmosphere, should be more perfect, for, considering the great importance of heat in the economy of plants this knowledge is, for the purpose of gardening, of the greatest consequence

(To be Continued)

(The claims of Mohammed and Christ compared)

உதயதாரகையின் எடிற்றா அவாகளுக்கு வந்தனம

துரைகளே,

உலகத்தில வசிக்குஞ் சருவத்திராகளும் அவரவர் மதத்தை நிசமாயும, மற்றவர் மதத்தை அவத்தமாயுங் காணகிலும ஏதொரு முகாந்திரமுமின்றித் தங்கள் கருத்துக்கிசையாத மதங்களைப புதினப்பத்திரிகை வழியாய் நிந்திப்பது சிலருடைய நியாயத்துக்கொத்திருந்தாலும அநேகரெண்ணத்துக்கு இசையாதென்றெணணுகிறேன.

நீங்களோ உங்கள் உதயதாரகை, உம். புத்தகம்,௰கம. சஞ்சிகை, ௭௩ம பக்கத்தில பரிசுத்த வேதாகமமடங்கியிருக்குங் குருனென்பதற்குப் பதிலாகச் சமய நிந்தையுங் கேடான காரியமுமடங்கியிருக்கிற கோறுன புத்தகமென்று உங்களால நிந்திககப பட்டிருக்கின்றது

ஆனாலும் உங்கள் புதுஏற்பாடென்னும் வேதபுத்தகத்திலே சமய நிந்தையுங், கேடான காரியமும, தெய்வ தூஷணமும், வருததத்தக்க துரபோதனையை அடக்கியிருக்கிறதெனறும எங்கள் பரிசுத்த குருனிலே யாவிகள் நலவிடமடையககூடிய உண்மையான நற்போதனையை அடக்கியிருககிறதெனறும, எங்கள வேதாகமங்களாற் போதிக்கபபட்டிருககிறேனெயொழிய மற்றும்படி தேவனுக்கிசையாப் போதனை குருனிலே அற்பமெனகிலுமுணடாயிருககுமென்றறிந்தவனல்ல.

இபபோதனையை நீஙகள் நிசமல்லவென்று காணுகில உங்கள் சுபுதிலே ருசிபபடுத்தும யாங்காய நலல நியாயத்துடன விபரிதது உங்கள் பத்திரிகை மூலமாய் வெளிபபடுத்த நியாயமுண்டென்று காணவேண்டியதுமன்றி, அபபடி வெளிக்கிடச்செய்கில இவைகளைக குறித்து என்னுடைய சிற்றறிவிற் றெளிந்தபோலெழுதுங் கடிதங்களை எழுத்துப்பிழை பாராட்டாமல உஙகள் பத்திரிகையிற் பதித்துப் பிரபலஞ்செய்து வருமபடி தயவுவைப்பது முறை. அபபோது இவ்விரண்டில உணமையான மார்க்கமின்னதென்றறியலாம்.

ஆகையால இக்காகிதத்தை உங்கள் அடுத்த பத்திரிகையில அதற்குத் தகுமான மாறுத்தரமுட்படப் பதித்துப் பிரபலஞ்செ

யயும்படி மிகவும் வருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்

இப்படிக்கு

காவிநகர் உங்கள் தாழ்மையுள்ள பணிவிடைகாரன்
ஆனிமீ உஎ தீ வா ம பகீர்மாலிமியார் மரக்காயர்.

பத்திராதிபதியவர்களின் குறிப்பு

அறிஞரே, பகீர்மாலிமியார் மரக்காயரவர்கள் வாதத்தையும் நமது போதகத்தையும் இருவர்க்குள்ள நீதத்தையும் அவ்விரண்டிற்குள்ள பேதத்தையும் நாட்டிப்பாருங்கள் கேட்டுத்திருங்கள் பராபரனொருவராயிருக்கிறார் அவர் வாக்குறி பூதத்தையும் பூதாத்மக பேதத்தையுஞ் சிருட்டித்து அவைகளைப் பரிபாலித்து விசேடாத்துமாக்கட்கறிவை விசாலித்து, தமதாளுகையை ஸ்தாபித்துவருகிறார். அவருக்குத் தொழும்புசெய்வதே நமக்கொழுங்கு பூலோகவாசிகளாயயாவருந் தத்தமதங்களையே சத்தியமானதாயும் மற்றைமதங்களை அசத்தியமானதாயும் ஆயாமனிச்சயித்துக்கொள்ளுகிறார்கள், சுதந்தரைச்சிந்தனையிகேவல சிந்தைபெற்றோர் மதவிதங்களையாய்ந்து சிதமதங்களையோய்ந்து ஒரேதேவனும் அவருக்குத் தொழும்பு செய்யும் ஒரேவழியும் அவருண்டாக்கிய பாவப்பிராயச்சித்தம் ஒன்றேயன்றிப் பலவல்ல வென்கூறுவதாயும் பல சாதனத்தாற் சாத்தியப்பட்டதாயுமிருக்கிற யதத்தையே நிச்சயித்திருக்கிறார்கள் ஆதலால் மற்றையார் தத்தம மதக்கோட்பாட்டை யாராயாமற் சொல்வதை லேசாக விசுவாசியாமல் அவ்வவ்வேதத்துள்ளும் பிறவேதத்துள்ளுங் காணுகிற திருட்டாந்திரங்களைக்கொண்டோராந்து துணிவதியாவர்க்குங் கடன், அதுவே நமக்குந் திடன்

நானே பராபரனாலனுப்பப்பட்ட நபி என்னைமாத்திரமே வணங்குங்கள், என்று மகம்மது தனக்குத்தானே சாட்சிகொடுக்கிறார் இச்சாநபியும் பராபரன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொடுத்து இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாயிருந்தார் யோவான் ௩ ௰௬

நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்குச் செல்லமாட்டான் எனவும், யோவான் ௰௪ ௬ நாமே மாத்திரம் என்னைக்குறித்துச் சாட்சிகொடுத்தால் என் சாட்சி மெய்யென்று கொள்ளவேண்டாம் வேறொருவனும் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறான் அவன் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யென்றறிந்திருக்கிறேன் எ-ம், யோவா. ௫ ௩௧ ௩௨, தம்மைக்குறித்துச்சாட்சிகொடுக்கிறார் இவரைக் கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல மகம்மதுவும் மகம்மதுமார்க்கத்தாரும் குருமவேதமுஞ் சத்தியமுள்ள நபியென்று ஏற்றுக்கொள்ளுகிறது மகம்மதுவை ஒரு நபியென்றாகிலும் ஒரு சுத்தாத்துமாவென்றாகிலுங் கிறிஸ்தவர்களாகிலுங் கிறிஸ்துமார்க்கமாகிலும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை இவ்விருவரில் ஆருடையசாட்சி ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதென வாசிக்கிறவர்கள் தீர்ப்புச்சொல்லலாம் இன்னுமிவர் மேற்சாட்சியிலும் அதற்சாட்சிப்பட்டிருக்கிறார், எப்படியெனில் அல்லாவாகிய பராபரன் இவரெனக்கன்பாயிருக்கிற வென்னுடைய குமாரன், இவரிற் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் எனச்சாட்சியிடுகிறார் மத்தேயு ௩, ௧௭ நாம் ஏற்றுக்கொள்ளுகிற மனிதருடைய சாட்சியிலும் பராபரனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது, பராபரன் தமது குமாரனைக்குறித்துக் கொடுத்தசாட்சி அதுவே என யோவான் குறிக்கிறார் ௧ யோவான் ௫. ௯ குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய சீவனையுடையவனாயிருக்கிறான். குமாரனைவிசுவாசியாதவன் சீவனைக்காண்பதில்லை பராபரனுடைய கோபாக்கினை அவன்மேல் நிலைநிற்குமென்று யோவான் சுவிசேஷத்திலே சாட்சிகொடுத்தான் யோவான் ௩ ௩௬ அவராலேயன்றி வேறொருவராலுமிரட்சிப்புக்கிடையாது, நாம் இரட்சிப்பை அடையும்படிக்கு வானத்தின்கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே வேறொரு நாமங் கட்டளையிடப்படவில்லையென்ப பேதுரு சொன்னான் அப்போ ௪, ௰௨. இந்த யேசுவையே பராபரன் எழுப்பினார், அதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் என்று மற்றுஞ் சீஷர்களுடைய சம்மதப்படியே பேதுரு சாட்சிகொடுத்தான், அப்போ. ௨ ௩௨ இந்தச் சங்கதியைக்குறித்து நாங்களும் பராபரன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக்கொடுத்த பரிசுத்தாவியும் அவருடைய சாட்சிகளாயிருக்கிறோமென்றார்கள் அப்போ. ௫ ௩௨ இதினாலே பரிசுத்தாவியும் அவருக்குச் சாட்சிகொடுத்ததாய் விளங்குகிறது நாம் நம்முடைய பரிசுத்தபருவதமாகிய சீயோனமீதில் நம்முடைய ராசாவை அபிஷேகம்பண்ணினோம் என்றும், நீர் நம்முடைய குமாரன் இன்று நாம் உம்மைச் செனிப்பித்தோம் என்றும் தாவீது நபியெழுதிய சங் ௨, ௭. வசனத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது ஆ! யேசுவே பராபரனுடைய குமாரனே எங்களுக்குமுமக்குமென்ன காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்தும்படிக்கு இங்கே வந்தீரோவென்று அசுத்த ஆவிகளுஞ் சாட்சியிட்டார்கள் மத்தேயு, அ ௨௯ அசுத்தஆவிகளும் அவரைக் கண்டவுடனே அவருக்கு முன்பாக விழுந்து நீர் பராபரனுடைய குமாரனென்று கூப்பிட்டார்கள் என்று சொல்லுகிறார். மாற்கு ௩ ௰௧ நீர் என்னுடைய குமாரனென்றும், இன்று நான் உம்மைச் செனிப்பித்தேனென்றும், அவருக்குப் பிதாவாயிருப்பேன் அவர் எனக்குக் குமாரனாயிருப்பாரென்றும், பராபரன் ஒரு காலத்திலாகிலும் தூதர்களிலொருவனுக்குச் சொன்னார் என எபிரேயர் ௧ ௫லே காணப்படுகின்றது இவ்விதமாய்த் தற்சாட்சியைக்கொண்டுந் தேவ சாட்சியைக்கொண்டும் அயற்சாட்சியைக்கொண்டுங் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறோம் மகம்மதுவைப்பற்றி இவ்வகையான சாட்சி கோறானிலே யுண்டாகில் உதயதாரகை வழியாய் மகம்மது மதாநுசாரிகள் அறிவிப்பார்களாக அப்படி அறிவிக்கக் கோறான் மறுபாஷையிலே திருப்பப்படவில்லையேயென்று அவர்கள் கூறில் அம்மதத்தை என்ன சாதனத்தைக்கொண்டு நீங்கள் விசுவசிப்பார்கள் அம்மதாநுசாரிகளுடைய சொல்லைக்கொண்டோ? அது சீவசாட்சியையுடைய மகாத்மாக்களுக்குச் சரியாயத் தகுதியான சாதனமில்லாமல் ஒன்று சாத்தியப்படுமா? பட்டயத்துக்கஞ்சி விசுவாசிக்கலாமா? கட்கத்துக்கஞ்சிக் கதியிழக்கலாமா? அவை சேதனசீவன்கட்கு ஏற்றதல்லவே

உண்மையான நபியார்—மகம்மதுவோ? கிறிஸ்துநாதரோ? நீங்களே வாசித்துக் கோட்டமின்றி மத்திடஞ்சொல்லுங்கள். மகம்மது நபி தன்னுடைய சீஷப்பிள்ளைகளுக்குப் போதிக்கிறதற்கென்று கோறானை விதித்திருக்கிறார் கிறிஸ்துநாதருடையவும் அப்போஸ்தலருடையவுஞ்சரித்திரங்கள் சருவதிராணும் படிக்கிறதற்கென்றே விதிக்கப்பட்டன பின்னை, கோறானெங்கே? அது தமிழ்ப்பாஷையில் வரைந்திருக்குமோ? சனங்கள் அதைத் தங்கள் வீடுகளில்வைத்து வாசிக்கிறார்களோ? அவர்கள் அதை வாசித்து விளங்கக்கூடுமோ? அவர்களைப்பற்றி யாதொன்றும் அறிவார்களோ? மகம்மது மதாநுசாரிகளிற் கோறானைப்பற்றி விபரிக்கக்கூடியவரெவர்? ஐயோ! மகம்மதுமதச் சுருதியவிசுவாசிகள் இதைப்பற்றிச் சற்றேனும் அறியாதவர்களாயிருந்தால், அவிசுவாசிகளென்செய்வார்கள் போதிய சாட்சியில்லாமல் விசுவாசிப்பார்களா? அப்படி விசுவாசித்தால் அது சேதனசிருட்டிக்குத் தருமா? சீவசாட்சிப்பிரமாணத்துக்கு அது யோக்கியமா? மகம்மது போதிக்கிற காரியமென்ன? கோறான் இரண்டாம் அதிகாரத்திலே அவர் கூறுவதைக் கேளுங்கள் என்னவாறால் "மார்க்கத்தைப் பிறர்க்குச் சாதனைசெய்யும்பொழுது யாதொரு பலாத்காரமுஞ் செய்யவேண்டாது" மறுபடி ௬ம அதிகாரத்திலே "ஞானத்தினாலும் உத்தம புத்திமோதனாலுஞ் சனங்களை ஆண்டவனிடத்துக்கழைப்பியும், சனங்களுடன் மெத்தத் தயவுடனே தருக்கம்பண்ணும்" சந்தேகமில்லாமல் எந்த யதார்த்தவாதியும் இக்கற்பனைகளை கைக்கொள்ளாமலேவிடான். கிறிஸ்துமார்க்கமும் மிப்படிப்பட்டவைகளைத் தானேபோதிக்கிறது உதாரணமாய் (௨. தீமோத்தேயு ௨ ௨௫) "எதிர்பேசுகிறவர்களுக்குச் சாந்தமாய்ப் புத்திசொல்லவேண்டும்" இப்படிப்பட்ட சாமார்க்கப் போதனைகளை மகம்மது நபி கைக்கொண்டுவந்தாரேயாகில் அவருக்குக் கடைசியிற் பாக்கியமாய் முடியுமே

கோறான் ௯ம் அதிகாரம் "நீங்கள் அவிசுவாசிகளைக் காணும்போதெல்லாம் அவர்களுடைய சிரத்தை உடையுங்கள் அவர்களைச் சோறுமாரிபோலவிழுந்தடித்துச் சங்கிலிகளினால் பிணைத்துக் கட்டுங்கள்" மகம்மதுவின் ஆரணவீரர்கள் உலகத்தவரைக் கீழ்ப்படுத்துகிறதற்குப் போரெடுத்துப்போனபொழுது அவர்கள் சன்மார்க்கத்துக்கும் நிருபித்தகட்டளையாவது "காருணிகமத்தை நம்புங்கள் நம்பிக்குத் திறையிறுங்கள் அல்லாதிருந்தால் சுவனநாசமாவீர்கள்" கோறானைவாசியுங்கள் அப்போது உங்களுக்குத் தெரியவரும். வாசிக்கிறதற்குக் கோறானெங்கே? அது சத்திய வெளிச்சத்தைக் காட்டக்கூடியதாயிருந்தால் அதை அரபிபாஷையில் வரைந்து திமிரப்படலத்திற் புதைத்து மறைக்கவேண்டியதென்ன?

கிறிஸ்துநாதர் போதிக்கிறவைகளென்ன! சொல்லுங்கள் அவர் பரமண்டலத்துக்கேறுமுன்னே தமது சீஷப்பிள்ளைகளுக்குச் சொன்னது (மாற்கு ௰௬. அதி. ௰௫. வச) "அல்லாமலும் அவர்களை

நோக்கி நீங்கள் உலகத்திலெங்கும்போய்ச் சிருட்டிக்கப்பட்டிருக்கிற யாவர்க்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கஞ்செய்யுங்கள்" இந்தக் கட்டளைப்படியே அவருடைய தாசர்கள் இப்பொழுது சகலஞாதிகளுக்கும்போய்க் கிறிஸ்துநாதருடைய சரித்திரத்தையும் அவர் கொடுத்துப்போன திவ்விய நற்போதனைகளையும் பற்றி வாசிக்கக்கூடிய அனைவர்க்கும் பற்பல புத்தகங்களை அச்சடித்துப் பிரசுரஞ்செய்து சகலரும் வாசித்துத் தோத்திரக்கட்டுமென்று சகலரையுமழைக்கிறார்கள். இயேசுநாதருடைய பரம போதனையைக் கேளுங்கள் (யோவான் ௩ அதி ௰எ, ௰௯, உ௰, உ௧, "பராபரன் உலகத்தாரை ஆக்கினைக்குட்படுத்தும்படிக்கல்ல இரட்சிக்கும்படிக்கே தமது குமாரனை உலகத்தில் அனுப்பினார் ஒளியானது உலகத்தில் வந்திருந்தும் மனிதர் தங்கள் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியால் அந்த ஒளியிலும் இருளைவிரும்பிக்கொண்டு வருகிறதே ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கின்றது பொல்லாங்கைச் செய்கிறயாவனும் ஒளியைப் பகைக்கிறதால் தன் கிரியைகள் அதட்டப்படாதபடிக்கு ஒளியிற் சேரமாட்டான் சத்தியத்தைச் செய்கிறவனோ தன் கிரியைகள் பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறபடியினாலே அவைகள் வெளியரங்கமாகும்படிக்கு ஒளியிலே சேருகிறான்."

"மாவியர்" சொன்னபடி புதிய ஏற்பாட்டில் எந்த அதிகாரத்தில் எந்த வசனத்திலே சமயநிந்தையுங் கேடான காரியமுந் துர்க்குணமும் மனிதருக்குக் கேட்டைவருத்துவிக்கத்தக்கதுமான துற்போதனைகளை அடக்கியிருக்குதென்று காட்டுவாராக. மகமதுவின் சரித்திரத்தையும், இயேசுநாதருடைய சரித்திரத்தையும் வாசித்து ஒவ்வொன்றோடொன்று சமானித்துப்பார்த்து அதிலெந்த உயர்ந்த பராபரனிடத்திலிருந்து வந்ததென்று சொல்லட்டும் ஆண்டவனே மகிமைப்படுத்தப்படுவாராக ஏனென்றால் சத்தியமே செயாநுகூலத்தை யடையப்பண்ணுவார் அப்பொழுது அந்தக் கருங் காண்பார்கள்

காகிதப்பிரத்தியுத்தரம்

(Answers to Correspondents)

நல்லூர் சின்னசுவாமியார் தாமெழுதிவைத்த வெங்கடாசலையர் குமாரன் கார்த்திகேயையன் எனக் கையொப்பமிட்டுச் "சாபுரைச் சகோதண்டபாசுபதிய" என முகவுரைபோட்டனுப்பிய கடிதம் வந்துசேர்ந்தது

வண்ணார்பண்ணை, "அவதானமற்றமாறு கானைக் காட்டவிரும்பி" எனக்கையொப்பமிட்ட கடிதம் வந்துசேர்ந்தது

பருத்தித்துறை, "மூடரோ கையைப் பம்மவைத்தவர்" எனக் கையொப்பமிட்ட கடிதம் வெகுநாளைக்குமுன் வந்துசேர்ந்தும், அதைப்போலொத்த வேறொரு கடிதமும் முந்தநாள் வந்துசேர்ந்தபடியாலும் அதைப் பிரசுரஞ்செய்வதற்கு முன்னே இதைப் பிரசுரஞ்செய்வது நியாயமாய்க் காணுதபடியாலும் இவ்வளவுந் தடங்கலாய்ப்போயிற்று [நத்து

யாழ்ப்பாணம் "சத்தியவசனி" அனுப்பின கடிதம் வந்துசேர்ந்தது

இலந்தை நகரில் "ஒரு சிறுமாணாக்கன்" அனுப்பிய கடிதம் வந்துசேர்ந்தது

"கொழும்பு, வண்ணார்கோன் கிறிஸ்தோவுறுதிநிகு செட்டியார்" அவர்கள் அனுப்பிய கடிதத்தை இன்னுஞ் சற்றுப் பார்வையிடவேண்டியதால் இச்சஞ்சிகையிற் பிரசுரஞ்செய்ய இடங்காணாமற்போனதற்காக மிகவுந் துக்கப்படுகிறோம்

"இவாசேசா" எனக் கையொப்பமிட்ட "இலங்கைத்தாரகை" என்ற கடிதம் வந்துசேர்ந்தது

பிருனோல் ஐசுபரி என்பவருடைய காலஞ்சென்றுபோன மூன்று பிள்ளைகளைப் பற்றிச் "சோட்சாவதானப் புலவர்கட்டச்சமைப்புற பொன்னங்கால் சுப்பிரமணியக்கவிராயர்" அவர்கள் பாடியனுப்பின ஆசிரியவிருத்த முதலான மற்றும் விருத்தங்கள் வந்துசேர்ந்தன

நாகபட்டணம், "கோவிந்தப்பனுடு" எனக்கையொப்பமிட்ட கடிதம் வந்துசேர்ந்தது அவர் கேட்டுக்கொண்டபடி இப்பொழுது இலங்கையிலே நின்று அழுந்தப்பட்ட ஒழுங்குசெய்கிறது மெத்தப் புத்தியாய்க் காணவில்லை. இப்போ நாங்கள் செய்துவருகிற ஒழுங்கே மிகவும் நல்ல ஒழுங்கென்று தோன்றுகின்றது. அவர் கேட்டுக்கொண்டபடி செய்கிலும் இனிமேல் பற்ற வருடத்தில் அதிகாரியஞ் சகலர்க்கும் பிரயோசனமாய்க் கண்டால் அப்படிச் செய்வோம்.

புதினசங்கதிகள்

மரணசங்கதி.—கூடலூரிலே வெகு காலமாகக் கிறிஸ்து மார்க்க பிரபலியத்துக்காகப் பிரயாசப்பட்ட சகைபோகத சோனஸ் ஐயரவர்கள் சடுதியாய வியாதிதலைப்பட்டுப் புதுச்சேரியிலே ஆடி மீ ௨௧ தி காலஞ்சென்றுபோனதினால் நாமனைவரும் மிகவுந் துக்கப்படுகிறோம்

முத்துச்சலாபம் — முத்துச்சலாப விசாரணைகாரன் முத்துக்கள் படிவதைப் பற்றி எழுதியிருக்கிறதாவது அரிப்பிலே சோதித்துப் பார்த்தபொழுது ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட சில முத்துச் சிப்பிகள் இருந்ததேயன்றி, கற்பிட்டிக்குக் கரைதீவுக்குமடுத்த இடங்களில், ௰௩, ௰௪, ௰௫ பாகமளவு ஆழம்போய்ச் சோதித்தவிடத்திலுமப்படியேயும் ஒன்றுங் காணவில்லையென்று சொல்லுகிறார். சிறு முத்துச் சிப்பிகளும் சலாபம் கற்பிட்டிக்கரைகளில் சிலசில சிப்பிகளும் முத்துக்கருக்களும் இருப்பதினால் அவ்விடங்களிலே முத்துச் சிப்பிகளுண்டென்று விளங்குகின்றது ஆனாலும் அவைகள் எவ்விடத்திலே குறிப்பாயிருக்கின்றனவென்று முத்துக்குளிக்கிறவர்களுக்கும் விளங்கவில்லை

SUMMARY OF NEWS.

JAFFNA

Small pox has made its appearance in the village of Erkalempitty, 3 miles from Manaar

Two cases of Cholera were discovered in the passengers on board a dhoney which arrived at Talamanaar on the 23d July 1842, from Dhoney Torriy She contained 106 persons, probably coolies on their way to estates in the Kandian Province

Four persons were attacked with cholera at Talamanaar, 3 have died and one recovered The dhoney with the remainder of the crew and passengers was sent away on the 25th ultimo to the port from whence she came —*Communicated*

Pearls —An Official Report of the Master Attendant's late visit to the Pearl-banks, is published in the "Ceylon Miscellany" for July, from which we make the following extract, which shows that as a source of Revenue, Pearls may be considered no longer to exist, because there is not the prospect of a fishery for many years to come

From the 19th to the 23d the work of inspection proceeded over the banks off Arippoo but I am deeply concerned to have to report, that no deposits or beds of oysters were found on them, but very few oysters of various ages under 5 years

From the 24th to the 1st of April, the inspection was conducted over the extensive rocks lying off Calpentyn and the island of Caradivoe, even to the depth of 13, 14, and 15 fathoms' water, but I regret to have to state with no better success than attended the work off Arippoo

Although no beds of oysters were found on the banks, immense quantities of oyster-spawn have been observed on the sea beach, adhering to sea weed, which had been washed on shore, so that ballams could have been filled with it, some of it, and the few oysters picked up on the banks are herewith transmitted

• On the 1st of April, the S W wind returned with much force, accompanied by a strong current and high sea, difficulties too great for the divers to contend with,—and as the season was too far advanced to hold out a prospect of being able to recommence the work on the banks, I considered *it advisable to close the most unsuccessful inspection of the Pearl banks,* that I have ever been engaged in

The few oysters scattered over the banks that have been productive, the deposit of young oysters found by the "*Seaforth*" on the great bank in 1840, the scattered oysters off Chilaw and Calpentyn, and the immense *quantities of oyster spawn washed on the shore,* are sufficient indications that the pearl oyster is not extinct in these places (indeed the latter would seem to predicate the existence of unknown oyster beds) but they afford no data on which to form an opinion, as to where Pearl Fisheries may be expected on these parts of the coast

The prospect of Revenue from Pearl Fisheries is, therefore, very unfavourable, being limited at present to the bed of oysters of a year and half old found by the "*Seaforth*" in March 1841 between Negombo and Chilaw, and some oysters in the neighborhood of Jaffna, but which are not esteemed of much value neither of these oyster beds have been visited by me at any time

The Paumban Channel —From the same authority we learn that the Paumban Channel has been deepened to 8 feet at low water, and that in another year the Seaforth Steamer, which draws about that water will be able to pass through without injuring her copper —*Col Observer*

PONDICHERRY.

Obituary —We regret to announce the death of the Rev E. Jones,

a Missionary in the service of the Society for the propagation of the Gospel in Foreign Parts, and the Missionary Chaplain to the Right Revd the Lord Bishop of Madras The event appears to have been rather sudden, the Reverend Gentleman having recently been reported to be in the possession of good health His decease occurred on the 21st of July, at Pondicherry, and his remains were conveyed to Cuddalore and there interred on the following evening —*Ms Her*

AFFGHANISTAN.

The Governor General has adopted measures for the return of the Troops from Affghanistan, which have excited a great deal of indignation on the part of those who deem it necessary for the vindication of British honor that retribution should be had for the severe losses that have been sustained in that Quarter The views of the Commander-in-chief are said to coincide with those of the Governor General in regard to this "*Flying Colours*" movement, as it is called, while those of the other principal military officers are opposed The wisdom or folly of the movement may be hereafter more easily determined than now

A serious collision had occurred at Ali Musjid between the men of the detachment of the 6th Native Infantry and Lieut Corsar's Irregulars There were different accounts of the cause and progress of this disagreement

The Affghans had threatened to stuff their Hindu brethren with *Beef* and they in return promised to send for a *herd of swine* for their benefit From these civilities they proceeded to blows with fists and stones, and some of the Affghans ran to their guns, but the temper and energy of Lieut Corsar prevented his men from opening a fire upon their opponents Expresses were immediately despatched to Col Mosely at Dhakka who issued *orders* for a detachment of Troops to proceed to Ali Musjid to quell the disturbance.

Negociations were still in progress for the restoration of the prisoners, which it was confidently hoped would be successful

Acknowledgement of Monies received on account of the "Morning Star" not previously acknowledged

			£	s	d
May	26	M S Poovirayasinga Mood , *Manaar*	1	0	0
June	6	Rev W Oakley by Rev J T Johnstone, *Kandy*	2	0	0
"	6	S Tampiahpullay, (for 6 Nos) *Wannarpona*			6
"	27	Mr P F Toussaint, (for advertisement) *Jaffna*		1	4½
July	4	Mr C F Grenier, *Jaffna* - -		0 10	0
"	9	P Canjaminaden, *Colombo* - -	1	0	0
"	9	M J Poovirayasingem, *Chundicoly*	0	4	6

NOTICE.

Notice is hereby given that the following old materials will be put up in sale at the Jaffna Store on the 8th of August

Mamvetties	307	Old chest large	1
Pick axes	65	Drum frames	3
Axes	16	Wall lantherns	2
Knives	62	Old barrow wheels wooden	2
Hammer	1		
Bill hooks	2	Old barrow wheels cots	16
Wheel barrows	77	Old padlocks	4
Door Locks	4	Double gallon measures	3
Iron broken bolts	10	One " "	1
Pieces of old Iron	70	Half " "	3
Nails	35	Quarter " "	2
do	20	Six dram cup	1
Iron Rings	2	Three "	2
" Hinges	16	One "	2
Muskets	4	Half "	2
Tusks small	6		

Jaffna Cutchery 28 July, 1842.

H. O'Grady, *Asst. Govt. Agent.*

அறிவித்தல்.

இதின்பின்னுற் சொல்லப்படுகிற சாமான்கள் இந்நடந்துவருகிற ஆவணி மாதம் அ. திகதியாகிய திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இஸ்டோரில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகுது.

மண்வெட்டி	௩௱௭	சிறுபெட்டிகள்	௧
பிக்கான்	௬௰௫	பழம்பெட்டிபெரிது	௧
கோடாலி	௰௬	மதவுக்குவைக்கிறமரத்திரி	௩
கைக்கத்தி	௬௰௨	சுவர் லாந்தர்	௨
சுத்தியல்	௧	பழங்கைவண்டிவில் மரம்	௨
வில்கூக்ஸென்னுங்கத்தி	௨		
கைவண்டில்	௭௭	பழங்கட்டில்	௰௬
கதவிற்பூட்டுகள்	௪	பழம் ஆமைப்பூட்டு	௪
இரும்புத்திருங்கு	௰	இரட்டைக்கலன்	௩
பழம்இரும்புத்துண்டுகள்	௭௰	ஒற்றைக்கலன்	௧
		அரைக்கலன்	௩
ஆணி	௩௫	கால்க்கலன்	௨
ஆணி	௨௰	௬. திறமில் அளவு	௧
இரும்புவளையம்	௨	௩. திறமில் அளவு	௩
இரும்புப்பிணையல்	௰௬	௧. திறமில் அளவு	௨
துவக்கு	௪	அரைத்திறமில் அளவு	௨

யாழ்ப்பாணம் கச்சேரியில் ௲௮௱௪௰௨ ஆடி ௨௮ [illegible]

H. O'Grady [illegible]

அறிவித்தல்

உதயதாரகைப பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யும்படி கடிதங்களை எழுதிவரவிடும எங்கள் சிநேகிதர்களைப் பத்திராதிபர் தாழ்மையுடனும அதிக நேசத்துடனுங கேடடுககொள்ளுகிறதென்னவென்றால, இனிமேல் வரவிடுங கடிதங்களைத் தயவுபண்ணிச் சுருக்கமாக எழுதியனுபபுவதுமன்றி, வாசிக்கிறதற்கு மலைவைக்கொடுககுமிடங்களில அவவவவெழுத்திற்குரிய அறிகுறிகளையு முறையே தெளிவாய்க் காட்டி எழுதியனுப்பினால மெத்த நலலது பிரதானமாகபபாடடுககளில அபபடிச்செய்யவும அப்படிச்செய்தால ஒவவொரு முறையில மிகுதியான கடிதங்களைப் பிரசுரஞ்செய்ய வேதுவாயிருககும

JUST PUBLISHED

A Tamil Geography of Hindustan, pp 216, 12 mo sold at the American Mission Press, Manepy—Price 2 shillings

CONTENTS —அட்டவணை

Historical sketch of the Pandian kingdom	177	பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு	177
Life of Mohammed	ib	மகமதுவின சரித்திரம்	ib.
Abridgement of Good's Book of Nature	179	கூட்டென்பவர் செய்த பிரபஞ்சநூல	178
The History of Christianity in Ceylon	180	இலஙகைத்தீபக கிறிஸ்துசமயோற்பவ விருத்தாந்தம்	180
Communications	181-183	கடிதங்கள்	181-183
Synonymous words	184	ஞானக் கும்மி	184
Panchangam	ib	பஞ்சாங்கம	ib
Versification of the 9th Psalm	185	தாவீதின் சும் சங்கீதம்	185
Gardener's Calender for August	ib	கடிதங்கள்	186-188
Hints on the Theory and Practice Gardening	ib	காகிதப்பிரத்தியுத்தரம்	ib
Mohammed & Christ compared	186		
Answers to correspondents	187		

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance

உ புத். சஞ்சிகை ௧௬] ௲௮௱௪௰௨ ௵ ஆவணி. ௴ ௮, தேயதி வியாழக்கிழமை, Thursday, August, 18, 1842 [Vol II No 16

பாண்டிவளநாட்டுச் சரித்திரக்குறிப்பு

(Historical sketch of the Pandian kingdom)

(Continued from page 177)

விசயநகரத்து ராசாக்கள் பதினொருஞ்சகத்துக்கு முன்னே கிஷ்ணா (Krishna) ஆற்றுக்குத் தெற்கேயிருக்கிற அநேகந் தேசங்களிலே தங்களுடைய பெரிய அதிகாரத்தை ஸ்தாபித்திருந்தார்கள் ஆனாலும் அவர்கள் அந்தத்தேசத்து ராசாங்கத்தை அந்தந்தேசத்து ராசாவின் வசத்திலே விட்டுவைத்துத் தாங்கள் அவர்களுக்கெல்லாம் பெரிய ராசாவாகிய அந்தஸ்துள்ளவர்களென்று அவர்கள் ஒத்துக்கொண்டு மதித்திருக்கிறத்தோடேயும், அவசரமான காலங்களிலே பண ஒத்தாசை பண்ணிக்கொண்டு படைத்துணை வருகிறத்தோடேயும், திருத்தியாயிருந்தார்களென்று பெரும்பாலுங் காணுகின்றது, விசயநகரத்து கிஷ்ணராசன் துரைத்தனகாலத்திலே பாண்டியதேசமும் சோழதேசமும் அதற்குரிய ராசாக்களாலேயே ஆளப்பட்டுக்கொண்டன வீரசேகரனென்ற சோழனுக்கும், சந்திரசேகரன் அல்லது சந்திரகுமாரனென்ற பாண்டியனுக்கும் ஒரு யுத்தம் நேரிட்டது அந்த யுத்தத்திலே மதுரைராசாவானவன் முறிந்துபோய்த் தன்னிராசியத்தைவிட்டு ஓடிப்போம்படியாகக் கட்டாயப்பட்டு, இந்தச் சிறுமையோடே கிஷ்ணராயனிடத்திலே போய்த் தன்னை யாதரிக்கச்சொல்லியும், உதவிசெய்யச்சொல்லியும் அடைக்கலம்புகுந்து குறையிரந்தான் இந்த விசயநகரத்து ராசா அந்தச் சமயத்துக்கொத்துக்கொண்டு தங்கள் மாட்டுமந்தைக்குமேல விசாரணைக்காரனாயிருந்த நாகம நாயக்கனென்கிறவனுக்கு அநேக ஸ்தோமங்களைக்கொடுத்து அந்தப் பாண்டியராசனை மதுரையிலே மறுபடியும் ஸ்தாபிக்கச்சொல்லியும், தஞ்சாவூர் இராசாவை அவனுடைய துணைவுகரத்துக்காகத் தண்டிக்கச்சொல்லியும் அவனை அனுப்பினான் அந்தச் சட்டங்களுவிலே நிறைவேற்றச் சந்திரசேகரன் தங்கள் முன்னோர்களுடைய சிங்காசனத்திலே மறுபடியும் உட்கார்ந்தான் ஆனாலும் அந்தப் பாண்டியனுக்கு நாகமநாயக்கன் இராச்சியத்தைக் கொடுத்தான் ஏனென்றால், நாகம நாயக்கன் கிஷ்ணராயனுக்கு முதலாய்ப் பயப்படாமல் அவன் ஆணைகளையும் ஆக்கினைகளையும் நிராகரித்து அந்த மதுரை இராசனைச் சிறையிலேவைத்துப்போட்டு அந்த ராச அதிகாரத்தைத் தன் வசமாய் வைத்துக்கொண்டான் அப்பால், தனது செளுதிப்பது செய்ததும், தனது கட்டளைகளை மீறித் தன்னோடே கலகத்துக்கேற்பட்டதும் கிஷ்ணராயனுக்குத் தெரியவந்தன

நாகம நாயக்கன் புதிதாய்ச் சம்பாதித்த அதிகாரத்துக்காகத் தண்டிக்கப்படாமல், முழுதுந் தப்பிக்கொண்டவனுக்குக் காணப்பட்டபடியினாலே அவனுடைய சவுரியத்தையும், நடத்தையையுங் குறித்து விசயநகரத்துப் படைத்தலைவர்களுக்கு வெறுப்புண்டாகி அவனைத் தண்டிக்கவேண்டுமென்று புறப்பட்டார்கள் ஆனபோதைக்கும், அந்த விசயநகரச் சமஸ்தானத்துக்கு ஆச்சரியமுண்டாகும்படியாய், நாகம நாயக்கனுக்கு ஒரு எதிரி ஏற்பட்டான். அவனாரென்றால், நாகம நாயக்கனுக்கு ஏகபுத்திரனாய் விஷயமான விசுவநாதநாயக்கனென்றவன் இந்தக்குமாரன், நாகமநாயக்கன் காசியாத்திரைபண்ணினதினாலே பிறந்தவன் இவனைக் கலவி கற்கிறதற்கும், தனது படைக்குத் தரவாதியாகவும் விசயநகரத்திலேயே விட்டுவந்தான் விசுவநாத நாயக்கன் தன்னுடைய சாதுரியவல்லமைகளுக்கு அநேகந் தடவை தங்கள் காண்பித்திருந்தபடியினாலேயும், அவனுடைய விசுவாசநடத்தைகள் சம்பத்தக்கவைகளாயிருந்தபடியினாலேயும், தன்னுடைய இராசாவுக்காகத் தன் தகப்பனிடத்திலே யுத்தம் வெளுசந்திரத்துக்கொள்ளுகிறது என்கிற இந்த ஆயலப்பில்லாத வேலையானது அவனிடத்தப்படி அவனுக்குக் கொடுக்கப்பட்டது அவனும் நாகம நாயக்கன்பேரிலே ஒரு பலத்த தண்டோடே புறப்பட்டுப்போய்த் தன் தகப்பனை முறிபடித்துக் கைப்பிடியாய்ப் பிடித்துக் காவல்வைத்துக்கொண்டு மதுரைக்குரியவனாகிய இராசாவை அந்தச் சிங்காசனத்திலே மறுபடியும் ஸ்தாபித்துச் செய்ததோடே விசயநகரத்துக்குப் போய்த் தன் தகப்பனைக் கிஷ்ணராயன் கையிலே யொப்புவித்தான் அவ்விடத்திலே அந்தக் குமாரனுடைய குணங்களுக்காக அவன் தகப்பனைக் கிஷ்ணராயன் மன்னித்துவிட்டான் பிறகு அந்த மதுரை இராசா சீக்கிரத்திலிறந்துபோனான் அவனுக்குச் சந்தானமில்லாதபடியினாலே விசுவநாதநாயக்கன் விசயநகரத்திராசாவினாலே அஸ்தாந்தகராசனாக மதுரையிலே ஸ்தாபிக்கப்பட்டான். அப்படியிருக்க, விசுவநாதநாயக்கனைப் பாண்டியராசாவுக்கு உதவிக்காக அனுப்பப்பட்ட படைத்தலைவனாகவும், அந்தச் சுதந்தரீகமான இராச்சியத்தை அபகரித்தவனாகவுஞ் சொல்லுகின்றது எப்படியிருந்தபோதைக்கும் விசுவநாதநாயக்கன் இந்தப் பாண்டியராசாவை மதுரையிலே முதலில் ஸ்தாபித்தானென்கிறதும், பிறகு அந்த இராச அதிகாரத்தைத் தானே அபகரித்தானென்கிறதும் அதைப்பற்றி அவனைத் தண்டிக்கிறதற்கு விசயநகரச் சமஸ்தானத்தார் தாமசித்திருந்தார்களென்கிறதும், ஏன் தாமசித்திருந்தார்களென்றால், அவர்களுக்குப் புதுப்பகையாளியாகிய விசயபூர் ராசாங்கத்திலே நோக்கமாய் மிகவும் முழைத்துக்கொண்டிருந்தபடியினாலே மிகவுந் தூரத்திலிருக்கிற தெற்குத்தேசங்களிலே நடந்திருந்த காரியங்களைக் குறித்துக் கவனிக்கக்கூடாமலிருந்ததென்கிறதும் இந்த இரண்டு சாதனங்களினுடைய மத்தியிப்பினாலேயும் நன்றாய்த் தெரியவருகின்றன.

(இன்னும் வரும்)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

௧௬. அதிகாரம்

(Wine and games of chance forbidden—Sophyan, son of Caled, slain—War of the Ditch)

அபூசோபியன் என்பவர் இந்தத்தருணத்திலே தமக்கு வாய்த்த நயங்களைச் [illegible] சொட்டாமல் விட்டுவிட்டார் அடுத்த மற்றவருடத்திலே [illegible] மக்களத்திலே மகமதுநபியோடேயுத்தம்பண்ணுவேனென்றே நவ்சேஷமனுப்பினார் அந்தநபியும் அதற்குடம்பட்டாராயினும் போர்தொடங்க ஒரு வருடத்துக்குமேலே சென்றுவிட்டது. தற்காலத்திலே அதாவது கிறிஸ்தாத்தம் (௬௨௬) ஆகுச்சரியாம் ஹிசயிராவில (௫)ம் ஆண்டிலே மகமது தம்முடைய பட்சத்தார் மதுபானமுட்கொள்ளவுஞ் சூதாடவுந் தகாதென மறுத்தார் எப்படியெனில் *உமயிடத்திலே மதுபானமுட்கொள்ளவுங் கவறுருட்டவுங் கேட்பார்கள் அவற்றிலே பாரமான பாவமும் மனிதருக்குநயமான சிலகாரியங்களுண்டானாலும் நயத்தைப் பாவம் வென்றுவிடும்" இப்படிவிலக்கின காரணம் யாதெனில் அவருடைய சீடருக்குள்ளே பேதங்களும் கருவிபங்களும் அவை மூலமாய் வருகின்றனவென்று கண்டதினாலே 'சத்தியவிசுவாசிகளே மதுபானமுஞ் சூதும் அசுத்தமானவைகள் அவை அலகையின் தொழிலே நீங்கள் சீரிய செல்வராம்படி யவற்றையொழிந்துவிடுங்கள் உங்களுக்குள்ளே பிரிவினைப் பகைகளை விதைக்கும்படியும் கடவுளை யாச்சிப்பதிலும் பிரார்த்தனையிலுநின்று உங்களை விலக்கும்படியும் அலகையானது இச்சிக்கின்றான் பின் அவற்றை ஒழிந்துவிடீரா?" அவைமூலமாய்ச் செலகாலத்திலே விளைந்தபாவம் வருகாலத்திலே நன்னடையால் பிராயச்சித்தமாகும் "[illegible] விசுவாசித்து நல்வினையை யியற்றுகிறவர்கள் மதுபானஞ் சூதுகளை விலக்குமுன் அவற்றை நடப்பித்தாலும் அவர்கள் கடவுளையஞ்சி விசுவாசித்து நன்மைசெய்து பிறகாலத்து மிவைபோல் நடந்து கடவுளுக்கஞ்சி நடப்பரேல், அவர்களின்மேல் பாவமாய்த்தோன்றாது கடவுளுக்கும் அவருடைய அப்போஸ்தலனுக்கும் அமைந்து உங்களைப்பற்றிச் சாக்கிரதையாயிருங்கள் ஆனாலும்புறங்காட்டுவீர்களானால், நமது அப்போஸ்தலனுடைய கடமை அம்பலத்திற் பிரசங்கஞ்செய்வது மாத்திரமேயென்றறிந்துகொள்ளுங்கள்" † இறமபிவழுவுமாசாரங்களையுடைய சில முஸ்லிம்கள், மேலவிலக்கப்பட்ட மதுவைத் [illegible] கொண்டாலும் சாட்சிப்பிரமாணக்காயுண்மைகண்டமற்றவர்களோ அதனை விலக்கி உட்கொள்ளலோ பாவமென்று சொல்லவதுமாத்திரமல்ல அதை உண்டாக்கும்படி பழங்களையாலையாட்டுவதும் விற்பனவு கொள்வனவு செய்வதும் அதினால் வந்த பணத்தை

* கோரான் உ அதி   † கோரான் ௫ அதி

கொண்டு சீவியம் விடுவதும் குற்றமாய்க் கொள்வார்கள். இச்சரித்திரப் பகுதியிலே மகமதுவின் கீர்த்திப்பிரதாபத்தை வேரோடே நடைக் கறையாக்குகின்றது. என்னவெனில் காலேட் என்பவரின் மகன் சோபியன் என்பவர் தம்மை நிருமூலமாக்கும்படி சேனை சேர்க்கிறாரென்று மகமது கேள்விப்பட்டபோது அவரைச் சதிசெய்யும்படி ஒனியஸ் என்பவரின் மகன் டலமாலடிருற்று* (Dhul Mall Dhrat) என்னுங் காவடப்பேர்பெற்ற அப்டல்லா என்பவரிடத்திற் சொல்ல அவர் மகமது நபியின் கற்பனைக்கிசையச் சோபியான் என்பவரை ஆசாவின் பள்ளத்தாக்கிலே சங்காரம்பண்ணி அக்கணமே மகமது இடத்தில் வந்து சொல்ல அந்நபியானவர் தமது நட்புக்கு முத்திரையாகத் தமது பிரப்பங்கோலையீந்தார். இச்சரீராவின் ஐந்தாம் ஆண்டிலே அகழிப்போர் அல்லது சாதிகளின்போர் என்பது நடந்தது. அப்போரிலே சிலகாரியங்களைத் தொட்டலாதிருக்கேல், மகமது முற்றுயவிழுந்து போவார்போலே, அயற்றேசங்களிலுள்ள யூதர் முதலிய சாதிகளுடன் கோறிசர் என்பவர்கள் சேர்ந்துகொண்டு பதினாயிரஞ் சேனைகளைக் கூட்டிக்கொண்டு தங்கள் தொன்றுதொட்ட மார்க்கத்துக்கெதிரியான மகமதுவைப் போரிலேற்றுயத்தினவை முறறிக்கைப்போடும்படி வந்தபோது மகமது பாரசீகரான சாலிமோனுடைய மந்திராலோசனையைக் கொண்டு பட்டினத்தைச் சூழ ஆழிய அகழியுண்டுபண்ணுவித்து அதன் பின்னணியில் ஒருமாதம் அரண்காத்திருந்தான். இவ்வேளையிலே இருதிறத்தாரும் அம்பினாலுங் கவண்டினாலுங் காயப்படுத்தினார்களேயன்றிப் பின்னொரு சமாசாரமுமில்லை. இத்தருவாயிலே மகமது தமது சத்துருவின் சேனைகளின் அதிகாரிகளைத் தந்திரோபாயத்தாலும் ஒற்றராலுந் தன் வசியமாக்கத் தேண்டித்தாரென்று ஐதிகத்தால் விளங்குகின்றது. சிலரைத் தன் வசியமாக்கினதுமேயல்லாமல் அவர்கள் காரணமாய் மற்றவர்களுக்குள்ளே பேதாபேதங்களை விளைவித்தது இதனாலே சத்துருவின் பாசறைவீடுகளைக் கிழ்ப்பித்து அவர்களில் மிகுதியானவர்களைப் பாளயத்தை விட்டகன்றுவிடப்பண்ணி ஒழிந்தவர்களிலே திடுக்காட்டவாட்டங்களைக் கிளப்பிக் கோபமிகுந்துங் கடவுளை வதநோதிரமாய்க் கண்டதால் அவர்கள் பலங்குறைந்து பயம் நிறைந்து கலங்கி மலங்கப் பண்ணினார். எப்படியாலெனில், சத்துருக்கள் அரணவளைத்திருக்கும்போது விபரீதமானக்கொம்புயலொன்று கிளம்பிச் சத்துருக்களினுடலங்களை வேறுக்கப்பண்ணி முகங்களைப் பூதாளியாற் போர்த்துப் பாசறைவிளக்குகளைத் தணித்துப் படங்குவீடுகளை ஆகாயமார்க்கமாய் வீசித் துரகப்படைகளையும் அணிகுலைக்க இத்துடன் தேவகணங்களுங் கூடி அவர்களின்மேல் பயங்கரம்பரப்ப அவர்கள் அல்லா அக்பார் என்று ஒலமிட்டலறக் கணங்கள் பாசறையை வளைத்துச் சத்துரு உயிர்கொண்டு பிழைத்தோடித் தப்பிக்கொள்ளத்தக்கதாய் மனுவிரட்டலையுண்டாக்கினார்கள். மகமது இவ்வதிசயகாரியங்கள் தன்னிமித்தம் தேவகட்டளையாயுண்டாயினவென்பதை மறந்துபோனதுமில்லை. பிறகாலங்களிலே தமது பட்சத்தாருக்கு இவைகளையெடுத்துக்கூறி ஆறுதல் தேற்றாமல் விட்டதுமில்லை † 'சத்துருவிசுவாசிகளே மார்க்கப்பேதிகளின் சேனை உங்களின்மேல் வந்தபோது நாம் கடும்புயலையும் நீங்கள் காணாத தூதர் கணங்களையும் அவர்களுக்கெதிராயனுப்பினோமென்பதையும் மறவாதேயுங்கள்" மேலேசொல்லிய செயல் மனுஷீகமாயேனுந் தேவாதிக்கமாயேனு நடந்தாலும் எப்படியேனு மிருக்கட்டும் அச்செயல் நடந்தநாட்டொட்டு மகமதுவின் பிரபலியத்தைத் தடுக்கவேண்டுமென்றெண்ணம் கோறுயிசரைவிட்டகன்றுபோக, கலக்கமும் முடிந்துபோயவிட்டது.

* டலமாலடிருற்று என்பதற்கு "எலற்றையும் விரைவாய்த்தலையிடுகிறவன்" என்பது பொருள்.

† கோறான் ௩௩ அதிகாரம்.

(Missionary Enterprises in the South Seas)

தென்சமுத்திரத்தீவில் நடந்த சங்கதி

௱௮௯ம் பக்கத்தினின்று.

நாங்கள் (இராயதோங்கு) தீவிலிருக்கிறபொழுது என்னுடைய மனைவி வியாதியாயிருந்தாள். ஒருநாள் நான் தனியவிருக்கிறபொழுது இந்த (ஏழுவி) தீவ்விட (நாவிக்கேற்றேன) (நீயுகெப்பிறிடீசு) முதலிய தீவுகளிலிருக்கிறவர்கள் இன்னுஞ் சுவிசேஷத்தைக் கேள்விப்படாமலிருக்கிறபடியால் அவ்விடத்திலும் நாங்கள் போய்ச் சுவிசேஷத்தைப் பரம்பப்பண்ணுவது நமது கடமையாயிருக்கிறதேயென்றெண்ணினேன். அதுகாரியத்தைப்பற்றி (லண்டன்) கூட்டத்தாருக்கும் அவர்களுடைய யோசனையை அறியும்படிக்கு (௲௮௱௨௪)ம் ஆண்டளவிலே ஒரு காகிதமும் அனுப்பியிருந்தேன். இந்த யோசனையை, நான் (இராயதத்தியாவை) விட்டுப் புறப்படமுன்னே என்னுடைய மனைவிக்குச் சொன்னேன். அவள் கேட்டுச் சொன்னதென்னவெனில் 'நீர் போகவேண்டியதாயிருக்கிற பயணத்தின் தூரம் ஆயிரத்தெண்ணூறு அல்லது இரண்டாயிரம் மயிலுக்கிருக்கும். ஆறுமாதத்துக்கு நான் தனித்தவளாயிருக்கவேணும். அல்லாமலும் நீர் போகவிருக்கிற தீவின் சனங்கள் மிகவும் பொல்லாதவர்களென்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீர் போனவிடத்தில் நல்லாங்குபோலவொரு பொல்லாங்கு உமக்கு நேரிட்டால் நானுமிந்தக் குழந்தைகளுமாக இவ்விடத்திலிருந்து துயரப்படவேண்டிவருமே. ஆகையால் நீர் போகத்துணிந்த இந்தப் பேச்சை யென்காதில் விழுத்தலாமாவென்று கேட்டாள்." அவளிவ்விதமாய்ப் பேசினதினாலே என் எண்ணத்துக்கு இணங்கமாட்டாளென்றறிந்து அவளோடே மறுபடியும் அதைப்பற்றிப் பேசாமல் மனதிலே வைத்துக்கொண்டேன். இதற்குக் கொஞ்சநாளைக்குப்பின்பு அவளுடைய வியாதி அதிகப்பட்டுச் செத்துப்போவாளென்று நாங்கள் நினைக்கத்தக்கதாக வருத்தப்பட்டாள். அப்பொழுது சமுசாரத்தின் அடுக்குகளெல்லாம் உலைச்சலாய்க் கொண்டது.

இதற்கிடையிலே நாங்கள் பராபரனைப்பார்த்து மன்றாடினோம். அப்பொழுது பராபரனெங்கள் வேண்டுதலைக் கேட்டாரென்பதற்கத்தாட்சியாகப் பத்துப் பதினைந்து நாளைக்குள்ளே அவளுக்குச் சற்றே சகாயமாயிற்று. ஒருநாட் சாயந்தரம் நானவள் துன்பமாய்ப் படுத்திருந்த அறைக்குள்ளே போனேன். அப்பொழுது அவள் எனக்குச் சொன்னதென்னவெனில் "நீர் தூரமாயிருக்கிற தீவுகளுக்குச் சுவிசேஷத்தைப் போதிக்கப் போகவிருந்தபொழுது உம்மைப் போகவிடாதபடிக்கு நான் மறித்ததினாலே எனக்கிந்தச் சடுதியான பெரிய வியாதி வந்ததாக்குமென்று சொன்னதுமல்லாமல் இன்னும் நீர் போகாதபடிக்கு இருந்தாற் பராபரனொருவேளையென்னை இவ்வுலகத்தை விட்டு எடுத்துப்போடுவாரென்று சொல்லி" நான் போகநினைத்திருந்த அந்தத் தீவுகளுக்குப் போகச் சம்மதித்தாள். இவளிப்படிப்பட்ட வெண்ணத்தைச் சொன்னபொழுது இவளுக்கிந்த எண்ணந் தேவசெயலினாலே வந்திருக்கவேணுமென்று என்மனதிலெண்ணிக்கொண்டு இந்தத் தூரமான பயணத்துக்குப் போகக் கப்பலில்லாததினாலே ஒரு கப்பலைக்கட்டி முடிக்கத் தீர்மானித்துக்கொண்டேன். கப்பல் கட்டுகிறதற்கு என்னிடத்திலத் தளபாடமில்லாததினாலுங், கப்பலுக்கு இரும்புவேலை செய்வதற்குத் துருத்தியில்லாததினாலும் மேலும், சில முதலிய எண்ணெயக்களை யுண்டுபண்ணும் வித்தையைப் பிரயாசப்பட்டுச் சாத்திரப் புத்தகங்களிலே வாசித்தறிந்திருந்து முன்பண்ணுவதற்கான தளபாடங்களைச் சம்பாதிக்கக்கூடாததினாலும், எனக்குக் கப்பல்கட்டும் வித்தை கொஞ்சமுந் தெரியாததினாலும் அதிகமாய் மனதிலே முட்டுப்பட்டேன். ஆகிலும் நான் பண்ணின தீர்மானத்தின்படியே மிகவும் பிரயாசப்பட்டு ஒரு கப்பலை மூன்றுமாசத்துக்குள்ளே கட்டிமுடித்தேன். எல்லாருமறிந்திருக்கிறபடி ஒரு கப்பலைக்கட்டுவதற்கு முதலாவது துருத்தியும் இரும்புமவைத்துக் காய்ச்சுகிறதற்கு வசதியானவொரு உலையுந் தேவை. இவ்விடத்தில் துருத்தி அகப்படாததினாலே என்னிடத்திலநின்ற மூன்றுவெள்ளாடுகளின் தோலையுரித்து ஒரு துருத்தியை மூட்டினேன். ஆகிலும் அது நமது கவலைக்குக் கூடாமற்போயிற்று. என்னிடத்திற் பழைசாய்க்கிடந்த ஒரு துருத்தியைச் சீர்ப்படுத்தலாமென்று பார்த்தவிடத்தில் அதின் தோலையுமெலி துண்டித்துப்பண்ணிப்போட்டதைக் கண்டேன். இவைகளைப்பற்றியும் நான் மிகவும் மனத்துன்பமடைந்தபின்பு உலையில் ஊதிக்கொண்டிருக்கத்தக்க ஒரு வாயுச் சாம்பிச் சூத்திரத்தையுண்டுபண்ணினேன். இதற்குப் பின்பு கரிகளையும் பட்டடையையும் மற்றுமுலைக்கடுத்த தளபாடங்களையுந் தேடிக்கொண்டு நான் சேகரமாய்க்கொண்டுவந்து வைத்திருந்த இரும்பிற் கொஞ்சமெடுத்துச் சில ஆயுதங்களைச் செய்பண்டேன். உலையிலே வைத்திருந்த துண்டிரும்புகளொன்றும் அக்கினியினாலே இளக்கப்படுகிறதையும் அப்படி இளக்கப்பட்ட இரும்புகள் பலபல ஆயுதச் சாடையாய்ச் செய்யப்படுகிறதையுங் கண்டதினாலே முன்னொருபொழுதும் இரும்பையும் இரும்பாயுதங்களையுங் கண்டிராத பிரதானிகள், முதலாளிகள், ஆ

பஞ்ச தந்திரக் கதை

சுகிர்லாபதந்திரம், அல்லது நட்புப்பேறு

[ஈலடம் பக்கத்தினின்று]

PANCHA-TANTRA-KATEI.

Sugerlapam, or the art of making Friends

சம்பகாவதியென்னும் பட்டினத்திற் சூடாகாணனென்னும் ஒரு சந்நியாசி உண்டு மிகுந்த சோற்றைக் கப்பரையின் மேற்போட்டு உறியின் மேல் வைத்துவிட்டு நித்திரைபண்ணிக்கொண்டிருப்பான் பின்பு அந்தச் சோற்றை நான் தின்றுகொண்டு சுகமாகவிருக்கிற நாளில், அங்கே வீணாகாணனென்னுமொரு சந்நியாசி வந்து அவனோடே கூட அநேக கதாப்பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கையில் அந்தச் சூடாகாணன் கையில் ஒரு தடியினாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக் காப்பாற்றிக்கொண்டிருந்தான் அப்போது வீணாகர்ணனென்னுடைய கதையை அநாதரவுபண்ணிக்கொண்டு வேறேயென்ன வியாபாரத்திலிருக்கிறுயென, சூடாகாணன் உன் வார்த்தையையநாதரவுபண்ணவில்லை ஆனாலும், இவ்வெலி எப்பாத்திரத்திலிருக்கிற அன்னத்தை நாடோறுந் தின்கிறது அதை ஓட்டுகிறேனென்ன, வீணாகாணன் அப்போது உறியைப் பார்த்து அவனுக்குச் சொல்லுகிறன் கொஞ்சப்பலமுள்ள இந்த எலி இவ்வளவுயரம் எப்படிக் குதிக்கிறது ஆகையால் இதற்கேதோ ஒரு காரணமிருக்கவேண்டும் அதுதானேதுவாயிருக்கலாமென்று யோசித்துப் பார்த்தால், மிகவும் இங்கே திரவியமிருக்கும் ஏனென்றால் உலகத்திலே திரவியமுள்ளவர்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள் அசாத்தியமான காரியங்களைச் சாதிக்கிறார்கள் இராசத்துவத்துக்கு மிதுகாரணமாகும் எல்லாமிதனாலாகின்றனவென்று சொல்ல, அந்தச் சந்நியாசி இதைக்கேட்டு மெய்தானென்று நம்பி பூமியை வெட்டி ஐயோ! என்றிரவியத்தை எடுத்துக்கொண்டான் அன்றுதொடங்கி நான் இளைத்துப்போனேன் பின்பு எனக்கு இரையுங் கிடையாததினால் மெள்ளமெள்ள நடந்துகொண்டிருக்கையில், அந்தச் சந்நியாசியைப் பார்த்துப் பார், இந்த எலி இப்போது தன் சாதித்தனத்தை அடைந்திருக்கின்றது முன்னிருந்த தன் மதம் போயவிட்டது ஆகையாற் பணமில்லாதவர்களை எல்லாரும் அற்பமாக நினைக்கிறர்களென்ன இதைக்கேட்டு நான் இப்போது இங்கிருக்கிறது சரியென்றிதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது பொருளிழவும், இரசசித்திரமும், தானமும் மானமும், அவமானமுமாயுள்ளதனுமாகிய இவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது, தன் விதிப்பிரதிகூலமாயிருக்கும் காலத்திற் பராக்கிரமும் முயற்சியும் வீணென்றன. ஆகையாற் பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக் காட்டிலுஞ் சுகமில்லை எவ்விடத்தில் நாம் பணக்காரராயிருந்தோமோ அந்தவிடத்திலே ஏழையாயிருக்கிறது உத்தமமல்லவென்றும், மறுபடியுமிழந்த பணத்தை எடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன் அப்போது சந்நியாசி என்னைத் தடியாலடித்தான் அதினாலே மிக துக்கப்பட்டு உன் சிநேகிதனோடே கூட இங்கே வந்தேனென்ன, மந்தரன் மித்திரா, நீயிதனால் அதைரியப்பட்டுறைவிடந் துறந்தோமென்று வருத்தப்படவேண்டாம் ஏனெனில், சாதுக்களெங்கே போனாலும் மரியாதை பெறுகிறார்கள் சிங்கம் வேறொரு காட்டுக்குப்போனாலும் புல்லைத் தின்கிறதேயில்லை, யானையையே தின்னும் ஆகையால் உற்சாகமுள்ளவன் சந்தோஷமுள்ளவன் தைரியசாலி, சூரன், களங்கமில்லாதவன், இவர்களிடத்தில் இலட்சுமிதானே வந்தடைகிறள் நீ பணமிழந்தாலும் எப்போதுஞ் சந்தோஷத்தோடே கூடியிருக்கிறாய் ஆகையால், உனக்கிருக்கிற சுகம் பணத்தாசையான மயங்குகிறவர்களுக்கில்லை இன்னுங் கேள், மேகச்சாயை, துட்டனுடைய தயை, இளம்புல், யௌவனம், தனம், இவைகள் வெகு நாளைக்கு நில்லாவாகையால் இவை இழந்துபோனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்தேங்கியிருக்கலாகாது ஏனெனில் எவன் கருப்பத்திலிருக்கிறனோ அவன் பிறக்கிறதற்கு முன்னேதானே தாயுமுலையிற் பாலையமைத்து வைக்கிறன். அப்படிப்பட்டவன் ஆயுசுள்ளவரைக்குங் காப்பாற்றமாட்டானோ? நீ நல்ல விவேகியாயிருக்கிறதினால் இவையெல்லாம் உமக்குத் தெரிந்திருக்கும் இனிச் சிநேகமாயென்னிடத்திற் சுகமாயிருவென, இவையெல்லாங் கேட்டுப் பிறகு லகுபதனன் சொல்லுகிறது—மந்தரா, நீ சகலகுணசம்பன்னன், மேலுஞ் சற்சனன் சாதுக்களுக்கு வந்த ஆபத்தைச் சாதுக்களே நிவர்த்திபண்ணுகிறார்களென்றறிந்து நாயகனே உன்னை நாடி வந்தேனென்று சொல்லி நீண்ட பெரிய மரத்தின்மேற் போயுட்கார்ந்து தன் சுபாவப்படியே இங்குமங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோ ஒரு பயமுகாந்திரத்தையறிந்து அவ்விரண்டுக்கு நீங்களுங்களிடத்தில் ஒளித்துக்கொண்டிருங்களென்ன, மந்தரன் தண்ணீரிற் போயிற்று எலி வளையினுள்ளே நுழைந்தது. காகம் விருட்சத்தின் நுனியிலிருந்து பார்க்கையிலே தொன்றுங் காணப்படாமையாற் பிறகு அம்மூன்றும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்கையில், அவைகளின் சமீபத்திற் சித்திராங்கனென்னும் ஒரு கலைமான் வந்து சொல்லுகிறது, நான் வேடர் பயத்தால் உங்களிடத்திலிருக்கலாமென்று வந்தேனென்ன, அதைக் கேட்டு மந்தரன் அதற்குச் சம்மானம்பண்ணி இது உன் வீடு நான் உன் சேவகனென்றெண்ணிக்கொண்டு சுகமாயிருக்கவேண்டுமென, முகமலர்ந்து மனங்கலந்த வினைசொற் சொல்லப் பிறகு அதுவும் அவைகளுடன் நட்புக்கொண்டிருந்தது அப்படியிருக்கையில் ஒரு நாள் சித்திராங்கனென்னுமான் புல் மேய வேறொருவிடத்துக்குப் போய் மீண்டு சாயங்காலம் வராமையால், ஆமை மேயப்போன மான் இன்னைக்கேன் சாயந்தரம் வரவில்லையென்று விசனப்பட, அதை அறிந்து எல்லாம் விசனமடைந்து மறுநாள் விடியற்காலத்திற் காகம் பறந்து நாலு பக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையிற் சித்திராங்கன் தோல்வலையில் அகப்பட்டிருக்கிறதைக் கண்டு அதன் கிட்டப்போய்ச் சொல்லுகிறது, மித்திரா—உனக்கிந்த அவத்தை எப்படி நேரிட்டதென, மான் இப்போது இதைக் கேட்டுப் பிரயோசனமில்லை ஆனாலும், நீபோய் இரணியகனைச் சீக்கிரமாயிட்டுக்கொண்டு வந்தால் அவன் வேடன் வருவதற்கு முன்னே என் பாசத்தை அறுத்தென்னைவிடுவிப்பான் வேடன் வந்தால் ஒரு உபாயமும் நடவாதென, இதைக் கேட்டவுடனே விரைவாகப் போய் அவைகளுடனே நடந்த காரியத்தைச் சொல்லி இரணியகனையிட்டுக்கொண்டு வந்தது. வந்த இரணியகன் மானைப் பார்த்து நீ சமர்த்தனாயிருக்கையில் வலையில் எப்படி அகப்பட்டாயென, யான் வல்லமையிருந்தாலும் வருவது வரும், இப்போதென்னைச் சீக்கிரமாயவிடுவி எனக்குப் பழைய பயமிருக்கின்றது ஏனென்றால், முன் நான் குட்டியாயிருக்கையில் வேடன் வலைகட்டி என் கூட்டத்தை வளைத்தான். ஆனாலும் மற்றவர்கள் பெரியமான்களாயிருந்தபடியாற் குதித்து வலையைத்தாண்டிப்போயின, எனக்குக் குதித்தோடச் சக்தியில்லாதிருந்ததால் வேடன் பிடித்து இராசாவினிடத்திற் கொண்டுபோனான் ராசா வாங்கித் தன் பிள்ளைகையிற் கொடுக்க அங்கே நான் வளர்ந்து இருந்துகொண்டிருக்கையில் ஒரு நாள் மேககர்ச்சனையைக் கேட்டு நான் மிகவுஞ் சஞ்சலப்பட்டு மனுஷபாஷையினால் எனக்குள்ளே பேசிக்கொண்டேன் ஏனென்றாற் காற்றும் மழையும் பிடிக்கப்பட்ட மான்கூட்டங்களோடும் போது அவற்றின் பின்னே ஓடுவேனோவென, ராசகுமாரன் இதைக் கேட்டு நாற்றிசையும் பார்த்து என்னைப் பார்த்தான், பிறகு சஞ்சலத்தோடே மௌனமாயிருந்து இது மனுஷனைப்போலப்படியுச்சரித்தது. ஆகையால் இது ஒரு விசித்திரப்பிராணியாயிருக்கிறதென்று நினைத்துப் பயத்தாற் சுரத்தில் விழுந்தான். [இன்னும் வரும்.]

௪ம் அதிகாரம்

அறன்வலியுறுத்தல்—*The power of Virtue*

௩௬. அன்றறிவாமென்னா தறஞ்செய்கமற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

பு. நாமிப்பொழுது இளமைப்பருவத்தை உடைத்தாயிருக்கிறோம், ஆதலாலே முதுமைப்பருவம் வந்த அப்பொழுது அறிந்து செய்வோமென்று நினையாமல், தருமத்தைத் தினந்தோறுஞ் செய்க, அந்தத் தருமமானது, இந்த உடம்பிலே நின்றும் உயிரானது இறக்குங்காலத்திலே அந்த உயிர்க்கு அழியாத துணையாம்.

Say not we will hereafter make choice (of virtue) be virtuous *now*, in the hour of death, she will be to you a deathless help. *Drew.*

Refer not virtue to another day
Receive her now, and at thy dying hour
She will prove thy never-dying friend *Ellis*

---

௩௭. அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடூர்ந்தானிடை.

பு. தருமமார்க்கத்தின் பிரயோசனம் இதுவாமெ
ன்று நாம ஆகமப்பிரமாணத்தினாலே தெரிவிக்கவே
ண்டுவதில்லை, பல்லக்கைச் சுமந்தவனோடே கூட அ
திலிருந்துகொண்டு அதை நடத்தினவனிடத்திலே பி
ரத்தியட்சப்பிரமாணத்தினாலே காணப்படும்.

You need not describe (in books) the course of virtue, (point out to the sight) the bearer of a palankeen and him who rides in it * *Drew.*

Definitions of the words expressive of the actions of the mind, published in the last No

Concur	உடனபடுதல	Rate	நிரமபாரத்தல
Doubt	சநதேகித்தல	Ruminate	திருமபசிநதித்தல
Demur	பினபோடுதல	Confide in	உறுதியாய நமபுதல
Hesitate	தாமதித்தல	Expect	காததிருத்தல
Scruple	ஐயுறுதல	Anticipate	முனனுணாதல
Waver	மனநதளமபுதல	Trust	நமபுதல
Fluctuate	மனஞ்சலித்தல	Await	வரவுகாத்தல
Discern	தோதல	Suspect	அசுகைகொள்ளல்
Distinguish	பகுத்தறிதல	Acquiesce	சமமதித்தல
Appreciate	நயமெப்பணுதல	Coincide	ஏகசிநதையாகுதல
Estimate	கணிசமபாரததல	Foresee	முனனறிதல
Compute	கணககுப்பாாத்தல	Forget	மறநதுபோதல

(From the Madras Almanac for 1842)

Hints on the Theory and Practice of Gardening.

(Continued from page 185, No 15)

From observations made in Europe it has been attempted to deduce the relative temperatures of the air and earth within the tropics Thus it is ascertained that in England the mean temperature of the earth is between two and three degrees higher than that of the air, the same ratio will probably be found to hold good in India This inference is confirmed by one set of observations in New Grenada, the mean temperature of the air of which for the warmest month is about 84½ while that of the earth, at one foot below the surface is 85° during summer According to this ratio the temperature of the earth at Madras during the months of November, December, January, February and March, should be between 79½ and 81° that of the valley of the Thames in July, one foot below the surface, has been found to be only 64 80° So great an excess of bottom heat must exert a very injurious influence on plants fitted for the lower temperature, by over stimulating and exhausting their excitability, enfeebling their powers and thereby incapacitating them adequately to perform the functions of assimilation by which their food is converted into suitable nourishment Is it possible in any way, so far to obviate these injurious effects of excessive heat as to enable us to cultivate plants of colder climates in warm countries?

This is an interesting question to the tropical horticulturist, but cannot, we believe, in the present state of our knowledge receive a satisfactory answer If with the view of affording plants of colder countries a lower temperature, we cultivate them under shade we deprive them of light, the agent by the aid of which the vital forces of vegetation are enabled to decompose the water, and carbonic acid, by which they are nourished and carbon in a solid state formed The quantity of carbonic acid decomposed being in proportion to the quantity of light which strikes the leaf and the healthiness in proportion to the quantity decomposed, the healthiness should be in proportion to the quantity of light it received by day This fact goes far to prove that we err when we endeavour to obtain a cooler climate by shading the whole plant, thereby depriving it of the light by the action of which it is enabled to assimilate its juices, in place of the soil only, a view which seems further confirmed by the result of Mr Foggo's experiment of placing the thermometer on a grass plot, the evaporation from which reduced the temperature 30° For this reason, it seems probable, we shall succeed better in raising early crops, by shading the soil and keeping it cool, while by liberal watering we furnish a constant supply of moisture both for evaporation from the soil and for free perspiration by which the plant keeps down its own temperature

The correctness of this inference was in some measure proved two seasons ago in the Madras Horticultural Society's Garden, the finest beet root of the season being raised in beds covered some inches thick with sand, which seemed to have the effect of preventing hardening from too copious evaporation and preserving the soil below always cool and moist though comparatively sparingly watered On this principle it seems not improbable, the true cause of the vigor and luxuriance of melon plants in the hottest seasons, may be partly attributed to their abundant foliage, which, forming a dense shade, preserves the soil cool, whilst the copious evaporation from their large leaves by keeping them cool, counteracts the heat of the solar rays to which they are exposed Last hot season but one some beds were planted with the sweet potatoe, the procumbent stems of which rapidly covered the soil as with a carpet from that time they continued to grow luxuriantly thro' the whole season, without requiring a drop of water, apparently from the same cause, as the soil under them was kept moist, and found several degrees cooler than that shaded by trees

மகமதுவுக்குச் சுரம்திகப்பட்டதினால் அறிவு மயங்கிப்போனார் அப்படி அறிவு மயங்கியிருக்குஞ்சமயத்தில் தெய்வீக வெளிப்படுத்தலை அடக்கிய ஒரு புத்தகத்தை எழுதும்படி தனக்கொரு தூவலுங் கடதாசியுந் தாருங்கோவென்று கேட்டார். அப்போதவருக்குக் கிட்ட அவரைப் பராபரித்துக்கொண்டிருந்த ஒமர் என்பவர் (Omar) மகமதுநபி கேட்டபடி தூவலுங் கடதாசியுங் கொடுத்ததுண்டானால் அவர் கோறானுக்கு மாறான சொல்லிய காரியத்தை விலக்க வேறெண்ணத்தையாகுதலெழுதிப்போடுவாரென்று பயந்ததினால் அவர் கேட்டபடி கடதாசியுந் தூவலுங் கொடுக்கவில்லை மேலும் அங்கிருந்தவர்களிற் சிலர் அந்தப் புத்தகமெழுதப்படவேண்டுமென்ற விருப்பத்தைக் காட்டினார்கள் சிலபேர் எழுதப்படவேண்டுமென்றுஞ் சிலபேர் எழுதப்படாதென்றும் மகமதுநபியின் சயனவறையிலே வாதுண்டானபொழுது, அவர் நினைத்தெழுதவிருந்த காரியத்தையும் எழுதாததினால் மிகுதியான சனம் அதற்காக மெத்தத் துக்கப்பட்டார்களென்று காணப்படுகின்றது தனக்குச் சரியான அவருடைய பெண்சாதியாகிய (Ayesha) என்பவள் நபியினுடைய தலையானது துன்பத்தினீட்டம் மடிந்து விழுகிறபோது அந்தத் தன் முழங்காலிற் சாயத்துக்கொண்டு அவருடைய முகரூபு மாறிப்போகிறதையும் அவர் சாகும்பொழுது கடைசியாய் என்ன வார்த்தை சொல்லப்போகிறதையும் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள் அவர் துன்பமாயிருக்கும்பொழுது, இடைக்கிடையே உபத்திரவந் தோன்றினதினாலே அப்படித் தனக்கு உபத்திரவமவந்தது தான் முன்னொரு முறை சேபாவிலே தின்ற நஞ்சினாலென்றதாகச் சொல்லிக்கொண்டிருந்தார் முன்னொருவேளையில் சேபாவிலே விருந்தருந்தினபொழுது நஞ்சூட்டிய பதார்த்தத்தைத் தின்றதினாலே இறந்துபோன பேசார் (Bashar) என்றவனுடைய தாயைக் கிட்ட நிற்கக் கண்டபொழுது, அவளை நோக்கிப் பார்த்து அவர் சொன்னது "பேசாவின் மாதாவே, என்இருதயத்தைப் பிணைத்த பாசமிப்பொழுது சேபாவிலே உனது மகனுடன் அருந்திய பதார்த்தத்தினால் அறுந்துபோயிற்று" மகமதுநபிகிட்ட நின்றவர்களைப் பார்த்து மரணமானது தனக்கெப்போ வரவேண்டுமென்று தான் கேட்டாலேயன்றி அதற்குமுன் மரண தூதன் வராதபடிக்குத் தானுத்தரங் கேட்டுப் பெற்றுக்கொண்டேனென்று சொன்னார். பிறகு அவர் சற்றே கண்ணையேறெடுத்துத் தன் சயனவறையைப் பார்த்துச் சொன்னதாவது, "ஆபரனே! எனது பாவங்களை நிவர்த்திபண்ணும் ஆம், நான் உன்னதமாயிருக்கிற என் சிநேகிதர்கள் நடுவே வருகிறேன்" இப்படியே சொல்லித் தண்ணீருமுகமடங்கத் தெளித்தவுடனே காலஞ்சென்று அந்தலத்துக்குப் போய்விட்டார்

உடனே பட்டணமெங்கும் ஒருமிக்கத் துயரடிகொண்டு புலம்பிச் சவித்தழுதுகொண்டிருந்தார்கள். அவருடைய அநுசாரியிற் சிலர் இன்னும் அவர் சாகவில்லையென்று நினைத்தார்கள். எங்கள் சாட்சிக்காரரும், மத்தியஸ்தரும் பாலுடனேயாகப் பரிந்துபேசுகிறவருமாகிய இவர் எப்படிக் காலஞ்சென்றுபோய்விடக்கூடும் அவர் நிச்சயமாகவே சாகவில்லை அவர் மோசேயேசுக்கிறிஸ்திரட்சகர் முதலானவர்களைப் போலச் சாகாமல் ஞானதிட்டியினாற் சுருட்டிக்கட்டப்பட்டிருக்கிறார் அவர் தமது விசுவாசிகளிடத்திற் சீக்கிரந் திரும்பிவருவார் அந்தவேளையிலே ஒமரென்பவர் தமது வாளைச் சுழற்றி மகமதுநபி காலஞ்சென்றுபோய்விட்டாரென்று சொல்லுகிறவர்களுடைய சிரத்தை எடுப்பேனென்றனைவரையுமேங்கப்பண்ணினார் பிறகு ஆபுவீக்கர் வந்து ஒருவருஞ் சந்தடிபண்ணாதபடிக்குப்பண்ணிச் சொன்னதாவது, "நீங்களாரை விசுவாசிக்கிறீர்கள், மகமதுவையோ? அல்லது மகமதுவுடைய பரனையோ? மகமதுவின் பரனென்றைக்குஞ் சீவனோடிருக்கிறார். ஆனாலும் அப்போஸ்தலன் மகமது எங்களைப் போல மரணயுபாதியை அடையத்தக்கவராயிருந்தார் இன்னும் அவருடைய சொந்த வாக்கின்படி மரித்துப்போனார்.*

அவர் செத்த பிறகு அவருடைய தேகத்தை எடுத்து மத்தினாவிலே அவர் செத்த அறையிலேதானே அடக்கம்பண்ணிக் கொஞ்சக் காலத்தின் பிறகு ஒரு பருமட்டான கோரியை அவருடைய நாமத்துக்கென்று கட்டிவைத்தார்கள். அவரிருந்திறந்தவிடம் இப்பொழுது இடிக்கப்பட்டது ஆனாலும் அவரைத் தாழ்த்விடமின்னதென்றறிந்து இக்காலம் வரைக்கும் தெய்வவழிவினையில்லாத மூடச் சனங்கள் அவ்விடத்துக்குக் கூட்டமாய்ப் போய்த் தங்கள் வீணவணக்கத்தைச் செலுத்திவருகிறார்கள். இன்னும் அவருடைய தேகத்தை எடுத்து இருப்புப் பெட்டியில் வைத்தடைத்துக் காந்த ஊசியினால் அந்தரத்திலே தூக்கப்பட்டிருக்குதென்பது வீணும் வீண் கட்டாயும் இருக்கின்றது ஏனென்றால், மத்தினாவிலே கட்டியிருக்கிற அவருடைய கல்லறையைத் தற்காலத்தில் அநேகமாயிரம் வழிச் செல்வோரும் யாத்திரைபண்ணுகிறவர்களும் போய்ப் பார்த்தபொழுது இப்படிப்பட்ட இருப்புப் பெட்டி அந்தரத்திலே தூக்கப்படாமல் நிலத்திலேதானே அவரை அடக்கம்பண்ணி அதற்குமேலே கரிக்கூட்டைக் கட்டிவைத்திருக்கிறார்களேயல்லாமல் மறுபடியல்ல.

மகமதுவின் சரித்திரம்

முற்றுப்பெற்றது.

(Missionary Enterprises in the South Seas)

தென்சமுத்திரத்தீவில் நடந்த சங்கதி.

௱௯௧-ம் பக்கத்தினின்று.

நாங்களிந்தக் கப்பலிலோட்டத்தைச் சோதித்துப்பார்க்கிறதற்காகத் (தகததியன்) தீவுக்குப்போகமுன்னமே கிட்டவிருக்கிற (அத்துதாகி) தீவுக்குப்போகநினைத்தோம். அப்பொழுது (மாகி) இராசாத் தன் சீவியகாலத்தில் வேறொருதீவையுங் கண்டிராததினாலே உன்னுடனே கூடிக்கொண்டு இந்தத் தீவுக்கு வரவேணுமென்று எண்ணியிருந்தார் இவ்விதமாகச் சகலவிதமான சாமாத்தியத்திலுங் கப்பலையும் அதின் தளவாடங்களையும் பதினைந்து கிழமைகளுக்குள்ளே முடித்துக்கொண்டு, அந்தக் கப்பலுக்குச் "சமாதானத்தின் தூதனென்று" பேருமிட்டுக் கப்பற்பாய்களையுமெடுத்து நங்கூரத்தைக்கிளப்பி (அத்துதாகி) தீவுக்குப்போனோம். அப்படியே கப்பல் கரையிலிருந்து (௯) மயில் தூரமாய்ப்போனவுடனே காற்றுப் பலத்தடித்ததினாலுங், கிலாசுக்காரர் கப்பற் சேவகத்திற் பழகியிராத தீவாராயிருந்ததினாலும், நான் சொன்னபடியே அவர்கள் முற்பாய்மரத்தின் பாயைத் தணியாமல் விட்டதினாலும் முற்பாய்மரந் தெறித்தது உடனே நாங்கள் மற்றப் பாய்களைத் தணித்து முறிந்த பாய்மரத்திற் சிறுப் பாயொன்றைக் கட்டிக் கப்பலைக் கரைக்குவரப் பிடித்தோம். கரைக்குவந்த பின்பு ஒரு பாய்மரத்தை யிணக்கி மறுபடி கொஞ்சநாளைக்குள்ளே (அத்துதாகி) க்குப்பாயவலித்துக் காற்று வசதியாயிருந்ததினால் ஒரு ஓய்வுநாட்காலமே அவ்விடத்திற் தேவாராதனை நடப்பிக்கத்தக்கதாய் அங்கே போய்ச்சேர்ந்தோம் பத்துப் பன்னிரண்டு நாளாக இவ்விடத்திலிருந்தபின் (இராயதோங்கு) தீவாருக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் இந்தத் தீவிலிருந்து ஏற்றினோம். பிரதானமாயேற்றப்பட்ட பொருள்களென்னவெனிற் பன்றிக்குட்டிகளும், பூனைகளுந், தேங்காயுஞ், சீலையும், பாயுந்தான். (இராயதோங்கு) தீவிலே ஒருவனுக்கொரு பூனையிருந்தால் அது பெரிய இரத்தினத்

* கோறான் ௩. அதிகாரம்.

துக்குச்சரி ஏனென்றால் (இராயதோங்கு) தீவிலே எலிகள் சொல்லிமுடியாத அவ்வளவு குப்பைக்கணக்காயிருக்கும். நாங்களங்கே சாப்பிடப்போயிருக்கிறபோது, எலியினுடைய தொந்தரவில்லாதபடிக்கு அவைகளைத் துரத்திக்கொண்டு நிற்க மூன்று நாலு பேருடைய கையிலே பிரம்புகொடுத்து நிற்கப்பண்ணிக்கொண்டு சாப்பிடத்துவங்குவோம். சமுசாரச் செபம்பண்ணுகையில் எலிகள் பயமில்லாமலெங்கள்மேலிலுந் தோளிலுமேறியிருக்கும். இதினாலே எலியின் மிகுதி இந்தத் தீவில் எவ்வளவென்புதையறிந்து கொள்வீர்கள். எங்களுடைய தோலப்பெட்டகங்களெல்லாம் அவைகளினாலே அரிக்கப்பட்டுப்போம். கட்டிலில் விரித்திருக்கிற மெத்தைகளுக்குள்ளே பத்துப் பதினைந்து எலியிருக்கும். தலையணைக்குள்ளே குஞ்சுகள் காணப்படும். சப்பாத்துக்களைக்கழற்றிப் படுக்கப்போகிறபொழுது பத்திரமான இடந்தேடிவைத்தாலும் விடிந்தாற் கவலைக்குதவாமற்போம். எலிகளினாலே இவ்வளவு தொந்தரவுவந்ததினாலே ஆண் பெண் சகலரும் எலியடித்துச் சாகக்கொல்லவேணுமென்று கட்டளையுண்டாயிற்று. அப்போ எல்லாருந் தென்னிலையிலே ஒவ்வொரு கூடுசெய்துகொண்டு எலியடிக்கப் புறப்பட்டு ஒவ்வொருவனு மொவ்வொருநாளு மொருமணித்தியாலத்துக்குள் நாற்பது அன்பது எலியடிப்பான். அப்படியிருந்துங் கொஞ்சமுந் தொலைந்துபோனதாயக் காணப்படவில்லை. ஆதலாற் பனறிகளும், பூனைகளுமிவ்விடத்திலே கொண்டுவரப்படுவதினாலே எலிகளுக்கு நாசகாலமாயிற்று. கொண்டுவரப்பட்ட தேங்காயை யாவருந் தீவிலே வாங்கி நாற்றுப்போட்டுத் தென்னமரமாக்கினார்கள். என்னுடனே கூடிவந்த (மாகி) இராசா முன்னொருபொழுதுங் கடற்பயணம்பண்ணுதவரானபடியினாலே "கரையிலே நின்று போர்செய்கிறவர்களை நானொருபொழுதும் வீரவான்களென்று சொல்லேன். கடலிலே நின்று காற்றோடும் கடலோடுமெதிர்த்து போர்செய்கிற இந்த இங்கிலீசுகாரர் மாத்திரமே வீரவான்களென்ற பேரைப்பெற்றுக்கொள்ளத் தகுதியானவர்களென்று" இவ்விதமாய் அந்த இராசா சொன்னதென்னதினாலெனில் நாங்கள் (அத்துதாகி) தீவுக்குப் போகிறபொழுது கடலுங் காற்றுமெத்த உபத்திரவத்தினாலே இராசா என்னைநோக்கி இந்த அலைகளினாலே கப்பலுடைந்துபோகமாட்டாதாவென்று மெத்தப் பயத்துடனும், அங்கலாய்ப்புடனேயுங் கேட்பார். அப்போ நான் யாதொரு சேதமும் வாமாட்டாது பயப்படாதேயுமென்று சொல்வேன். காற்றுச் சற்றேறுமாகிறபோது கப்பலின்மேலத்தட்டிலே போய்நிற்பேன். அப்போ இராசாவுந் தனியேயிருக்கப்பயந்து என்னுடனே வந்து நிற்பார். நான் கப்பலிலே எங்கேபோயிருந்தாலும் அங்கே என்னுடனே வந்திருப்பார். அப்படியே நாங்கள் (இராயதோங்கு)தீவுக்கு வருகிறபொழுது காற்றுத் திறமில்லாததினாலே இராப்பகல் மூன்றுநாளாகக் கடலிலிருந்துவிட்டோம். கப்பலிலிருந்த இந்த மூன்றுநாளும் இராசாவுக்கு நித்திரையில்லை. நான் நித்திரைகொள்ளும்படி அவருக்குப் புத்திசொன்னால் "சினேகிதனே இந்த வேளையிலே நானெப்படி நித்திரை கொள்ளலாமென்று" என்னுடனே சொல்வார். இப்படியே கப்பலிலே வருகையில் மூன்று நாளாக (இராயதோங்கு) தீவின்கரை தெரியாதபடியினாலே நாங்கள் மோசமாய் மறுதீவுக்குப்போகிறோமென்று இராசாச் சொன்னார். நானதற்கு மறுமொழியாக அப்படியல்ல நாளைக்குக் கரைதெரியுமென்று சொன்னேன். இதை இவர் கேட்டிருந்து மற்றநாள் நான் சொன்ன பிரகாரமாகக் கரையைக் கண்டபடியினாலே நான் அவ்வளவு நிதானமாய்ச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட்டார். இந்த முகாந்திரங்களைக்குறித்தும் இங்கிலீஸ்காரரை அந்த இராசா அதிகமாய் வியந்துகொண்டார்.

நாங்கள் (அத்துதாகி) தீவிலிருந்து வந்த சிறிது நாட்களுக்குப் பின்பு சீமையிலிருந்து (பசெக்கோற்றும்) அவர் மனைவியுந் தேவ ஊழியக்காரராய் நியமிக்கப்பட்டு இந்த இடத்துக்கு வந்தார்கள். வந்த மற்றநாள் (பசெக்கோற்று) என்பவர் கம்மாளவேலையிலே கெட்டிக்காரனாயிருந்தபடியினாலே உலைமூட்டிக் கம்மாளவேலைசெய்துகொண்டுவந்தார். இதைக் கண்டவர்களெல்லாரும் "இவரே எங்களுக்கு வேண்டியவர் இவரே எங்களுக்கு வேண்டியவர்" என்று சந்தோஷமாய்ச் சத்தமிட்டார்கள். நானிவரைக் கூட்டிக்கொண்டுபோய்த் துருத்திக்குப் பதிலாயுண்டுபண்ணின வாயுச்சாம்பியைக் காட்டினபொழுது அவர் பெலனாயச் சிரித்து இது என்னத்துக்கு? நல்ல துருத்தியை உண்டுபண்ணிக்கொள்ளலாமேயென்றுசொல்லி அந்தச் சூத்திரத்தைப் பிரித்துப்போட நினைத்தார். அப்பொழுது நான் பார்வைக்கு அது சிறப்பில்லாதிருந்தாலும் அதினால் நமக்கு நடந்த அநேகம் வேலைப்பாடுகளை அவருக்கு எடுத்துச்சொன்னேன். இந்தத் தீவிலேதான் குடியாயிருந்துவிடுகிறதற்கு எண்ணியிருந்த (பிற்றுமனும்) அவர் மனைவியும் இவர்கள் வந்ததினாலே மறுவிடங்களுக்குப் போகவேண்டியதாயிருந்தது.

கடிதங்கள்.

இலக்கணக் களஞ்சியம்.

[On Tamil Grammar.]

நன்னூலாசிரிய விருத்தம், அல்லது உரையறிநன்னூன்முறைமை.

பன்னூலு முன்னூலுமெந்நூலுமாராய்ந்துபார்த்த நல்லோர்கள் பலரும், பாத்துரையெனச் சூத்திரத்தறிந்திடவே பகுத்துரைத்திட்டவதனால், இந்நூலினுக்கு நிகரிந்நூலலாமலேயாங்கண்டிலோமென்னவே, எழுத்துடன் சொல்லெனுமிலக்கணம்வகுத்துரையியம்புமாசிரியத்தினால், நன்னூலெனும்பெயர் விளங்கவே செய்ததனும் நீர் வேலையுலகி, னலமேவுசெஞ்சியஞ் சீமையிற்றொண்டைவள நாட்டினிற் கலாப மயிலபோற், சின்னான் மருங்குலார் விளையாடுமணிமேடை செம்பொனெடுமாடவீதி, திகழுற்றுங்காவில் வளர்பாவாடைவைத்தியார் செம்மலாண்டிப் புலவனே.

(பண்புப் பகாப்பதம்)

செம்மையுங் கருமையும் பசுமையும் வெண்மையுந் திண்மையுநுண்மையுடனே, சிறுமையும் பெருமையுங் குறுமையு நெடுமையுந்தீமையுந் தூய்மையுமல்லால், வெம்மையுங் குளிர்மையுங் கொடுமையுங் கடுமையுமேன்மையுங் கீழ்மையுமபின், மெய்மையும் வறுமையும் பொய்மையும் வன்மையு மென்மையு நன்மையுஞ் சொல், ஐம்மையும் பழமையும் புதுமையுமினிமையுமணிமையுநிலைமையுஞ்சேர், நாணமையுமுமைமையுமொருமையும் பன்மையு மறுமையுமிருமையு மிக்க, கைம்மையுங் கூர்மையுங் கேண்மையுஞ் சேண்மையுங் கடிய வளமையுமிளமையுங், காணரிய முதுமையும் பண்புப்பகாப்பதங்காட்டுமின்னனையமாதே

(இடையினந்திற்கினங்காட்டல்)

உயிர் பன்னிரண்டு மெய்பதினெட்டிலேறவிருநூற்றொருபத்தாறெழுத்தா, முயிர்மெய்யவைதாங்ககரமுதனகரமீறுகவொட்டியே கண்டுகொள்க, பயில குற்றெழுத்தைந்து நெட்டெழுத்தேழுமிவை பதினெண்வரிக்குமொக்கும், பகுத்தவல்லொற்றுமெல்லொற்றிடையொற்றிவை பதினெண்வருக்கமொக்கும், இயலுமுயிரளபெடை தனிநிலை முதனிலையிடைநிலை யீறுநிலையென், றிநான்கிடத்து நெடுயிரேழுமளபெடுத்தேவருமுதாரணமவை, உயிரில், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ வேழுதனியோதிடும். ஆஅவும், ஈஇகை, ஊஉன, ஏஎகன, ஐஇயவி, ஓஒலம, ஔஉவை, -யேழுமோதுவர் முதனமைமாதே

(சம்பந்தர் வரையறுத்த பாட்டியல்)

தெரியாது வந்த வழியடையாளஞ் சிலர் தமக்கும், மரியாதையினறெனமதியின்மையாற் சொன மழலைப்புன்சொல், பெரியோரொறுப்பர் தம்பேரறிவாய்மையும் பேதைமைபோய், விரியாதவென்னறிவின்மையும் பாரில விளங்குதற்கே

எனபது அவையடக்கங் கூறியதுகாண்க

விளக்கியமங்கலமேமுதலாக விரித்தபத்துந், துளக்கற நாடும் பொருத்தமென்றேயெல்லை சொலவறியார், வுளக்கவிவாணரெனைப்போலுநாடொறு முணபொருட்டால், வளக்கவிபாடிப்பிழைப்பதிந்நூலின் வருமப்பயனே

எனபது, அளவும் பயனுமுணர்த்துதனுதலிற்று. இந்நூலெவ்வளவிற்றோவெனின் அக்கணந்திமாலையென்னும் பாட்டியலுறுப்பியலோத்தினுள்வருதத்துரைக்கப்பட்ட மங்கல முதலாகக்கணமீறுகிய பத்துப் பொருத்தமும் அட்டமராசிவைநாசிகங்களையுமொழித்து மொழிக்கு முதலாக வருமெழுத்துகளுக்கெல்லாம்பத்துப் பொருத்தமும் பொருந்தின முதன்மொழிகளை வரையறுத்துரைப்பது பயனென்றவாறு.

இனி ஆறும்வேற்றுமை உருபுகள் பிறவுருபுகளையேற்காதென்றவிலக்கணங்களையும் களஞ்சிய வழியாகக் காட்டுதும்

இப்படிக்குத் தமிழ்ப்புலவர்
வேதகிரிமுதலியார்

[On Negandu.]

ம. ஸ்ரீ. ஸ்ரீ. மயிலைத் துரையவர்களுக்கு வந்தனஞ் செலுத்தா நின்றனன்.

ம. ஸ்ரீ. ஸ்ரீ. வேதகிரிமுதலியாரவர்களாற் றிருத்தி யுரைசெய்த மண்டலபுருடன், சூடாமணி நிகண்டு, ௰௧-வது மகரவெதுகை, 'கடுகவி-காமுகன்விடனவெண்மாலாங்காதெனப கொலையுங்காதும கோமளமயசுவனப்புக் கூறியவிளமைக்குப்பேர் நாமமாங்கவித்தன்மிக்கு நற்பொலிவெழுச்சியோசை மாமைபே ரிறம்வனப்பாமலயசஞ்சந்தநெற்றல் என்றதின் மூன்றுமடியாகிய நாமமாங் கவித்தலென்பது, முடிவிலின்பத்துமூவா என்றதில் இரண்டாமடியாகிய அடிதொறுமிரண்டுமொன்றுமாதியிற்பொருளடக்கி என்ற முறையாய் வரவில்லையே, ஏனென்றால் நாமமாமென்று முதலில் வைத்திருக்குது. இதற்கு அவர் நல்விடை பகர்வரேல், இயான் அவர்க்கு மிகுதியும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

இப்படிக்கு

யாழ்ப்பாணம் திருநல்லை ஆறுமுகவரருளடைந்த ஆரணகிரியன்

[On the arrows of Manmadan, the Hindu Cupid.]

உதயதாரகையின் முகாமைக்காரருக்கு நன்மையுண்டாக.

அவனியெலாந் தனிச்செங்கோலோச்சி ஆண்டிருந்த சைவாசாரசம்பன்னருஞ் சுகுணங்களையுமுடையவருமாகிய அதிவீரராமபாண்டிய ராசரருளிச்செய்த, நைடதம், டன்மதோவாலம்பனபடலம், கூங் கவி, "கூற்றமென்னக்கொலைபுரிவேனிலான்-நாற்றிதழ்க்கமலத்திறைநோன்மையா- லாற்றல்சான்றமலர்க்கணையைந்தல- வேற்றநலகிலுலகினை செயான்"- இதின் மன்மதனுக்குடபஞ்சபாணத்துக்கு மேற்பட்டபாணமுண்டானால் உலகத்தை அழித்துப்போடுவானென்று தோன்றுகின்றது. இதற்கு மாறாக இலக்கியகளஞ்சியத்தில் ஒருபெரியவர் ஆசிரிய நிகண்டில் சத்தபாணமுண்டெனக் காட்டியிருக்கிறார். ஆனாலும் அப்படிச்சத்தபாணமுண்டானால் உலகத்தை யாதுகாரணம் பற்றி யழியாமல் விட்டானென்பது எனசிற்றறிவிற்கு விளங்காதபடியால் அதற்கு ஒரு நல்ல மறுமொழி சொல்லும்படி அவரை நான் மிகவும் மன்றாடிக் கேட்கிறேன்.

இப்படிக்கு

யாழ்ப்பாணம், புரட்டாதிமாசம் ௩௨தி — ஓமாணுக்கன்

[On Tamil Grammar.]

உதயதாரகையின் முகாமைத்துரைக்கு நன்மையுண்டாக.

ம. ஸ்ரீ. ஸ்ரீ. வேதகிரிமுதலியார் பரிசோதித்து மேற்கோள் காட்டிய தொன்னூல் விளக்கத்தின் கடைசியிற் சதுரகராதி வாழ்த்துமாலை என்று ஒரு நூல் சேர்த்திருக்கின்றது. அதில் "நிகண்டு சூடாமணி பதாசயபூசே"-என்ற பாட்டில் ஈற்றடியாகிய-ஓதிவாகரமும் உரிசொலும்-என்றதை எனது சிற்றறிவினாற் சீர் பிரித்துக்கொள்ளக் கூடாமையால் அதை அம்முதலியார் அவர்கள் தயவுபுரிந்து அதன் சீரைப் பிரித்தெழுதும்படி மன்றாடுகின்றன.

இப்படிக்கு யாழ்ப்பாணம் — ஓமாணுக்கன்

[On Tamil Grammar in No. 18 page 222.]

இதயமாரிருள் கெட வுதயதாரகைவிடு மியலிசை நாடகத் தமிழுணர் நிபுணரே.

ஆறனுருபு மேற்குமவ்வுருபே என்னுஞ் சூத்திரவியாக்கியானங்களின் தாரதம்மியங்களைக் குறித்து இலந்தைநகர் சுவாமிநாதர் அவர்கள் வரையறுத்துத் தற்சாட்சிக்கு விரோதமற மெய்ச்சாட்சிபுகலவும் சென்னை நகர் சுவாமிநாதபபுலவர் நற்சாட்சிக்கு விரோதமுறப் பொய்ச்சாட்சி புகன்றார்.

ஆறனுருபுமுருபேற்குமென்று தொல்காப்பியம் நேமிநாதம் தொன்னூல் இலக்கணவிளக்கம் முதலிய இலக்கண நூல்களிற் கூறியிருப்பதினாலும் அப்படியே முன்னோர்கள் உரைசெய்திருப்பதினாலும் அவ்வழக்குப் பற்பல பாஷைகளில் வழங்கி வருவதினாலும் முன்னோர்செல்வழியே நல்வழியென்று சங்கரநமச்சிவாயப் புலவரவர்கள் அவற்றிற்கெல்லாமியையக்குறித்த சூத்திரத்திற்குக்கூறிய வுரையை மறுத்துச் சிவஞான தேசிகர் அவர்கள் தமது கருத்தே திருத்தமென்றும் தாம் சொல்வழியே நல்வழியென்றுங்கொண்டு வேறுவகையாய்க் கூறியவுரையே புணமையென்றார். பாரிசேடத்தால் மற்றை முன்னோர்களுக்குக்களும் உரைகளும் வழக்குகளும் உண்மையன்றென்பதாய் அமைத்து நின்றார். அமைத்தும் கெகளுரவிந்தம கெநதிககிறதென்றற்போல உண்மையன்றென்று மறுத்த சங்கரநமச்சிவாயப்புலவர் அவர்களுரையை ஒருபுடை நிண்மையென்றுங் கொண்டார். பின்னும் அவருடையவுரையை உள்ளபடி விளங்கிக்கொள்ளாமல் ஆறனுருபுருபேற்குமென்பது அவருக்குஞ் சம்மதியன்றென்றார். நிசக கருத்தாகிய அவருடைய வுரையை மறுத்தடிக்கும்படி எத்தனை குழப்படிவிட்டார், ஒருக்கால் உண்மையன்றென்றார் ஒருக்கால் திண்மையென்றார் ஒருக்கால் அவருக்கும் அது சம்மதியமன்றென்றார், பாருங்கள் அப்பா எல்லாரும் இந்தச் செப்படிவித்தையை உண்மையை மறுத்தினால் அதை விலக்கித் திண்மையாக்கும்படி பூரணமாய் நியாயங்கள் எழுத அவற்றை அங்கீகரியாமல் பெருக எழுதியும் பிரயோசனமென்ன? வீணேயென்றார். இவர்போல்கட்கு வீண்போலிருந்தாலும் தொல்காப்பியம் நேமிநாதம் தொன்னூல் இலக்கணவிளக்கம் முதலியவற்றிற்கும் அவற்றினுரைகளுக்கும் உலக வழக்கிற்கும் இயைபாய் இருப்பதினால் இவருடைய சொல்லினாற் காரியமில்லை. இலக்கணத் தராசென்றதும் பயனின்மையாகவிருக்குமோ கண்டிலம் என்றார் சீர்பபிழையுள்ளதானால் தராசும் பயனின்மையாயப் போகொண்ணாது, அதைச் சிலர் காணாமல் அல்லது கண்டும் வெளிவிடாமலிருக்கவொண்ணாது, இலக்கண வுரையாணியில் உரைத்துப்பார்த்தாற் பொருட்டிறம் நன்றாய் விளங்கும். ஆறனுருபுருபேற்றால் அதற்குரிய எல்லாவுருபும் ஏற்கவேண்டுமேலாதலினாற் றுவ்வெழுவாயாய நிறைபெயர் உருபேற்குமென்று வற்புறுத்தியதென்றார். எழுவாயுருபுருபேற்குமென்றால் உதாரணத்திலே எழுவாயப்பொருளும் பின்பேற்கு முருபின் பொருளுமொருங்கு காட்டுவாரா? ஆறனுருபையும் அப்பெயரேற்குமென்பதே பொருளெனில் அப்பொழுது ஆறனுருபு மேற்குமப்பெயரே என்று சூத்திரஞ்செய்யாரா? பெயரேன்பதை உருபே என்பதற்கேதுமுகாந்தரமுண்டா, நன்றாய் யாலோசித்துப் பார்க்கக்கடவர்.

தற்சாட்சிக்கும் முன்னோர்கள் நியதிக்கும் விரோதமற உள்ளமை சொல்வதே தெள்ளிமை புலவர்க்கு.

யாழ்ப்பாணம், — சத்தியப்பிரியன்

[On Negandu.]

குருவாழ்க

உதயதாரகைப் பத்திரப்

புதையல்பேர் விச்சித்திரத்

தெத்தேவர்களும் பெறவுடன்

கொடுத்திடும் விற்பன்னர்காள்

நித்தியம்—சத்தியம்—துத்தியம்

அரனது தோழனென்பதற்கும் அரனுடைத்தோழனென்பதற்கும்,

சமரசஞ்செய்தியான்—அமர்கொள்ள துறத்திடும்

திண்மை கொண்டிலார்—உண்மை மிண்டினார்

விடுத்திடுங் கடாவினுக்—கடுத்திடும் விடைவிடார்

ஒருவர்தான் வெருவிலார்—பெருக்கவே சருவினார்

மீறினார் நிறையினைக்—கூறினார் பறையினைத்

தன்பெயர் பிரிந்திலார்—முன்செயல் தெரிந்திலார்

சுற்றிடச் சொற்றனர்—மற்றிடத் துற்றனர்

மதுரநாயகம் பிள்ளையாம—சதுரநாயகம வெள்ளையாம

என்னை யன்னவர்—சொன்னகொண்ணுறும்

நிந்தனை எண்ணிலன்—சிந்தனை பண்ணிலன்

மடவுரை திருத்துவன்—திடவுரை பொருத்துவன

மதுரநாயகம் பிள்ளையை— மதுரைநாயகப் பிள்ளையாய்ப்

படித்திடநொடிப்பன— இடித்திடனடிப்பன

உறுதி காட்டினன்—பொறுதி காட்டினன்

இவைகள் யாவையும—அவைகட்கோதரப்

பன்முறை வேண்டினன்—என்னிறை பூண்டனன்

இப்படிக்கு ஸ்ரீ ஸ்ரீ சுவாமிநாதரவர்கள் சிறுமாணுக்கன் சுந்தரப்பொதியிற் செந்தமிழ்ப்புலமை அகத்தியன்

புரட்டாதி ௴ ௨௰தி

[On Tenses.]

துரையவர்கட்கு வந்தனம்

கலைக்கணமுணர்ந்தவிலக்கணிகளே,—"அவன்கைக்கூலிவாங்கு

றேதற்கெண்ணம்" என்றதும், "அவன் கைக்கூலி வாங்கினதைக் கண்டேன்" என்றதும் இலக்கணமுறைக்கோர் கருத்தென்றும், "எண்ணம்" என்ற சொல் மூன்று காலத்துக்கும் வருமென்றும் அரசர்கள் முன்னிலையிலோரிலக்கணி சொல்லுகிறார் அல்லவென்று சொன்னவர்களைப் பேச்சால் வெல்லுகிறார். சபைக்குப்போகாத உத்தியோகஸ்தரொருவரும் இவர் சொன்னது சரியென்றுமிலக்கணையாய்ப் பேசினாரென்றுஞ் சொல்லுகிறார். இலக்கணவினாவிடை, இலக்கணச்சுருக்கவினாவிடையிலுமிதற்குத்தாட்சி காண்பதரிதென்று நினைக்கிறேன். ஆகையால் இதுசரியென்பதை இவ்விருவருங் காட்டினால் இதுசரியோவல்லவோவென்பதை இலக்கணிகளிடமிருந்தறியலாமென்றித்தை உங்கள் முன்னிலையிற்கொண்டுவந்தேன்.

யாழ்ப்பாணம் கச்சேரி இலக்கணநுட்பவிசாரணைகாரன்.

(On the quality of a Poetic verse)

கல்விச்சமுத்திரங்கமலாலயந்தமிழ்க் கடன்மடைதிறந்தவெள்ளங் கற்பனைபிறப்பிடங் கலைமகளிருப்பிடங் கவிமாரிபொழியுமேகம் சொல்விற்பனமவிளையும் மதுரக்களஞ்சியந் தோன்றுகறபூரதீபம் சோடசாவதானி வேதகிரிகவிராசனென்னுந் துரையவர்களுக்கென்னிருகரமுஞ் சிரமேற்கொண்டோர் நமஸ்காரம்

வழக்கௌதுடாரம்

வேலாவலயஞ் சூழ்ந்த வேலாவலயமெங்கும் உதயதாரகையென்னுமுத்தியங்கபத்திரிகையைச் செலுத்தும் மகா கனம்பொருந்திய மைனாத் துரையவர்களுக்கு நன்மை மலருக

சிறி ஐயாவே,

[illegible]கள் பத்திர சிரோமணியின் மகம் சஞ்சிகையின் கண்ணே மறைந்து நின்று "ஒருவனெ"னக் கையொப்பம் வைத்தவன் இலக்கண இலக்கியங்களையோராது என் விடையைக் குற்றமென்றவாற்றால் இவனுக்குத் தண்டனையாயும் இல்லாப் பிழையைக்காட்டும் இவன்போல்வார்க்குத் தகுந்த கண்டனையாயும் இத்தை எழுதலுற்றேன்

கவது இவர் "நுண்பிழையாயவைத் திண்பிழையாக்கல்" என்றுமுகவுரைபோட்டார் முதனூல் யான் வினாவிட நுண்பிழையைத் திண்பிழையாக்கலென விளங்கினதே, அப்போது யான் வினாவியதை வற்புறுத்தினாரே, முகவுரை போடவறியார் பின்னென்னமொழிந்தார் "வருவகுன்றம்" என்னுங் கட்டளைக் கலித்துறை அங்ஙனம் நல்லூர்க்கண்ணே விசாகப்பெருமாளையராற் செய்யப்பட்டதன்றி வேறொருவராற் செய்யப்பட்டதா? பின் வைத்தியலிங்கனும் காண்டிகை உரை திருத்திச்செய்ததாயிருக்கும் இதனால் இவரெழுதிய முதலாம் நியாயமுமிறந்ததே, இயினிமற்றனிப்போற கிறந்ததே உவது கவிப்பாவாயிருப்பதின் காரணத்தையென்பதற்கு முடிக்குஞ் சொல் கற்று என்பதல்லவா? இதனால் இவரெழுதின இரண்டாம் நியாயமும் பவனன் முன் பதரெனப் பறந்ததே புள்ளரசன் முன் புயங்கமென விறந்ததே கவது. சகல நூல்களையும் புலவரிடத்திறந்தேராமல் அல்லபுலவரிடத்தாதோவது மூன்றாம் நியாயமும் வன்மையுற்றதே மறைந்தவனுக்குத் திண்மையுற்றதே "எங்களுக்கறிவிக்க மன்றுடுகிறோம்" என்றது பிழையென்றாரே, அஃது பிழையா? இதற்குவேறு நன்றுயெழுதப் பயின்றவர்களிடத்தில் இவரினும் விசாரிக்கட்டும் "ஒருமையிற் பன்மையும் பன்மையிலொருமையு மோரிடம்பிறவிடந் தழுவலுமுளவே" என்றதை மறந்தாரா? ஒருவர் கையொப்பம் வைத்ததும், கண்டிலம், கொண்டிலம், விண்டிலமெனத் தாரகையில் வருவதையும், பத்திராதிபதியாகிய மைனாத்துரையும் நாங்கள் மன்றுடுகிறோம் என ஒவ்வொரு சஞ்சிகையிலிருப்பதையுங் கண்டும் விளங்காமல் விட்டுவிட்டாரா? என விழுவைப் பழித்து மறைவாய்த் தன்னைப் புகழ்ந்தார் எனவைக் கனவிலுமறியோமென்றார், இவரெப்படி மறைந்தாலும் இவரையானறிவேன் இவ்விதமூகாந்தரங்களால் இவரெனமேற் காட்டிய குற்றங்களெல்லாம் பறந்தனவே, என் வினாவோ சிறந்ததே. அறிவுள்ளவன் அறியக்கடவன்.

யாழ்ப்பாணம் சுண்டிற்குழி திருவாசவுரு, ஆடி மாதம் பதிகத்.

இங்ஙனந் தமது பணிவிடைகாரன் கட்டுப்பட்டா மட்டத்திருத்தி கீச்சியாமயின்னை மெளண்டாமயின்னை

பத்திராதிபதியே,

ஒருவனெனக் கையொப்பம் வைத்தவன் ஒருக்காலும் உதயதாரகையை வாசித்தவனல்லவென்றெண்ண வேண்டும் வாசித்தவனேல் தாங்களொருவராயிருந்தும் "நாங்கள் மன்றுடுகிறோம், பிரசுரஞ்செய்வோம், எண்ணுகிறோம்" என ஒவ்வொரு சஞ்சிகையிலும் பேசியும் அத்தைக் கவனியாமலிருப்பானா? மொண்டாறுயவை சரியே சரி, அதுவே யுண்மை அதுவே திண்மை, அஃதையறிந்திஃதைபெழுதினேன்

இப்படிக்கு
ஐவர் கையொப்பம்

பத்திராதிபர் குறிப்பு.

வழக்கை குடாரத்தைப்பற்றி இனிமேல் யாதொருவரெனும் எழுதி மேன்மேலுந் தருக்கம் விளைவித்துக்கொள்ளாமலிருக்கும்படிக்கு மிகுந்த தாழ்மையுடனே கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலங்கியல்.

The Reindeer—ஓர்வகைமான்

Brief descriptions of the most remarkable animals that inhabit the earth illustrated by cuts on a compaiative scale

இந்தமான் உயரத்தில் ஏறக்குறைய மூன்றரையடியும், நீளத்தில் ஐந்தரையடியுமுள்ளதுமாயிருந்து சாதாரணமாய்க் கபிலநிறமாயும், உதரத்தின் கீழே தவள நிறமுள்ளதுமாயிருக்கின்றது அதினுடைய கொம்புகள் மிருதுவாய் நீண்டு சுழன்ற கவருள்ளதாயிருக்கின்றன கோடைகாலத்தில் இந்தமான் நாளுமேதமான பயிர்களையுந்தின்று, மாட்டிலையானகொட்டுமென்றுபயந்து உயர்ந்த பாறைகளுக்குப் போயிருக்கும். ஆனாலும், மாரிகாலத்திலே கடற்பாசி முதலானவைகளைத் தின்னும் இவ்வகைமான்கள் ஆசியா ஐரோப்பாமுதலான சீமைகளிற் பெரும்பாலுஞ் சஞ்சரிக்கின்றன

இந்தமான் லாப்பிலாந்தாருக்கு (Laplanders) மெத்தப் பிரயோசனமுள்ளதும், ஆடுமாடுகளுக்குப் பதிலாக இம்மிருகத்தைத் தங்கட்குங்கள் வேலைக்கும் பாவித்துக்கொள்ளுகிறார்கள் இந்தமானவகை செத்தாலும் உயிரோடுநின்றாலும் அத்தேயத்தவர்களுக்கு மிகப்பிரயோசனமுள்ளது அது சாகும்பொழுது, அதினுடைய என்புகளினால் அகப்பைகளையும், கொம்புகளினால் ஒட்டும் பசைகளையும், தசை நார்களால் நாணகயிறுகளையும் நூல்களையும், தோலினாற் புடைவைகளையும் உண்டுபண்ணிக்கொள்ளுகிறதுமன்றி அதினுடைய இறைச்சி மெத்த யோக்கியமுள்ளதுமாயிருக்கின்றது அதினுடைய பாலைக்கறந்து பாற்றிரளைகளையுஞ் செய்துகொள்ளுகிறார்கள் அவசரமான வேளைகளில் இம்மிருகத்தை இரதங்களிற் கட்டிச் செலுத்திக்கொண்டும் போவார்கள்

இந்தமான் பெரும்பாலுங் கூட்டங்கூட்டமாய் நடமாடுகின்றது இதைப்பற்றி (De Brooke) என்பவர் சொல்லுகிறதாவது "ஒருகூட்டத்திலே (௱) அல்லது (௲) நிற்கக் காணுகிறதுண்டு இம்மிருகத்தைக்கொண்டு லாப்பிலாந்தார் அதிகம் யோக்கிய பாக்கியமாய் நாளவிடுகிறார்கள் கோடைகாலத்தில் அவர்கள் இவைகளின் பாலைக்கறந்து பாலத்திரளைகளைச்செய்து வருடம் முழுதிலும் வைத்துச்சாப்பிடுவதுமன்றி இம்மான்களிற் சிலதை அடித்துஞ் சமைப்பார்கள் ஒரு மனிதன் இம்மான்களில் (௨௱) மாத்திரந் தன்பட்டியில் அடைத்துவைத்து வளர்த்தானேயாகில், அவனுடைய சமுசாரமிகுதியுங் கொஞ்சமாயிருந்தால், அவன் இம்மிருகங்களைக்கொண்டு சுவனம்பண்ணக்கூடியதாயிருக்கும் அவன் (௱) மாத்திரம் வைத்திருந்தானேயாகில், அவைகள் அவனுக்கு வேண்டிய சாப்பாடுகொடுத்தவனை யாதரிப்பது கூடாதகாரியம். அவனும் அவைகளால் வரப்பட்ட பிரயோசனத்தைக் காத்திருக்கவுமாட்டான் ஆனாலும் அவனுக்கு (௫௰) மான் மாத்திரமிருந்ததேயாகில், அவனொன்றுஞ் செய்துகொள்ளக்கூடாது. பின்னென்ன செய்வானென்னசெய்வானேயாகில், அந்தவூரிற் பணக்காரனை அண்டிக்கொண்டு தன்னுடைய (௫௰) மான்களையும் அவனுடைய பட்டியிற் சேர்த்துத் தானொரு குற்றேவல்செய்கிறவனைப் போலே எல்லாமான்களையும் ஒருமிக்க மேய்த்துத் திரும்பவுஞ் சாயத்துக்கொண்டு வந்து பாலகறந்துகொடுப்பதுமன்றித் தனக்குக் கிடைக்குஞ் சாப்பாட்டுக்காக மற்றும் அநுவற்பணிவிடைகளையுஞ் செய்துகொடுப்பான் (௲) மான்களைவிட்டு ஒருவனொரு பட்டியிலிருந்து பாலகறக்கும்பொழுது மெத்தச் சங்



தோஷமான காட்சியைக்கொடுப்பதுமன்றி, முற்காலத்திலே இராசவுத்தியோகத்தில் வரப்பட்டவர்கள் ஆட்டுக்கிடையிலிருந்து முற்பிதாக்களென்ற வெண்ணத்தையுந் தொள்ளப்பண்ணும்

பல தேசத்தாருக்குப் பல மிருகங்கள் உதவியாயிருக்கிறதுபோல லாப்பிலாந்து தேசத்தாருக்கு இவ்வகை மான்கள் மெத்தவுதவியாயிருக்கின்றன எப்படியெனில், சிலேச்சு என்ற ஒருவகை இரதங்களில் இந்த மான்களைப் பூட்டிச் செலுத்திக்கொண்டுபோகிறார்கள். இவ்விரதங்களுக்குச் சில்லில்லை அதற்குப் பதிலாகத் தோலால் மூடிய ஒரு பலகை மாத்திரமுண்டு இழுவை வளையத்தினால் இம்மான்களை இரதத்திற் கட்டிக் கொம்பிற் கடிவாளத்தைப் பூட்டி (௨௱௪௰) அல்லது (௩௱) இறாத்தல் பாரங்கொண்ட சுமையை ரதத்தில் வைத்துச் செலுத்திக்கொண்டு ஒரு மணித்தியாலத்தில் (௰) மயில் தூரம் பனிக்குமேலாக ஓடுகிறார்கள் இன்னும் அந்த மிருகங்கள் இளையாமல், (௰௯) மணித்தியாலத்துக்குள்ளே (௱௫௰) மயில் தூரம் போகுமென்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது சுவேடனிலே (Sweden) ஒரு படமெழுதி வைத்திருக்கின்றது அதைப் பார்த்தால், அதிலொரு துரைமகன் ஏறியிருந்துகொண்டு என்னவோ ஒரு பெரிய அவசரமான காரியத்தை நாடிச் சீக்கிரமாகச் செலுத்திக்கொண்டு (௪௮) மணித்தியாலத்திலே (௮௱) மயில் தூரம் போனதாக எழுதியிருக்கின்றது இதுகாரியம் (௲௬௱௯௯)ம் ஆண்டிலே நடந்ததென்றும், அந்த மிருகம் (௮௱) மயில் தூரமும் போய்ச்சேர்ந்தவுடனே விழுந்து செத்துப்போனதென்றுஞ் சொல்லுகிறார்கள்

லாப்பிலாந்தார் இந்த மான்களையுங்கொண்டு வெகு தூரத்துக்குப்போய் வருகிறார்கள் சூரியன் வெகு மாதங்களாக அடிவானத்தின் கீழே நிற்கின்றமையால், சந்திரனுடைய வெளிச்சமேயல்லாமல் அவர்களுக்கு வேறு வெளிச்சம் அங்கே கிடையாது கோடைகாலத்திலே மலைகள் நெருங்கிய திசைகளில் வாசம்பண்ணுகிற சனங்கள் அடிக்கடி தங்கள் சமுசாரத்தையுங் கூட்டி ஆடுமாடுகளையுஞ் சாய்த்துக்கொண்டு கடற்கரைகளுக்குந் தீவாந்தரங்களுக்கும் போய் மாரியளவும் அங்கேயிருந்து பிறகு தங்கள் ஊருக்குத் திரும்பிப் போகிறார்கள்.

டாக்குத்தர் றிச்சாட்சன் (Dr. Richardson) என்பவர் சொல்லுகிறபடி, அமெரிக்காவில் இருவகையான மான்களுண்டு. அதில் ஒரு வகை (barren ground Caribou) மெத்தக் குறுத்துச்சிறுத்தும், பாரமற்றதாயுமிருக்கின்றது. ஏனெனில், கன்னடிய தேயத்தான் ஒருவன் (Canadian) இவ்வகையைச் சார்ந்த ஒரு வளர்ந்த மானைத் தூக்கித் தோண்மேற்போட்டு, இறைச்சிக்காரனொருவன் ஒரு ஆட்டைத் தூக்கிக்கொண்டிலேசாய்ப்போனதுபோலே அவனும் போனதைக் கண்டேன் கலைமான் மிகவும் பெரிதாயிருக்கின்றதினாலே, (௯௰) முதல் (௱௩௰) இறாத்தனிறைகொண்டதாயிருக்கும்

மேற்சொல்லிய இருவகை மான்களில் மற்றவகையான மானுக்குக் (woodland Caribou) கொம்பு மெத்தச் சிறிதாயிருக்கின்றதுமன்றி அதின் இறைச்சி மெத்த யோக்கியமுள்ளதுமல்ல. இவ்வகை மான் பிரதானமாய் மரங்களடர்ந்த பாறை நெருங்கிய தேயங்களிற் சஞ்சரிக்கின்றன (barren ground Caribou) என்றவகையான மானைப் பற்றி றிச்சாட்சன் என்பவர் இன்னுஞ் சொல்லுகிறதென்னவெனில், "இந்த மிருகம் மெத்த வயக்கேடாயிருக்கில் அதின் இறைச்சியிற் சற்றுமுருசியில்லை அது நிணப்பிடிப்பாயிருக்கும் பொழுது அது காட்டுமிருக இறைச்சியிலுமெத்தயோக்கியமானது

சிப்பியுவேயர் (Chipewayans) முதலான இந்தியர் இந்த மான்களை விட்டு வளராவிட்டால் அவர்கள் குடியிருந்து சீவிக்கிறதுமெத்த அரிதாயிருக்கும் இந்த மான் கொம்புகளினால் மீன் பிடிக்குந் தூண்டில்களை உண்டுபண்ணுகிறார்கள் ஐரோப்பையிலிருந்து இத்தீவுக்குக் கொண்டுவரமுன் மான் கொம்பினால் நாலுவித ஆயுதங்களையும் பண்ணினார்கள். அதின் தோலை எடுத்து மாரிகாலத்தில் அணியும் புடைவைகளை உண்டுபண்ணுகிறபடியாற் கம்பளி முதலானவைகள் அவர்களுக்கு வேண்டிவராது இன்னுமந்தத் தோலை மிருதுவாக்கிக் கோடைகாலத்துக்கேற்ற உடுப்பையுமுண்டுபண்ணுகிறார்கள். (௯௰) அல்லது (௭௰) தோலை ஒருமிக்க எடுத்து மூட்டி ஒரு பெரிய சமுசாரமிருக்கத்தக்க கூடாரமாக்கிக்கொள்ளுகிறார்கள். அதினுடைய கெண்டையெலும்பை எடுத்துக் கூராக்கித் தோல் பதனிடுகிறார்கள். சில வேளைகளிற் தோலை எடுத்து அதின் மயிரை வழித்தெறிந்துபோட்டு அதைத் இலங்கிலமாகக் கிழித்துக் கயிறுகவும், நாண் கயிறுகவும், மான் பிடிக்குங் கண்ணிகளாகவும், மீன் பிடிக்கும் வலைகளாகவும்பண்ணிக் கொள்ளுகிறார்கள். சொல்லப்போகிற் பற்பலவிதமான கயிற்றுவேலைகளையுஞ் செய்துகொள்ளுகிறார்கள்; அவைகளில் உரத்த க

யிற்றினுல் வலைகளையும், பனிமேலநடக்கிறதற்கேற்ற சப்பாத்துகளையும தசை நார்களினுல நலல ஜோத்தியான நூலகளையுமுண்டுபண்ணுகிறுர்கள். இந்த மிருகங்களானவை மறுமறு படசிகள், நாற்கான மிருகங்களைப போல இயலபாய வடக்கேயுந தெறகேயும நினைத்தபடி போகும. அபபொழுது அவைகளை மேயககிறவர்களும் போவாாகள். அவைகளை அப்படிப போகாமலமறித்தாலுங் கேடகமாடடா ஆகையால இதைக் காட்டு மிருகமேயலலாமல வீடடுமிருகமெனச் சொலலமாட்டாாகள்

AUSPICIOUS OCCURRENCES —No 5.

Another "Remnant" found

MESSRS EDITORS,

The following are fair specimens of large portions of the prophetic writings, setting forth the gracious designs of the Almighty, toward the descendants of his ancient covenant people—the descendants of Israel "Hear the word of the Lord O ye nations, and declare it in the isles afar off, and say, He that scattered Israel will gather him, and keep him as a shepherd doth his flock For the Lord hath redeemed Jacob, and ransomed him from the hand of him that was stronger than he " Jeremiah xxxi 10, 11 "Therefore fear them not, O my servant Jacob, saith the Lord, neither be dismayed O Israel for, lo, I will save thee from afar, and thy seed from the land of their captivity and Jacob shall return, and shall be in rest, and be quiet, and none shall make him afraid For I am with thee, saith the Lord to save thee, though I make a full end of all nations whither I have scattered thee, yet will I not make a full end of thee but I will correct thee in measure, and will not leave thee altogether unpunished " Jeremiah xxx 10, 11 "Yet will I leave a remnant that ye may have some that shall escape the sword among the nations, when ye shall be scattered through the countries " Ezekiel vi 8 See also Ezekiel xi 16, 17, xx 33–44, and xxxiv Though it be so, that with the Lord a thousand years are as one day, "it is interesting to reflect that *thousands* of years have passed away," since these predictions respecting the future glory of Israel were given, and that they were given by him who hath said, "I the Lord will *hasten* it in its time " "The zeal of the Lord of hosts will perform this " Of late years there has been an increasing belief among those who are placed as watchmen upon the walls of Zion, that the time of Israel's redemption is drawing nigh This belief cannot fail to awaken a deep interest in passing events, which have an obvious bearing upon the state of that people, now in their dispersions and depressions Since the notice contained in the two preceeding Nos respecting Dr Grant's account of the Nestorian Christians, supposed to be the descendants of the ten tribes, was written, the 54th No of the "Foreign Quarterly Review" has come to hand, containing a brief notice of a publication, similar in character and in interest to Dr Grant's From this publication it appears that another remnant of the descendants of the tribes of Israel have been recently discovered, by a Jewish traveller, in the character of a Missionary The title page of the book conveys some definite idea of its subject matter, and is as follows "The Remnant found, or the place of Israel's hiding discovered, being a summary of proofs, shewing that the Jews of Daghistan on the Caspian sea, are the Remnant of the ten tribes The result of the personal investigation during a Missionary tour of eight months in Georgia, by permission of the Russian Government in the year 1837 and 1838. By the Rev Jacob Samuel, senior Missionary to the Jews, for India, Persia and Arabia ' Respecting this work the Reviewer remarks, "*This is a well* written volume on a very interesting question, which though it has been often asked, has not yet been answered,—namely, "What has become of the ten tribes of Israel"' Our author flatters himself that he has discovered a remnant of them —(all that we are led by prophecy to expect) in Daghistan, a wild mountainous country, situated to the south west of the Caspian sea, bordering on the ancient Media, and now nominally subject to Russia Mr Samuel is not a mere theory-monger, but is fully qualified to investigate his subject, being himself a converted Hebrew, of the tribe of Aaron, and well acquainted with the rites and customs of his nation To these advantages he adds a knowledge of the new Testament, and a deep religious sentiment and zeal, which supported him throughout his laborious journey We will sum up his arguments in favour of his opinion, as far as our limits will allow " The summary follows, but is too long to be inserted here Many of Mr Samuel's observations go to shew that the Jews in question, must be the descendants of the primitive Jews, or ten tribes which composed the kingdom of Israel, and not of those who composed the kingdom of Judah Respecting these mountaineers, Mr Samuel observes, " They are in possession of a few manuscript copies of the Law of Moses, which are divided into five books, like ours,—written in the original Hebrew character, without any divisions of chapters, verses, or points, which manuscripts they hold to be very ancient, and would not part with them on any account —They are very anxious to get the Psalms of David, and so ignorant are they of the New Testament that in the year 1837-8, when two of the Jews from Andaewa visited me, and saw the volume, they put it three times to their forehead, and three times to their mouth and kissed it I sold forty-six New Testaments for a high price They are free from the hatred and superstition of their brethren (in other countries) towards Christianity The Daghistan mountains, the asylum of the Jews here described, lie at no great distance north east of the Kurdistan mountains, the abode of the Nestorian Christians visited by Dr Grant The reasons assigned by the latter writer, for believing that the descendants of the ten tribes, are to be sought for in that region of country, are greatly corroborated by Mr Samuel's discoveries in Daghistan The researches and discoveries of these two enterprising Missionary travellers have deepened the interest previously felt in behalf of the dispersed of Israel This subject is worthy of the special attention of the native christians of India, as furnishing evidence on an extensive scale of the truth and divine origin of the Christian religion In the first place, it may be regarded as a standing miracle, that the Jews in accordance with the prophecies contained in the Bible, have remained a distinct people in all countries wheresoever they have been driven The truth and importance of this remark will be perceived, and felt in proportion as their history is studied, from the period of their several captivities, but more especially from the destruction of Jerusalem by the Romans in A D 70, to the present time In the next place, a large portion of unfulfilled prophecy, and that portion which is most cheering and consoling to the heart of every christian, is in close connection with the future destiny of the Israelitish nation Consequently, a knowledge of their past history, and of the prophecies on record respecting them, are requisite, in order clearly to understand and rightly to appreciate the auspicious occurrences now in progress respecting that nation We do not exaggerate, "says the Reviewer," in stating the number of Jews, now under the dominion of Russia, to be three millions upon a population of fifty millions What will be their lot at no very distant period ? We venture to predict that it will prove much worse, since the Jew, however degraded, is still superior to a Russian subject, even to a noble " The prophecies contained in Zechariah xii 2, 6, 9, and in Isaiah li 17-23, wear a most fearful aspect towards those who are involved in the charge of having oppressed the descendants of Israel, in their dispersions among the nations, and many are the indications that the day of recompence is near at hand

AN OBSERVER

---

208 ரும் அதிகாரம்

இல்வாழ்க்கை —*The Domestic state*

சக இல்வாழ்வானென்பானியல்புடையமூவர்க்கும்
நல்லாற்றினின்ற துணை.

பு இலலறத்தோடு கூடிவாழ்பவனென்று சொல்லப்பட்டவன், (தரும)நிலைகளையுடைய மற்ற மூவருக்கும் (அவர்செல்லுகிற) நல்லமார்க்கததிலே, நிலைபெற்ற துணையாம்.

He will be called a (true) householder, who is a firm support to the virtuous of the three orders in their good path *Drew*

He for domestic duties is esteemed,
Who firm in virtue's path, the virtuous aids,
In life's three orders found *Ellis*

சஉ. துறந்தார்க்குந் துவ்வாதவர்க்குமிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான்றுணை.

பு. (பாதுகாத்தவராலே) நீக்கப்பட்டவர்க்கும், அநுபவிக்கக்கிடையாதவராகிய தரித்திரர்க்கும் (ஒருவருமில்லாமைத தன்னிடத்தில் வந்து) இறந்துபோனவாக்கும், இல்லறததோடு கூடி வாழ்பவனென்று சொலலப்பட்டவனே துணையாம்

He will be said to flourish in domestic virtue who aids the forsaken, the poor, and the dead *Drew*

Domestic virtue is to him ascribed,
Whose care befriends the pious and the poor
And aids departed souls *Ellis*

---

௪௩. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லு
னென்றாங் கைம்புலத்தா றோம்ப றலை.

. பு பிதிர்களும், கடவுளரும், விருந்தாளிகளும், சுற்றத்தாரும், (இல்வாழ்வானாகிய) தானும், என்று அங்கே (சொல்லப்பட்ட) ஐந்திடத்தும (செய்யப்படுந் தரும) மார்க்கத்தை (குற்றம்வராமலே) பாதுகாப்பது(இல்வாழ்பவனுக்குச்)சிறப்புடைய தருமமாம்

The chief (duty of the householder) is to preserve the fivefold rule (of conduct) towards the manes, the gods, his five guests, his relations, and himself *Drew.*

Thine ancestors deceased, thy God, thy guest,
Thy relatives, thyself, these cherished, know
Of life the five great duties are fulfilled *Ellis.*

Hints on the Theory and Practice of Gardening

[Continued from page 220]

Propagation of Plants —On this useful branch of horticulture much has been written, and many methods are in daily practice besides the one just mentioned by seed,—such as by budding, grafting, eyes, cuttings, layers, &c Nearly all these are pretty well understood in this country, and more or less practised, though probably not so much as they might be The extreme heat and dryness of the climate during a great part of the year are however greatly against most of them as practised in Europe

On each of these various methods it is not our intention on the present occasion, to dwell, though some of them merit attention, but shall confine our observation to cuttings which being easily practised is much employed among us, tho' with less success in many cases than we should experience if well conducted Of this operation it is remarked the constitutional difference among plants is so great that some species will strike without any difficulty under almost any circumstances, while there are others which no art has yet succeded in converting into plants And yet it is by no means uncommon to find that out of a potful of cuttings of the same species apparently alike, and treated in exactly the same way, one will grow and all the rest fail From this it is inferred that the principles of striking cuttings are still imperfectly understood and that this is one of the points of horticulture in which there is the greatest room for improvement

The point requiring most attention in this operation is, to take the cuttings from well ripened wood, if possible during the season of rest, after the formation of its annual ring of wood, and ripening its annual crop of seed or fruit Such cutting, cut square off, set in small pots with the end resting against the bottom in the light soil, consisting of a large proportion of sand mixed with vegetable earth slightly moist and kept in a cool rather dark place under a glass frame, to maintain an equally humid atmosphere until they begin to shoot, are placed in the most favourable circumstances for propagation Provided the cutting continues to live, it is an advantage its not immediately beginning to shoot, and only one bud should be allowed to grow It is of importance that the end of the cutting should be cut parallel to, and touch the bottom of the pot, the lemon and orange and many other plants, which, without this precaution, do not strike willingly, will readily do so when this is attended to The object of it is to prevent the cutting absorbing water too rapidly, before it is possessed of the necessary apparatus of leaves, to throw it off by perspiration An ingenious plan was invented by Mr Forsyth to answer this purpose rather more perfectly "He puts a small pot into one of larger size, having first closed the bottom of the former, with clay, then having filled the bottom of the outer pot with corks, he fills up the sides with propagating soil in which the cuttings are so placed that their root ends (cut to the proper angle) rest against the sides of the inner pot, the latter is then filled with water which passes very slowly through the sides until it reaches that cuttings " (*Gardener's Magazine*) "In many cases, especially in striking such plants as heaths, gardeners employ the stratum of silver sand, placed immediately over the earth in which such plants love to grow the cuttings are inserted into the sand, but so near the eath, that the roots, presently after their emission, find themselves in it and in contact with a source of food This sand answers the same purpose as placing the root end of the cutting in contact with the pot, and is an ingenious device for doing that with small cuttings which cannot be conveniently done ,otherwise, except with large ones " (*Lindley*) The additional precautions are to cut the root end close below a leaf bud, to facilitate the emission of roots by the buds, and cover the whole by bell glass with the edge pressed into earth for the purpose of preserving a uniform degree of humidity in the atmosphere breathed by the cuttings

---

பழமொழி

ஏழையாரைவலியார்கேட்டால வலியாரைத் தெய்வங்கேட்கும்
ஊரை உலைமூடியாலே மூடலாமா?
எல்லாரும் மனிதரா கல்லெல்லாம் மாணிக்கமா?
எருதந்தன் புண்ணைமறந்தி காக்காயுந் தன்பசியைமறந்தி
ஊராருடைமைக்கு பேயாய்பறந்தால வருமா?
உழாவில்லே கிழக்கு மேற்கா?
ஊழ்பேரினு மூக்கமது கைவிடேல்.
ஏரி நிறைந்தாற் கரைகசியும.
ஒருதலை இரண்டாகிலேயா?
எச்சிலைக்குடித்துத் தாகந் தீருமா?
ஒடிந்தகோலானாலு மூன்றுகோலாகும்

ஐப்பசி ௴.

சாதிய௴ ஐப்பசி௴. ௰௫தி௳.முதல் கார்த்திகை ௰௩தி௳.வரைக்கும.

E date	தமிழ் தேதி	வாரம்	நட்சத்திரம		திதி.		யோகம		கரணம்.	
15	௧	ச	ச	௪௯ll	ஏ	௮l	க	௰௯lll	வி	௮l
16	௨	ஞா	பூ	௫௫lll	து	௰௬ll	வி	௰௮	பா	௰௬ll
17	௩	தி	உ	௯௰	தி	௰௮ll	து	௰௯	தை	௰௮ll
18	௪	செ	உ	௨	ச	௨௬ll	வி	௨௰l	வ	௨௬ll
19	௫	பு	ரே	௬lll	0	௨௭ll	அ	௨௰lll	ப	௨௭ll
20	௬	வி	அ	௰௨ll	பி	௬௰ll	வ	௨௰lll	கவு	௬௰ll
21	௭	வெ	ப	௰௯	தி	௬௨ll	சி	௰௯ll	தை	௯ll
22	௮	ச	கா	௰௮ll	தி	௬௬l	வி	௰௭ll	வ	௨lll
23	௯	ஞா	ரோ	௰௯lll	ச	௬௨ll	வ	௰௪l	ப	௬
24	௰	தி	மி	௰௯lll	ப	௬௰lll	ப	௰	கவு	௪lll
									தை	௨௯
25	௰௧	செ	தி	௰௮ll	ஷ	௨௭lll	சி	௫l	வ	௨௭lll
26	௰௨	பு	பு	௰௯ll	ஸ	௨௬lll	சி	௫ll	ப	௨௬lll
							சா	௫௬		
27	௰௩	வி	பூ	௰௬lll	அ	௰௯l	௯	௪௯	கவு	௰௯l
28	௰௪	வெ	ஆ	௰l	ந	௰௪	௯	௬௮ll	க	௰௪
29	௰௫	ச	ம	௯ll	த	௮l	பி	௬௧	வி	௮l
30	௰௬	ஞா	பூ	௨l	ஏ	௨l	யா	௨௬	பா	௨l
			உ	௫௯	து	௫௪			கவு	௨௭
31	௰௭	தி	அ	௯௪l	தி	௫௰lll	வை	௰௫ll	க	௨௨l
Nov										
1	௰௮	செ	சி	௫௰lll	ச	௪௫ll	வி	௮	வி	௰௮l
2	௰௯	பு	௯	௪௭lll	*	௪௰lll	பி	ll	சது	௰௬
							ஆ	௫௬l		
3	௨௰	வி	வி	௪௫lll	பி	௬௯lll	சவு	௪௮	கி	௮lll
4	௨௧	வெ	அ	௪௪ll	து	௬௬lll	சோ	௬௨lll	பா	௫lll
5	௨௨	ச	கே	௪௪l	தி	௬௩lll	அ	௬௮l	தை	௨lll
6	௨௩	ஞா	மூ	௪௫l	ச	௬௰lll	௯	௬௪lll	வ	௪l
7	௨௪	தி	பூ	௪௭ll	ப	௬௧l	தி	௬௨l	ப	௪
8	௨௫	செ	உ	௫௰lll	ஷ	௬௬	சு	௬௰lll	கவு	௨
9	௨௬	பு	தி	௫௫ll	ஸ	௬௯	•	௬௰	க	௪ll
10	௨௭	வி	அ	௯௰	அ	௪௰	வி	௬௰l	வி	௮
11	௨௮	வெ	அ	௧	ந	௪௪lll	து	௬௧	பா	௰௨ll
12	௨௯	ச	ச	௭	த	௪௯lll	வி	௬௨l	தை	௰௭l
13	௩௰	ஞா	பூ	௰௬ll	ஏ	௫௫	அ	௬௯ll	வ	௨௨ll

திங்கட்கிழமைச் சங்கிராந்தி நாழி ௰௮ விஞாடி ௫௰ல விருச்சிகரவி.

SUPPLEMENT TO THE
உதயதாரகை.—MORNING STAR.

௨. புத். சஞ்சிகை ௰௯] ௲௮௱௪௰௨ ௵ ஐப்பசி. ௬, தேதி வியாழக்கிழமை, Thursday, October 6, 1842 [Vol. II No 19

Gardener's Calendar for October.

MADRAS

Mean Temperature 82 0—Average fall of rain 11 12

The remarks on last month apply equally to this Continue to sow all kinds of vegetable seeds in boxes, transplant from the boxes into beds, and immediately after the first heavy fall of rain, remove into rows and trenches, more particularly celery, beet, cabbage, knol kole, cauliflower, and brocoli Care should be taken in finally transplanting all the cabbage tribe to provide against heavy falls of rain, by making trenches to carry off the water Crops of peas should be sown every week or ten days from the beginning of this month until the 10th of December, peas sown after that time seldom pod

Onions and leeks should be sown during this month in light bright earth, carefully covering the seed When leeks are a few inches high, plant them in drills, eighteen inches apart, and nine inches plant from plant As they increase in size, draw up the earth to their stems in order to blanch them leeks are much improved by blanching

Sow parsnips in rich deep soil Trench the ground two feet deep, sow the seeds in drills one foot apart, and thin the plants so as to leave eight inches from each other

But few fruits, vegetables, or flowers, are procurable in the market this month, but cabbages, carrots, and spinage may be produced from your own garden with ordinary attention

BANGALORE

Mean Temperature 74—Quantity of rain measured 4 inches

Apples and vegetables are in great perfection The main beds for strawberries should be planted Vines will begin to flower early in the month, the borders should be dug, and well manured Dahlias will begin to fall in this month As soon as the leaves begin to wither, they should be taken up with the soil that adheres to them and kept in a dry place As soon as they have been sufficiently dried, they should be placed in boxes of sand till the time for planting arrives The double tuberoses should be similarly treated

---

உதயதாரகைக்குக் கடிதமெழுதிக்கொள்பவர்களுக்குப் பத்திராதிபதியவர்கள் அறிவிக்கிறதென்னவெனில்,

"சைவசமயிகள்" எனக் கையொப்பம் வைத்த ஓர் கடிதத்தை எங்களிடம் வரவிட்டுக் கங்கைநதி முதலிய ஸ்தலங்களிற் றீர்த்தமாடுவது புண்ணிய பலாபலனைக் கொடுக்குமென்பதற்கத்தாட்சியாகப் பிரதானமாய இரண்டு மூன்று திருட்டாந்தங்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவைகளில், ௧வது முற்காலங்களிலிருந்த க்ஷத்திரியராசாக்களும் பிறரும் அப்படிச் செய்தார்களென்றும், ௨வது அப்படிச் செய்வது தருமமென்று தங்களாகமங்களிற் சொல்லியிருக்கின்றதென்றும், ௩வது எங்கள் அதியுத்தம ராக்கினியவர்கள் தமது பாலகனுக்கு யோர்தான் நதியின் றீர்த்தத்தை மொள்ளுவித்ததால் ஞானஸ்நானம் பண்ணுவித்ததினால் தீர்த்தமாடுவதில் ஏதோ புண்ணியப் பயனுண்டாமென்பதற்கிதொரு அத்தாட்சியாக இருக்குமென்றுந்தான். இம்மூன்று காரியங்களுக்கும் ஒவ்வொன்றுக்கு நாங்களுரைக்குமுத்தரமென்னவெனில்,

௧வது, முற்காலத்தில் இருந்தரசாண்ட இராசாக்களும், பிறரும் கங்கா நதியிற் றீர்த்தமாடுவதற்கு யாத்திரைபண்ணினதுமன்றி, மற்றுந் தங்கள் கிரியாங்கங்களுக்கும் இவ்விதத் தீர்த்தத்தைக் கொண்டு வரும்படிக்கு வெகுபணத்தைச் செலவிட்டார்களென்றுஞ் சொல்லுகிறதிலே, அப்படிச் செய்தவர்களுக்கு எப்போவாகுதல் அது உபயோகமாயிருந்ததென்பதற்கு அடையாளமாக வோரத்தாட்சியையுங் காணோம். ஆனாலுஞ் செய்கையைப் பார்க்குமிடத்தில், தற்காலத்திலுள்ளவர்களைப் போல முற்காலத்துள்ளவர்களும் அறிவீனமையுள்ளவர்களாய் இருந்தார்களென்பதற்கு இதே ஒரு போதுமான திருட்டாந்தம். ௨வது தீர்த்தமாடுவதினாற் புண்ணியப் பயன்களுண்டாமென்று தங்கள் வேதத்திற் சொல்லியிருக்கின்றதெனச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களைப் பார்த்து இக்காரியங்களைச் சொல்லுகிற ஆகமங்களெவையென்றும், அவையாரிடத்திருந்து உங்களிடம் வந்ததென்றும் வினவுகிறதற்கு இடமாயிருக்கின்றது. இந்த ஆகமங்களிலுள்ளவைகளை நம்புகிறதற்கென்ன அத்தாட்சியுண்டு? பூருவோத்திலுள்ள பிராமணர்கள் மற்றும் வருணத்தவர்களைப் பார்க்கிலும் தாங்களே மேலான பூதேவரென்பதை நிலைநிறுத்தும்பொருட்டுத் தம் நயத்துக்காக எடுத்துத் தொடுத்துக் கட்டிவைத்த வீண் குசமசக்கையல்லாமல் மற்றும்படியல்லவென்று தாரகையை வாசிப்போரனைவரும் உற்றுணர்ந்து பாரார்களா? இத்தீர்த்தங்களுக்காகக் கொடுபடும் பணமனைத்தும் ஆரவசஞ் சேருகுதென்று "சைவசமயிகள்" எப்போவாகுதல் சிந்தித்திருந்ததுண்டா? தீர்த்தமாடுவதில் மகா புண்ணியமிருக்குதென்று சொல்லிச் சனங்களை மயக்குகிற குருக்கள் பிராமணர்கள் முதலியவர்களுடைய அபிப்பிராயமென்னவென்பதைச் சனங்கள் தேர்ந்துபார்க்கிறார்களா? இதினாலும், இதைப்போலொத்த மற்றும் மதியீனமான கிரியைகளினாலும் உண்டாகும் பயனென்னவெனில் அவை பிராமணர்களுடைய வயிறுகளைச் சோற்றினால் நிரப்பி அவர்களுடைய இச்சையை நிறைவேறப்பண்ணுகின்றன. ௩வது யோர்தான் நதியின் றீர்த்தத்தினால் இராக்கினியவர்களின் பாலகனுக்கு ஞானஸ்நானம்பண்ணினது மெய்தான். ஆகிலும் இதைப்பற்றி மேலைச்சஞ்சிகையிற் பேசினாலும் இன்னுஞ் சிலகாரியங்களை இச் சஞ்சிகைவழியாய் எடுத்துப் பேசுவோம். யோர்தானதியின் சலத்திலே புண்ணியமிருக்குதென்பதை அத்தாட்சிப்படுத்தும்பொருட்டு எங்களுக்கு இருவகைத் திருட்டாந்தம் வேண்டியதாயிருக்கின்றது. ௧வது இச்சலத்திலே புண்ணியமுண்டென்று தேவத்தாட்சி வேண்டியிருக்கின்றது. ௨வது இச்சலத்தையநுபவித்த ஆளுக்கு யாதாமொரு நயம் பயங்காணவேண்டியது. இது காரியத்திலிப்படிப்பட்டவோர் திருட்டாந்தமுங் காணோம். ஆகையினாலே, எந்த அறிவாளியும் இதை நம்பமாட்டார். அல்லவென்று, அந்த ஞானஸ்நானச் சடங்கை நடப்பிக்கிறதற்கு உதவியாயிருந்த ஆசாரியர்களும் மற்றும் விஸ்புமார்களும் ஞானஸ்நானங் கொடுபட்ட பிள்ளைக்கு அதினாலே யாதொரு நயமுண்டென்று நம்பினார்களென்று வைத்துக்கொண்டாலும், அது அப்படிப்பயனுண்டென்பதை அத்தாட்சிப்படுத்தாமல், உயர்ந்த உத்தியோகங்களை நடப்பிக்கிறவர்களும் மற்றுஞ் சனங்களைப்போல இவர்களுமறிவிற்குறைவுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதையே அத்தாட்சிப்படுத்துகின்றது. ஆனாலும் அந்தத் தீர்த்தத்திலே யாதொரு பெரும்பேறுண்டென்று நினைத்தார்களென்றதாகவும் நாங் காணவில்லை.

ஆகிலும் "கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம் பெற்ற நதியின் (யோர்தானின்) தண்ணீரிது தானென்ற ஒற்றுமையைக் காணும்பொழுது தெய்வபக்தியுள்ள ஒருவன் சந்தோஷமடையக்கூடும்" என்று மேலைச் சஞ்சிகையிற் காட்டினோம். இதற்கத்தாட்சியாக, சில பிள்ளைகள் தங்கள் தங்கள் பெற்றோர் அணிந்து வழங்கிவந்த ஆபரணங்களை எடுத்துப் பத்திரம்பண்ணிப் பிற்காலத்திற் றாங்களே அணிந்துகொண்டு வருகிறதுமல்லாமல், விலைபெற்ற மற்றும் மற்றும் அணிகலன்களிலுமிவைகளே மெத்த விலைபெற்றதென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஏனிப்படிச் சொல்லுகிறார்கள்? ஏனெனில், இது எங்களுடைய பெற்றோர் அணிந்துவைத்துப் போன அணிகலனல்லவோவென்று தங்கள் மனதிற்கொள்ளுஞ் சந்தோஷத்தினாலே அல்லவோ? அந்த ஆபரணங்களை அணிவதினாலே யாதொருநயமுமில்லை. அந்த ஆபரணங்களிலே யாதொரு செயலுமில்லை, அப்படியே யோர்தானதியின் சலத்திலும் யாதொரு மேன்மையில்லவேயில்லை. ஆகிலுங் கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம் பெற்ற நீர் இதுதானென்பதை நினைக்கும்பொழுது சற்றே சந்தோஷமுண்டாகுதேயன்றி வேறொரு பயனுமில்லை.

பின்னை இப்படிப்பட்ட அற்ப சந்தோஷத்துக்காக மெத்தப் பிரயாசப்பட்டு வெகு பணங்களையுஞ் செலவழிக்கவேண்டியதென்னவென்றொரு கேள்விகேட்டால், அதற்கு நாங்கள் சொல்லும் மறுமொழி—அந்த நதியின் தண்ணீரை மொள்ளுவிக்கிறதற்கெவ்வளவு பணஞ் செலவழிக்கப்பட்டதென்பது எங்களுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட அற்பசந்தோஷ அனுபவங்களுக்காக அநேகம் பணங்களைச் செலவழிக்கக் காணும்பொழுது நாங்களுஞ் ச

ற்றே ஆச்சரியப்படுகிறோம் ஆனாலும் வீண்காரியங்களிற் பணத்தைப் பலமுறையுஞ் செலவிடுகிறது இராசாக்களுக்கும், மற்றும் பிரபுக்களுடைய சுயதன்மையென்றனைவருமறிவார்கள்

மேற்கூறிய காரியங்களைத் தாரகையை வாசிப்போரிடம் விட்டு அவர்களை நாம் கேட்கிறதென்னவெனில், தீர்த்தமாடுவதினால் வரும் பலனென்ன? யாத்திரைபண்ணித் தீர்த்தமாடினவர்களாராகுதல் நயப்பட்டதுண்டா? அவர்கள் கிம்றஸ்தரா? நீதிநடுவுள்ளவர்களா? தருமசாலிகளா? பொய், வஞ்சனை, கபடம், காமவிகாரமுதலிய துராசைகளை விட்டோய்ந்தார்களா? சற்குணமுள்ள புருஷரா? நற்குணமுள்ள பிதாக்களா? அகதிகளுக்குத் துணைசெய்ய விருப்புற்றவர்களா? பராபரனுக்குப் பயப்படுகிறவர்களாய்விட்டார்களா? துற்செய்கையை விட்டோய்ந்து நற்செய்கையை நாடவெத்தனப்பட்டுவிட்டார்களா? இவைகளெல்லாவற்றுக்கும் மறுமொழி இல்லை, இல்லை, இல்லை, இல்லை, பின்னைக் காரியமெப்படிப்போகின்றது எப்படியெனில், யாத்திரைபண்ணித் தீர்த்தமாடினவர்கள் திரும்பிவருகிறபோது, முன்னிருந்ததிலும் அகந்தை, ஆகாமியம், இறுமாப்பு, நாணயத்தப்பு முதலானவர்களுடன் வருகிறார்களென்று இவ்வூர்ப்பிறந்த எங்கள் சிநேகிதர்கள் பேச அநேகமுறை காதாரக்கேட்டிருக்கிறோம் பின்னை அப்படிப்பட்ட செய்கையின் பயனெங்கே? இப்படிப்பட்டவர்களுக்காக நாங்கள் மெத்த இரங்குகிறோம். திருவிழா முதலிய சடங்கு நடக்கும் இடங்களுக்குடன்பட்டுப்போய் வருகிறவர்களுடைய நடையானது வரவரக் கேடாய்ப்போகின்றது ஒரு பழத்தினால் அந்த மரத்தின் தன்மையை அறியக்கூடாதா? எட்டி மரத்தில் மாதாளம் பழமும், மாதாளமரத்தில் எட்டிப் பழமும் பறிக்கக்கூடுமா? புத்திமான்களென்றதாக எண்ணிப் பேசுகிறோம் தீமையை விட்டு நன்மையைச் செய்யப் பிரயாசப்படுங்கள்.

காகிதப் பிரத்தியுத்தரம்

[Answers to Correspondents]

கொழும்பிலிருந்து (True Christians) என்கைகையொப்பம்வைத்த கடிதமும், யாழ்ப்பாணம் ஓர்மாணாக்கன் கடிதமும், கையொப்பமில்லாத வேறோர் கடிதமும், கொழும்பிலிருந்து (P Cangamanadei pully) அவர்கள் அனுப்பின கடிதமும், கொழும்பிலிருந்து ஓர் சொப்பஸ்கிறைபர் (C S) அனுப்பின கடிதமும், ஆதிநாராயணசெட்டியார் சிவப்பிரகாசமவர்களனுப்பின கடிதமும், கொழும்பில் வேதப்பிரியன் அவர்கள் அனுப்பின கடிதமும், (Peter Fernando) அவர்கள் அனுப்பின கடிதமுங் காலாதீதமாய் வந்தபடியால் இச்சஞ்சிகையிற் பிரசுரஞ்செய்யாமல் விடுகிறோம்

A communication from "The Rocks on the P. R shore" has also been received

---

புதினச் சங்கதிகள்.

யாழ்ப்பாணம்

மரணசங்கதி—வட்டுக்கோட்டை சாஸ்திரப்பள்ளிக்கூடத்தில் முதலாம் வகுப்பிற்படித்த (John Flood Edmonds) அல்லது இராமுப்பிள்ளை கதிரேசபிள்ளை காலஞ்சென்று போய்விட்டதற்காக மெத்த விதனப்படுகிறோம் ஏனென்றால், இந்தப்பிள்ளையுடனே படித்த சிலர் நேற்றைக்குத் தாங்கள் படித்த கல்விகளிற் கடைசியாகப் பரிசோதிக்கப்பட்டு நடத்தைக் கடதாசியும் வாங்கிச் சகலருஞ் சந்தோஷித்துப் பள்ளிக்கூடம் விட்டு அவரவரே நிசமித்த வேலைகளிற் போயிருக்கிறார்கள். கர்த்தா தந்தார் கர்த்தரெடுத்தார் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கது

கொழும்பு.

கொழும்பில் கன்னூரத் தெருவிலொரு வீட்டில் பணிவிடை செய்துகொண்டிருந்த ஒரு சிறுக்கி தண்ணீர் அள்ளப்போனபோது சடுதியாய் விழுந்துவிட்டாள் அதின் அதிற்சியைக் கேட்டு ஒருபொடியன் போய்ப் பார்த்தபொழுது அவள் தண்ணீருள்ளே அமிழ்ந்துகிறதைக் கண்டு சத்தமிட்டலறச் சனங்கள் கூடி அவளைக் கரையேயெடுத்துவிட்டார்கள். அவளைக் கரையேயெடுக்கும்போது அவளுக்கு நினைவில்லை

சீனம்

சீன தேசங்களிலுள்ள பட்டினங்கள் அனைத்திலும், யாபார முஸ்திப்பில் மிகவும் போய்போந்திருந்த சங்கேயா என்ற பட்டினத்தை இங்கிலிஸ்காரர் தங்கள் வசமாக்கிக்கொண்டார்களென்ற சமாச்சாரத்தைச் சுருக்கித் தானைகளுக்குத் தளகர்த்தனும், அதியுத்தம இராக்கினியவர்களுக்குத் தானாபதியுமாகிய என்றிபொற்றிஞ்சர் எழுதிச் சீனதேயத்தில் இங்கிலிஸ்காரரைச் சார்ந்த குடிசனங்களுக்கு அறிவிக்கிறதென்னவென்றால்,

நாங்கள் "சப்பு" என்ற பட்டினத்திற் செய்த பிரகாரமாக இவ்விடத்திலுள்ள மோர்சாலையும், சேவகருறைய ஸ்தானங்களையும் குண்டு மருந்து சன்னமுதலிய படைத்தளபாடங்கள் வைத்திருந்த வீடுகளையும், இன்னும் பலவிதமேலான கட்டிடங்களையும் இடித்தழித்தெங்கும் நிர்மூலமாக்கினபிறகு, வைகாசி மாதம் (உக)தேயதி நாங்களிருந்தவூரைவிட்டகன்று (உசு)தேய்தி அளவில் வேறொருதீவுக்குவந்து அவ்விடத்தில் ஆனிமாதம் (யரு)தேயதி அளவுந் தரித்துநின்றபொழுது சீனரைச்சார்ந்த அதிகாரிகள் நாங்களாற்றின வழியேபோகாமல் மறித்துத்தூரத்தும்படி ஆற்றை வழைய மதில்களையெழுப்பினார்கள். பிறகு நாங்கள் யகூ தேயதி காலமே எழும்பிக் கப்பல்களையும் நங்கூரந்தூக்கிச் சீனரங்கங்கே பதிவிருந்த தானத்திற்சென்றபொழுது சீனர் பீரங்கிகளை விட்டார்கள் அப்படியே நாங்களும் அவர்களுமோயாமலிரண்டுமணித்தியாலமளவுக்குப் பீரங்கிகளைவிட்டதினால், சீனர் நின்றநிலைகொலைந்து தளர்ந்து முதுகுகாட்டியோடி அப்புறம்கலவாரம்பிப்பதை நாங்கள்கண்டு அவர்களோடி அப்புறப்பட்டு மறுபடியும் போருக்காரவாரம்பண்ணு முன்னமே அவர்களையொருபிடியாகத் துரத்திவிட்டு அவர்கள் நின்றவிடத்திலவிட்டோடிப்போன (உஅ) துப்பாக்கிகளை நாங்கள் கண்டெடுத்துக்கொண்டோம்

கப்பலேறிக் கடலில் நின்று யுத்தம்பண்ணினவெங்களில் (உ)பேர் கொல்லப்பட்டதுமன்றி (உரு)பேர் பாடானகாயமும் வாங்கிக்கொண்டார்கள் அப்படியிருந்துங் கரையில் நின்றாரம்பித்துப் போர்பண்ணினவர்களுக்கொருவர்க்கேனும் யாதொருவிக்கினங்களுஞ் சம்பவிக்கவில்லை ஆனாலும், சீனர்பண்ணியிருந்த அடுக்கின வலிமையையும், அவர்கள்விட்ட பீரங்கியின் திறமையையுங் காண்கும்பொழுது, எங்களைச்சார்ந்தவர்களில் மடிந்து நாசமாய்ப்போனவர்கள் மிகுதியாயிராதது ஒரு பெரிய அற்புதம்போலே இருக்கின்றது. இந்தவேளைகளில், சீனரில் (அய)பேர் கொல்லப்பட்டதுமன்றி இவ்வளவுபேர் பாடானகாயமட்டார்கள்

ஆனி மாதம் (யஎ)ந்தேயதி அளவில் சிலசிறுகப்பல்களை விட்டாறின் வழியாய்ப்போய்ச் சீனர்விட்டோடிப்போன (ருரு) துப்பாக்கிகளையெடுத்துக்கொண்டோம் (யகூ)தேயதியளவில், சங்கேயா பட்டினத்துக்கருகே கட்டியிருந்த போர்ச்சேவகருடைய வீட்டைவளைந்து நெருக்கியடித்து அவர்களையு முதுகுகாட்டியோடப்பண்ணி அவ்விடத்திலிருந்த (சஅ)பீரங்கிகளையுமெடுத்துக்கொண்டு சீக்கிரமாகப் பட்டினத்தையும் பிடித்துக்கொண்டு அவ்விடத்தில் அரணிப்பாய்க் கட்டப்பட்டிருந்த பிரதான கட்டிடங்களையும் நிர்மூலமாக்கித் தகர்த்துத் தானியங்கள் வைத்திருந்த பண்டகசாலையையுஞ் சனங்களுக்குத்தானே கொடுத்துவிட்டோம் (உய)தேயதியளவில் நாங்களாற்றின்வழியாக (உ) இருப்புக் கப்பல்களையுமவிட்டுக்கொண்டு சங்கேயா என்ற பட்டினத்துக்கைம்பது மயில்தூரத்துக்கப்பால் சென்று சீனருடைய பாரமான (ச) பீரங்கிகளையுங் கண்டெடுத்துக்கொண்டு அவர்கள் போருக்கெத்தனமாய்க்கட்டிவைத்திருந்த இரண்டுமதில்களையுமிடித்தழித்து நிர்மூலமாக்கித் தகர்த்தோம்

சீனரிடத்திலிருந்து நாங்கள் பறித்துக்கொண்ட துவக்குகளெல்லாங் கூடியாக (கூாச)அவைகளில் (எச) பித்தளைத்துவக்குகள். அவைகளிற் சிலதில் "மிலேச்சரைக் கீழ்ப்படுத்தி அடக்குகிறவன் என்றும், பிரதானமாய் வேறொருபெரிய துப்பாக்கியில் "மிலேச்சர்" என்றுமெழுதியிருந்தது

பிராஞ்சுதேசத்து இராசகுமாரனுடைய மரணம்.

பிராஞ்சுதேசத்து இராசகுமாரனும், பட்டத்துக்குச் சுதந்தரவாளியுமாகிய ஒர்லியான்ஸென்பவர் சாரிபோகும்பொழுது, தவறிக் கீழேவிழுந்து மண்டையுடைந்து சிறிதுகாலம் அதுவே வியாதியாயிருந்து இறந்துபோனபடியால், பிராஞ்சுதேச முழுமையுந் துக்கசாகரத்திலமுழ்ந்தியிருக்கிறதென்று அவ்விடத்துப் பத்திரிகையினாலே அறிகிறோம்

SUMMARY OF NEWS.

COLOMBO.

Resignation of Mr Anstruther—It was rumoured a few days ago that the Hon'ble Mr Anstruther had been appointed Secretary to the Government of Madras, but it is hardly necessary for us to remind our readers that the rules of the E I Company's service preclude such an appointment We, however, understand that the Colonial Secretary has intimated his intention to resign in September next year, when, it is said, Mr Wodehouse will be his successor, as Mr Turnour, it is thought, will not return to Ceylon in consequence of his Coffee planting operations turning out so exceedingly well *Col Obs Sept* 22

CALCUTTA

From the Madras Athenæum of September 22

DEATH OF MISSIONARIES BY CHOLERA —"A short time back we announced the establishment of a new Mission amongst the Hill tribes of central India The brethren composing the Mission were Germans A letter appeared in the Christian Observer about two months ago, in which great promise of usefulness was held out alas ! how frail are all the plans, and how evanescent the hopes of man, *all the brethren we learn, five in number*, have in the course of a few days been carried off by cholera In one short week, the whole Mission has been entombed Verily the judgments of God are abroad in the land

Reader, whatsoever thy hand findeth to do, do it with all thy might "

DISASTER TO H M 62D REGIMENT—Intelligence reached town the day before yesterday of a very serious and distressing disaster having befallen the Right Wing of H M 62d Regt, who were proceeding by water to Dinapore It appears that on the 5th instant when the detachment were off Bhaugulpore they encountered one of those terrific gales which are seldom met with except in a tropical climate, swamping the whole of the boats and leaving only twenty or thirty men, out of four hundred and eighty to relate the melancholy tale

We believe the storm came on in the middle of the night, and at once tore all the boats from their fastenings —*Englishman Sept* 10*th*

More recent accounts state the loss as given above to be considerably overrated —*Editor*

AFFGHANISTAN

LATEST FROM JELLALABAD—The latest intelligence from Jellalabad is to the 20th, when the most active preparations were in progress for the advance on Cabul—Would it had been ordered three months ago —The 2d Brigade with General Pollock's and the Divisional Head Quarters were to move forward on the 20th August Brigadier Wild with two thirds of the 3d Brigade, and the hordes of Seikhs were to hold the Khyber, Cavalry and a good Artillery being united to his force at Dhukka, one Regiment from the 3d and one from the 4th Brigade will garrison Jellalabad Thus the 1st the 2d, and part of the 4th Brigades of Infantry, two Regiments of Cavalry and a good Artillery will be left available for Cabul The Seikhs now on the left bank of the river will be pushed on to protect our depot at Gundamuck When the troops advance, General Nott will besiege Ghuzni, and if he succeeds in capturing it will push on to Cabul, and General Pollock, on whom the supreme control devolves from the moment General Nott reaches Ghuzni, will co-operate from Gundamuck When affairs are settled both divisions of the army will retire through Jellalabad and Peshawur It is understood that the objects of the campaign comprise the surrender of Ghuzni to General Nott, or its capture, the surrender of all prisoners European and native, there and in its vicinity, and the hoisting of the British flag on its citadel, the occupation of Cabul, possibly by General Pollock's force, the hoisting of our flag on the Bala Hissar, the surrender of all the prisoners, guns, trophies, together with Amenoolls and Akhbar Khan, and restoration of Dost Mahomed and all the captives with us It is expected that both armies will be prepared to quit Cabul by the 1st of October next —Letters from Jellalabad say, that the Kuzzilbashes on hearing of Generals Nott and Pollock's advance, rose *en masse* and seized Akhar Khan, and prevented his removing the prisoners from the Bala Hissar We are also informed through the same channel that the prisoners will be delivered over to us the moment our Troops arrive at Cabul

CHINA

FALL OF SHANGHAI —The *Water Witch* from China the 27th ult arrived here on the evening of the 20th, and has brought intelligence of further successes on the part of the Expedition, the most important of which is the capture of the city of Shanghai, a place of very extensive commerce

The substance of these operations is give in the following official circular which we copy from the *Canton Register* of the 26th ult

CIRCULAR —TO H B M'S SUBJECTS IN CHINA --The gratifying duty of announcing further highly important successes of H M combined forces, again devolves on H M Plenipotentiary in China

After the necessary delay in destroying the batteries, magazines, founderies, barracks, and other public buildings, as well as the ordnance, arms, and ammunition, captured at Chapoo, the troops were re embarked, and the expedition finally quitted that port on the 23d of May, and arrived on the 29th off the Rugged islands, where it remained until the 13th of June, on which day it crossed the Bar, which had been previously surveyed and buoyed off, into the Yang ze-keang river, to the point where the river is joined by the Woosung,

At this point the Chinese authorities had erected immense lines of works, to defend the entrances of both rivers, and seem to have been so confident of their ability to repel us, that they permitted a very close *reconnoisance* to be made in two of the small steamers by their excellencies the Naval and Military commanders-in-chief on the 14th instant, and even cheered and encouraged the boats which were sent in the same night to lay down buoys to guide ships of war, to their allotted positions of attack

At day light, on the morning of the 16th, the squadron weighed anchor, and proceeded to take up their respective stations, which was securely done when the batteries opened, and the cannonade on both sides was extremely heavy and unceasing for about two hours, that of the Chinese then began to slacken, and the seamen and marines were landed at once, under the fire from the ships, and drove the enemy out of the batteries before the troops could be disembarked and formed for advancing

Two hundred and fifty three guns, (42 of them brass) were taken in the batteries, most of them of heavy calibre, and upwards of eleven feet long The whole were mounted on pivot carriages of new construction, and it was likewise observed that they were fitted with bamboo sights

The casualties in the naval arm of the expedition amounted to two killed and twenty five wounded, but the land forces had not a man touched It appears almost miraculous that the casualties should not have been much greater considering how well the Chinese served their guns The "Blonde" frigate had 14 shot in her hull, the "Sesostris" steamer 11, and all the ships engaged more or less The loss on the part of the enemy is supposed to have been about 80 killed, and the proportionate number wounded

On the 17th of June some of the lighter vessels of the squadron advanced up the Woosung river and found a battery deserted, mounting 55 guns, of which 17 were brass

On the 19th two more batteries close to the city of Shanghai, opened their guns on the advanced division of the light squadron, but on receiving a couple of broad sides, the Chinese fled and the batteries which contained 48 guns (17 of them brass) were instantly occupied, and the troops took possession of the city, where the public buildings were destroyed and the extensive government granaries given to the people

His Excellency the Admiral proceeded up the river Woosung with two of the small iron steamers on the 20th instant about 50 miles beyond the city of Shanghai, and in this *reconnoisance* two additional field works, each mounting four heavy guns, were taken and destroyed, bringing the total of ordnance captured in these operations up to the astonishing number of 304, of which 76 are of brass, and chiefly large handsome guns, many of the brass guns have got devices showing that they have been cast lately, several of them have Chinese characters signifying "the tamer and subduer of the barbarians," and one particularly large is dignified by the title of the "barbarians "

The Chinese high officers and troops are supposed to have fled in the direction of the cities of Soochow Hang chow-foo, and Nanking The same high authorities have made another indirect attempt to retard active operations by an avowed wish to retreat, and have also given a satisfactory proof of their anxiety to conciliate by the release of 16 of H M's subjects European and Natives of India who had been kidnapped, but as the overtures were not grounded on the only basis on which they can be listened to they were met by an intimation to that effect

GOD SAVE THE QUEEN

Dated on board the Steam-frigate *Queen*, in the Yang-tze-keang River [off Woosung] the 24th day of June, 1842 (Signed)

HENRY POTTINGER,
Her Majesty's Plenipotentiary

OVERLAND INTELLIGENCE

MADRAS HERALD OFFICE 10 P M *Sept* 12, 1842

The Overland Mail by Express reached the Presidency at 8 P M this evening, and we have pleasure in laying before our readers those matters of interest which stand out as important among the mass of intelligence which has reached us The event which above all others presents itself to us as pregnant with deep and melancholy interest is the death of His Royal Highness the Duke of Orleans The afflicting circumstances attending his decease will be read by all with great concern, whilst we cannot but join in the natural exclamation of the Queen of France "what a dreadful misfortune has fallen upon our family, but how much greater is it for France "

As we shall have occasion to dwell on this subject at some length hereafter as a question affecting our political relations to a large degree, we shall

merely at this moment direct our reader's attention to the details of the event itself.

There are few matters of importance which arrest our attention as communicated by this mail. Some explanations of an important character by Sir Robert Peel in reference to Lord Auckland's Indian Policy will form a subject for important considerations hereafter. We have nevertheless given in abstract of these, and it will at once inform our readers of the view taken by the Home government of that nobleman's most injudicious rule. Sir Robert Peel in reference to this question states fully the want of confidence which *his* government reposed in Lord Auckland. He observed, that supposing the government had been disposed to avail themselves for a certain time of the services of his lordship, it could not be inferred from thence that the government, by so acting, made themselves parties to the policy pursued by him.

This subject appears to form the principal feature of interest, in our home politics. We observe that a bill has been introduced into the House of Commons by Sir Robert Peel for the Protection of the Sovereign's person. We rejoice to see that in the sentence to be pronounced upon all those who may hereafter attempt the life of the Sovereign, a good whipping forms a chief item, a punishment which we doubt not will stop all silly boys for the future from bringing themselves into unenviable notoriety, by endeavouring to frighten Her Majesty or her illustrious consort.

From the London Mail August 4

FRANCE

DEATH OF H R H THE DUKE OF ORLEANS,

Heir to the Throne of Franc

It is our melancholy task to announce to our readers the death of his Royal Highness the Duke of Orleans, occasioned by a deplorable accident.

The details of this calamity are as follows —On the 13th July, at twelve o'clock, the Duke of Orleans was to leave Paris for St Omer, where he was to inspect several regiments intended for the corps of operation on the Marne. His equipages were ordered, and his attendants in readiness. Every preparation was made at the Pavilion Marsan for the journey, after which his royal highness was to join the Dutchess of Orleans at Plombieres. At eleven the Prince got into a carriage intending to go to Neuilly to take leave of the King and Queen and the royal family. This carriage was a four wheeled cabriolet or caleche, drawn by two horses and driven by a postilion. It was the conveyance usually taken by the Prince when going short distances round Paris. He was quite alone not having suffered one of his officers to accompany him. The Duke in returning from Paris was accustomed to take the avenue leading from the Porte Maillot to his residence of Villiers, and from thence obtained entrance to the Park of Neuilly by the gate which is opposite to this avenue, but on this occasion his royal highness wished to go by the road which crosses Sablonville obliquely to the old Neuilly road and then enter the park by the grand gate. Having been driven very fast, the horses, on reaching the Porte Mailot became excited, and, in spite of all the exertions of the postilion took the road to which they were habituated instead of the diagonal road the Prince intended to go. Finding themselves approaching their stables, the animals became still more eager, and the horse the boy rode kicked out several times and struck the crossbar which from the nature of the carriage came rather close to his haunches. The Duke stood up, and fancying that the postilion had lost all command of his horses called to him. The boy replied that he still held them, and in fact the hand horse was perfectly temperate, the lad firm in his seat, and pulling at the bridle. Not succeeding in getting them into a trot, the Prince who was extremely expert in gymnastic exercises, attempted to do what he had frequently practised before while his carriage was moving, but probably not with the same velocity. He put one foot on the step, and then sprang to the ground. The Prince touched the road with both feet, but the impulse was so great that he staggered and fell with his head on the pavement. The effect of the fall was terrible, for his royal highness remained senseless on the spot. Persons instantly ran to his assistance from, opposite Lord Seymour's stables. In the mean time the postilion succeeded in getting command over his horses, turned the carriage round and came to the door of the house where the Prince was lying. His royal highness never recovered his senses. He was placed on a bed in a room on the ground floor and surgical assistance was sent for. Dr Baumy a physician in the neighbourhood, was the first who came. He bled the royal sufferer, but this produced no good effect. The news of the accident was conveyed to Neuilly. The Queen immediately set out on foot, and the King followed her. His Majesty was to be at Paris at twelve o clock, to hold a council of ministers. His carriages which were ready soon overtook their Majesties, who entered them with Madame Adelaide and the Princess Clementine. They proceeded to the house into which the Duke of Orleans had been taken. Dr Pasquier, jun, the Prince Royal's first Surgeon, had just arrived. Soon afterwards the Dukes d'Aumale and Mountpensier came from Courpevoie and Vincennes. Dr Pasquier was very soon compelled to announce that the case was of a most serious nature, for every minute the evil seemed to increase. A few words, pronounced by the Prince in the German language, gave a momentary hope, but this, as quickly vanished. Marshal Soult, Marshall Gerard, the Ministers of Justice, Foreign Affairs, the Interior, the Marine, Finances, and Public Works, arrived, and were admitted into the death-bed chamber of the Royal Duke. The Chancellor, the prefect of Police, Generals Pajol and Aupik with officers of the household of their Majesties and princes, hastened to the spot, and remained outside the house in a space kept clear by sentinels stationed around. At two o'clock, as the case became more and more desperate, the King sent for the Dutches of Nemours, who had remained at Neuilly. She came attended by her ladies in waiting. No pen can paint the afflicting scene presented by the chamber when the Dutchess the Nemours came, and added her bitter tears to those of the rest of the family. The Queen and princesses were on their knees by the bedside praying, and bathing with their tears the hands of their departing son and brother, so intensely beloved. The Princes were speechless, and sobbing almost to suffocation. The King stood by, silent and motionless, watching with painful anxiety every fluctuation in the countenance of his expiring heir. The cure of Neuilly and his clergy immediately obeyed the King's summons, and came to Sablonville. Under the influence of powerful medicaments the agony of the dying Prince was prolonged. Life withdrew but very slowly, and not without struggling powerfully against the utter destruction of so much youthful strength. For a moment respiration became more free, and the beating of the pulse was perceptible. As the slightest hopes are grasped at by hearts torn with despair this scene of desolation was interrupted by a momentary calm, but the gleam soon passed away. At four the Prince showed the unequivocal symptoms of departing life and in another half hour he rendered his soul to God, dying in the arms of his King and father, who at the last moment pressed his lips on the forehead of his lost child, hallowed by the tears of his afflicted mother and the sobs and lamentations of the whole of his family. The Prince being dead, the King drew the Queen into an adjoining room, where the ministers and marshals assembled, threw themselves at her feet and endeavoured to offer her consolation. Her Majesty exclaimed, "what a dreadful misfortune has fallen upon our family, but how much greater is it for France!" Her voice was then stopped by her sobs and tears. The King, seeing Marshal Gerard absorbed in grief, shook his hand pressed it with an expression showing his sense of his bereavement but at the same time a firmness and magnanimity truly royal. The mortal remains of the Prince were placed on a litter, covered with a white sheet. The Queen refused to get into the carriage, declaring her resolution to follow the corpse of her son to the chapel at Neuilly where she wished it to be carried. Consequently a company of the 16th Light Infantry was hastily marched down from Courbevoie to line the procession on each side, and thus those brave men, who had shared with the Prince Royal in the dangers of the passage of the Iron Gates and the heights of Mouzaia in Africa, served as the escort of his now lifeless body. Several of the men wept. All called back to their mind the brilliant valour with which the Duke of Orleans had assailed the enemy, and at the same time the mild and delicate beneficence with which he had ever tempered the necessary rigour of command. At five o clock the mournful processing towards the chapel at Neuilly. General Athalin walked at the head of the bier, which was carried by four non commissioned officers. Behind followed the King, Queen, Princess Adelaide, Dutchess de Nemours, Princess, Clementine, Duke d Aumale, and the Duke de Montpensier. Then came Marshals Soult and Gerard, the ministers, the general officers, the household of the king and princes and an immense number of other persons. The sad and solemn procession moved along the Avenue de Sablonville, and crossing the old Neuilly road, entered the royal park, traversing its whole length to the chapel. Here the Majesties, and princes and princesses after postrating themselves before the altar, left their beloved child and brother under the guardianship of God.

[To be continued]

The *Courrier de Lyon* announces a serious disturbance to have broken out at Mantua between the Jews and the Christians. The Austrian Government was obliged to interfere by force, but the people tore up the pavement and attacked the soldiers with stones, who fired on the multitude, killed fifty persons, and wounded many. The disturbance still continued, and no Jew dared make his appearance in the streets. The Government was obliged to march troops from Verons and Milan.

Skirmishes have taken place upon the Turco Persian frontier, between the border detachments of the Shah and Sultan. The Porte has concentrated a small armed corps in Thessaly.

The *Augsburg Gazette* asserts that Sir Stratford Canning, finding himself unable to carry out his views of coercion against the Turks in Syria, has determined to offer his resignation as the sole way of backing out of his position.

Accounts from Port au Prince of the 17th June, had been received at New York. They contradict the account previously received of a rebellion having broke out in St Domingo. President Boyer was seriously ill, and not expected to recover.

CONTENTS —அட்டவணை.

Historical sketch of the Pandian kingdom	229	பாண்டிவளநாட்டின் சரித்திரக் குறிப்பு	229
Life of Mohammed	ib	மகமதுவின் சரித்திரம்	ib
Missionary Enterprises in the South Seas	230	தென்சமுத்திரத்தில் நடந்த சங்கதி	230
Communications	231-233	கடிதங்கள்	231-233
The Reindeer	ib	ஓர்வகை மான்	ib
Auspicious occurrences	235		
Cural	ib	குறள்	235
Hints on the Theory and Practice of Gardening	236	பூமொழி-பஞ்சாங்கம்	236
Panchangam	ib	பத்திராதிபதியவர்கள் குறிப்பு	237
Gardener's Calendar for Oct.	237	காகிதப்பிரத்தியுத்தாரம்	238
Answers to correspondents	238	புதினச் சங்கதிகள்	ib.
Summary of News	ib		

Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.

உதயதாரகை.—MORNING STAR.

Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter payable in advance.

௨ புத். சஞ்சிகை. ௨௰] ௲௮௱௪௰௨ ௵ ஐப்பசி. ௨௰, தேயதி வியாழக்கிழமை, Thursday, October 20, 1842. [Vol. II No. 20.

பாண்டிவள நாட்டுச் சரித்திரக் குறிப்பு.

Historical sketch of the Pandian Kingdom

(Continued from page 229.)

திருமலை நாயகனுடைய துரைத்தனமானது வெகு காலம் நடந்தது. ஒரு சாதனத்திலே (௪௰) வருடமென்றும், மற்றொன்றில், (௫௰) வருடமென்றுஞ் சொல்லியிருக்கின்றது. ஆகையினாலே நாம் குறித்த பட்சங்களுக்குப் பார்த்தாலும், (௲௬௱௫௯) வருடம் வரைக்கும் அவன் துரைத்தனம்பண்ணினதாகக் காண்கின்றது. இந்த வேளையிலே இவன் குமாரனாகிய வீரப்பனென்கிறவன் இவன பட்டத்துக்கானான். இவன் எப்பேர்க்கொத்தவனென்றால், மிகவும் பலவீனமுள்ளவனும் சோம்பற்குணமுடையவனுமாயிருந்தான் ஆனபடியினாலே, காந்திதேவநரநாராயணனென்கிற வெகு சுறுசுறுப்புள்ள இராசா இவனுடைய விசாரணைக்குட்பட்டுவந்த மைசூர் தேயத்தவர்களை வரவொட்டாமற் பண்ணிக்கொள்ளுகிறதற்குச் சக்தியில்லாமற்போயிற்று. இப்படித் துரைத்தனம்பண்ணிக்கொண்டிருந்த காலத்தில் மேற்படி மைசூர், மதுரை நாயகனிடத்திலே மேற்கேயிருந்த தாலுக்காக்களிலே (Talook) அநேக இடங்களைக் கைக்கொண்டார்கள்

சொக்கநாத நாயக்கன் தன் தகப்பனுடைய பட்டத்துக்கு வந்தான். இவன் கொஞ்ச பிராயமுள்ளவனாயும், யுத்தம்பண்ணப் பட்டவனாயும் இருந்தபடியினாலே இவனுக்கு அண்டை சலிவிருக்கப்பட்ட இராசாக்கள் எல்லாம் இவனொருவனெல்லாருமஞ்சத்தக்கவனாகப் பண்ணுவித்துக்கொண்டான். இவன் முதல் தஞ்சாவூர் (Tanjore) இராசாவாகிய விசயராகவ நாயகன் பேரிலே தண்டெடுத்து அவனைத் தோற்கடித்து அவனைக் கொன்றும், அவனுக்கு மித்திரனாகிய சூரியதேவனென்கிற சேதுபதியைப் பிடித்துக்கொண்டு மேற்படி சேதுபதிக்குப் பங்காளியாகிய கிழவனென்கிறவனை இராமநாதத்துக்குச் சமானனாக்கியும் வைத்தான். அப்புறம் மைசூர் இராசியத்தைத் தன் அதிகாரத்துள்ளாக்கிக்கொள்ளவேண்டுமென்கிறதாய் எத்தனப்பட்டு அதின் பேரில் தண்டெடுத்தான். அந்த யுத்த காரியங்களினாலே தன்னெண்ணங்கள் மாறிப்போய் மதுரைத் துரைத்தனத்திலே அநேக நஷ்டத்துக்கிடமாய்விட்டது

தஞ்சாவூரிலே இறந்துபோன ராசாவின் குமாரனாகிய செங்கமலத்தாசு என்றவன் தான் காவற்பட்டிருந்த திரிச்சிராப்பள்ளிக்கோட்டையிலேயிருந்து தப்பி ஓடிப்போனான் இவன் தப்பித்துக்கொண்டதில் துலுக்கு அதிகாரியாகிய ருஸ்துமுகான் சகாயத்தினாலே நேரிட்டதாகக் காண்கின்றது. அந்த ருஸ்துமுகான் என்றவன் சொக்கநாத நாயகனுக்கு இஷ்டமாயிருந்தது. அவன் சகோதரனாகிய முதளருத்திரப்ப நாயகனுடைய கட்டளைப்படிக்கு அந்தத் திரிச்சிராப்பள்ளித் தானயத்துக்குச் சேனாபதியாயிருந்தான். முதளருத்திரப்ப நாயகன் உதாரியுஞ் சோம்பேறியுமாயிருந்து தன் கைக்குக் கீழிருந்த ராணுவங்களுடைய சம்பளத்துக்காக நியமித்துக் கைப்பணத்தைத் தன் சொந்த உல்லாசங்களிலே செலவழித்துப்போட்டான். அதினாலே அந்த ராணுவங்களுக்கு வெறுப்பு வந்திருந்த சமயம் பார்த்து அந்த ருஸ்துமுகான் அவர்களுடைய அதிகாரத்தினின்று தனியாகவாய்த் திரிச்சிராப்பள்ளிக்குத்தானே துரையாய்விட்டான் இந்தக் காரியத்தினாலே செங்கமலத்தாசு தப்பியோடிப்போனான் செஞ்சிராசாவுக்குச் சீரங்கமட்டும் (Serangam) வரும்படியாய்த் தைரியமுண்டாயிற்று அப்போது மைசூர் இராசா அந்தப் பிராந்தியத்திலே சண்டை தொடுக்கலாயிற்று. இப்படியிருக்கிற சமயத்தில், சொக்கநாதன் தன்னுடைய பூர்வ அதிகாரத்தின் குறியைக் காப்பாற்றிக்கொள்வதற்குப் பிரயாசியாயிருந்தது. அவனுக்கு விரோதிகள் வெகு காலமாய் அதிகாரம் பாராட்டிக்கொண்டிருந்தார்கள் மைசூரார் மதுரைப் பட்டணத்தை முதலாய் (௫) வருடஞ் சுவாதீனம்பண்ணிக்கொண்டிருந்ததாகவும், மேற்படி மைசூரார் தங்கள் ஊருக்குப் போய்விடும்படியாய் ஈரோடுதாராபுரமென்கிற தாலுக்காக்களையும் மைசூரோடே சேர்த்துக் கொடுக்கிறேனென்று அந்தச் சொக்கநாத நாயக்கன் சொன்னான். இந்தப் பிரகாரஞ் சொக்கநாத நாயக்கன் தனக்கு மிகவும் வலிமையுள்ள விரோதிகளில் ஒருவனை நிவாரணம்பண்ணிக்கொண்டு கிழவன் சேதுபதியினுடைய பலமான கும்மக்கினாலே பின்பு செங்கமலத்தாசு என்கிறவனுடைய தண்டுகளை எல்லாந் துரத்திவிட்டு மறுபடியும் தஞ்சாவூரைத் தன் சுவாதீனம்பண்ணிக்கொண்டான். கடைசியிலே ருஸ்துமுகானிடத்திலிருந்து திருச்சிராப்பள்ளியையும் சுவாதீனம்பண்ணிக்கொண்டான். அந்த ருஸ்துமுகானும் சண்டையில் இறந்து போய்விட்டான் பிறகு செஞ்சிராசாவும் தன் இராச்சியத்துக்குப் போய்விட, சொக்கநாதன் தன்னுடைய பிரார்ச்சிதமான தேயங்களிலே சொஸ்தமாயிருந்தான் முன்னோடிப்போன செங்கமலத்தாசு என்கிறவனுக்கு மராட்ட அதிகாரியாகிய எகோஜி என்கிறவனுடைய சகாயங் கிடைத்தபடியினாலே சொக்கநாதநாயகன் தான் சம்பாதித்த தஞ்சாவூரை உடனே இழந்துபோனான். விசயப்பூரில் இருக்கிற துலுக்கர்களுடைய அரசாட்சிக்குட்பட்ட பெங்களூரிலே துணிவுகொண்டு வந்து அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்தவன் அவனை உடனே ஆதரித்தான். இந்த மித்திரர்கள் தஞ்சாவூருக்கு வந்து உடனே மதுரைத் தேசத்தினுடைய தண்டுகளைத் துரத்திவிட்டார்கள் உடனே தஞ்சாவூர் அதிகாரத்தை மேற்படி மராட்டியன் கைக்கொண்டு சொக்கநாதனுக்கு விரோதமாயச் செய்யத்தக்க காரியங்களைச் சோர்வில்லாமற் செய்தான். இந்த இராசாக்களுடனேதானே ஒன்றாய்க்கூடிக்கொண்டு சிவாஜியென்கிறவனை வரவொட்டாமலத் தடுத்தார்கள் இது காரியங்களெல்லாம் நடந்தன. (௲௬௱௭௫)ம் வருடத்துக்கும (௲௬௱௮௰) வருடத்துக்கும் இடையிலே போல வழக்கமாய்ச் சொல்லிக்கொள்ளப்பட்டது. நாங்கள் எழுதிக்கொண்டு வரப்பட்ட சாதனங்களிற் கண்டபடிக்குச் சொக்கநாத நாயகனுடைய அதிகார காலத்துக்கு இது சரிபட்டிருக்கிறதாகவும், மேற்படி சொக்கநாதனுடைய அதிகாரமானது (௲௬௱௮௫) வருடத்திலேயோ (௲௬௱௮௭)ம் வருடத்திலேயோ முடிந்துபோனதாகவும் காணப்படுகின்றது. (இன்னும் வரும்)

Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்

Reflections upon the extraordinary career of Mohammed—Description of his person

மேலைச் சஞ்சிகையிற் பிரசுரஞ் செய்த மகமதுவின் சரித்திரத்தைப் பற்றிய சில பிரதான கவனிப்புகள்.

உலகத்தில் எப்போவாகுதல் சீவித்தவர்களுக்குள்ளே நினைத்த காரியமனைத்திலும் அனுகூலத்தினாலே முடிதரிக்கப்பட்ட எத்தனாகிய மகமதுநபியினுடைய போக்குவரத்து நடையும் இம்மட்டோடே முடிந்தன பெருமைச் சிந்தை அகங்காரமுதலிய துற்குணங்கள் இவரில் உண்டுபட்டதினாலே அரபியருக்குள்ளே வரவரக் கனத்திலும் பணத்திலுங் கதித்துச் சாகுமுன்னமே ஒரு பெரிய மார்க்கத்தை யாரம்பித்து ஒரு பெரிய இராச்சியத்தையும் ஸ்தாபித்து, ரோமை இராச்சியத்தார் (௮௱) வருடக் காலத்துக்குள்ளே வெற்றிகொண்ட பட்டணங்களனைத்திலும் மகமதுநபி அதிகங் குறைந்த (௮௰) வருடக் காலத்துக்குள்ளே தான் கைப்பற்றின பட்டணங்கள் மிகுதியாய் இருந்தன. ஆனாலும் இவர் நடத்திப் பரப்பிவந்த மதாசார ஒழுங்கையும் நடையையும் பார்க்கும்பொழுது அதிகம் விம்மிதங்கொள்ளவேண்டியிருக்கின்றன. ஏனென்றால் இவரொரு அற்பன ஆளாயிருக்கக்கொள்ள இவர் ஆரம்பித்தியற்றிவந்த மேலான காரியங்களைப் பார்க்கும்பொழுது ஆண்டவனதானே இதைச் செய்து நடத்திவந்தாரென்று நாங்கள் நினைக்கவேண்டியது.

மகமது நபியைப் பற்றிய சில சரித்திரத்தின்படி அவரொரு நடுராசியான ஆளாயிருந்தாரென்றும், சடலமடங்கலும் போகத்துக்குச் செம்மையடைந்திருந்ததென்றும், தலை மிகப் பெரிதாயிருந்தாலும் அழகுள்ளதென்றும், உரோமங்கள் அனைத்தும் மெத்த அழுத்தமுங் கருமையுமுள்ளதென்றும், அப்படியேகண்ணு

ங்கருமையுள்ளதென்றும், இன்னும் அவர் சாகிற தறுவாயிலே அவர் வயதுசென்றவராய்ச் செத்தாரென்றொருவருஞ் சொல்லக்கூடாத அவ்வளவு அவருடைய சரீரம் மிகவும் உரத்துத் தடித்ததாயிருந்ததென்றும், கதுப்புகள் மெத்த அகன்றதும் நெற்றி நடித்ததுமாயிருந்ததென்றும், நிமைகள் நீண்டதும் அழுத்தமுள்ளதுமாயிருந்ததென்றும், இவைகட்கிடை ஒருநாம்பிருந்ததினாலே அவரெப்போவாகுதல் முனிவுகொள்ளும்பொழுது அவருடைய கைநாடி நரம்பு எப்போதுமியல்பாயடிக்கிறதைப் பார்க்கிலும் மெத்தச் சுறுக்காய்ப் படபடென்றடிக்குமென்றும், மூக்குச் சற்றே நீண்டுவாயகன்று நீக்கற் பற்களுமாயிருந்தனவென்றும், நீக்கலாயிருந்தாலுமெல்லாம் ஒழுங்காயமுளைத்திருந்தனவென்றுங் காணப்படுகின்றது. அவரெப்போவாகுதல் சிரிக்கும்பொழுது அவருடைய பற்களெல்லாம் முத்துமாலை கோத்ததுபோற் காணப்பட்டன. இன்னும் அவர் வரவரப் பிற்காலங்களிலே மெத்தப் பூதித்தவரானார். அவரெப்பொழுதுந் தன் சரீர சௌக்கியாரோக்கியத்துக்காக வெளியில் வெளிக்கிட்டுலாத்தி மெத்த ஆசாரமுள்ளவராயுமிருந்தார். மகமதுநபி மெத்தப் புத்திமானென்றும், பத்திமானென்றும், நீதியுள்ளவரென்றும், தயாளகுணமுள்ளவரென்றும், பதமையுள்ளவரென்றும், அவரைப் பின்பற்றி அவருக்குத் தொழும்பு செய்துவந்தவர்கள் அவரைப்பற்றி அளவுக்கு மிஞ்சிப் புகழ்ந்துகொள்ளுகிறார்கள். அவருடைய தருமக் குணத்தைப் பார்த்தால் அவர் தமது சமாசாரத்துக்குப் போதுமான பணம் வீட்டில் வைத்துச் செலவழித்து மிச்சமானவைகளை ஆதுலர்க்களிப்பதுமாத்திரமல்ல தான் சாப்பிடுஞ் சாப்பாட்டில் ஒரு பங்கையும் வறியவர்களுக்கென்றே கொடுத்துவிடுவாராம். இதெல்லாம் ஒருவேளை உண்மையாயிருக்கக்கூடும். ஆனாலும் இவையெல்லாவற்றையும் ஏதாவொரு குறித்த நோக்கத்துக்காகச் செய்துவரவுங் கூடும். ஆகையினாலே பட்சமாகவுந் தயவாகவுஞ் செய்கிற செய்கைக்கும் தந்நயம்பற்றி மனமொன்று வாக்கொன்றாய்ச் செய்கிற செய்கைக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்வது மெத்தத் தெண்டிப்பாயிருக்கின்றது. அல்லாமலும் ஒரு தத்துவ பராக்கிரமசாலி ஒவ்வொரு காரியங்களையும் ஒன்றேடொன்றிசையப்பண்ணிக்கொள்ளவுங் கூடும். பெருமைச் சிந்தை சிலவேளைகளிற் பணவாசையை யடக்கிப்போடுகின்றது. நேசம் அல்லது அச்சம் இவ்விரண்டையும் அடக்கி ஆளுகின்றது. ஒரு மனிதன் நீதியுள்ளவனுந் தயாளகுணமுள்ளவனுமிருந்து ஒரு பரிசுத்தவானுடைய செய்கையைப் போற் செய்யவுங்கூடும். இப்படியெல்லாஞ் செய்வது தானொரு தீர்க்கதரிசிக்குரித்தான இலட்சணங்களையும் ஒரு இராசனுக்குரித்தான தத்துவத்தையுமடைந்துகொள்ளுகிற நோக்கமேயல்லாமல் மற்றுமப்படியல்ல. ஆனாலும் மகமது நபியினுடைய எண்ணங்களுங், குணங்களுங், குறிகளுஞ், செய்கைகளும் போதியபடி மேலானவைகளாயிருந்தனவென்று நாங்கள் நினைக்கவில்லை. இன்னும் இந்த எத்தனாகிய மகமதுவைப் பற்றி எழுதின கிறிஸ்தவர்கள் அவரைப் பற்றி வீணயோசனமாய் இல்லாக் காரியங்களை உண்டென்று ரூபித்தெழுதினார்களென்று நாங்கள் கொஞ்சமேனினும் எண்ணங்கொள்ளுகிறதில்லை. இஸ்லாமதத்தையும் அத்தை எடுத்துத் தொடுத்துக் கட்டின மகமதுவின் சரித்திர உண்மைகளையும் நாம் பார்க்கும்பொழுது இவர் முன்னே சற்றே புகழப்பட்டதற்கும் புண்ணிய இலட்சணங்களையுடையவராயிருந்தும், இவருக்கு வயது போகப்போக அவ்விலட்சணங்களெல்லாம் அவரைவிட்டகன்று அப்பாற் பாய்ந்தோடி ஒழித்து மறைந்து புகுந்துவிட்டன. ஏனென்றால், அவர் தத்துவ பராக்கிரமத்தில் எவ்வளவுதிரப்பட்டாரோ அவ்வளவுக்கதிகமாக அவருடைய நன்மார்க்கமுதலிய சன்மார்க்க நடைகளும் வரவரக் குறைந்துபோயின.

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

கூட்டேன்பவாசெய்த பிரபஞ்சநூல்.

௨ம் பிரிவு ௩ம் அதிகாரம்.

(சிற்றறிவு, புலனுகர்ச்சி, பேரறிவு)

௧. சிற்றறிவாவது சீவாங்கப்படைப்புகட்பொழுது அல்லது பின்னாலாகவேண்டிய பரிணுக்கியற்றப்பட்ட சில சுபாவதத்துவங்களின் சேட்டையினாலாகுமதின் தொழிலாமென்றும், பேரறிவாவது மனமுள்ளசிவனுக் கிம்முகார்திரத்துக்காக ஏற்படுத்தப்பட்டதாய்க் கற்றறிந்த தத்துவங்களின் சேட்டையினாலுண்டாகுமதின் தொழிலாமென்றும் மேலைச்சஞ்சிகைகளிலொன்றிற் காட்டினோம்.

௨ சிற்றறிவும், புலனுகர்ச்சியும், பேரறிவும் விசேடித்தபிரகாரமாய ஒன்றுக்கொன்று விகற்பமுள்ளவைகளாயிருக்கின்றன. இவை மனிதரிற் காண்கும் பிரகாரமாயொருமிக்கக் கூடியிருப்பதுமுண்டு. சிற்றறிவும், புலனுகர்ச்சியும் அநேகமிருகங்களிற் காணப்படுகிறதுபோல வொற்றுமைப்பட்டிருப்பதுமுண்டு. அல்லது தாபரங்களிலுள்ள பிரகாரமாய்த் தனிச்சிற்றறிவு சீவியத்துக்கவசியமான சகலதொழில்களையுமியற்றுவதுமுண்டு

௩ திண்மைக்கவர்ச்சி சீவாங்கமற்றபதார்த்தத்தின் சாதாரண பிரமாணமாயிருப்பது போலச் சிற்றறிவு சீவாங்கபதார்த்தத்துக்கெல்லாம் பொதுப்பிரமாணமாயிருக்கின்றது. ஆனாலும் புலனுகர்ச்சியும், பேரறிவும், நரம்பு, மூளைமுதலிய கருவிகளில்லாமலிருக்கக் காணப்படுகிறதில்லை. சிலவேளையில் றேசைப்புட்பம், நிசாசுகந்தக்குருவிகள் அன்பு கொள்ளுகின்றனவென்று சிலர் சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால், இது மதியீனமானவெண்ணம். ஏனென்றால், ஒரு பனிக்கட்டியைப்போலத்தானே றேசைப்புட்பமுமுணர்த்தியற்றதாயிருக்கின்றது

௪ தாபரங்களுக்கு அன்பும் ஒத்தவெண்ணமும், உணர்ச்சியுமிருக்கின்றனவென்று சொல்லுங் கோட்பாடுமுழுதும் விருதாக்காரியமாயிருக்கின்றது. ஆகையால் பேரறிவுண்டென்று சொல்லுகிறவனெவனும் அத்தை ஒழித்துவிடவேண்டியது. தாபரங்களுக்கு யாதொருவிதமான உணர்ச்சியல்லது புலனறிவுண்டென்பதற்குத் திட்டாந்தமாக யாதொன்றையுங் காணோம். அவைகள் தனிச்சிற்றறிவின் பிரமாணத்தினால் மாத்திரம் இயக்கப்பட்டாண்டுகொள்ளப்படுகின்றன. இப்பிரமாணங்களும் அவைகளைக் காத்துக்கொள்ளுகிறதற்கும் பூரணப்படுத்திக் கொள்ளுகிறதற்கும் அவைகள் போதுமானவைகளாயிருக்கின்றன

௫ அப்படியிருந்தும், தனிச்சிற்றறிவு அதிசயிக்கப்படத்தக்கவிதமாய உதாரணப்பட்டிருப்பதைத் தாபரங்களுக்குட் பலமுறையுங் காணப்படுகிறது. மெய்தானே கொன்வொல்வூலஸ் அல்லது ஓர்வகை அவரைக் கொடியிடப்புறமாயல்லது கீழ்ப்புறமாய் நின்று தெனபக்கமாய்வந்து மேற்றிசையிற்படர்ந்து சுருண்டுகொள்ளும். ஆனிசக்கின், கொப்ளென்றசெடிகள் இவற்றிற்கு மாறுதலமெதாத்திசையை நோக்கிப் படருகின்றன. இவ்வகை விகற்பங்களின் காரணங்களை ஆர் விளங்கப்பண்ணுவான்?

௬ விலங்கினங்களிலத் தனித்தனிச்சிற்றறிவு இவ்விதமான விகற்பமுள்ளதாயிருக்கின்றதாகக் காண்கிறோம். அதன் காரணமின்னதென வெளிப்படுத்த எங்களால் கூடும். எப்படியெனில், அணில் வெள்ளெலி என்ற இவ்விரண்டும், கசில என்ற கொட்டையில் மெத்தப்பிரியமாயிருக்கின்றன. ஆனாலவை யானடிலொவவொன்றும் அந்தக் கொட்டையை வெவ்வேறுவிதமாயத் துளைத்துப் பிழக்கின்றது. அணிலானது அந்தக்கொட்டையின் சிறுத்த நுனியைக் கரந்தபிறகு ஒரு பையன் தன் கத்தியினால் அதைப் பிழப்பதுபோலத் தனது முன் வாய்ப்பல்லினால் அந்தக் கொட்டையினோடை இரண்டாய்ப் பிளக்கின்றது. ஆனால் வெள்ளெலியோ தனது பற்களாற் கொட்டையிலோர்துவாரமிட்டு அதன் வழியாய உட்பருப்பை யிழுத்தெடுத்துப்போடுகின்றது. இந்த அற்பமிருகங்கள் கொண்டியற்றுங் கருவிகளாகிய பற்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கிறபடியால் இவைகட்குள்ள சிற்றறிவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயியற்றப்படுகின்றது. மிருகங்களினியல்பை நாமறிந்திருப்பதுபோலத் தாபரங்களினியல்பையும் அறிவோமேயானால் ஒருவேளை அவரை இனத்தைச் சார்ந்தகொடிகளேன் ஓர்பக்கத்துக்குத் திரும்பிப் படருகுதென்றும், கப்ளன்றசெடி அதற்கெதிர்ப்பக்கமாயேன் திரும்பிப்படருகுதென்றும், நாம் சொல்லக்கூடும்

௭ கீழ்வகையைச்சார்ந்த முச்சடச்சிவிப்புழுக்கள் முதலியன உணர்ச்சி நரம்பாகுதல் மூளையாகுதலுள்ளனவல்ல. இவைகளுந் தாபரங்களைப்போல, புலனுகர்ச்சி அறிவென்பவைகள் சற்றேனுமில்லனவாயிருக்கின்றனவென்று நம்புகிறதற்குப் போதிய அத்தாட்சியுண்டு. ஆனால் ஒரு மிருகத்துக்கு நரம்பிருக்கிறதை நாம் கண்டவுடனே அதற்குப் புலனுகர்ச்சியுமுண்டென்று நிச்சயமாய்க் குறிக்கலாம். அதற்கு மூளையிருந்தால் அதற்கு உணர்ச்சி அதிகம் விகற்பப்பட்டிருக்கும். இதைச் சிற்றறிவுடனிணைத்துப்பார்க்குமிடத்து அந்த விலங்கினியல்புக்குத்தகுந்த அளவாய்ப் பேரறிவு

காணப்படுகின்றது மனிதனில்மாத்திரமே இப்பேரறிவு அவனுடைய நன்மை நிலைக்குரித்தான அறிவுக்கருவிகளுட னொற்றுமைப்பட்டிருக்கின்றது.

அ. சகலவிலங்கினங்களும் தங்கட்ங்களுணவை என்னவிதமாய்த் தின்கிறதாயிருந்தாலும முதலிலே இச்சிற்றறிவினாற்றனே ஏவிவிடப்படுகின்றன ஆட்டுக்குட்டி பாலகுடிக்கின்றது கோழிக்குஞ்சு பொறுக்கித்தின்கின்றது. குருவிக்குஞ்சு தனவாயைத் திறக்கின்றது. இந்த வழமையான விலங்கினங்கள் முதலிலே தஙகள் தாயையும அறியாதவைகளாயிருக்கின்றன அவைகளுடைய தாய்மாரை மாற்றிவிட்டாலுந் தங்கள் சொந்தத் தாயைபபோலே எடுத்துமாற்றிவிட்டதாயையும் பாவித்துக்கொள்ளும ஆனால அப்படி ஒரு கிழமை அல்லது இரண்டுகிழமைக்குப்பின மாற்றத்துணிந்தால் அது சரிப்பட்டுவராது ஏனெனறால, இவவளவுநாளைக்குள்ளே அவயவங்கள் தங்களுக்குள்ள வளர்ச்சியடைகிறது போல உணர்ச்சி அறிவுமவைகளிற்றோற்றிக்கொள்ளுகின்றது இவ்விதமாயதிகப்படுமுணர்ச்சியறிவு முதிர்ந்த சிற்றறிவுடனொன்றித்துக்கொள்ளுகின்றது. இவ்விதமாகவே, சொந்தக் கைத்தாயும பிள்ளையும் பிரிந்தகாலத்திலே சோர்வுகொள்ளுவார்கள்

(இன்னும வரும்.)

(The following article is the original of the foregoing)

ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

CHAP. V.] *Instinct, Sensation, & Intelligence* [PART II

1. IN the last chapter we observed that instinct is the operation of the principle of organized life by the exercise of certain natural powers directed to the present or future good of the individual, while reason is the operation of the principle of intellectual life by the exercise of certain acquired powers, directed to the same end.

2. Instinct, feeling, and intelligence are all principles essentially different, they may all exist together, as in man, or instinct and feeling may be united as in most animals, or pure instinct, as in plants, may perform all the functions necessary to life.

3. Instinct is the common law of organized matter, as gravitation is of unorganized, but feeling and intelligence never appear to exist without appropriate organs, that is, the nerves and brain. We hear, sometimes, allusions to the loves of the rose and the nightingale, but it is a silly conceit—the rose has no more feeling than an icicle

4 The whole theory of the loves, sympathy, and sensibility of plants is a very absurd affair, and ought to be entirely discarded by every one professing to have reason There is not the least evidence that vegetables have feeling or perception of any kind They are guided and governed by the laws of simple instinct only, which are sufficient for their preservation and perfection

5. It is true, there are often in the vegetable kingdom examples of simple instinct, which seem marvellous The stalk of the convolvulus or the kidney bean always *twines* from the left or east by the south to the west; while the honeysuckle and the hop take a perfectly reverse direction Who can explain the cause of these differences?

6. We see instances of like differences in the simple instinct of animals, which we can explain. The squirrel and the field-mouse both like hazle-nuts, but each little animal opens his nut in a way of his own The squirrel, after rasping off the small end, splits the shell in two with his long fore-teeth, as a boy does with his knife, the mouse *nibbles* a hole with his teeth and draws the kernel through it. The instinct of these animals acts differently, because their instruments of action, their teeth, are not alike. If we knew the nature of plants as well as we do that of animals, perhaps we might tell the reason why the bean turns one way, and the hop the other way.

7. The lowest class of animals, such as the zoophytic worms, polype, and some others, have neither nerves nor brain, and we have the strongest reason for believing that they are as destitute of feeling and perception as plants. But as soon as we find an animal has nerves, we may be certain it has feeling when there is a brain, the feelings are more varied, and, united with instinct, a degree of intelligence, proportioned to the nature of the animal, appears. In man alone, this intelligence is united with the moral and reasoning faculties

8 Young animals of all kinds, in whatever way they take their food, are at first stimulated by instinct alone. The lamb sucks, the chicken picks, and the young bird gapes. These young animals do not at first know their mother, and if they are interchanged then, they are as satisfied with the foster-parent as the natural one But let the same interchange be attempted a week or fortnight afterwards, and it will not succeed. There has been a birth of feeling, as well as a growth of form, in the mean time; this growing feeling has united with the already mature instinct and the natural nurse and nursling will pine equally, if separated. [To be continued.]

கடிதங்கள்.

HINDUISM UNMASKED

(Continued from page 217)

THE NON-EXISTENCE OF MOUNT MERU

Skanda Purana—Andakosa Section

"Mount Meru which is situated in the centre of *Jambhu*, is in form like the fruit of the lotus Its height is 84,000 yojanas,* its depth in the earth 16,000, its breadth at the summit 32,000, and the base 16,000 It has 3 swelling cones (rising successively above) on the highest of which there are many peaks In midst of the Mt. Meru is *Manovathy*, the city of *Bramah*, to the west of this is *Vicundum*, where *Hari* or *Vishnu* dwells, on the north-east is *Asovathy*, the abode of *Paramaswara* (Siva) At the eight points N E. S W etc. are the cities where Indren and the rest of the celestial regents reside"

Mt Meru and its appendages seem to be the ponderous subject of a great many Puranas. It is said that two liars once agreed to tell each a lie, and see which of them could excel the other One of them said that he drove a nail into the moon and rivited it. The other said that he went and pulled it out from the other side when it was thus rivited If these liars had lived in the days of the authors of the Mt Meru legend, it would seem probable from their most profound skill of inventing falsehoods, that these liars would gladly wish to be schooled by them The two lies before referred to bear no comparison with that of Mt Meru I hope in the following remarks to make this appear

The mountain is said to be in the unnatural position of standing upon its vertex, and instead of being composed of

* A yojana is equal to 182 miles according to the table.

the usual substance, it is represented to be of pure gold. Its magnitude is 1,527,250 miles in height. This compared with the real magnitude of the earth, makes it 190 times larger than its diameter The position of such a mountain then on the earth would be similar to that of a tall palmyra tree, standing upon a palmyra fruit But the Mount being represented to be in the form of an inverted cone, whose breadth at the summit is 581,818 miles, the flattened edge at the top will overshadow the earth and extend all round to the distance of 286,909 miles beyond the circumscribing limit of the terrestrial sphere This would be similar to a large umbrella, shadowing a mustard seed (the umbrella representing the mountain and the mustard seed the earth.) Again the diameter at the base being 290,909 miles, and its depth of a like dimension, the magnitude of the earth is by far too small for the location of such an enormous mountain

No Hindu is perhaps able to reconcile the position of Ceylon as an Island, with the Puranic description of the seven islands and seas * Is it within or without the *Jambhu Dwipa*? For arguments' sake we will suppose it to be in the middle of the *Jambhu Dwipa*. Then according to the Puranic description, the earth being flat, and Ceylon being at the distance of 50,000 yojanas south of Mt Meru, and the mountain being 84,000 yojana's height, it should (by the principles of Trigonometry) appear to us under an angle of about 60° Let us now take the most liberal supposition of the case, and take it for granted that Ceylon is situated at the farthest extremity of the *Jambhu Dwipa*, that is at the distance of 100,000 yojanas, then Mt. Meru must appear to us under an angle of 40°. Now is this a fact? Do we see such a mountain on the north? This argument is satisfactory and conclusive to any Hindu that understands the rudiments of Trigonometry, though ignorant of European literature and science I do not wish to notice in this place the appendages of *Mt Meru*, because the existence of Mt Meru itself is satisfactorily refuted, and my heathen friends, I think, would not care for the appendages, if the Mount is struck off in the spirit of the proverb "*If the Brahmin is lost, what is his lock of hair worth*?

The celebrated Mt. Meru then is a creature of mere imagination existing only in the whimsical notions that floated in the brain of the poet, when labouring under a mental delirium, the shadow of a wakeful dream—an ideal creation, and notwithstanding its magnitude of yojanas, it produces less sensation, than vacuum and weighs less than an immaterial atom.

Finally, my dear Hindu friends, shall we in the light of this subject call Skanda Purana a piece of God's revelation, or receive Hinduism which sets forth Mt. Meru, as a religion given by God for the salvation of mankind? What shall we say of our ancient doctors? How base, dishonest, and hollow-hearted they must have been to palm such falsehood upon us their posterity! How fiendish is it when we consider that all things on it form a part of the all-important subject where the salvation or the loss of souls is at stake Shall we shrink back from beholding TRUTH when it breaks upon us with its smiling, vivifying rays? Why should we love the darkness and prefer to be covered by it rather than to come into the light? Blessed be the name of God who has sent his heralds of truth to our benighted country and may that BOOK which is the book of books, the BIBLE—be a light unto our path and a lamp unto our feet during our pilgrimage in this valley of ignorance and sin, and may that Saviour which it sets forth be manifested to our souls with all his glories to redeem us to be partakers of the grace and immortality which he brought to light

Batticotta Seminary 8th Oct 1842 ROBERT ADAIR

* Vide "Morning Star" No. 15. page 216.

(A question on Medicine)

ஸ்ரீ, ஸ்ரீ மைனத் துரையவர்களுக்கு வந்தனம்.

